# கீதையடி நீயெனக்கு...



ஆசி கந்தராஜா

கீதையடி நீயெனக்கு...

# கீதையடி நீயெனக்கு...

ஆசி. கந்தராஜா

20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு,
சூளைமேடு, சென்னை - 94
தமிழ்நாடு இந்தியா

**Geethaiyadi Neeyenakku**
**(Kurunovel)**

By
**Aasi . Kantharajah ©**
**a.kantharajah@hotmail.com**

**Sponsored by:**
COASTAL DENTAL
ACCESSIBLE FRIENDLY PROFESSIONAL
**12 Barker street, Gosford 2250**
**Australia**

**First Edition**
January 2014

Mithra : 241
ISBN : 978-93-81322-29-1

Publication Editor
**Espo**

Pages : 212
Price : ₹.150/-

Printed & Published by
**Mithra Arts & Creations Pvt Ltd.,**
20/2, Zackria Colony, 1st Street,
Choolaimedu, Chennai - 600 094.
Ph : +91 44 2372 3182 / 2473 5314
Email : mithraart@gmail.com
www.mithra.co.in

## முகவுரை

# உண்மையைக் கதைக்கும் கதைகள்

இன்றைய உலகில் மிகவும் கடினமானது எது? எளிமையாக இருப்பதுதான்!

நீங்கள் வீதியில் இறங்கி ஒரு கிலோ மீட்டர் நடந்து பாருங்கள். அல்லது ஒரு 'மாலில்' திரையரங்கில், ஏன் பள்ளிக்கூடத்தில் கூட நுழைந்து பாருங்கள். ஒப்பனையற்ற முகங்களை எதிர்கொள்வது அரிது. ஒரு நாளில் நாம் கேட்கிற அலங்காரமற்ற வார்த்தைகள் எத்தனை என எண்ணிப் பாருங்கள். எளிமையாக இருப்பது கடினமானது எனத் தெரியும்.

இவ்வளவு மெனக்கிட உங்களுக்கு விருப்பமில்லையா? ஏதாவது ஒரு புத்தகக் கடைக்குள் நுழைந்து அண்மைக்காலத்தில் வெளிவந்த பெயர் 'வாங்கிய' எழுத்தாளர்களது ஏதாவது ஒரு நூலை எடுத்துப் பத்துப் பக்கம் புரட்டிப் பாருங்கள். அங்கு நீங்கள் எதிர்கொள்கிற சொற்குவியல்களும் பாவனைகளும் எளிமையாக இருப்பது கடினம் என உங்களுக்குச் சொல்லும்.

எளிமையாக இருப்பது ஏன் கடினமாகிப் போனது?

'ஒரு காலத்தில் மக்கள் எளிமையாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். அறிவு பெருகப் பெருக வாழ்க்கை சிக்கலாகிவிட்டது. புத்தகங்கள் எழுதத் துவங்கினார்கள். இதனால் மக்களின் துயரங்கள் அதிகமாகிவிட்டன' என்கிறது தாவோயிசம்.

புத்தகங்கள்தான் வாழ்வில் இருந்த எளிமையைக் களவாடிக் கொண்டுவிட்டனவா? முற்றிலுமாக அது உண்மை இல்லை.

ஆனால் புத்தகங்களில் தத்துவங்களைச் சொல்ல முற்பட்டார்கள் பாருங்கள், அப்போதுதான் எளிமை விடைபெற்றுக்கொண்டது. எல்லாப் புத்தகங்களுக்கும் இந்த உண்மை பொருந்துமா என எனக்குத் தெரியாது. ஆனால் இலக்கியங்களுக்கு இது பொருந்தும். ஏதாவது ஒன்றை நியாயப்படுத்த 'ரேஷனலைஸ்' செய்ய, சூத்திரம் சொல்ல, தத்துவ சிம்பு வைக்க இலக்கியத்தை பயன்படுத்த முற்படும்போது எளிமை ஒதுங்கிக் கொள்கிறது.

அப்படியானால் இலக்கியம் என்னதான் சொல்ல வேண்டும்?

புத்தரின் பிரசங்கத்தைக் கேட்பதற்காக மக்கள் கூடினர். புத்தர் வந்தார். மேடைக்குப் போய் அமர்ந்துகொண்டார். அங்கே இருந்த ஒரு பூவைக் கையில் எடுத்துப் பார்த்தார். பக்கத்தில் இருந்த சீடன் காசியபனைப் பார்த்துச் சிரித்தார். கூட்டத்தைப் பார்த்து, முறுவலித்தார். பூவைக் கீழே வைத்துவிட்டு எழுந்திருந்து போய்விட்டார். அவ்வளவுதான். பிரசங்கம் முடிந்துவிட்டது.

ஒரு வார்த்தைகூடப் பேசாமல் எப்படி பிரசங்கம் நடந்ததாகச் சொல்ல முடியும்? வார்த்தைகள் தத்துவங்களைச் சொல்லலாம். ஆனால் உண்மைகளை விளக்காது. புத்தகங்கள், பாராயணங்கள், உபதேசங்கள் இவற்றின் மூலம் உண்மையைப் புரிந்துகொள்ள முடியாது. உண்மை என்பது மழையைப் போல எளிமையானது. மழையைப் பார்க்கலாம். கேட்கலாம். உணரலாம். ஆனால் அதை மொழிபெயர்க்க முடியாது என்பது ஜென்னின் அடிப்படை.

மரத்தைச் செதுக்குகிற ஒரு தச்சன் சொன்னான். 'உளியை மரத்தின்மீது வைத்து சுத்தியலால் மெதுவாகத் தட்டினால் உளி நழுவி விழுகிறது. வேகமாக ஓங்கித் தட்டினால் உளி மரத்தில் சிக்கிக்கொள்கிறது. எவ்வளவு மெதுவாக அல்லது வேகமாகத் தட்ட வேண்டும் என்பதை புத்தகம் படித்துத் தெரிந்துகொள்ள முடியாது. தானாக வேலை செய்துதான் கற்றுக் கொள்ள வேண்டும்."

அனுபவம் தான் உண்மைகளைச் சொல்லும். சித்தாந்தங்கள் அல்ல என்பது ஜென் நம்பிக்கை.

அடுத்து வரும் பக்கங்களில் நீங்கள் சந்திக்கப்போவது சித்தாந்தங்கள் அல்ல. போதனைகள் அல்ல. புனைவுகள் அல்ல. வாழ்க்கை! ஒப்பனையற்ற எளிமையான மொழியில் சொல்லப்பட்ட வாழ்க்கை. அவை வெறும் 'கதைகள் அல்ல. தமிழில் கதை என்பது பொய். கற்பனை என்றும் பொருள் கொள்ளும். 'பிள்ளைக் கதைகள் பேசுகிறாய்' எனப் பாரதி ஓரிடத்தில் சீறுகிறான். பாரதி மட்டுமல்ல. 'என்ன கதைவிடுகிறாய்?' எனப் பாமரன் கூட எள்ளுவதுண்டு. Fiction என்பதற்கு புனைவு என அர்த்தம் உண்டென ஆங்கிலம் அறிந்த அகராதிகள் சொல்லும். ஆனால் ஆ.சி. கந்தராஜா, பேசுவது அவர் எதிர்கொண்ட மனிதர்களின் வாழ்க்கையை. அந்த வாழ்க்கையை அவற்றின் முக மூடிகளைக் கழற்றி எறிந்து, ஒப்பனைகளை உரித்து, நிர்வாணமாக உங்கள் முன் வைக்கிறார். அதன் உண்மை, குரூரம் நம்மைத் தாக்குகிறது.

வெறுமனே வாழ்க்கையைப் படம் போட்டுக் காட்டிவிட்டு, இன்றையத் தலைமுறையின் வார்த்தைகளில் சொன்னால் 'ஃபிலிம் காட்டிவிட்டு' அவர் நகர்ந்து விடுவதில்லை. அந்த வாழ்க்கை எழுப்பும் கேள்விகளையும் முன் வைக்கிறார். அவை நம்மைத் திகைக்க வைக்கின்றன.

திகைக்க வைக்கக் காரணம், அந்தக் கேள்விகள் தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிய கேள்விகள்.

அவருக்கு மாணவர்களாக அறிமுகமான மூவரைப் பற்றிய கதை 'திரிவேணி சங்கமம்'. ஒருவன் ஆஸ்திரேலியன். ஒருவன் இரானியன். இன்னொருவன் இலங்கைத் தமிழன். தாயகம் கடந்து படிக்க வந்த இடத்தில் பாதை தப்பி அவர்கள் சிறைக்குப் போய்ச் சேருகிறார்கள். அவர்கள் என்ன ஆகிறார்கள் என்பதை கதையைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் அவர் வைக்கும் கேள்வியை நீங்கள் எதிர்கொண்டாக வேண்டும்.

"ஆங்கிலேயர்கள் குடும்ப உறவில் லாப நட்டக் கணக்குப் பார்ப்பதில்லை. டாக்டராகப் பணிபுரியும் பெண். ஒரு தச்சுத் தொழிலாளியைக் காதலித்து மணம் முடிப்பதும்; பேராசிரியரின் மனைவி றெஸ்றோறன்றில் பணிபுரிவதும் எமது வாழ்க்கை

முறையில் இயல்பானது" என்று சொல்லும் அந்த ஆங்கிலேய சிறை அதிகாரி, அடுத்து ஓர் கேள்வி எழுப்புகிறார். 'ராகுலன் யாரைக் காப்பாற்ற முயன்று இப்போது தண்டனை அனுபவிக்கிறானோ, அவர்கள் சாட்சி சொல்லாததும், அவனை வந்து பார்க்காததும் எனக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலோன கலாசாரப் பெருமை கொண்டது உங்கள் தமிழ் நாகரீகம் என அண்மையில் வாசித்து வியந்தேன். அவசர உலகத்தில் அதைத் தொலைத்து விட்டீர்களா?" இந்தப் பாத்திரத்தின் மூலமாக கந்தராஜா அடுத்து வீசும் கைகுண்டு கணநேரமெனும் உங்களை யோசிக்கச் செய்யும்.

"படகில் அகதிகளாக வந்து தடுப்பு முகாமில் எத்தனை தமிழர்கள் பல ஆண்டுகளாக வாழ்கிறார்கள் என்பது தெரியுமா? உங்களில் எத்தனை பேர் அவர்களை அகதி முகாமில் சந்தித்திருக்கிறீர்கள்? அவர்கள் எல்லோரும் வேலைவாய்ப்பைத் தேடி வந்தவர்களாக இருக்க முடியாதல்லவா? எனது பெற்றோர்களும் வேலை வாய்ப்புக்காக அயர்லாந்திலிருந்து இங்கு வந்தவர்கள்தான். ஏன் இங்கு வளமாக வாழும் உங்களிலே பலரும் அகதி அந்தஸ்துப் பெற்றவர்களாக இருக்கலாம். மனிதன் சுலபமாக மறக்கக் கற்றுக்கொண்டு சுயநலமாக வாழ முற்படுவதுதான் பிரச்சினைகளின் ஆணி வேர்."

சுயநலங்களைப் பேணுவோருக்கு பாவனைகளும் வேண்டி யிருக்கின்றன. எளிமையான வாழ்க்கையில் லாபநோக்கம் இல்லை. அதனால் அதை வாழ அதிக சாமர்த்தியம் தேவையில்லை. ஆனால் சுயநலமான வாழ்க்கை பாவனைகளில் காலூன்றி நிற்கிறது.

ஆஸ்திரேலியாவில் மரணித்த சின்னத்துரை வாத்தியாரின் இறுதிச் சடங்குகளைப் பின்புலமாகக் கொண்டு அவர் அங்கு வாழ்ந்த நாள்களில் எதிர்கொண்ட துன்பங்களை எடுத்துரைக்கும் கதை 'பாவனை பேசலின்றி'. உயிரோடு வாழ்ந்தபோது அவரை இயல்பாக வாழ விடாதவர்கள் அவர் இறந்த பிறகு, தங்களது கௌரவத்திற்காக உடலிற்கு செய்யும் அலங்காரங்களையும் 'சுள்' எனச் சுட்டிக்காட்டும்

இந்தக் கதையையும் 'கதை' எனத் தள்ளிவிடமுடியாது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் முதியவர்களைப் பற்றிய வாழ்க்கைப் பதிவு.

கந்தராஜா எழுப்பும் கேள்விகள் உங்கள் மனசாட்சியை தட்டிப் பார்க்கும். நீங்கள் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழராக இருந்தால் இந்த வீரிய எழுத்துக்கள் உங்களை உலுக்கி எழுப்பும்.

அந்த வீரியத்தின் விதைகள் எந்தக் கனியிலிருந்து பெறப்பட்டவை என்பதை அறிந்துகொள்ளும் போது உங்களுக்கு ஆச்சரியமிராது. ஆனால் மகிழ்ச்சி ததும்பும். ஆம் தமிழ்ச் சொல்வனத்தில் ஓர் வீரிய விருட்சமாக நிற்கும் எஸ்.பொ.வின் எழுத்துக்களிலிருந்து கந்தராஜா பெற்ற கனிகள் அவை. வாழ்வின் உண்மைகளை, அவை உறுத்தும் என்றாலும் கூட ஒளிக்காமல், மழுப்பாமல் உரத்துச் சொன்னவர் எஸ்.பொவை போல் யாருண்டு?

கந்தராஜாவின் பன்முகத்தன்மைகளை நானறிவேன். உயிரியில் விஞ்ஞானி. பல்கலைக்கழகப் பேராசிரியர். நாடகக் க்லைஞர். ஒலிபரப்பாளர். எழுதித்தான் பொருளோ புகழோ சம்பாதிக்க வேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை. ஆனால் என் பார்வையில் அவர் விஸ்வருபம் எடுத்து வியத்தகு மனிதராக விளங்குவது அவரது எழுத்துக்களின் மூலம் தான். காரணம் அந்த எழுத்துக்களில் ஒளிர்ந்து நிற்கும் உண்மை. உண்மையைக் காணவும் உரைக்கவும் ஓர் உரம் வேண்டும். தெரியாமலா சொன்னான். பாரதி: "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்."

வாழ்த்துக்கள் கந்தராஜா!

**மாலன்**

*- 22 டிசம்பர் 2013*

"பாரதி"
40 பத்திரிகையாளர் குடியிருப்பு
சென்னை - 600 041.

# முன்னீடு

தமிழ் இலக்கியத்தினை முன்னெடுக்கும் முயற்சிகளின் கோலங்களைப் பார்த்து, பாரதி பாணியில் 'நெஞ்சு பொறுக்கு தில்லையே' என்று கத்த வேண்டும் போல இருக்கிறது. ஒப்பாரியல்ல. சீற்றம். சினம். ரௌத்ரம்! 'ரௌத்திரம் பழகு' என்பதை மறந்து, கூலிக்கு மாரடியராகவும், வர்த்தகர்களாகவும் இலக்கிய பிரம்மாக்கள் தாழ்வுற்றதற்குக் காரணம் என்ன? இந்த விடைக்கான பயணம் தமிழ் இலக்கியத்தினை ஒட்டுண்ணிகளாக உறிஞ்சுவோர்களிடமிருந்து காப்பாற்றுமா? இந்த முன்னீட்டினை எழுத அமர்கையில் இத்தகைய கேள்விகள் எழுந்து என் நெஞ்சைக் குத்தி ரணங்கள் பெய்கின்றன. என் எழுத்து ஊழியத்தை அறிந்தோர் அறிவர். எதிர்ப்புகளைக் கண்டு தாள் பணிதலும், சமரசம் செய்தலும் எனக்கு அந்நியமானவை. மாற்றங்களை வரவேற்பவன் மட்டுமல்ல; முன்மொழிபவனும். 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்கிற மதத்தில் பூரண சம்மதம். மாற்றங்களினால் அச்சு எந்திரம் வந்தது. அதனால், தமிழ் இலக்கியம் வளமும் வளர்ச்சியும் பெற்றது. புதிய இலக்கிய வகைகள் மலர்ந்தன. தமிழ்ச் சோலையை மணமூட்டின. உண்மை. இன்று புதிய ஊடகங்களின் வருகை, மக்கள் ரசனையை அலைக் கழிக்கின்றன. இந்த ஆதங்கம் பரவலாகச் சடைத்துள்ளது. இப்புது வரவுகள் காட்சியை அடிப்படையாகக் கொண்டன. ஆனால் இவற்றின் எழுச்சியினால், மேலைநாடுகளில் வாசிப்புப் பழக்கம் ஒறுப்பாகி வருகிறது என்பதைப் புள்ளி விபரங்களினால் எண்பிக்க இயலாது. வாசிப்புப் பழக்கத்தினை நீடிக்கச் செய்வது சாறும் வீறும் மிக்க இலக்கியப் படைப்புகளே. ஆனால் தமிழ் நாட்டிலே அரசியல் ஊழல், சினிமா மோகம், வர்த்தகக் கலாசாரம் ஆகியன புகழும், பணமும் சம்பாதிப்பதற்கான குறுக்கு வழிகளை ஆராதனை செய்கின்றன. எனவே, எழுத்தாளர் களும் படைப்பின் தரத்திலே நம்பிக்கை வைக்காது, வலைத் தளங்கள் மூலம் சுய முதுகு சொறிதல், பின்கதவு வழியால் கவர்ச்சியான பிரசுரக் களங்களை வாங்குதல், வாக்குகளை விலைக்கு வாங்கும் அரசியல் கலாசாரம், விளம்பரங்களின்

கவர்ச்சியால் ரசிகர்களை மயக்கும் ‘மேனாமினுக்கி’ மோகம் ஆகிய உத்திகளை நகலெடுத்து விருதுகள் ‘வாங்கு’தல் விருதுகள் ‘சன்மா’னித்தல் முதலிய இலக்கியத்துக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளினால் பிரபலமும் புகழும் சம்பாதித்தல் ஆகிய கேவலங்களினாலும், தமிழின் இலக்கியக் கழனிநிலம் நாற்றம் எடுக்கத் துவங்கியுள்ளது. இந்தச் சேற்றுக்குள் விழுந்து நீச்சலடித்து பெயரெடுக்க முந்தி நிற்கும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் போக்குகளைக் கண்டுதான் ‘நெஞ்சு பொறுக்குதில்லை’ என்று கத்தத் தோன்றுகின்றது.

இந்த அவலங்களின் மத்தியிலே, ஆசி. கந்தராஜாவின் ‘கீதையெடி நீயெனக்கு’ என்கிற இந்தக் கதைத்தொகை என் நெஞ்சின் ரணங்களைச் சொஸ்தப்படுத்துகின்றது. இது தமிழுக்குப் புதுவரவு. கந்தராஜாவுடன் கால் நூற்றாண்டு காலமாக தமிழ் உறவு பாராட்டி வாழ்கிறேன். பேராசிரியராகவும் விஞ்ஞானியாகவும் ஈழத்தமிழருக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். புகழை நத்தியது அல்ல அவரது இலக்கிய ஈடுபாடு. அது தமிழின் பற்று; பிறந்த மண்ணின் ஆராதனை.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலே ‘முகமூடி’கள் அணிந்து, ‘கூத்துக்கட்டி’ ஆடும் வேஷதாரிகளுடைய வாழ்க்கையின் அவலக் கதிகளைப் பிறந்தமேனியாக நமக்குத் தந்துள்ளார். இலக்கிய உத்திகள், கனதிகள், சோடனைகள் என்று ‘மினக்கடாமல்’ மிக எதார்த்தமாகக் கதைகள் சொல்லப்படுகின்றன. இந்தக் கதைகளின் உண்மையான பலமும் உயிர்ப்பும் அதன் எளிமையும், அதன் மூலம் அவர் தமிழ்ச் சுவைஞருடன் பகிர்ந்து கொள்ளும் சத்தியமுமே. சேற்றிலே மூழ்கடிக்கப்படும் தமிழ் வாசிகளை எழுப்பி பிராணவாயு தருகின்றார். இதனாலும் இந்தக் கதைத் தொகுதியின் ஆயுள் கெட்டியானது.

எஸ்.பொ.

2A, Hakea Place
Epping 2121,
Australia
612-98685090

## உள்ளே...

திரிவேணி சங்கமம் — 15

தூதர்கள் — 47

உயரப் பறக்கும் காகங்கள் — 75

பாவனை பேசலன்றி... — 97

அடிவானம் — 143

கீதையடி நீயெனக்கு... — 169

*92 வயதுகள்*

*பெருவாழ்வு வாழ்ந்து*

*என்னுள் மண்பற்றை*

*வளர்த்தெடுத்த*

*என்*

*அம்மா*

திருமதி **முத்துப்பிள்ளை**

**சின்னத்தம்பி**

நினைவுக்கு

***இந்நூல்***

**படையல்**

# திரிவேணிசங்கமம்

## 1

காரை உரிய இடத்திலே நிறுத்தினேன்.

நான் வந்திருக்கும் தகவல் அறிவிக்கப்பட்டதும், சிறைக் கதவு திறந்தது!

சிறை அதிகாரி என்னை சிறைச்சாலை நூலகத்துக்கு அழைத்துச்சென்றார்.

மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமைகளில், சிட்னியின் புறநகர் பகுதியிலுள்ள அந்தச் சிறைச்சாலைக்குத் தவறாது சென்று வருகிறேன். கடந்த ஒன்றரை வருடங்களாக என் மாணவன் அமீர் அங்கே தான் சிறையிருக்கிறான்.

அமீர் ஈரான் நாட்டவன். ஆறு ஆண்டுகளுக்கு முன் ஈரான் அரசாங்கத்தால் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டவன். இங்கு அவன் தாவர இன விருத்திபற்றிய மரபணுமாற்ற ஆராய்ச்சி செய்யவேண்டுமென அவன் வருவதற்கு முன்னரே, ஈரானிய அரசு தெரிவித்திருந்தது. அந்தவகையில் அமீர் எனது மேற்பார்வையின் கீழ டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வாறே அமீர் என் மாணவன் ஆனான்.

பல்கலைக்கழக அலுவலகத்தில், அவன் என்னைச் சந்தித்த முதல் நாள் இன்றும் பசுமையாக என் நினைவில் நிற்கிறது. தன் மனைவி றொஸ்நாக்குடனும் இரு

குழந்தைகளுடனும் வந்தவன், மூத்தது பெண் பன்னிரண்டு வயதென்றும், இளையது ஆண் ஏழு வயதென்றும் அறிமுகம் செய்தான்.

பாரசீகத்து பெண்களும் பாரசீகத்து கம்பளமும் உலகிலேயே மிகவும் அழகானவை என்பார்கள். உண்மைதான்! றொஸ்நாக் மிகவும் அழகாக இருந்தாள். பர்தாவால் முக்காடிட்டு, உடலை மறைத்து முழுநீள சட்டை அணிந்திருந்தாலும், அவளது பேரழகு வெளியே பளிச்சிட்டது.

அமீரைக் கைகுலுக்கி வரவேற்று ஆய்வுகூடத்துக்கு அழைத்துச் சென்றேன். பிற ஆண்களின் ஸ்பரிசம் படுவதைத் தவிர்க்கும் இஸ்லாமிய கலாசாரத்தினால் றொஸ்நாக் தலைகுனிந்து, வலக்கையை தன் முகத்தருகே கொண்டுசென்று சலாம் வைத்தாள்.

அவுஸ்திரேலியாவுக்கு அமீர் வந்த காலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஈரானிய அரசால் அவுஸ்திரேலிய பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் மணம் முடித்த ஆண்களே. குடும்பத்துடன் வந்திருந்தார்கள். இதனால் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் சேர்த்தே ஈரானிய அரசு செலவுப் பணம் வழங்கியது.

'நீங்கள் எல்லோரும் குடும்பமாக இங்கு வந்தால் உங்கள் அரசுக்கு அதிக செலவாகாதா?' என ஒரு சந்தர்ப்பத்தில் அமீரைக் கேட்க நேர்ந்தது.

'பணம் அல்ல முக்கியம். அந்நிய சூழலில் எமது வாழ்க்கை முறையும் கலாசாரம் சீர்கெடக்கூடாது என்பதுதான் எங்கள் அரசின் நோக்கம். இங்கு படிக்க வருவதற்கு கல்வித் தகமை மட்டும் போதாது. பாரசீகத்து இஸ்லாமிய கலாசாரத்தில் நல்ல அறிவும் பயிற்சியும் இருக்கிறதா எனவும் பரீட்சிப்பார்கள்' என அமீர் விளக்கம் சொன்னான். அவனது நாட்டுப்பற்று எனக்கு மகிழ்ச்சி தந்தது.

எனது மேற்பார்வையின் கீழ் தனது ஆராய்ச்சியை ஆரம்பித்த சிறிது காலத்திலேயே அமீரின் விவேகம், நேர்மை, நாணயம் ஆகியன என்னைக் கவர்ந்தன. அவனை நீண்ட காலம் என் ஆராய்ச்சிக்கூடத்தில் இணைத்து வைத்திருக்க நான் விரும்பினேன்.

'படிப்பு முடிந்தவுடன் உன் திட்டமென்ன?' விரிவுரையின் பின் ஒரு நாள் நடந்த சம்பாஷணையில், மேலெழுந்தவாரியாகக் கேட்டேன்.

'என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? எனது நாடு என்னை நம்பி அனுப்பியிருக்கிறது. நான் திரும்பிச்சென்று ஈரானிய நாட்டின் அபிவிருத்திக்கு என் பங்களிப்பைச் செலுத்தவேண்டாமா?' என எதிர்க்கேள்வி எழுப்பினான்.

'உன் நேர்மை எனக்குத் தெரியும். உன்னைப்போல் எல்லோரும் இருக்கமாட்டார்கள் அல்லவா? வந்தவர்களுள் சிலர் நாடு திரும்பாவிட்டால் என்ன நடக்கும....?'

'பெறுமதியான சொத்தொன்றை நாங்கள் எங்கள் அரசுக்கு ஈடு வைத்துவிட்டே இங்கு வரவேண்டும். அந்த வகையில் எங்கள் குடும்பத்தின் பெறுமதிமிக்க பரம்பரை வீடு அடமானம் வைக்கப்பட்டுள்ளது. அதை எப்படி இழக்கமுடியும்?'

அமீரின் பதிலில் எப்பொழுதும் நாட்டுப்பற்றும் குடும்ப அக்கறையும் தூக்கலாகத் தொனிக்கும்.

அதிகாலை ஏழு மணிக்கே அமீர் ஆய்வுகூடம் வந்துவிடுவான். நண்பகல் ஒரு மணிக்கு மனைவி றொஸ்நாக், மதிய உணவு கொண்டுவருவாள். ஆய்வுகூடத்தினருகே ஓங்கி வளர்ந்திருந்த செரி மரத்தின் கீழ் இருவரும் அமர்ந்திருந்து உணவு உண்ணுவார்கள். மாலையில் பாடசாலையால் திரும்பிவந்த குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு அதே செரி மரத்தின்கீழ் அமீருக்காக காத்திருப்பாள். அந்த நேரங்களில் பிற ஆடவரை றொஸ்நாக் நிமிர்ந்து பார்த்ததை நான் கண்டதில்லை.

குடும்பமும் ஆராயச்சியுமாக கடினமாக உழைத்த அமீர் பல ஆராய்சிகட்டுரைகளைப் பிரசுரித்து தனக்கும், எனக்கும், பல்கலைக்கழகத்துக்கும் பெருமை தேடித்தந்தான். அவனையிட்டு நான் உண்மையிலேயே பெருமைப்படடேன். அப்படிப்பட்ட அமீர் தண்டனைக் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டபோது நிம்மதியிழந்து நான் பல நாள்கள் தூங்காமல் இருந்திருக்கிறேன்.

சிறை அதிகாரியும் நானும் சிறைச்சாலை நூலகத்தை ஒட்டியுள்ள சந்திப்பு அறைக்கு வந்தோம். வழமை போல அங்கு அமீர் எனக்காகக் காத்திருந்தான்.

சிறை அதிகாரி ஜோசெப் மிகவும் நல்ல மனிதர். சிறை என்பது கைதிகளைத் திருத்தி, மறுசீரமைத்து, நல்லவர்களாக மாற்றும் இடம் என்பதை பரிபூரணமாக நம்புகிறவர். ஒவ்வொரு கைதியும் தண்டனைக்காலம் முடிந்த பின் சமூகத்தில் நல்லதொரு வாழ்க்கை வாழவேண்டுமென்று மனதார விரும்புபவர். அமீர் தனது ஆராச்சிகளை முடித்து டாக்டர் பட்டத்துக்கான கட்டுரை எழுத ஆரம்பித்த காலத்தில் சிறைக்கு வர நேர்ந்ததை ஜோசெப் அறிவார். அவன் தன் படிப்பிற்கான பட்டத்தைப் பெறவேண்டுமென்ற அக்கறையினால் ஜோசெப் எங்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

சிறை நூலகத்தில் அவனுக்காகவே ஒதுக்கப்பட்ட மூலையில், மடிக்கணனியைப் பயன்படுத்தி அமீர் தன் வேலைகளைச் செய்வான். மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமைகளில் அமீரைச் சந்தித்து தரவுகளைச் சரிபார்த்து கட்டுரையை செப்பனிடும் வேலைகளுக்காகவே, சிறைச் சாலைக்கான என் இன்றைய வரவும் அமைந்தது.

## 2

அடுத்தமுறை நான் சிறைச்சாலைக்கு சென்றபோது புதிய இளைஞர்கள் இருவரை ஜோசெப் அறிமுகம் செய்தார். அவர்கள் இருவரும் அந்த மாதம் தண்டனைபெற்று சிறைக்கு

வந்தவர்கள். சமீபத்தில்தான் அவர்கள் 'ரீன்ஏஜ்' என்னும் வளரிளம் பருவத்தைத் தாண்டியிருப்பார்கள் என பார்த்தவுடன் தெரிந்தது.

ஒருவன் ஆங்கிலேய வெள்ளைக்கார இளைஞன். மற்றவன் இந்திய உபகண்டத்தை சேர்ந்தவனாக இருக்க வேண்டும். அவனுடைய முகத்திலே அச்சமும் சோகமும் அப்பிக்கிடந்தது.

'மற்றைய கைதிகளிலிருந்து இவர்களைப் பிரித்து நூலகத்தின் அருகேயுள்ள அமீரின் அறையில் வைத்துள்ளேன். இவர்கள் வாழவேண்டிய இளம் வயதினர். சந்தர்ப்ப சூழ்நிலை இவர்களை இங்கு கொண்டுவந்துள்ளது. முடியுமென்றால் இவர்களது கல்விக்கும் உதவி செய்யுங்கள். ஆண்டவன் உங்களை ஆசீர்வதிப்பான்' எனச் சொல்லிய ஜோசெப், இளைஞர்களுடன் நான் உரையாடுவதற்கு வசதியாக அவ்விடத்தை விட்டகார்ந்தார்.

நான் பிறந்த நாட்டின் சிறை அதிகாரிகளின் அடாவடித் தனங்களை நினைத்துப் பார்த்தேன். ஜோசெப் ஒரு நடமாடும் தெய்வமாகவே அப்போது எனக்குத் தோன்றினார்.

வெள்ளைக்கார இளைஞன் தன்னை ரோனி என அறிமுகப்படுத்திய பின்னர் மௌனமாக இருந்தான். ஐந்து நிமிடங்களுக்கு மேலாக அங்கு அமைதி நிலவியது. மரியாதையின் நிமிர்த்தம் நானும் மேலதிக விபரம் எதையும் கேட்கவில்லை. அவர்களாகவே வாய் திறக்கட்டுமெனக் காத்திருந்தேன்.

நிசப்தத்தை கலைத்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. கிறீஸ்தவ மதபோதகர் ரோனியை சந்திக்க வந்திருப்பதாகத் தகவல் வரவே அவன் பார்வையாளர் சந்திக்கும் இடத்துக்கு சென்றுவிட்டான். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மற்றவன் பேசத் துவங்கினான்.

'சேர், நீங்கள் இலங்கைத் தமிழரென அமீர் சொன்னான். நானும் இலங்கைத் தமிழன்தான். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவன்.'

பேச்சைத் தொடர விடாது விம்மல் தடுத்தது. அவன் பேசிய ஆங்கில 'மொழி நடை' அவன் சமீபத்தில் அவுஸ்திரேலியா வந்தவனல்ல என்பதைக் காட்டியது.

தண்டனைக் கைதியாகச் அந்தச்சிறைக்கு வந்து சிலநாட்களேயான அவனது உணர்ச்சிகளை நான் புரிந்துகொண்டேன். மேசைமேல் இருந்த ரிசூப் பேப்பரால் அவனது கண்ணீரை துடைத்தபடி 'உன் பெயரென்ன?' எனக்கேட்டேன்.

தன்னைத் தொட்டு நான் கண்ணீரைத் துடைத்ததை அவன் எதிர் பார்க்கவில்லை. எனது பரிவு அவனுள் ஒருவகை நட்புரீதியான நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். என் விரல்களைத் தன் இரு கரங்களாலும் இறுகப்பிடித்தபடி தமிழில் தன் கதையை சொல்லத் துவங்கினான்.

'என் பெயர் ராகுலன். மூதூருக்குக்கிட்ட உள்ள தம்பலகாமத்தைச் சேர்ந்தவன். என் அப்பாவுக்கு தம்பலகாமத்தில் அதிகமான நெல் வயல்கள் இருந்தன. தம்பலகாமத்தின் வயல் விதானையும் அவர்தான். பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை. படிப்பில் எனக்கிருந்த ஆர்வத்தால் அப்பா என்னை திருகோணமலையிலுள்ள கல்லூரியில் சேர்த்துவிட்டார். கல்லூரி விடுதியிலேயே தங்கிப்படித்தேன். படிப்பும், விடுமுறைக்கு வீடுமென மகிழ்ச்சியாக வாழ்ந்த காலமது. பத்தாம் வகுப்பில் எல்லாப்பாடத்திலும் அதிவிசேட சித்திகள் பெற்றேன். தம்பலகாமமே என்னைக்கொண்டாடியது. உள்ளூர் பத்திகையில் என் படத்துடன் செய்தியும் வெளிவந்தது.

பதினொராம் வகுப்பு முடிந்து நான் பன்னிரண்டாம் வகுப்புக்குச் சென்றபோதுதான் எங்கள் வீட்டிலே அந்த கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

அதற்குமேல் ராகுலனால் பேசமுடியவில்லை. நிலத்தைப் பார்த்தவாறு அமைதியாக இருந்தான். அவனது கண்கள் கலங்கியிருந்தன. எனக்காக அங்கு வைக்கப்பட்ட தண்ணீர் போத்தலை திறந்து அவன்முன் வைத்தேன்.

தன் வரைபடங்களுக்கு விளக்கம்கேட்டு இடையில் அமீர் வந்துபோனான்.

சடுதியாக போத்தல் தண்ணீர் முழுவதையும் ஒரேமூச்சில் குடித்த ராகுலன் 'உங்களை நான் 'அங்கிள்' என கூப்பிடலாமா...?' எனக் கேட்டான்.

'தாராளமாக அழைக்கலாம். என்னால் முடிந்த உதவிகளை உனக்கு நிச்சயம் செய்வேன். ஆட்சேபனை இல்லையென்றால் உன்னைப்பற்றி நான் முழுவதும் அறிந்துகொள்ளலாமா...?'

நீரில் தத்தளித்த ஒருவனுக்கு எதிர்பாராத விதமாக ஒரு மரக்கட்டை கிடைத்த மனோநிலையில் ராகுலன் தன் கதையைத் தொடர்ந்தான்.

'வடக்கு மாகாணத்தைப் போலவே கிழக்கு மாகாணத்திலும் பல போராளிக் குழுக்கள் இயங்கி வந்தன. பெருந்தொகையான பணம் கேட்டு ஒரு போராளிக் குழு என் அப்பாவிடம் வந்தது. அது அறுவடைக்கான காலம். போராளிக் குழு கேட்ட தொகையை அப்பாவால் கொடுக்க முடியவில்லை. அவர்கள் ஒரு காலக்கெடு வைத்தார்கள். காலக்கெடு முடிந்த பின் பணம் கேட்டு வீட்டுக்கு வந்தவர்கள் தகராறு செய்யவே அப்பா கோபத்தில் அவருடைய வேட்டைத் துவக்கை எடுத்தாராம். அங்கிருந்து சென்றவர்கள் அடுத்தநாள் அதிகாலை மூன்று மணிக்கு மீண்டும் வந்தார்கள்...!' வாக்கியத்தை முடிக்காமல் ராகுலன் அழுதான்.

அங்கு என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. ராகுலன் அமைதியடையட்டும் என அமீரிடம் சென்று அவனது தரவுகளைச் சரிபார்த்தேன். மீண்டும் வந்தமர்ந்தவுடன் ராகுலன் தானாகவே தொடர்ந்தான்.

'வீடு எரிக்கப்பட்டு, அப்பா அம்மா இரண்டுபேருமே கொலை செய்யப்பட்ட நிலையிலும் ஆசிரியர்களின் உதவியினால் தொடர்ந்து படித்து அந்த வருட பல்கலைக்கழக புகுமுக பரீட்சையில் கிழக்கு மாகாணத்திலேயே முதல் மாணவனாகச்

சித்தியடைந்தேன். எனது பரீட்சைப் பெறுபேறுகள் பற்றியும் எனது பின்னணி பற்றியும் திருகோணமலை நிருபர் கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றில் புகைப் படங்களுடன் ஒரு செய்திக் கட்டுரை எழுதியிருந்தார். என் அதிஷ்டம் அது அவுஸ்திரேலிய ஸ்தானிகராலய அதிகாரி களின் கவனத்துக்குச் சென்றிருக்க வேண்டும். ஓர் அதிகாரி நான் படித்த பாடசாலை அதிபரூடாக என்னைத் தொடர்பு கொண்டார். கொழும்பிலேயே அகதி அந்தஸ்துடன் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயரும் வாய்ப்பும் கிடைத்தது. அவர்களே பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அநுமதியும் பெற்றுத் தந்தார்கள்.'

இவற்றைச் சொல்லும்போது ராகுலனின் உடம்பு நடுங்குவதை அவதானித்தேன். அளவுக்கதிகமான உணர்ச்சி வசப்படுதலின் வெளிப்பாடே அது. அவனைச் சகஜநிலைக்கு கொண்டுவரும் எண்ணத்துடன் நான் உரையாடலில் குறுக்கிட்டேன்.

'தமிழிலே பன்னிரண்டாம் வகுப்பை படித்திருப்பாய். இங்கு வந்து ஆங்கிலத்தில் மருத்துவம் படிக்க மொழிச்சிக்கல் இருக்கவில்லையா..?'

'ஆங்கில அறிவு போதாதென கொழும்பிலேயே கணித்திருந்தார்கள். இதனால் ஒருவருட தீவிர ஆங்கில மொழிப்பயிற்சியின் பின் மருத்துவ கல்லூரிக்கு சென்றேன். படிக்கும்போது 'யுத் அலவன்ஸ்' எனப்படும் கொடுப்பனவு களையும் ஸ்தானிகராலயமே ஒழுங்கு செய்திருந்தது.'

'மருத்துவக் கல்லூரியில் எத்தனை வருடம் படித்தாய்?'

'மூன்று வருடங்கள்' என்றவன் இருகைகளாலும் முகத்தைப் பொத்தியபடி விம்மினான். அவனின் உடம்பு வேர்த்தது. எழுந்து அவன் பக்கம் சென்று, ஒருகையால் அவனை அணைத்து இயல்பு நிலைக்கு கொண்டு வந்தேன்.

அவனாகச் சொல்லாமல் மேலும் விபரம் கேட்க நான் விரும்பவில்லை. கைதிகளைத் தொடுவதும் தண்ணீர்

கொடுப்பதும் சிறைச்சாலை விதிகளுக்கு முரண்பட்டவை. எனவே ராகுலனுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் கல்வி சம்பந்தமான விடயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன்.

அமீர் தனது வரைபடங்களை முடித்திருந்தான். அவை புதிய பல விஞ்ஞான தகவல்களைத் தந்ததில் நாம் மகிழ்ந்தோம். மதபோதகரைச் சந்திக்கச் சென்ற ரோனியும் நூலகத்துக்கு திரும்பியிருந்தான். ரோனியின் முகம் இப்பொழுது அமைதியாகக் காணப்பட்டது.

## 3

பல்கலைக்கழக முகவரிக்கு ஜோசெப்பிடமிருந்து ஒரு மின் அஞ்சல் வந்திருந்தது. அதன் வாசகம் இதுதான்:

'ரோனி பாரிய மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளான். இரவில் அவன் நித்திரை கொள்வதில்லை என சிறை வாடன்களின் குறிப்பு சொல்கிறது. குற்ற உணர்வினால் அவன் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவனது கவனத்தை வேறு திசையில் திருப்புவது அவசியமென்றும், மனோதத்துவ நிபுணர் சொல்லியுள்ளார். முடிந்தால் சிரமம் பாராது என்னைச் சந்திக்க முடியுமா? வேலை நாட்களில் கஷ்டமென்றால் சனி ஞாயிற்றுக் கிழமைகளிலும் சந்திக்கத் தயாராக உள்ளேன். பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்.'

அடுத்த சனிக்கிழமை சிறைச்சாலை அலுவலகத்தில் ஜோசெப்பைச் சந்தித்தேன். பரஸ்பர குசலம் விசாரிப்புக்கு பின் நேரடியாகவே விடயத்துக்கு வந்தார்.

'ரோனி பன்னிரண்டாம் வகுப்பு பரீட்சை எழுதிமுடித்த பின்னர் நடந்த சம்பவம் ஒன்றினால் சிறைச்சாலைக்கு வந்தவன். சொன்னால் நம்பமாட்டீர்கள், சமீபத்தில் வெளிவந்த பரீட்சை பெறுபேறுகளின்படி நூற்றுக்கு 99.6 UAI புள்ளிகள் பெற்றுள்ளான். இதுபற்றி இன்னமும் நான் அவனுக்குச்

சொல்லவில்லை. சென்ற வாரம் இவனது காதலியின் இளைய சகோதரி ரோனியைக் காண வந்துள்ளாள். அதன்பின்பு ரோனி பாரிய மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறைக்குறிப்பு சொல்கிறது. இந்த விடையத்தில் உங்கள் உதவியை எதிர்பார்க்கிறேன்.'

சுங்கானிலே கிடந்த சாம்பலை அதற்குரிய கிண்ணத்தில் கொட்டி, அதனைச் சுத்தப்படுத்தியவாறே ஜோசெப் எனது பதிலுக்காக காத்திருந்தார்.

ஒரு சிறை அதிகாரி கைதிகள் மீது இந்தளவுக்குக் கரிசனை கொள்வது தொழிற் கடமையல்ல. கைதிகளுடைய நலன் குறித்த அவருடைய அக்கறை என்னை நெகிழச் செய்தது.

'உங்கள் உணர்வில் சிறிதளவேனும் எனக்கு இருக்க வேண்டாமா? ரோனியின் படிப்பு விடயத்தில் என்னால் முடிந்ததை நிச்சயம் செய்வேன்' என அவருக்கு வாக்கு கொடுத்தேன்.

ஜோசெப் இன்ரகொம் மூலமாக சிறை வாடன்களுக்கு தகவல் கொடுத்து ரோனியை வரவழைத்தார். நாங்கள் பேசுவதற்கு வசதியாக எங்களைத் தனியே விட்டு, தனது சுங்கானில் புதிதாக புகையிலையை நிரப்பியவாறு அவ்விடத்தை விட்டகார்ந்தார்.

என் முன்னால் கதிரை நுனியில் ரோனி அமர்ந்திருந்தான்.

'சௌக்கியமாக இருக்கிறாயா? ஜோசெப் உனக்கு உதவுமாறு கேட்டுள்ளார். உன்னைப்பற்றிய சில விபரங்களை நான் அறிந்து கொள்ளலாமா?' என உரையாடலை ஆரம்பித்து வைத்தேன்.

'என்னைப்பற்றி என்ன சொல்வது'? பக்க வாதத்தால் படுக்கையில் இருக்கும் எனது தாய்க்கு நான் ஒரேபிள்ளை.

தந்தை இல்லை. இதற்கு மேல் பெரிதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.'

'நீ எதுவரை படித்திருக்கிறாய்...?' மேலும் தகவல் பெற ஏதுவாக இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

'பன்னிரண்டாம் வகுப்புவரை. பரீட்சை முடிந்து பெறுபேறுகளுக்காகக் காத்திருந்தபோதுதான் என் வாழ்க்கையை புரட்டிப் போட்ட அந்தச் சம்பவம் நடந்தது'.

ரோனி அதற்குமேல் எதுவும் சொல்லவில்லை. மேசை மேலிருந்த துண்டுப் பேப்பரில் ஜோசெப்பின் பென்சிலால் குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் வரையத் தொடங்கினான். அவன் வரைந்த சிக்கலான கோடுகள், மன அழுத்தத்தின் ஒருவகை வெளிப்பாடே. திடீரென தான் வரைந்த சில கோடுகளை கூந்தலாக உருவகித்து ஒரு பெண்ணின் முகத்தை வரையத் துவங்கினான்.

அவன் கீறி முடியும் வரை காத்திருந்த நான், 'இது யார், உன் காதலியா...?' எனக்கேட்டேன்.

கண்கள் கலங்கிய நிலையில் என்னை நிமிர்ந்து பார்த்தான், முதன்முறையாக என் முன் அழுவதுபோல..., கரை உடைந்தது!

ராகுலனைத் தேற்றியது போல ரோனியை தொடுவதோ அணைப்பதோ முறையல்ல. இது வெள்ளைக்கார அவுஸ்திரேலி யர்களின் நடைமுறை வழக்கமுமல்ல. ரோனிக்கு தெம்பைத் தரும் வகையில் கனிவுடன் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் தன் கண்ணீரைத் துடைத்தபடி தொடர்ந்தான்.

'சொறி சேர், உங்களை அசெளகரியத்துக்கு ஆளாக்கியிருந்தால் என்னை மன்னியுங்கள்'.

'அப்படி எதுவுமில்லை. உனக்கு உதவுவதற்காகவே இங்கு வந்துள்ளேன். தொடர்ந்து சொல்' என அவனுக்கு நம்பிக்கை ஊட்டினேன்.

'மேரி என்னுடன் படித்தவள். நாங்கள் இருவரும் மனதாரக் காதலித்தோம். எங்கள் காதலை இருபகுதி பெற்றோர்களும் ஏற்றுக்கொண்டார்கள். பரீட்சை முடிந்த பின் இருவரும் மகிழ்ச்சியுடன் சுற்றித்திரிந்தோம். விடுமுறையில் மேரி ஒரு கோப்பிக் கடையில் வேலை செய்தாள். நான் 'சுப்ப மாக்கற்' ஒன்றில் பணிபுரிந்தேன்.

'நாங்கள் இருவரும் நண்பர்கள் ஒழுங்கு செய்திருந்த டிஸ்கோ விருந்துக்கு அன்று போகத் தீர்மானித்திருந்தோம். எதிர்பாராத வகையில் மேரி அன்று சில மணித்தியாலங்கள் மேலதிகமாக வேலை செய்ய வேண்டியிருந்தது. டிஸ்கோவுக்கு பிந்தி போக விரும்பாத மேரி, விருந்துக்கான ஆடையுடன் தனது காரை எடுத்துக்கொண்டு கோப்பிக் கடைக்கு வருமாறு சொன்னாள். ஆனால் என்னிடமிருந்ததோ 'எல்' லைசென்ஸ்...'

இந்த இடத்தில் நிறுத்தி குற்ற உணர்வுடன் என்னை நிமிர்ந்து பார்த்தான். நான் எதுவும் பேசாது அமைதியாக இருந்தேன். அவனாகவே மீண்டும் தொடர்ந்தான்.

'மேரியும் நானும் ஒன்றாகவே ஓட்டுநர் பரீட்சைக்குச் சென்றோம். செய்முறைப்பரீட்சையின் போது திருப்ப மொன்றில் சிக்னல் போடவில்லை என்பதைக் காரணம் காட்டி மீண்டும் பரீட்சை செய்ய இரு வாரங்களின் பின் நேரம் ஒதுக்கினார்கள். நான் சித்தியடையாததை, எனது பயிற்றுனராற்கூட நம்ப முடியவில்லை. தன்னிலும் பார்க்க நன்றாகவும் நிதானமாகவும் வண்டி ஓட்டுவதாக மேரி அடிக்கடி சொல்வாள். ஓருவகையில் உண்மையும் அதுதான். அந்தத் தைரியத்தில் தான் காரை எடுத்துக்கொண்டு கோப்பிக் கடைக்குச் சென்றேன். மேரி நீண்ட நேரம் வேலை செய்ததால் மிகவும் களைத்திருந்தாள். ஏதொ ஒரு வகை அசட்டுத் தைரியத்தில் தொடர்ந்தும் நானே கார் ஒட்டினேன்.'

ரோனி சடுதியாக நிறுத்தினான். மௌனமாக யன்னலுக்கு வெளியே வெகு நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எதைச் சொல்வது எதை விடுவது என்று தெரியாத நிலையில் அவன் தயங்குவதாகத் தோன்றியது. தொடர்ந்து பேசுவதை ஊக்கப்படுத்தும் விதமாக 'உம்' சேர்த்தேன்.

'சிறிது தூரம் சென்றிருப்போம். மேரி என்னை இறுக அணைத்து முத்தம் கொடுத்தாள். உணர்ச்சியில் தடுமாறிய நான் எதிரேவந்த லொறியுடன் மோதினேன். மேரி இருந்த பக்கத்தில் லொரி மோதியதால் எனது உயிரிலும் மேலான அவளின் உயிர் அந்த இடத்திலேயே போய்விட்டது. ஆனால் நான் பாவி... இன்னமும் உயிருடன் இருக்கிறேன்.'

கண்களிருந்து தொடர்ந்து வழியும் கண்ணீரை துடைக்கக்கூட சக்தியற்றவனாக, ரோனி பிரமை பிடித்தவனைப் போல அமர்ந்திருந்தான்.

அவனை எப்படி தேற்றுவது என்று தெரியாத நிலையில் 'என்ன நடந்தது என்பதை நீதி மன்றத்தில் சொன்னாயா?' எனக் கேட்டேன்.

'சேர், நான் செய்தது குற்றம். அதை நியாயப்படுத்தக் கூடாது. அதற்குரிய தண்டனையை நான் அனுபவிக்க வேண்டும். எனது உயிருக்குயிரான மேரியே போய்விட்டாள். அவளைக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. செய்த குற்றத்தை நான் ஒத்துக் கொண்டேன். மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை தந்திருக்கிறார்கள்.'

ரோனி இதனைச் சொல்லி முடிக்கவும் ஜோசெப் தனது அலுவலகத்துள் நுழையவும் சரியாக இருந்தது. ரோனியின் படிப்பைப்பற்றி பேசுவதற்கு இது சரியான நேரமல்ல என்பது எனக்குத் தெரியும். ஜோசெப்பும் அது பற்றிக் கேட்கவில்லை. அதன் பின் பொதுவான பல விடையங்களைக் கதைத்தபின் மீண்டும் சந்திக்கிறேன் என ரோனிக்கு கூறி, இருவரிடமிருந்தும் விடை பெற்றேன்.

# 4

அமீரின் மனைவி றொஸ்நாக், ஈராக் - ஈரான் எல்லையோரம் இருந்த பிரதேசத்தில் பிறந்தவள். அவள் பாரசீக அராபிய கலப்பின சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவள். இவர்கள் தனி இனமாகக் கருதப்படுகிறார்கள். இதனால் இவர்கள் ஈரானிய பாரசீகர்களுடன் சேர முடியாமலும் ஈராக்கிய அராபியர்களுடன் வாழ முடியாமலும் தனித்து விடப் பட்டவர்கள். ஈரான்–ஈராக் யுத்தத்தின் போது றொஸ்நாக்கின் குடும்பம் பாதிக்கப் பட்டதால் அவர்கள் தலைநகர் தேரானுக்கு இடம் பெயர்ந்ததாக ஒருமுறை அமீர் சொல்லியிருக்கிறான்.

பாரசீக அராபிய கலப்பு. பதின் பருவ வயது. றொஸ்நாக் தேரான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த முதல் வருஷமே அழகு ராணிப் போட்டி ஒன்றில் பேரழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அவளின் அழகில் மயங்கி அமீர் காதலித்தான்.

அமீரின் பெற்றோர் பாரசீக பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு பரம்பரை பரம்பரையாக பெருவாரியான சொத்துக்கள் ஈரானில் உண்டு. தன் மகனுக்காக வளைகுடா நாடுகளின் வழக்கப்படி பெண் கேட்டு, தன் குடும்பத்துக்கு எந்த வகையிலும் ஒவ்வாத ஒரு கலப்பின குடும்பத்திடம் செல்ல அமிரின் தந்தை மறுத்துவிட்டார். இந்த விடையத்தில் அமீர் உறுதியாக நின்றதால், தன் ஒரே மகனின் விருப்பத்தை நிறைவேற்ற 'அமீர் றொஸ்நாக்' திருமணத்துக்கு அவர் அரைகுறை மனதுடன் ஒத்துக்கொண்டார்.

அமீர் இங்கு படிக்க வந்த காலத்தில், ஒரு வருட பட்டப் பின்படிப்பை அவுஸ்திரேலியாவில் முடித்தவர்கள் தொழில் விசாவுக்கு விண்ணப்பிக்கலாம் என்ற சட்டம் அமுலுக்கு வந்தது. இந்த வசதியைப் பயன்படுத்தி பெருவாரியான வெளிநாட்டு மாணவர்கள் அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொண்டார்கள். இதுபற்றி அமீர் என்னிடம் ஒருமுறை கேட்டான்.

தன் மனைவி அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்க விரும்புவதாகவும் அதற்காக பட்டப் பின்படிப்பை (Post Graduate) படிக்க கேட்பதாகவும் சொல்லிக் குறைப்பட்ட அமீர், இதுபற்றித் தன் மனைவியுடன் பேசுமாறும் கேட்டுக்கொண்டான்.

'அமீர், இதை நீ மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்! நீயும் உனது குடும்பமும் இங்கு நிரந்தரமாக தங்குவது பற்றிய உன் அபிப்பிரயமென்ன...?'

'சேர், எனது குடும்பம் மிகவும் பாரம்பரியம் மிக்கது. பல தலைமுறைகளுக்கத் தேவையான சொத்தும், வாழ்க்கை வசதிகளும் எமக்கு தேரானில் உண்டு. எனது நாடும் குடும்பமும் எனக்காக காத்திருக்கிறது..? நான் எதற்காக இங்கு வாழவேண்டும்...?'

'பின் எதற்காக உன் மனைவி ஆசைப்படுகிறாள்?'

'இங்குள்ள ஆடம்பர வாழ்வும் அளவுக்கதிகமான பெண்கள் சுதந்திரமுமே இதற்கான காரணிகளாக இருக்கலாம்' என்று சொன்னவன், அவனாகவே மேற்கொண்டு இதுபற்றிப் பேச விரும்பாதவனாக ஆய்வு கூடத்துக்கு சென்றான்.

இது பற்றி றொஸ்நாக்குடன் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். அதற்குள் அவளாகவே, அமீருக்குத் தெரியாமல் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்து அனுமதியும் பெற்றுவிட்டாள் என அறிந்தேன். இதற்கு மேல் நான் இதில் தலையிடுவது நாகரீகமல்ல என உணர்ந்து அமைதியானேன்.

றொஸ்நாக் ஒரு வருட Master degree படிப்பைத் தொடர்ந்தாள். அவளது கற்கை நெறியில் சில விரிவுரைகளை நான் நிகழ்த்தினேன். அப்பொழுதெல்லாம் என்னுடன் பேசுவதை வெகு தந்திரமாக தவிர்த்துக் கொண்டாள்.

றொஸ்நாக்கின் நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் துவங்கின. நண்பர்கள் சேர்ந்தார்கள். பெண்ணியம் பேசுபவர்கள் நெருங்கிய நண்பர்களானார்கள். பர்தா

அணியாமல் வெளியே வரத் துவங்கினாள். பின்னர் மயிரைக் குட்டையாக வெட்டி, நிறமடித்து வெள்ளைக்கார குட்டிகள் போல உலாவரத் துவங்கினாள்.

காலப்போக்கில் றொஸ்நாக்கைப் பற்றிப் பல்வேறு கதைகள் 'கிசுகிசு'க்கப்பட்டன. 'தூய பாரசீக ரத்தத்துடன் வந்திருந்தால் இப்படிச் செய்யாள்' என மற்றைய ஈரானியப் பெண்கள் குசு குசுக்கவும் செய்தார்கள்.

றொஸ்நாக் இவை பற்றி எதுவுமே கவலைப்படவில்லை. பாரசீக அராபிய அழகின் கலவையுடன், அவுஸ்திரேலிய மேலைத்தேச நாகரீகமும் உடையும் சேர அவள் பல்கலைக் கழகத்தில் தேவதை போலப் பவனி வந்தாள். அவளைச் சுற்றி இள வட்டங்கள் வயது வித்தியாசமில்லாமல் மொய்த்தார்கள். உண்மையைச் சொன்னால் அவள் இரண்டு பிள்ளைகளுக்குத் தாய் என்பதை அப்போது யாரும் நம்பமாட்டார்கள்.

அமீர் முற்றிலும் உடைந்து போனான். ஆய்வுகூடப் பணிகளிலும் தடுமாறினான். எதை நம்புவது எதை விடுவது என்ற நிலையில் அவனையிட்டு நான் மிகவும் கவலைப் பட்டேன். அமீர் இப்போது யாரிடமும் பேசுவதில்லை. என்னுடன் பேசுவதையும் வெகுவாக குறைத்துக் கொண்டான். வீட்டில் அவள் அமீரை மதிப்பதில்லை என்றும், அடிக்கடி சண்டைகள் ஏற்படுவதாகவும் அருகில் வசிக்கும் மற்ற ஈரானிய மாணவர்கள், அவன்மீதுகொண்ட அக்கறை தொனிக்கச் சொன்னார்கள்.

அமீரும் மிகவும் அழகானவன். றொஸ்நாக்கிற்கு மிகவும் பொருத்தமானவன். இருப்பினும் றொஸ்நாக்கின் பாதை ஏன் தடம் மாறியது...? சூழலா, சுதந்திரமா, பெண் விடுதலை பற்றி அக்கறை கொண்ட பெண்ணியம் பேசும் நண்பர் கூட்டமா...? இவற்றுள் எது அவளில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது...? அமீர் மீது நான் அக்கறை கொண்ட காரணத்தினால் என் இயல்பையும் மீறிய தோரணையில் என் மனம் சிந்திக்கலாயிற்று.

அமீருடன் படிக்க வந்த ஈரானிய மாணவன் ஒருவன், அமீரின் குடும்ப விஷயம் பற்றி பேசுவதற்காக அன்றொருநாள் என் அலுவலகம் வந்திருந்தான்.

‘நாங்கள் பாரசீகர்கள், எங்களுக்கென்று தனித்துவ கலாசாரம் உண்டு. என்னதான் நாங்கள் தலை கீழாக நின்றாலும் வெள்ளையர்களாக மாறப்போவதில்லை. பல்லின-பல்கலாசாரத்தை ஏற்றுக்கொண்ட நாடு அவுஸ்திரேலியா. புலம்பெயர்ந்த நாட்டில் ஒரு இனத்தின் கலாசார மாற்றமென்பது இரவோடு இரவாக, ‘எடுத்தேன் கவிழ்த்தேன்’ என்று முடியக்கூடியதல்ல. இது சுற்றம் சூழல் என பலரையும் பாதிக்கக்கூடிய விஷயம். பெண்ணியம் பேசுபவர்கள் தங்கள் மட்டத்திலிருந்து பார்க்காமல் அமீரைப் பற்றியும் சிறிது சிந்திக்க வேண்டும். அமீருக்கு வசதியான வாழ்வொன்று ஈரானில் காத்திருக்கிறது. றொஸ்நாக்கிற்காக தந்தையையே எதிர்த்து நின்றவன் அமீர். ஆரம்பத்தில் இது பற்றி றொஸ்நாக்குடன் நாம் பேசினாலும், இப்போது அவள் எம் பேச்சைக் கேட்கும் நிலையில் இல்லை. அமீரின் குடும்ப நலன் கருதி அவளுடன் ஒருமுறை பேசிப் பாருங்களேன்’ என வேண்டுகோள் வைத்தான்.

றொஸ்நாக்குடன் பேசுவதற்கு பல முறை நான் முயன்றும் அவள் என்னைத் தவிர்ப்பதிலேயே குறியாக இருந்தாள். அவள் இப்போது பழைய றொஸ்நாக் இல்லை. விரிவுரைகளின் முடிவில் நான் வலிந்து பேச முயன்றால், பேராசிரியரின் ‘Harassment’ என்ற குற்றச்சாட்டு என்மீது சுமத்தப்படக்கூடிய வாய்ப்பும் உண்டு. சென்ற வருடம் இப்படியானதொரு சூழ்நிலையில் அது ஊடகங்களால் பெரிது படுத்தப்பட்டு, என்னுடன் பணி புரிந்த சகா ஒருவன் சிக்கலில் மாட்டிக் கொண்டான். அமீர் குடும்பத்தை இணைத்து வைக்க முடியாத அவல நிலமையை எண்ணி என்னையே நான் நொந்துகொண்டேன்.

குடும்ப பிரச்சனைகளுக்கு மத்தியிலும் அமீர் தனது ஆராய்ச்சிக் கட்டுரைக்குத் தேவையான பரிசோதனைகளை

முடித்திருந்தது எனக்கு ஆறுதல் தந்தது. இனி தரவுகளைக் கணித்து கட்டுரை எழுதி முடிக்க வேண்டியதுதான்.

இந்த நேரத்திலே தான் அது நடந்தது!

றொஸ்நாக் கர்ப்பமடைந்தாள். கருத்தரித்து ஆறுமாதங்களின் பின்பே இது அமீருக்கு தெரியுமென்று சக ஈரானியர்கள் பேசிக் கொண்டார்கள். றொஸ்நாக் கர்ப்பமடைந்தது பற்றி பல வதந்திகள் உலாவின.

சட்டக் கல்லூரியில் 'பட்டப் பின்படிப்பு' படித்த அவுஸ்திரேலிய வெள்ளையன் ஒருவனுடன் றொஸ்நாக் சுற்றித் திரிந்ததை நான் கண்டிருக்கிறேன். வயிற்றில் வளரும் குழந்தை அவனதே என ஈரானியர்கள் சத்தியம் செய்யவும் தயாராக இருந்தார்கள். அதற்குப் பின்பு அமீர் ஆய்வு கூடத்துக்கு வரவில்லை. இருப்பினும் அவனது தரவுகளைச் சரி பார்த்து எனது கணினியில் சேமித்துக் கொண்டேன்.

அந்தக் காலகட்டத்தில், ஈரானிய மதகுரு ஒருவர் அவுஸ்திரேலியா வந்திருந்தார். அவர் முன் அமீரின் குடும்பப் பிரச்சனை, சக ஈரானிய நண்பர்களால் கொண்டு செல்லப்பட்டது.

'தான் இனி மத ஒழுக்கப்படி வாழ்வதாகவும், வயிற்றில் வளரும் குழந்தை அமீரது என்றும் றொஸ்நாக் சத்தியம் செய்ததாகவும் அறிந்து, நான் மனதார சந்தோசமடைந்தேன்.

ஆராய்ச்சிக் கட்டுரை எழுதத் தேவையான தரவுகளைப் பெற, அமீர் என்னிடம் வருவானென காத்திருந்தேன். அவன் வரவில்லை. ஆனால், ஈரானிய மாணவன் ஒருவன் றொஸ்நாக் பற்றிப் புதிய தகவலுடன் வந்தான். காதலனின் சாயலில், தூய செம்பட்டை (Blond) நிற மயிருடன் றொஸ்நாக் நேற்று ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுள்ளதாக சொன்னான்.

ஈரானிய மாணவன் ஆய்வு கூடத்தில் நிற்கும் போதே,

அங்கு எமது அலுவலக செயலாளர் அவசர அவசரமாக வந்தாள். உள்ளூர் பொலீஸ் நிலையத்திலிருந்து இருந்து விவசாய பீட அலுவலகத்துக்கு தொலை பேசி அழைப்பு வந்ததாகவும் அமீர் விடயமாகப் பேச என்னை உடனடியாக பொலீஸ் நிலையத்துக்கு வரமுடியுமா எனக் கேட்டதாகவும் சொன்னாள்.

ஈரானிய மாணவனையும் அழைத்துக் கொண்டு உடனே பொலீஸ் நிலையம் சென்றேன். நிலைய வாசலில் சட்டக் கல்லூரி மாணவனான றொஸ்நாக்கின் வெள்ளைக்கார நண்பன் சிகரெட் புகைத்தபடி உலாத்தினான்.

பொலீஸ் நிலையத்தின் உள்ளே கை விலங்குடன் அமீர் அமர்ந்திருந்தான். அவனது உடை எங்கும் திட்டுத் திட்டாக இரத்தம் படிந்திருந்தது. உற்றுப் பார்த்தேன். அவனது உடலில் சிறு, சிறு கீறல்களே இருந்தன. பாரிய காயம் எதுவுமில்லை.

என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் ஓரளவு ஊகிக்க முடிந்தது!

அன்று காலை றொஸ்நாக்கையும் குழந்தையையும் பார்க்க அமீர் மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறான். அப்போது றொஸ்நாக்கின வெள்ளைக்கார நண்பனும் வந்திருக்கிறான். அங்கு வாக்குவாதம் முற்றி ஆத்திரத்தில் அங்கிருந்த கண்ணாடி பூ வாஸால் றொஸ்நாக்கை தாக்கியிருக்கிறான். அவளின் மண்டை உடைந்து, வலது கை சுட்டு விரலும் முறிந்து விட்டது. அமீர் எனக்கு விபரம் தெரிவிக்கும்படி சொன்னதன் பேரில் என்னை அழைத்ததாக பொலீஸ் உத்தியோகத்தர் விபரம் சொன்னார்.

றொஸ்நாக்கின் வெள்ளைக்கார நண்பன், அமீர் தன்னைத் தரக்குறைவாகப் பேசித் தாக்க வந்ததாகவும், றொஸ்நாக்கை அடித்து படுகாயமேற்படுத்தி கொலை செய்ய

முயன்றதாகவும், வைத்திய சாலையின் அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகவும், தனக்குத் தெரிந்த சட்டப்பிரிவுகள் எல்லாவற்றையும் துணைக்கு இழுத்து வழக்குப் பதிவு செய்திருந்தான். கண்கண்ட சாட்சிகளாக மருத்துவமனை ஊழியர்களின் பெயர்கள் முறைப்பாட்டில் குறிக்கப்பட்டிருந்தன. இக்குற்றச்சாட்டுகளிலிருந்து அமீர் சுலபமாகத் தப்புதல் சிரமம் என்பதை விளங்கிக்கொண்டேன்.

அமீர் என்னை பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கும்படி சொல்லியிருந்த போதிலும், அவன் என்னுடன் பேசும் நிலையிலில்லை. என்னுடன் வந்த ஈரானிய மாணவனை நேர்கொள்ள அமீர் சங்கடப்பட்டான். நீதிபதி முன் ஆஜர் படுத்தும்போது, நான் பிணை கொடுப்பதாகவும், வழக்குரைஞர் ஒருவரை அமர்த்துவதாகவும் வாக்களித்தேன். பின்னர் அவனுக்கு ஆறுதல் சொல்லி அலுவலகம் திரும்பினேன்.

இரண்டு மணித்தியாலங்களின் பின் பொலீஸ் உத்தியோகத்தர் ஒரு மின் அஞ்சல் அனுப்பியிருந்தார். தனக்கும் தனது குழந்தைக்கும் அமீரால் உயிராபத்து இருப்பதாக றொஸ்நாக் மேலதிக முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்திருப்பதால் அமீரை பிணையில்விட ஏலாத நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

இவை எல்லாம் றொஸ்நாக்கின் வெள்ளைக்கார நண்பனின் கைங்கரியம் என்பது எனக்குத்தெரியும். றொஸ்நாக்கின் நண்பன் எனது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவனுடன் பேசுவது அவுஸ்திரேலிய நீதி அமைப்பின் கீழ் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். எனவே நல்லதொரு வழக்குரைஞரை ஒழுங்கு செய்து ஈரானிய தூதுவராலயத்துக்கும் அறிவித்த பின் நீதிமன்றத்தில், வழக்கு விசாரணைக்கு வரட்டுமென்று காத்திருந்தேன்.

# 5

ஈழத்தமிழன் என்ற காரணத்தினாலோ என்னவோ, ராகுலன் என்னை முழுமையாக நம்பி, பாசமுடன் பழகலானான். சந்தர்ப்பங்கள் வரும்போது தனக்கு நடந்த அனைத்தையும் மனந்திறந்து சொல்லவும் செய்தான். இருப்பினும், மற்றவர்கள் இருவரும் நான் சொந்த நாட்டவன் என்று ராகுலன் மீது பரிவு காட்டுவதாக, தப்பவிப்பிராயம் கொள்ளக்கூடாது என்பதிலும் நான் கவனமாக இருந்தேன்.

புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களுடைய திருமண அணுகுமுறையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுது சீதனம் கேட்பதில்லை. ஆண்களின் உழைப்புக்கு ஏற்றபடி பெண்களும் சரிக்குச்சமமாக சம்பாதிப்பதால் இது வந்ததாக இருக்கலாம். உண்மையைச் சொல்லப் போனால், திருமணத்தில் ஊரிலிருந்த ஆணாதிக்க முறை இப்பொழுது இல்லை என்றே சொல்லலாம்.

'பெண்களும் அவர்களது அம்மாக்களும் தான் இப்ப Choosy...! என்று, மூன்று பெடியங்களை வைத்துக்கொண்டு பொருத்தமான மணப்பெண்களைத் தேடி அலையும் பரிதாபத்துக்குரிய அம்மா ஒருவர் சொல்லி வருத்தப்பட்டார். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே, 'நல்ல பெடியனாய்ப் பாத்துப்பிடியடி...' என்று தூண்டிவிடும் அம்மாக்களும் இப்பொழுது உருவாகத் துவங்கியுள்ளார்கள்.

இந்தியா இலங்கை போலல்லாமல், அவுஸ்திரேலியாவின் பல்கலைக்கழக அமைப்பின்படி என்ஜினியருக்கு படிக்க அதிகமான மாக்ஸ் தேவையில்லை. ஏனென்றால் என்ஜினியருக்கு ஒப்பீட்டளவில் இங்கு சம்பளம் குறைவு. வேலைத்தலத்திலோ அல்லது சமூகத்திலோ அவர்களை 'என்ஜினியர்' என்று அழைப்பதுமில்லை. ஆனால் டாக்டர், லோயர் போன்ற படிப்பு படிப்பவர்களுக்கு, பெண்கள் மத்தியில் 'மவுசு' கூட. அதிலும் 'டாக்குத்தர்' என்றால் அல்லது 'லோ-எக்கவுண்டிங்' என்ற இரட்டை பட்டப்படிப்பென்றால் கேட்கவே வேண்டாம். 'பிடிச்சுக் கொண்டுவாடி...' என்று, பெட்டை

கூட்டிவரும் பெடியனை அம்மாக்கள் விழுந்து விழுந்து உபசரிப்பார்கள்.

இந்த வகையில், பெண்ணைப் பெத்த ஒரு தமிழ் அம்மாவிடம் சிக்குண்டவனே ராகுலன். டாக்குத்தர் படிப்புத்தான் படிக்க வேண்டுமென்று தாயும் மகளும் தலைகீழாக நின்றும் முயற்சி கைகூடவில்லை. கடைசி டாக்குத்தர் மாப்பிளையாவது பிடிக்க வேணும் என்ற அங்கலாய்ப்புடன் அவர்கள் ஓடித்திரிந்தபோது வகையாக ராகுலன் மாட்டுப்பட்டான். பெற்றோரை இழந்த நிலையில், யாருமற்றவனாக ராகுலன் நின்றது அவர்களுக்கு மேலும் வசதியாயிற்று.

ராகுலன் படித்த பல்கலைக் கழகத்திலேயே ராம்ஜியும் படித்தாள். 'அவை மகிழ்ச்சியான காலங்கள்' என்ற ராகுலன் அந்த நினைவுகளை அழிக்கச் சிரமப்பட்டான்.

புலம்பெயர்ந்த மண்ணிலே தமிழப் பெற்றோர்கள், இறுகப் பற்றிக் கொண்ட இன்னொரு விஷயம், இந்தியக் கலைகள்! பெடியன் பெட்டைக்கு விருப்பமோ இல்லையோ, திறமை இருக்குதோ இல்லையோ சங்கீதம், நாட்டியம், மிருதங்கம், தபேலா என நாயோட்டம் பேயோட்டமாகப் பிள்ளைகளைக் கூட்டித்திரிவார்கள். இறுதியில் இந்த எலியோட்டம், ஓர் அரங்கேற்றத்துடன் முற்றுப்பெறும்.

ராம்ஜிக்கும் மிக ஆடம்பரமாக அரங்கேற்றம் நடந்தது. அங்கு ராகுலன் முன்னிலைப்படுத்தப்பட்டான். 'ராம்ஜியின் பெடியன், தமிழ்ப் பெடியன், டாக்குத்தருக்குப் படிக்கிறான்,' என ஓடி ஓடி பெண்கள் மத்தியில் தகவல் சொல்லப்பட்டது.

'மற்றவை பெடியனைப் பிடிச்சுப்போடாமல் இருக்க தந்திரமாய் 'பப்பிளிக்கிலை' கதை பரப்பிவிடுகினம்' என்பதுதான் அரங்கேற்றத்துக்கு வந்திருந்த பெண்களிடையே அன்று கலகலப்புடன் பரிமாறப்பட்ட 'விடுப்பு' ஆகும்.

'ராம்ஜியின் பெற்றோர் யார்...?' என்று அறியும் ஆர்வம் என்னுள் எழுந்த போதிலும், படிப்பு நாகரீகத்தைக் கடைப்பிடிப்பதிலே நான் மிகவும் கவனமாக இருந்தேன்.

ராகுலனின் படிப்புச் சம்மந்தமாக அவனைச் சந்திக்க அன்றும் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன். கிறிமினல் குற்றமுள்ள ஒருவன் மருத்துவம் படித்துமுடித்தாலும் மருத்துவராக பணிபுரிய மெடிக்கல் 'கவுன்சில்' அனுமதிக்காது. எனவே, ராகுலனின் விருப்பப்படி சிறையிலிருந்தே, தபால் மூலம் பயிலக்கூடிய 'ஜேர்னலிசம்' கற்கைநெறிக்கு, பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றிருந்தேன். அதற்கான பத்திரங்களைப் பூர்த்திசெய்து அவனுடைய கையெழுத்தைப் பெறுவதற்காகவே அன்று நான் அங்கு சென்றிருந்தேன். ராகுலனுடன் பேசுவதற்கு சிறை அதிகாரி ஜோசெப் கணிசமான நேரம் ஒதுக்கியிருந்தார். இதற்கான காரணமுமிருந்தது.

ராகுலன் செய்த குற்றம் தவிர்க்க முடியாத சூழலில், தற்காப்பின் நிமிர்த்தம் நிகழ்ந்திருந்தால், மெடிக்கல் 'கவுன்சில்' கருணை அடிப்படையில் அனுமதிக்கக்கூடுமென்றும், இதேபோல முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் மருத்துவப் பேராசிரியர் ஒருவர் தகவல் தந்திருந்தார். இதனை நான் ஜோசெப்புக்குத் தெரியப்படுத்தியிருந்தேன்.

விதிவிலக்கிற்கான இந்த வசதியை ராகுலனுக்கு விளங்கப்படுத்தி, நடந்த விஷயத்தை விரிவாகச் சொல்லும்படி கேட்டேன்.

'பல்கலைக்கழக விடுதியில் வசித்த நான் அவர்களின் அழைப்பின் பேரில், சனி ஞாயிற்றுக் கிழமைகளில் ராம்ஜியின் வீட்டுக்குச் சென்று வந்தேன். ஞாயிறு மாலை விடுதிக்குத் திரும்பும்போது அந்த வாரம் வைத்துச் சாப்பிடுவதற்கு போதுமான உணவுப்பண்டங்களையும் மறக்காது தந்து விடுவார்கள். பெற்றோரை ஒரே நேரத்தில் சடுதியாக இழந்திருந்த நிலையில் அவர்களது உபசரிப்பும் பரிவும் எனக்குத் தந்த ஆறுதல் கொஞ்ச நஞ்சமல்ல...'

'அவர்கள் உன்னை சிறையில் வந்து பார்பதில்லையா...?'

இந்தக் கேள்வி அவனைச் சங்கடப் படுத்தியிருக்க வேண்டும். கண்கள் கலங்கிய நிலையில் எதுவும் பேசாது யன்னலுக்கு வெளியே பார்த்தபடி இருந்தான். இதற்கு அவன் பதில் சொல்ல விரும்பவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

'எனது கேள்வி உன்னைப் புண்படுத்தியிருந்தால் என்னை மன்னித்துவிடு...'

'இல்லை அங்கிள். இப்படி பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதீர்கள்' என்று என் கையைப் பற்றியபடி விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

'இருவர் இணைந்து செய்யும் மருத்துவ செய்முறை வகுப்பில், என்னுடன் மருத்துவம் படிக்கும் ஒரு வடஇந்தியப் பெண் இணைந்திந்தாள். இவள் ஒரு ஜாலியான 'party type'. இதை தெரிந்து கொண்ட ராம்ஜி மிகவும் possessive ஆக என்னை விட்டுப்பிரியாது ஒட்டிக்கொண்டே இருக்க முயன்றாள்'.

'வடஇந்தியப் பெண்ணை நீ விரும்பினாயா...?'

'இல்லை அங்கிள். எனது குடும்ப சோகமே என்னை விட்டுப்போகாத நிலையில் நான் காதலைப் பற்றிச் சிந்திக்கும் நிலையிலா இருக்கிறேன்'? ஆரம்பத்தில் எனக்கு ஒரு ஆதரவு தேவைப்பட்டது. அது ராம்ஜியின் பெற்றோரிடமிருந்து கிடைத்தது. ஆனால் போகப் போக நிலமை மாறி அது புலி வாலைப்பிடித்த நிலமைக்கு வந்து விட்டது...' ராகுலன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. நிலத்தை வெறித்துப் பார்த்தபடி அமைதியாக இருந்தான்.

எமது சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் இன்னும் நேரமுள்ளதா என்பதை அறிய கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். நேர அவசரத்தை அவனாகவே புரிந்துகொண்டு மேலும் தொடர்ந்தான்.

'வார விடுமுறையில் நான் வட இந்தியப் பெண்ணுடன் போய்விடக்கூடும் என்ற எண்ணத்தில் டிஸ்க்கோவும் பாட்டியுமென ராம்ஜி என்னைக் கூட்டித்திரிந்தாள். இலங்கை யிலிருந்து வந்த எனக்கு இவை எல்லாம் புதிதாவும் பிரமிப்பாக வும் இருந்தன'.

'ஒரு சனிக்கிழமை இரவு அது நடந்தது. சிற்றி சென்ரரிலுள்ள டிஸ்க்கோவுக்கு ராம்ஜி ரிக்கற் வாங்கியிருந்தாள். ஆட்டம் முடிய நள்ளிரவைத் தாண்டிவிட்டது. இப்படியான நேரங்களில் எம்மை திரும்ப அழைத்துச்செல்ல ராம்ஜி கொடுக்கும் தொலைபேசி அழைப்பின் பேரில் அவளுடைய அப்பா வருவார்.'

'வழமை போல அன்றும் வந்து கார் தரிப்பில் நின்றபடி அவர் தகவல் கொடுக்கவே நாம் வெளியில் வந்தோம். நிறைவெறியில் வெளியே நின்ற வெள்ளைக்கார இளைஞர்கள் ராம்ஜியுடன் சில்மிசம் செய்யவே இழுபறி ஏற்பட்டது. அப்போது அங்கு நின்ற ஒருவன் ராம்ஜியை கட்டிப்பிடித்து எதிர்பாராத விதமாக முத்தம் கொடுத்தான். அலறிக்கொண்டே அவள் என்னை உதவிக்கு அழைத்தாள். அவனை ராம்ஜியிடமிருந்து பிரிப்பதற்கு எனது முழுப் பலத்தையும் பிரயோகித்து தள்ளவேண்டியதாயிற்று. அப்போது வெறியில் நின்ற அவன் நிலை தடுமாறி அருகிலிருந்த சீமெந்துக் குந்தில் தலையடிபட விழுந்துவிட்டான். அவனது தலை உடைந்து ரத்தம் பெருகி மூர்ச்சையாகவே அம்புலன்ஸ்ஸும் போலீசும் வந்து விட்டது...!'

'ராம்ஜியின் அப்பா அங்கு நின்றாரா...?'

'இவ்வளவும் அவர் முன்னிலையில்தான் நடந்தது.'

'அவர் உதவிக்கு வரவில்லையா...?

'சொன்னால் நம்பமாட்டீர்கள் அங்கிள், போலீஸ் வந்த வுடன் அவர் மகளைக் கூட்டிக்கொண்டு, எப்படி அங்கிருந்து மறைந்தாரோ எனக்குத் தெரியாது.'

‘உண்மையாகவா...?’ அவன் சொன்னதை ஜீரணிக்க முடியாமல் உரத்துக் கத்திவிட்டேன். ராகுலன் ஓர் விரக்திப் புன்னகையுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

‘மண்டை அடிபட விழுந்தவனுக்கு என்ன நடந்தது...?’ ராகுலனின் தண்டனையின் தீவிரத்தை அறிவதற்காகவே, இதனை அவசரமாகக் கேட்டேன்.

‘அவன் உடம்பில் அதிக அளவு அல்க்ககோல் இருந்தது. அதனால் இரத்தப்பெருக்கு தீவிரமடைந்ததால் அவன் இறந்துபோனான்....!’

எந்தவிதமான உணர்ச்சியுமில்லாமல் இதைச்சொன்ன பின் அவன் அமைதியானான். வாழ்க்கையில் அவனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், இழப்புக்கள், ஏமாற்றங்கள் எல்லாம் அவனது மனதை மரத்துப்போகச் செய்திருக்க வேண்டும். இப்போது அவன், சிறையில் நான் முதன்முதலில் சந்தித்த ராகுலன் அல்ல!

‘எது எப்படி இருந்தாலும், இதை கைமோசக் கொலையெனக் கணித்திருப்பார்கள். தண்டனை தீவிரமாக இருக்குமே...என நான் மூளையைக் குழப்பவே, ‘அங்கிள் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.’ என்று கூறிய அவன் தனது மீதிக் கதையைத் தொடர்ந்தான்.

‘வழக்கு நடந்தது. விளக்க மறியலில் இருந்த போது எனக்காக வாதாட வழக்கறிஞரை வைக்கக்கூட ஆளில்லாத நிலையில் அரசே ஒருவரை நியமித்தது. யாருமற்ற நிலையில் அனாதையாக நின்ற நான், தம்பலகாமம் தொடக்கம் என் வாழ்க்கையில் நடந்த எல்லாவற்றையும் சொன்னேன். என்மீது நீதிபதிக்கு அநுதாபம் ஏற்பட்டிருக்கலாம். மூன்று வருடங்கள் தீர்ப்பாயிற்று...!’

‘அவர்கள் உன்னை வந்து பார்த்தார்களா...?’

‘இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அங்கிள்...?

நீயே சொல்லு. அவர்கள் உனக்கு ஆதரவாக இருந்தார்களா...?

அவன் தன்னை அறியாமல் உரக்கச்சிரித்தான். ‘அங்கிள் இந்தச் சிறை வாழ்க்கையும் என்னைப் பொறுத்தவரையில் ஒரு பல்கலைக் கழகமே. இது எனக்கு நிறையவே கற்றுத்தந்துள்ளது. எமது சமூகத்தின் கபடத்தனங்களையும், சுயநலத்துக்காகச் செய்யும் குள்ளத்தனங்களையும் எண்ணி நான் பலநாள் சிறையில் ஆத்திரப்பட்டிருக்கிறேன். உண்மையைச் சொன்னால் அங்கிள், உங்களைச் சந்தித்த பின்புதான் வாழ்க்கையில் மீண்டும் பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது.’

‘நீங்கள் கேட்ட விடயத்துக்கு வருகிறேன். ராம்ஜியும் தந்தையும்தான் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள். விளக்கமறியல் காலத்தில் என்னை அவர்கள் ஒரு நாளாவது வந்து பார்க்காத நிலையிலும், வழக்கறிஞர் மூலமாக அவர்களை வந்து சாட்சிசொல்லுமாறு அழைத்தேன். அவர்கள் மறுத்துவிட்டார்கள். சாட்சிசொல்ல அவர்கள் வராததை நீதிபதி தனது தீர்ப்பில் கண்டித்து, எனது எதிர்கால நன்மை கருதி குறைந்த பட்ச தண்டணை தருவதாக தீர்ப்பில் குறிப்பிட்டார். இப்பொழுது நீங்கள் ஒருவர் தான் எனது வெளி உலகத்துடனான தொடர்பு’ என்று நிறுத்தினான்.

அவன் விழியோரத்திலே பனித்த கண்ணீர்த்துளிகள் மின்னின. ஆனாலும் மனம் நிம்மதி அடைந்தவனைப்போல பாசம் புரளும் புன்னகை ஒன்று அவன் உதடுகளில் நெளிந்தது.

## 6

அமீர் போலீஸ் காவலிலும், றொஸ்நாக் தலையில் காயங்களுடன் மருத்துவமனையிலும் இருந்த காலங்களில் இரண்டு பிள்ளைகளையும் அமீருடன் படிக்க வந்த ஈரானியக் குடும்பமொன்று பராமரித்ததை அறிந்து மகிழ்ந்தேன்.

அமீரின் பிள்ளைகளைப் பராமரித்த ஈரானிய மாணவன் அன்று என்னிடம் வந்திருந்தான். மருத்துவமனையிலிருந்து, பிறந்த குழந்தையுடன் வெளியேறிய றொஸ்நாக்,

வெள்ளைக்கார நண்பனுடன் சென்று, அவனது வீட்டில் வாழ்வதாகத் தகவல் சொன்னான்.

'முதலிரண்டு குழந்தைகளின் நிலமை என்ன'? என்று கேட்டேன்.

தனது பராமரிப்பில் இருக்கும் இரண்டு பிள்ளைகளையும், அமீர் தேரானுக்குத் தனது பெற்றோரிடம் அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டதாகச் சொன்னான்.

இரண்டு வாரங்களின் பின், அமீரின் தந்தை ஈரானிய தூதுவராலய அதிகாரி ஒருவருடன் சிட்னி வந்திருந்தார். அமீரைச் சந்தித்த அவர், இரண்டு பிள்ளைகளைகளையும் தன்னுடன் கூட்டிச் சென்றார். மொழி தெரியாத நிலையிலும், என்னையும் சிறையதிகாரிகளையும் சந்தித்து அமீரின் படிப்பை முடிக்க உதவுமாறு கேட்டார். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே, அந்த வெள்ளிக்கிழமை சந்திப்புகளைச் சிறை அதிகாரி ஜோசெப் ஏற்பாடு செய்து தந்தார்.

மனைவியை அடித்து காயமேற்படுத்தி கொலை செய்ய முயன்றது முதற்கொண்டு பல்வேறு குற்றங்களை, றொஸ்நாக்கின் சட்டம் படித்த நண்பன் அடுக்கியிருந்தாலும், அவற்றில் பல, நீதிமன்றத்தில் எடுபடவில்லை. ஈரானிய கலாசாரமும், இஸ்லாமிய ஆசாரங்களும், இந்த வழக்கில் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமென அமீரின் வழக்குரைஞர் வைத்த வாதத்தை ஓரளவு ஏற்றுக்கொண்ட நீதவான், அமீருக்கு இரண்டுவருடச் சிறைத்தண்டனையைத் தீர்ப்பாக அளித்தார்.

அமீரின் தண்டனை முடிய ஆறு மாதங்கள் மாத்திரம் பாக்கி உள்ளது. அதற்குள் அவன் தன் டாக்டர் பட்டத்துக்கான ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து விடுவான்.

ஆனால் ரோனியும் ராகுலனும் குறைந்தது இன்னும் இரண்டு வருடங்களாவது சிறையிற் கழிக்க வேண்டும். இவர்களையொத்த வளரிளம் பருவத்துப் பிள்ளைகள் பலர், வெளியே வாழக்கையைச் சுகிக்க, சந்தர்ப்ப வசத்தால், எதிர்பாராதவிதமாகச் செய்த குற்றங்களுக்காக இவர்கள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பன்னிரண்டாம் வகுப்பில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதால், தொலைதூரக் கல்லூரியில் படிக்க ரோனிக்கு இப்பேது அனுமதி கிடைத்துள்ளது. பக்க வாதத்தால் தாக்குண்டு நேர்ஸிங்கோமிலுள்ள ரோனியின் தாயால் அவனை வந்து சிறையில் பார்க்க முடியவில்லை. அவன் சார்ந்த கிறீஸ்தவ கோவிலின் மதபோதகர் இடையிடையே வந்து பார்த்து ஆறுதுதல் சொல்லிச் செல்வது எனக்குத் தெரியும்.

அன்று சிறைச்சாலைக்கு சென்றபோது, சிறையதிகாரி ஜோசெப் சொன்ன தகவல் என்னை வியக்க வைத்தது.

மேரியின் பேற்றோரும், தேவாலய பாடகர் குழுவில் ரோனியுடன் பங்கு கொண்ட மேரியின் தங்கையும், ரோனியை வந்து பார்க்கிறார்களாம்.

'மேரியின் பெற்றோருக்கு, ரோனிமேல் கோபமில்லையா?' என, நெடுங்காலமாக என் மனதை குடைந்த அந்தக் கேள்வியை, ஜோசெப்பிடம் கேட்டேன்.

'மேரியுடன் நட்பாய் இருந்த காலத்தில் அவளது பெற்றோருடன் ரோனி அன்யோன்யமாகப் பழகியவன். மகளை இழந்த வலி அவர்களுக்கு நிச்சயம் இருக்கும். ஆனால் இந்த விபத்துக்கு ரோனிமட்டும் காரணமல்ல என்பதும் அவர்களுக்குப் புரியும். மேரியின் மரணச்சடங்குக்கு, அவர்களாகவே ரோனியைச் சிறைச்சாலை அனுமதியுடன் அழைத்துச் சென்றார்கள். 'அவர்கள் மன்னிக்கத் தெரிந்தவர்கள் அல்லது வாழக்கையைப் புரிந்தவர்கள்' என்று வைத்துக்கொள்ளுங்களேன் என்ற யோசெப், பிறிதொரு விடயத்தையும் தொடர்ந்து சொன்னார்.

'மேரியின் பெற்றோரை விட மேரியின் தங்கைதான் ரோனியை அடிக்கடி வந்து பார்த்து அவனுக்கு ஆறுதல் வழங்குகிறாள்...'

'இதை அவர்களுக்கு இடையேயான ஆழமான நட்பாக எடுத்துக்கொள்ளலாமா...'?

'நீங்கள் கேட்பதின் அர்த்தம் எனக்குப் புரிகிறது. அப்படி நடந்தால் நல்லதுதான். மூன்று வருடங்களின் பின் அவன் வெளியே வரும்போது அவளின் நட்பு, வாழ்க்கையில் அவனுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்தக்கூடும். ஆங்கிலேயர்களின் குடும்ப உறவில் நாம் இலாப நட்டக் கணக்குப் பார்ப்பதில்லை. டாக்ராகப் பணிபுரியும் பெண் ஒரு தச்சுத் தொழிலாளியைக் காதலித்து மணம் முடிப்பதும், ரோசிரியர் ஒருவரின் மனைவி ரெஸ்ரோறன்றில் பணிபுரிவதும் எமது வாழ்க்கை முறையில் இயல்பானது' என்றார்.

தர்மசங்கடமான சில நிமிடங்களை அடைகாத்த பின்னர், 'இலங்கைத் தமிழர்கள் சிட்னியில் எத்தனை பேர் வாழ்கிறார்கள்...?' என்ற கேள்வியுடன் ராகுலன் விஷயத்துக்கு வந்தார்.

'சரியான புள்ளிவிபரம் தெரியாது. ஆனால் குத்து மதிப்பாக இருபதினாயிரம் பேர் வாழ்வதாக நம்பப்படுகிறது.'

'இன்று வரையில் இவர்களுள் ஒருவர்கூட ராகுலனை வந்து பார்த்ததில்லை. பல்கலைக் கழகத்தில் படிக்கும் அடுத்த தலைமுறையின் பிரதிநிதிகளான, அவனது நண்பர்கள் கூட வந்து பார்க்காதது எனக்கு ஆச்சரியமளிக்கிறது. ராகுலன் யாரைக் காப்பாற்ற முயன்று இப்போது தண்டனை அநுபவிக்கிறானோ, அவர்கள் சாட்சி சொல்லாததும், அவனை வந்து பார்க்காததும் எனக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது. இரண்டாயிரமாண்டுகளுக்கு மேலான கலாசாரப் பெருமை கொண்டது உங்கள் தமிழ் நாகரீகம் என அண்மையில் வாசித்து வியந்தேன். அவசர உலகத்தில் அதைத் தொலைத்து விட்டீர்களா...?

யோசெப்பின் கேள்விகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அமைதியாக அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

'நான் சொல்வதையிட்டு நீங்கள் வருத்தப்படக்கூடாது. உங்களைப் போன்றவர்களுக்கு சொல்வதன் மூலம்தான் இந்த விடயத்தை உங்கள் சமூகத்துக்கு கொண்டு செல்லமுடியும். படகில் அகதிகளாக வந்து தடுப்புமுகாமில்

எத்தனை தமிழர்கள் பல ஆண்டுகளாக வாழ்கிறார்கள் என்பது தெரியுமா...? உங்களில் எத்தனைபேர் அவர்களை அகதி முகாமில் சந்தித்திருக்கிறீகள்'? அவர்கள் எல்லோரும் வேலைவாய்ப்பைத்தேடி வந்தவர்களாக இருக்க முடியாதல்லவா...? எனது பெற்றோர்களும் வேலவாய்ப்புக்காக அயர்லாந்திலிருந்து இங்கு வந்தவர்கள்தான். ஏன், இங்கு வளமாக வாழும் உங்களிலே பலரும் அகதி அந்தஸ்துப் பெற்றவர்களாக இருக்கலாம். மனிதன் சுலபமாக மறக்கக் கற்றுக்கொண்டு சுயநலமாக வாழ முற்படுவதுதான் பிரச்சனைகளின் ஆணிவேர்...!'

ஜோசெபின் உதடுகளிலே ஈரமற்ற புன்னகை ஒன்று சுழிந்து மறைந்தது. அது, அவர் மனசினைச் சிலகாலமாக அரித்துத்தின்ற தார்மீகக் கோபங்களைக் கொட்டித்தீர்த்ததின் அடையாளமாகக்கூட இருக்கலாம்.

நான் காரை நோக்கி நடந்தேன்.

அமீர் - ரோனி - ராகுலன்...!

சிறையிலிருந்து அமீர் வெளியே வந்ததும் றொஸ்நாக்கை, இஸ்லாமிய மதக் கலாசாரப்படி தலாக்' சொல்லி விலத்திவிடுவான். பெற்றோரின் விருப்பப்படி இன்னொரு திருமணம் செய்து கொண்டபின், அவனுக்கு ஈரானில் வளமான வாழ்வொன்று காத்திருக்கும்.

மேரியின் குடும்ப ஆதரவுடன் ரோனியும் புதியதொரு வாழ்வைத் துவங்கலாம்.

ராகுலன்...?

மனித வாழ்க்கை என்பது கடலிலே சங்கமிக்க ஓடிக்கொண்டிருக்கும் நதியைப் போன்றது. அமீர், ரோனி என்ற இரண்டு நதிகள் இங்கு தடங்கலின்றி ஓடிக் கொண்டிருக்கின்றன...!

காரில் அமர்ந்ததும் ஒரு காட்சி...!

அலகபாத்துக்கு (Allahabad) அந்தக்காலத்தில் 'ப்ரயாகம்' என்பது பெயர். இரண்டு நதிகள் சேரும் இடம்

என்பது அதன் அர்த்தம். மூன்றாவதாக, சரஸ்வதி என்ற பாதாள நதி அங்கே கண்ணுக்குப் புலனாகாது சங்கமிக்கிறதாக ஒரு ஐதீகம். இதனால் அது 'திரிவேணிசங்கமம்' என்று அழைக்கப் படுகிறது.

இதற்கான புராணக் கதை ஒன்று வழக்கில் உண்டு.

தசரத மகாராஜாவுக்கு தர்பணம் கொடுப்பதற்காக சீதாதேவி சகல ஏற்பாடுகளையும் செய்துமுடித்தபின் ப்ரயாகத் தில் அமர்ந்திருந்தாள். ராம, லட்சுமணர் வந்து சேர்வதற்காக காத்திருப்பதாகவும், சிறிது நேரம் பொறுத்துக்கொள்ளுமாறும் சீதாதேவி, தசரத மகாராஜாவைக் கேட்டாளாம். ஆனால் தசரத மகாராஜாவுக்கு அதிக பசியாக இருந்ததால், கொண்டு வந்திருந்த பட்சணங்களை ஆகம விதிப்படி கொடுத்தாளாம். மகாராஜா மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டார்.

தாமதமாக வந்த ராம லட்சுமணரிடம் நடந்த விஷயங் களை சீதாதேவி எடுத்துச் சொல்லியிருக்கிறாள். இதை நம்பாத அவர்கள் அதற்கான சாட்சியங்களைக் கேட்டார்களாம். அதற்கு அவள் சரஸ்வதி உட்பட ஐந்து சாட்சியங்களை அழைத்ததாகவும், சரஸ்வதி சாட்சி சொல்ல வராததால், 'இன்றிலிருந்து இந்த இடத்தில் நீ யார் கண்களுக்கும் புலப்படாமல் போவாய்' என்று சீதாதேவி சபித்ததாகவும் கூறப் படுகிறது. அன்றிலிருந்து கங்கையும் யமுனையும் சங்கமிக்கும் அந்த இடத்தில், சரஸ்வதி கண்களுக்குத் தெரியாமல், இரு நதிகளுக்கும் அடியில் ஓடுவதாக நம்பப்படுகிறது.

சரஸ்வதியைப்போல, மானுடகுலத்தின் கண்களிலே ஈழத்தமிழரின் துயர் தெரியாமல் இருப்பதற்கு யார் இட்ட சாபம் காரணம்?

சரஸ்வதியை வாலயம் செய்த அறிவுஜீவிகளெனத் தம்பட்டமடித்துப் பவனிவரும் தமிழர்கள், அந்தச் சிறை அதிகாரி கேட்ட கேள்விக்கு என்ன பதில் வைத்திருக் கிறார்கள்...?

இது என்னையே நான் கேட்கும் கேள்வியும்!

கனத்த மனதுடன் காரை 'ஸ்ராட்' செய்தேன்.

# தூதர்கள்

## 1

டிஸ்கோ பண்டா, பேர்ளின் சுரங்கவண்டி நிலைய வாங்கொன்றில் அமர்ந்திருந்தான்.

அவன் அருகில் நிறை வெறியில் சில்வா!

டிஸ்கோ பண்டாவின் வாயிலிருந்தும் அல்க்ககோல் நெடி வீசியது.

அவன் போதையில் தடுமாறவில்லை. நிதானமாகவே புகையை உள்ளுக்கு இளுத்து வளையம் வளையமாக வெளியே ஊதிக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரதும் வாழ்க்கை தடம்மாறி, தள்ளாட்டத்துடன் உருண்டு கொண்டிருப்பதை அவர்களுடைய தோற்றங்கள் வெளிப் படுத்தின. இருவரும் ஒரு காலத்தில் என்னுடன் படித்த கலாசாலை மாணவர்கள்.

## 2

ஜேர்மனியில் படித்த காலத்திலே டிஸ்கோ பண்டா எனக்கு அறிமுகமானான்.

ஜேர்மனி, கிழக்கும் மேற்குமாக இரண்டு நாடுகளாகப் பிரிந்திருந்த காலத்தில் இது நடந்தது. பண்டா அப்போது கிழக்கு ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தான்.

இடையில் ஒரு வரலாற்றுக் குறிப்பு!

1949 ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி தொடக்கம், 1989 நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதிவரை நாலு தசாப்தங்கள் ஜேர்மனியின் கிழக்குப்பகுதி, கம்யூனிச ஆட்சியின்கீழ், ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு என்ற பெயருடன் விளங்கிற்று. அந்தக் காலங்களில், வளர்முக நாடுகளிலுள்ள கம்யூனிசக் கட்சிகள் தங்கள் ஆதரவாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசுகள் வழங்கி கம்யூனிச நாடுகளுக்கு அனுப்பிவைத்தன.

இந்தவகையில் கிழக்கு ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தவன் தான் பண்டா. கிராமத்து விவசாயியான அவனுடைய மாமா கம்யூனிசக்கட்சியின் தீவிர அங்கத்தவர். அவருக்கு கட்சியில் இருந்த செல்வாக்கு காரணமாகவே பண்டாவுக்கு கிழக்கு ஜேர்மனி வரும் அதிர்ஷ்டம் வாய்த்தது. மாமாவுக்கு ஒரு அழகான பெண் இருப்பதாகவும், அவளையே படிப்பு முடிய கல்யாணம் செய்து கொண்டு இனிதே வாழப்போவதாகவும் பண்டா வந்த புதிதில் இலங்கை மாணவர்கள் மத்தியில் சொல்லித் திரிந்தான்.

பண்டா மகியங்கனை காட்டின் அயலிலுள்ள சிங்கள கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். ஆங்கில மொழி அறிவு குறைவு. ஜேர்மனிக்கு விமானம் ஏறுவதற்குத்தான். அவன் முதன்முதலிலே கொழும்பு வந்தவன் என சில்வா எப்போதும் அவனுக்குப் பழிப்புக்காட்டுவான். பண்டா அதனை பொருட்படுத்துவதில்லை.

ஜேர்மனியில் ஆங்கில மொழி ஒரு செல்லாக் காசு. சகல அலுவல்களும் அங்கு ஜேர்மன் மொழியில்தான். படிக்க வரும் மாணவர்களுக்கு ஒரு வருடம் தீவிர ஜேர்மன் மொழிப்பயிற்சி தரப்படும். அதன்பின் அவர்கள் பல்கலைக் கழகத்தில் ஜேர்மன் மொழியிலேயே கல்வி கற்கவேண்டும். தண்ணீரில் குதித்தால்தான் நீந்தப்பழகலாம் என்பார்களே. இதை மொழிப்பயிற்சியில் அவர்கள் கடைப்பிடித்தார்கள்.

ஜேர்மனிக்கு பண்டா வந்த அதே மாணவர் குழுவில் வந்தவன்தான் சில்வா. அவனுக்கு தான் கொழும்பு 'கறுவாத்தோட்டத்தான்' என்கிற கெறு. அந்தப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக பணக்காரர்களே வாழ்ந்தார்கள். அவனுடைய தந்தைக்குப் பணத்தினாலே சம்பாதிக்க முடிந்த அரசியல் தொடர்பும் இருந்தது. இதனால், கொழுத்த வருவாய்தரும் அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் சகல அதிகாரங்களும் கொண்ட பொது முகாமையாளராகப் பவனிவந்தார்.

சில்வாவின் தகப்பனுக்கு கிழக்கு ஜேர்மன் தூதுவருடன் இருந்த நட்பால், நேரடியாகப் புலமைப்பரிசில் பெற்று பல்கலைக்கழகத்துக்குப் படிக்க வந்தான் சில்வா. அவன் மேட்டுக்குடிச் சிங்களவனின் கொழுப்புடன் வளர்ந்தவன். ஜேர்மனிக்கு வந்த பின்னரும் சிறிது காலம், அந்தக் கொழுப்புக் கரையாத மிடுக்குடன் வாழ்ந்தான்.

உண்மையைச் சொன்னால், பண்டாவின் நெற்றியில் கிராமத்தான் என்று எழுதி ஒட்டியதுபோலவே தோன்றினான். சகசிங்கள மாணவர்களுக்கு அவனுடைய கிராமியத்தை கேலி செய்வது இன்பமான பொழுது போக்காக இருந்தது. அவனுக்கு முன்னாலேயே அவனை மையமாக வைத்துப் பல மோசமான மோடிக் கதைகள் புனைந்து பரிகசிப்பார்கள். அதிக காலம் இந்த நிலமை நீடிக்க பண்டா விட்டுவிடவில்லை.

தோல்வியை ஒப்புக்கொள்ளாத கிராமத்துப் போராளி அவன். இந்தக் கேலிகளை ஒரு சவாலாக ஏற்று, கிராமத்தானிடம் இயல்பாக உள்ள ரோச உணர்ச்சியுடன் ஜேர்மன் மொழியை வசப்படுத்தி விறுவிறுவென முன்னேறினான்.

அந்தக் காலங்களில் அங்குள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அதற்கான விடுதியில்தான் தங்க வேண்டும். பெண்கள் ஆண்கள் அனைவருக்கும் ஒரேவிடுதிதான். விடுதி அறைகள் புறாக்கூடு போன்று சிறியவை. மேலும் கீழுமாக இரட்டைத் தட்டுக் கட்டில் போட்டிருப்பார்கள். அறையில்

வெளிநாட்டு மாணவன் தங்கியிருந்தால், அவனுடன் ஜேர்மன் மாணவன் ஒருவனை இணைத்திருப்பார்கள். அந்தவகையில் பண்டாவின் அறையிலே எரிக் குடியிருந்தான்.

அறையில் வசிக்கும் சகா, பெரும்பாலும் கொம்யூனிச கொள்கையில் பிடிப்புள்ளவனாக இருப்பான். இது ஒரு வகையில் மூளைச்சலவை செய்யும் தந்திரம் அல்லது கண்காணிப்பு நடவடிக்கை என்று அந்நிய மாணாக்கர் குசுகுசுக்கவும் செய்தார்கள்.

எது எப்படியிருந்தாலும், பல்கலைக்கழக விடுதிகளில், கேளிக்கைகளுக்கு குறையிருக்கவில்லை. புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவிரவாக விடுதியின் மேல்மாடி கிளப்பில் 'டிஸ்கோ' நடைபெறும்.

இந்த மூன்று நாட்களையும் பண்டா தவறவிடுவதில்லை. தன் கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ள டிஸ்கோ நிகழ்ச்சிகளை அவன் மகா கெட்டித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டான். முயற்சி பயன் தந்தது. அவனது பெயருடன் 'டிஸ்கோ' ஒட்டிக்கொண்டு நாளடைவில் அவனது பெயர் டிஸ்கோ பண்டா எனப் பிரபலமடையலாயிற்று.

கிராமத்தில் பண்டா கண்டிய நடனத்தை முறைப்படி பயின்றவன். கொண்டாட்ட நாள்களிலே போர்த்துக்கேயர் ஆட்சியின் சின்னமாகச் சிங்களவருடன் ஒட்டிக் கொண்ட 'பைலா' ஆட்டங்களிலும் சிரத்தையுடன் கலந்து கொள்பவன். இவை கைகொடுக்வே, மேல் நாட்டு டிஸ்கோ நடனங்களைச் சிரமமின்றி பழகி ஒரு வருடத்துக்குள் சிறந்த ஆட்டக்காரன் என புகழும் பெற்றான்.

ஜேர்மன் பல்கலைக்கழக பெண்களும் இவனுடன் போட்டி போட்டுக் கொண்டு ஆடத் தொடங்கவே, ஜேர்மன் மாணாக்கரிடையே பண்டா மிகவும் பிரபல்யமாகிவிட்டான். அவனைக் கேலி செய்த சிங்கள சகாக்கள் இதைக்கண்டு வாயைப்பிளந்து வீணீர் வடிக்காத குறைதான்.

பல்கலைக்கழகத்தின் இரண்டாம் ஆண்டு முடிவில் டிஸ்கோ பண்டா, பட்டிக்காட்டுச் சிங்களவனல்ல. அவன் ஒரு 'மொடோன்' சிறீலங்கன்!

அவனது ஆங்கில மொழி அறிவின்மை, ஜேர்மன் மொழி பயில்வதற்கு வசதி செய்திருக்கலாம். ஒரு குழந்தை தாய் மொழியை எப்படி நேரடியாகக் கற்கிறதோ அதே போல பண்டாவும் ஜேர்மன் மொழி பயின்று ஒறிஜினல் ஜேர்மன்காரன்போல் பேசினான். ஜேர்மன் மொழியிலேயே பண்டா சிந்திக்கத் துவங்கியது, பல்கலைக்கழக படிப்பில் முன்னிலைக்கு வருவதை இலகுவாக்கியிருக்கலாம்.

ஆரம்ப நாட்களிலே பண்டாவை கேலி செய்த சகாக்கள் 'அப்பே சகோதரய' என இப்போது பவ்யமாக பழக ஆரம்பித்தார்கள். சில்வா அவனுடன் வலிந்து நட்பு பாராட்டத் துவங்கிய காலத்திலே, பண்டாவின் உதட்டில் ஓர் அர்த்தமுள்ள புன்னகை முகிழ்ந்து மறைவதை நான் அவதானித்திக்கத் தவறவில்லை.

கொம்யூனிச ஆட்சியில் ஆடம்பரப் பொருள்களை 'முதலாளித்துவச் சீரழிவு' என்று ஒதுக்கும் மனோநிலை வளர்க்கப்பட்டது. அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதில் மட்டும் மனித மனம் திருப்திப்படுகிறதா?

மேற்கு ஜேர்மனியில் அமோகமாக உலாவிய ஆடம்பரப் பொருள்களை ஏன் கிழக்கு ஜேர்மன் மக்கள் இழக்கவேண்டும் என்கிற ஆதங்கம் காலப்போக்கிலே அதி வளர்ச்சி காணலாயிற்று.

கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மனிக்கு செல்லுதல் மிகவும் சிரமமாக்கப்பட்ட நிலையிலும் வெளிநாட்டு மாணாக்கர்கள், அங்கு தங்கு தடையின்றி சென்று வந்தார்கள். இது சர்வதேச சமூகத்தில் நல்லபிப்பிராயம் சம்பாதிக்கும் உத்தியே. இதனைப் பயன்படுத்தி வெளிநாட்டு மாணாக்கர் மேற்கு ஜேர்மனி சென்று ஆடம்பரப் பொருட்களை கிழக்கு ஜேர்மனிக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள்.

கிழக்கு ஜேர்மன் பணம் மேற்கு ஜேர்மனியில் செல்லாது. ஆனால் சில்வாவுக்கோ, கிடைக்கும் புலமைப்பரிசில் பணத்துக்கு மேலதிகமாக அவனது தந்தை இலங்கையில் இருந்து அமெரிக்க டொலர்களை கிரமமாக அனுப்பி வந்தார். இதனால் அவன் ஒரு கொம்யூனிச நாட்டில், முதலாளி என்ற திமிருடன் வாழமுடிந்தது.

குடும்பத்தின் பரம்பரைச் செல்வாக்கில் சில்வா மேல்தட்டு வாழ்க்கையைச் சுகித்தவன். தனித்திறமை எதுவுமில்லை. ஜேர்மன் மொழியின் கடினமான இலக்கணத்தையும் அவனால் கிரகித்துக் கொள்ள இயலவில்லை. மொழிச் சிக்கலினால் சில்வாவின் பல்கலைக்கழகப் படிப்பும் சில்லெடுப்பாக மாறத் துவங்கியது.

ஜேர்மன் இளம் பெண்களுடன் பண்டாவுக்கு இருக்கும் செல்வாக்கைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்பிய சில்வா, இப்பொழுது பண்டா எதைச் சொன்னாலும் கேட்கும் நிலமைக்கு மாறிவிட்டான். இதெல்லாம் சகஜம் 'மச்சாங்' என்பது சில்வாவின் சமாதானமாக அமைந்தது. இருவரும் அடிக்கடி மேற்கு ஜேர்மனி சென்று அமெரிக்க டொலரில் ஆடம்பரப் பொருள்களை வாங்கிவரத் துவங்கினார்கள்.

பண்டா கொண்டுவரும் ஆடம்பரப் பொருள்கள், அவனது டிஸ்கோ ஆட்டம், ஜேர்மன் மொழிப் புலமை எல்லாம் ஜேர்மன் நாட்டின் வெள்ளைக்காரக் 'குட்டிகள்' மத்தியிலே அவனுடைய செல்வாக்கை அசுர வேகத்தில் வளர்க்க உதவின.

பண்டா என்னதான் 'மொடேனாக' மாறினாலும் சாப்பாட்டு விடயத்தில் கிராமத்துச் சிங்களவன்தான். அவனுக்கு சோறு வேண்டும். சிரமம் பாராமல் நன்றாகச் சமைப்பான்.

மேசை கதிரை இருந்தாலும் பீங்கானிலே சோற்றைப் போட்டு ஒரு கையில் ஏந்தி, மறுகையால் உதறி உதறி குழைத்துச் சாப்பிடுவான். சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அவன்

சமைக்கும் சோறும், பருப்பும், தேங்காய் சம்பலும், மிரிஸ் மாலுக் கறியும் அங்கு படித்த இலங்கை மாணாக்கரிடையே மிகவும் பிரசித்தம். சிங்கள மண்ணின் சமையல் கலையை ஐரோப்பிய மண்ணிலே நிலை நாட்டியதாக அவனைப் புகழ்ந்து தள்ளினார்கள்.

நாங்கள் அனைவரும் வார இறுதியில் சாமான்களை வாங்கிக் கொண்டு பண்டா முன் ஆஜராவோம். எல்லோருக்கும் சேர்த்து பண்டாவே சிரமம் பாராது சமைப்பான். நாங்கள் அவனுக்கு தொட்டாட்டு வேலைகள் செய்வோம். அவனது அறையில் வசித்த ஜேர்மன் சகா எரிக்கும் இப்போது கறி சோறு சாப்பிடப் பழகிவிட்டான். சமையலுக்கு தன் பங்காக அவன் திறமான கோழி இறைச்சி வாங்கிக் கொண்டு வருவான்.

மாலை ஆறுமணியானதும், பண்டா குளித்து 'சென்ற்' அடித்து டிஸ்கோவுக்கு கிளம்பி விடுவான். நாங்களும் அவனுடன் சேர்ந்து போனாலும், அவனுக்கு வாய்க்கும் அதிஷ்டம் மற்றவர்களுக்கு கிடைப்பதில்லை. பெண்கள் கூட்டத்தின் மத்தியில் பண்டாவுக்கு இருந்த செல்வாக்கைப் பார்த்து நாங்களெல்லாம் பொறாமைப்பட்டது உண்மைதான். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்வதில்லை.

கருவாத்தோட்டத்து மேட்டுக்குடிப் பிறப்புக் கர்வம் சில்வாவை உலுக்கி எடுக்கவே, 'இந்தா நானும் ஒரு பெட்டையை பிடிக்கிறன்' என்று அமெரிக்க டொலர்களை விசுக்கி எறிந்தான். இறுதியில் ஒருநாள், ஒரு பெண்ணைக் கூட்டிவந்து, அவள் தன்னுடைய சிநேகிதி என்றும் அவள் பெயர் 'மோனிக்கா' என்றும், அறிமுகப்படுத்தினான். அவளுக்கு சில்வாவிலும் பார்க்க, குறைந்தது ஐந்து வயதாகிலும் அதிகமாக இருக்கும் என்பது, அவளுடைய முதிர்ந்த முகத்தைப் பார்த்ததுமே தெரிந்தது. மோனிக்காவுடன் ஒரு சிறுவனும் வந்திருந்தான். தன்னுடைய முந்திய சிநேகிதனுக்கு பிறந்த மகன் என்று கூச்சப்படாமல் அறிமுகம் செய்து வைத்தாள்.

சிரிப்பை நான் என்னுள் அடக்கிக்கொண்டேன்.

'என்ன சில்வா, கண்டோடை மாட்டை அவிட்டிருக்கிறாய்' என ஜேர்மன் மொழியில் அருகில் நின்ற பரமசிவம் கேட்டான். அவன் இயல்பாகவே ஓர் 'ஓட்டைவாயன்'!

பரமசிவம் ஜேர்மன் மொழியில் கேட்டது சில்வாவுக்கு கோதியைக் கிளப்பவே 'போடா தமிழ் நாயே' எனக் கத்தினான்.

'என்னடா...?' என கோபத்துடன் எழும்பினான் பரமசிவம். தமிழ் மொழி, தமிழ் இனம் என்ற விடயங்களில் அவன் எப்போதும் உணர்ச்சி வசப்படுவான். கொம்யூனிச கட்சியின் வீ. பொன்னம்பலம் உதவியுடன் கிழக்கு ஜேர்மனிக்கு படிக்க வந்தவன். சுண்ணாகத்தில் விவசாயம் செய்த ஏழை கமக்காரனின் மகன். மண்வெட்டி பிடித்து உரம் பாய்ந்த கைகள். அவன் அடித்தால் சில்வா நொருங்கிப் போவான்.

இனரீதியாக நிலமை திசை திரும்பும் விபரீதத்தை புரிந்து கொண்ட பண்டா, அசலான கொம்யூனிச பரம்பரையில் வளர்ந்தவன் என்கிற தோரணையில் 'இனிமேல் சாப்பிட வருவதென்றால் இங்கு தமிழ் சிங்கள துவேசம் இருக்கக்கூடாது' எனக் கண்டிப்புடன் கூறினான். பண்டாவின் சாப்பாட்டுச் சுவை இருவரையும் பெட்டிப் பாம்பாக அடக்கிவிட்டது.

எரிக்கிக்கு தமிழ்-சிங்கள அரசியல் அவ்வளவாகப் புரியாது. கிழக்கு ஜேர்மனிக்கு அப்போது மேற்கு நாடுகளின் சஞ்சிகைகள் பத்திரிகைகள் இறக்குமதியாகாததால், வாசித்து அறியும் வாய்ப்பும் குறைவு. அங்கு படித்த பதினேழு சிறீலங்கன் மாணவர்களுள் நானும் பரமசிவமும் மாத்திரமே தமிழர்கள் என்பதால், அரசியல் விசயத்தில் அடக்கியே வாசித்தோம். இருப்பினும் சில்வாவின் சிங்கள திமிர்க் கதைகளுக்கு பரமசிவம் பொங்கி எழுவான். உணர்ச்சிகளின் கெம்புதலினால் எதுவும் நடக்கமாட்டாது என்பதை விளக்கி பரமசிவத்தை ஓரளவு அடக்கி வைத்திருந்தேன்.

எரிக் நாளடைவில் தமிழ் சிங்களப் பிரச்சனையின் ஆதிமூலத்தை எப்படியோ அறிந்து கொண்டான். சில்வா துவேஷம் பேசும் போதெல்லாம், எரிக் அவனைக் கண்டிப்பான். பண்டா எரிக்குக்கு துணை நிற்பான்.

சில்வா, கிடைக்கும் பணத்தில் பெரும்பகுதியை மது குடிப்பதில் செலவழித்துவிடுவான். இலங்கையில் அரசாங்கம் மாறியதால் சில்வாவின் தந்தை வகித்த பதவியும் பறி போனது. அதிகார துர்ப்பிரயோகம் செய்தவர் என புதிய அரசால் குற்றம் சாட்டப்பட்டார். அவருடைய செல்வாக்கும் ஆடம்பரமும் சுருங்கின. இதனால் வீட்டில் இருந்து வந்த டொலர்களின் வரத்தும் குறைந்தது.

நாங்கள் படித்த காலத்தில கிழக்கு ஜேர்மன் இளம் பெண்கள் மத்தியிலே ஒரு ‘போக்கு’ இருந்தது. அவர்கள் வெளிநாட்டுப் பிரஜையைத் திருமணம் செய்தால் கணவனின் நாட்டுக்கு செல்ல சட்டப்படி உரிமையுண்டு. ‘கணவன் நாட்டுக்குச் செல்கிறேன்’ எனச் சாக்குச் சொல்லி எல்லையைக் கடந்து மேற்கு ஜேர்மனிக்கு வந்ததும், பெரும்பாலான பெண்கள் தற்காலிக கணவனைக் கழற்றிவிட்டு, புதிய இடத்தில் புதுவாழ்க்கையைத் துவங்குவதற்கு அலைவதும் வழக்கமாகிவிட்டது.

இந்த உத்தியை மோனிக்கா நன்கு அறிந்திருந்தாள். மேற்கு ஜேர்மனி சென்று புதிய வாழ்க்கை ஒன்றினை அமைப்பதுவே அவளுடைய திட்டம். இதற்காக அவள் சில்வாவின் சபலத்தினை முறையாகப் பயன்படுத்தி அவனுடன் தொற்றிக் கொண்டாள்.

சில்வா படிப்பில் கெட்டிக்காரன் அல்ல. ஆடம்பரச் செலவாலும், குடியாலும் சில்வா படிப்பில் கோட்டைவிட பல்கலைக்கழகம் அவனை வெளியேற்றியது. படிக்காவிட்டால் கிழக்கு ஜேர்மனியில் வசிக்க முடியாது. இதனால் மோனிக்காவை சட்டப்படி மணம் முடித்து, மாடும் கன்றுமாக கிழக்கு ஜேர்மனியை விட்டு வெளியேறிவிட்டான்.

அவனுக்கிருந்த மேட்டுக்குடி திமிர் காரணமாக அதன்பிறகு அவனைப்பற்றி அவனது சகாக்களும் அதிகமாகக் கவலைப்படவில்லை.

டிஸ்கோ பண்டா படிப்பும் டிஸ்கோவுமாக சுற்றித் திரிந்தான். அவனது 'மன்மத செல்வாக்கு' அவனுடன் கூடப்படித்த போலந்து நாட்டுப் பெட்டையின் வயிற்றில் விளைந்தது. இருவரும் பல்கலைக்கழகப் படிப்பின் இறுதியாண்டில் படிக்கும் போது, பண்டாவின் ஆண் குழந்தையைப் போலந்து பெண் பெற்றெடுத்தாள்.

அதற்குப்பின் பண்டா அடங்கிவிட்டான். அந்தப் பெண்ணுடனும் குழந்தையுடனும் அவன் வேறொரு விடுதியிலே தங்கியிருந்தான்.

நாங்களும் தேவையில்லாமல் அவர்களுக்கு தொந்தரவு கொடுப்பதைத் தவிர்த்துக் கொண்டோம்.

'மாமன்ரை பெட்டையின்ரை நிலை என்ன? என்று பண்டாவைக் கேக்கட்டோ' என பரமசிவம் என்னை இடையிடையே கேட்பான்.

'சும்மா இரு. உள்ளதுக்கை நல்ல சிங்களவன் அவன்தான். அவனையும் விரோதியாக மாற்றிவிடாதே' என பரமசிவத்தை வழக்கம் போல தடுத்து வைத்திருந்தேன்.

துள்ளுற மாடு பொதி சுமக்கும் என்பார்கள். அது பண்டாவின் விஷயத்திலும் நடந்தது. படிப்பு முடிய போலந்து நாட்டுப்பெண் நாடு திரும்ப வேண்டும். போலந்து நாட்டின் அப்போதைய கம்யூனிச அரசும் பெண்ணின் உறவினர்களும் பண்டாவை ஏற்கத் தயாரில்லை. அவள் போலந்து நாட்டுக் கடவுச்சீட்டு வைத்திருப்பதால், ஜேர்மன் பெண்களைப்போல மேற்கு ஜேர்மனிக்குச் செல்லும் வாய்ப்பு இருக்கவில்லை.

போலந்துப் பெண் ஒரு நாள் திடீரென்று காணாமல் போய்விட்டாள்.

கொம்யூனிச அரசின் கெடுபிடிகளினால் அவள் தனது சொந்த இடமான Krakkow நகருக்கு குழந்தையுடன் சென்று விட்டதாக மற்றைய போலந்து நாட்டு மாணவர்கள் பேசிக் கொண்டார்கள். அந்தக் கூற்றின் உண்மையை உறுதி செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்த சம்பவத்தின் பின்னர், பண்டா சில நாள்கள் நாயோட்டம் பேயோட்டம் என்று அலைந்தான். பின்னர் படிப்படியாக மனம் தேறியவனாக பழைய டிஸ்கோ பண்டாவாக மாறினான்.

இறுதி ஆண்டின் இறுதி பரீட்சையை நெருங்கிக் கொண்டிருந்தோம். எங்கள் எல்லோரது படிப்பும் நிறைவுறும் தறுவாயிலிருந்ததால், மற்றவர்கள் வாழ்க்கையைப்பற்றி அக்கறைப்பட நேரமில்லாத அவதி. ஒவ்வொருவரும் தத்தமது எதிர்காலங்களைத் திட்டமிடும் தியானத்திலே மூழ்கினார்கள். ஊரிலிருந்து கலியாணம் பற்றிய நெருக்குதல்களும் வந்தன. புதிய சூழ்நிலைக்கு எப்படித் தயாராவது என்கிற கவலைகளும், பரபரப்புகளும் எல்லோரையும் தனிமைப்படுத்தின.

ஈற்றில் நானும் புலம்பெயர்வு என்கிற அலைகளிலே எற்றுண்டு அவுஸ்திரேலியா வந்து குடும்பஸ்தனாக சிட்னியில் வாழத் தலைப்பட்டேன்.

பண்டாவின் அறை நண்பன் எரிக்குடன் என் நட்பு தொடர்ந்தது. நாங்கள் படித்த காலத்தில் எரிக் பலருக்கும் பலவிதத்திலும் உதவியவன். நானும் பரமசிவமும் சிறுபான்மை இனத்தவர்கள் என்ற காரணத்தால் சிங்களவர்கள் துவேஷம் பேசியபொழுது தமிழருக்காக உரிமைக்கு குரல் கொடுத்தவன். கம்யூனிச தத்துவத்தை உண்மையாக நேசிப்பவன். மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசுவான். இதனால், அவனுடன் நட்பு பாராட்டி வாழ்வதை நான் பெருமையாகக் கருதினேன். என் நட்பினைத் தொடர்வதில் அவனும் அக்கறை காட்டினான்.

அரசியல் நிர்ப்பந்தங்களினால் பிளவுபட்டிருந்த ஜேர்மனி 1989ம் ஆண்டு ஒன்றிணைந்தது. இந்நிகழ்வு எரிக்கின் வாழ்க்கையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அவற்றை விரிவாக கடிதங்களில் எழுதுவான். கட்டுப்பாடுகள் அறுபட்ட சூழலிலே அவன் தன் மனைவி மேரியுடன் விடுமுறை ஒன்றிற்கு அவுஸ்திரேலியா வந்தான். நான் அவர்களை வற்புறுத்தி என் வீட்டில் தங்கும்படி செய்து உபசரித்தேன்.

ஒரு நாள்!

இரவு உணவு உண்ணும் போது பழைய நண்பர்கள் பற்றிய கதையில் மேய்ந்தோம். அப்போது பண்டாவைப் பற்றிக் கேட்டேன். அவன் மீது எப்போதும் எனக்கு அபிமானம் இருந்தது. சிங்கள இனவாதத்துக்கு அப்பாலாக அவன் தமிழர்களுடன் நல்லுறவு பேணியமை இதற்கு காரணமாக இருக்கலாம்.

போலந்து நாட்டுப் பெண் போனபின்னர் ஜேர்மன் பெண்ணொருத்தியை, மணம் முடித்து பண்டா வசதியான வாழ்க்கைதேடி அப்போதே மேற்கு ஜேர்மனி சென்று விட்டதாகவும், அதன்பின் அவனுடன் தனக்குத் தொடர்பு அறுந்து விட்டதாகவும் எரிக் கூறினான்.

'உனக்குச் சில்வாவை ஞாபகம் இருக்கிறதா?, அவன் கதை பெரியகதை....!' என எரிக் துவங்க, வேண்டாம் என்பதுபோல அவன் மனைவி மேரி சைகை காட்டினாள்.

'பரவாயில்லை அவன் சொல்லட்டும், தடுக்காதே மேரி' என்று நான் அவசரமாகக் குறுக்கிட்டேன்.

எரிக் சட்டம் படித்தவன். ஒன்றிணைந்த ஜேர்மனியில் தற்போது போ்ளினில் அரச சட்டத்தரணியாக பணிபுரிகிறான். நீதிமன்றத்தில் அரசு சார்பில் ஆஜரானபோது மோனிக்கா ஒரு நாள் குற்றம் சுமத்தப்பட்டவளாக வந்திருந்த சம்பவத்தை எரிக் கூறினான்.

'என்ன குற்றம் செய்தாள்? சில்வாவும் வந்திருந்தானா...?' என ஆவலை அடக்க முடியாமல் கேட்டேன்.

என் ஆர்வத்தைக்கண்ட மேரி 'மற்றவர்களின் வாழ்க்கை அவலங்களை அறிவதற்கு ஆண்களும் இப்படிப் பறப்பார்களா? என்று நமட்டுச் சிரிப்புடன் கேட்டாள்.

அவளுடைய குறுக்கீட்டை நாங்கள் பெரிதுபடுத்தாது தொடர்ந்தோம்.

'பேர்ளினில் மோனிக்கா அனுமதியின்றி விபசாரம் செய்தமைக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றம் கொண்டு வரப்பட்டாள்'

'ஐயோ பாவம். மோனிக்காவிடம் பேசினாயா...?'

'சில்வா பற்றி விசாரித்தேன். அவள் எதுவும் கூறவில்லை. ஏன் என் விஷயத்தில் நீ தலையிடுகிறாய் என்பதுபோலப் பார்த்துவிட்டு அவள் சென்றுவிட்டாள். மோனிக்கா கிழக்கு ஜேர்மனியில் இருந்த காலத்திலேயே சட்டவிரோதமான முறையில் விபசாரியாக இருந்திருக்க வேண்டும்... என்று ஏதோ சொல்ல எத்தனித்த எரிக்கை இடைமறித்த மேரி, 'அநுமானங்களை வைத்துக் கொண்டு ஒரு பெண்மீது பழி சுமத்தாதே' என்று பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தாள்.

அத்துடன் கிழக்கு ஜேர்மன் நண்பர்கள் பற்றிய எங்களுடைய கதை தொடராமல் அந்தரத்தில் தொங்கிற்று.

சிறிது நேரம் நாம் எதுவும் பேசவில்லை. எங்களுடைய நனவிடை தோய்தலை நிறுத்திவிட்ட குற்ற உணர்வில் மௌனத்தைக் கலைத்தாள் மேரி.

'உன் நாட்டின் தற்போதைய நிலைமை என்ன? சமீபத்தில் சிறீலங்கா சென்றாயா...?' எனக்கேட்டு நமது கதையைத் தொடர வைக்க முயன்றாள்.

எதைச் சொல்வது, எதைவிடுவது என்கிற அந்தரத்தில் குழம்பிப்போய் அவளைப் பரிதாபமாகப் பார்த்தேன்.

‘நான் அரசியல் விஞ்ஞானம் படித்தவள். இலங்கை இனப்பிரச்சினைபற்றி நிறையவே வாசித்தறிந்துள்ளேன். நீங்களெல்லோரும் இனப்பிரச்சனையை மேலெழுந்தவாரியாக மட்டும் பார்க்கிறீர்கள். சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மையினமாக வாழ்கிறார்கள். இருந்தாலும் இந்திய துணைக்கண்டம் என்கிற பிராந்தியப் பூகோள அமைப்பில் சிங்களவர்கள், தாங்கள் தமிழர்களிலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையில் வாழ்வதான எண்ணம் அவர்களை அறியாமலே அவர்கள் உள்ளத்தில் வளர்ந்துள்ளது, அல்லது வேண்டுமென்றே அரசியல்வாதிகளினால் வளர்க்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை இனத்துக்கு இருக்கக்கூடாத சிறுபான்மை உணர்வும், அதனால் ஏற்படும் தாழ்வுச்சிக்கலும்தான் சிங்களர் அரசியல் தலைமைத்துவத்தை ஆட்டிப்படைக்கும் பிரச்சனையின் ஆணிவேர்’ என மேரி ஒரு அறிவியல் பிரசங்கம் நிகழ்த்தி முடித்தாள்.

‘உண்மைதான். மேரியும் நானும் இதுபற்றி நிறையவே பேசியுள்ளோம். சோறுகறிச் சாப்பாட்டில் எனக்கிருக்கும் மோகத்தால் மேரி என்னை ‘அரைச் சிறீலங்கன்’ என்றே அழைப்பாள். நாங்கள் படித்த காலத்தில் சில்வா ஒருவன்தான் இனத்துவேசம் பேசியவன். குடும்பச் செல்வாக்கை தக்கவைத்துக் கொள்ள மேட்டுக்குடிச் சிங்களவருக்கு அது அவசியமாக இருந்திருக்கலாம். ஆனால் பண்டாவை நினைத்துப்பார். அவன் எப்போதும் நடு நிலையாக சிந்திப்பவனாகவே கணிக்கப்பட்டவன். சிறுபான்மை இனம் என்கிற தாழ்வு மனப்பான்மை எப்படி பொரும்பான்மை இனச் சிங்களவரின் பலவீனமோ, அப்படியே ‘மந்தைப் புத்தியுடன்’ நியாய அநியாயங்களை சீர்தூக்கிப் பார்க்காது இனக் கலவரங்களின்போது செயற்படுதலும், சிங்களவருடைய இன்னொரு குணமாகும். ஒருவகையில் அவர்கள் அவுஸ்திரேலிய செம்மரியாடுகளைப் போன்றவர்கள்தான். ஒரு ஆடு சென்றால் மறு ஆடு யோசிக்காது பின் தொடரும்’ என்று கூறிச் சிரித்தான் எரிக்.

'இதைத்தான் அரசியல் விஞ்ஞானத்தில் 'Mob Mentality' என்பார்கள். ஆளும்வர்க்கம் இதையே தனது அரசியல் மேட்டிமைக்கான மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்கிறது' என்று விளக்கம் சொன்னாள் மேரி.

இலங்கை இனப்பிரச்சினை விடையத்தில் மேரியின் அணுகுமுறையிலே தொனித்த நியாயம் என்னை வியப்படைய வைத்தது.

## 3

பதினைந்து வருடங்களின்பின் டிஸ்கோ பண்டாவை கொழும்பில் சற்றும் எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது.

உல்லாசப் பயணிகள் தங்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டலிலே, தான் முகாமையாளராகப் பணியாற்றுவதாக சொன்னான். தான் படித்த துறையில், தனக்கு போதிய தொழில் அநுபவம் இன்மையால் நல்ல உத்தியோகம் பெறமுடியவில்லை என்றான். இருப்பினும் தான் பயின்ற ஜேர்மன் மொழி அறிவே தனக்கு கைகொடுத்து உதவியுள்ளதாகவும் சொன்னான்.

பரஸ்பரம் விசாரணைகள் முடிந்ததும், மறுநாள் இரவு உணவுக்குத் தனது ஹோட்டலுக்கு வருமாறு வற்புறுத்தி, ஹோட்டல் வாகனத்தை எனது இருப்பிடத்துக்கு அனுப்புவதாக் கூறி, என் முகவரியையும் பெற்றுச் சென்றான். மறுநாள் காலை என் அலைபேசியிலே தொடர்பு கொண்டு நமது சந்திப்பை உற்சாகத்துடன் நினைவுபடுத்தியதுடன், வாக்குத் தவறாது மாலையில் சொகுசு வாகனத்தையும் என்னை அழைத்துவர அனுப்பியிருந்தான்.

ஹோட்டல் அலுவலகத்தில் பண்டாவைச் சந்தித்தபோது, 'எத்தனை காலம்' என என்னை ஆரத்தழுவி வரவேற்று அன்புடன் உபசரித்தான்.

'உன்னுடைய பிரசித்தி பெற்ற தேங்காய் சம்பல் இங்கே கிடைக்குமா...?' என பகிடியாகக் கேட்டேன்.

'அதை மறப்பேனா'? உனக்காக மாசிக் கருவாடும் சின்ன வெங்காயமும் போட்ட அசல் தேங்காய் சம்பலும், காரமான 'கட்ட' சம்பலும் செய்யுமாறு ஓடர் கொடுத்துள்ளேன்' என்றவன், தொலைபேசியில் யாரையோ அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தான். சிறிது நேரத்தில், கரையோரச சிங்களத்திகள் பாணியிலே சேலை அணிந்த ஒரு பெண் அங்கு வந்து சேர்ந்தாள். அவளை பண்டா தன் மனைவி என்று அறிமுகப்படுத்தியது நான் சற்றும் எதிர்பார்க்காததொன்று.

'ஆயுபோவான் மாத்தையா' என்று குனிந்து கைகூப்பி அவள் வணக்கம் சொன்னாள்.

அப்போது ஹோட்டலின் தலைமை சமையல்காரர் 'உணவு ரெடி' என்று தகவல் அனுப்பினார். ஹோட்டல் சாப்பாட்டு மண்டபத்தின் வசதியான மூலையில் நாம் மூவரும் அமர்ந்தோம்.

உபசரிப்புக்கு பஞ்சமில்லை. ஹோட்டல் மேலாளரின் விருந்தினரல்லவா நான்!

பண்டாவும் நானும் ஜேர்மன் பல்கலைக்கழக நாள்களின் நினைவலைகளில் மிதக்கலானோம். பண்டாவின் சிங்கள மனைவிக்கு ஆங்கிலம் புரியாது என்பதைச் சிறிது நேரத்தில் தெரிந்து கொண்டேன். பண்டாவுக்கு இன்னமும் ஆங்கிலம் அரைகுறைதான். எனக்கோ சிங்களம் 'கொஞ்சங் கொஞ்சங் டிக்க டிக்க புளுவாங்...!'

இதனால் ஜேர்மன் மொழியில் உரையாடுவது எங்களுக்கு இலகுவாகவும் சந்தோசமாகவும் இருந்தது.

அருகில் இருந்த சாப்பாட்டு மேசையில் தம்பதிகளாக உணவருந்திக் கொண்டிருந்த ஜேர்மன் உல்லாசப் பயணிகள் எங்கள் அருகில் வந்து ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

இரண்டு இலங்கையர்கள், சொந்த மொழியை விடுத்து, ஜேர்மன் மொழியிலே கொழும்பில் உரையாடுவது விசித்திரமாக இருக்கிறது எனச் சொல்லிச் சிரித்தார்கள். உண்மைதான். உள்நாட்டின் மொழிப்பிரச்சினை இந்த நாட்டின் இரண்டு குடிமக்களுக்கு அந்நிய மொழி ஒன்றினைப் பொது மொழியாக்கிய விசித்திரம் சடுதியாக மின்னலைப்போல என் மூளையிலே பளிச்சிட்டு மறைந்தது.

பண்டாவின் சிங்கள மனைவிக்கு நாம் உரையாடுவது எதுவுமே புரியப் போவதில்லை என்ற தைரியத்தில், 'உனது மாமாவின் மகளா இவள்?' எனக் கேட்டேன்.

'இல்லை மச்சான். உன்னைப் பேல நானும் மாமாவின் மகளை முதலிலேயே கட்டியிருந்தால் இப்ப சந்தோசமாக இருந்திருப்பன். எல்லாம் விதி' எனச்சொல்லி வருத்தப் பட்டான்.

அப்போது பரிசாரகன் போலந்து வொட்கா போத்தல் ஒன்றையும், கண்ணாடிக் கிண்ணம் நிறைந்த பனிக்கட்டி களையும் கொண்டுவந்து வைத்தான். பண்டா எழுந்து சென்று வொட்கா குடிப்பதற்கு ஏற்றவகையில் உறை குளிரில் வைக்கப்பட்ட வெட்கா கிளாஸ்களைக் கொண்டுவந்தான்.

டிஸ்கோ பண்டா ஜேர்மனியில் வாழ்ந்த காலத்திலெயே ஒரு வொட்காபிரியன். போலந்து வொட்கா உலகப்பிரசித்து பெற்றது. கிழக்கு ஜேர்மன் பணத்தை கறுப்புச் சந்தையில்மாற்றி எல்லை கடந்து போலந்து சென்று வொட்கா வாங்கிவருவான். பண்டாவின் முதல் காதலியும் போலந்து போய்த் திரும்பி வரும் போதெல்லாம் விலை உயர்ந்த வொட்கா வாங்கி வருவாள். அந்த வொட்கா போத்தலுக்குள் நீண்டதொரு புல்லிலை இருக்கும். அதுவே அந்த போலந்து வொட்காவின் சிறப்புச் சுவைக்கான காரணமென்பார்கள். அது என்னவகை புல்லு என அறியும் முயற்சியில் அதிதீவிரமாக முயன்றும் இன்று வரையில் என்னால் அந்த இரகசியத்தை அறியமுடியவில்லை!

குளிர்ந்த வொட்கா, சிறிதுசிறிதாக வயிற்றுக்குள் இறங்க, மனமும் உடலும் சில்லிட்டது. கொழும்பு வெக்கைக்கு அது இதமாகவும் இருந்தது. மெதுவாக அவனுடைய போல்ந்து காதலி பற்றியும், அவளுக்கு பிறந்த மகனைப்பற்றியும் விசாரித்தேன்.

வொட்கா மயக்கத்திலும் பண்டாவின் முகத்தில் கவலை தோன்றியது.

முன்னாலிருந்த புதிய கிளாஸில் வொட்காவை வாத்து எதுவும் கலக்காமல் பச்சையாக குடித்த பண்டா, சிறிது நேரம் கண்களை மூடி மௌனமானான்.

பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு, எவ்வளவோ முயன்றும் அவளைத் தொடர்பு கொள்ள முடியில்லை என்றும், மகனின் எண்ணம் தனக்கு அடிக்கடி வருவதாக்வும் சொல்லி வருத்தப்பட்டான்.

பூராயம் புடுங்கும் ஆர்வம் என்னை விடவில்லை. 'நீ பின்னர் ஜேர்மன் பெட்டை ஒன்றை மணம் முடித்து மேற்கு ஜேர்மனி சென்றதாக அறிந்தேன்' என எரிக் சொன்ன தகவலை, மூலத்தை அறிவிக்காமல் அவிழ்த்தேன்.

பண்டாவின் முகம் சிவந்து கோபம் பொங்கியது.

'அவள் பட்டை வேசை' மேற்கு ஜேர்மனிக்கு போவதற்காக என்னைக் கட்டினவள். புதிதில் ஒழுங்காக இருந்தாள். கிழக்கும் மேற்கும் இணைந்த பின்பு, அவளின் ஜேர்மன் குணத்தைக் காட்டிவிட்டாள். என்னை விவாகரத்துச் செய்துவிட்டு இன்னொரு ஜேர்மன்காரனைக் கலியாணம் செய்து, இப்போது பேர்ளினில் வாழ்கிறாள்' என்றவன் ஜேர்மன் பாசையில் உள்ள அத்தனை ஊத்தையான தூஷண வார்த்தைகளையும் ஒன்றுதிரட்டி அவளைத் திட்டித்தீர்த்தான்.

எங்கள் உரையாடல்களுக்கு மத்தியில், பண்டாவின் மனைவி, கலவரமடைந்த முகத்துடன் எதுவும் பேசாமல் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பண்டா தனது பழைய கிளாசில் மீதமாக இருந்த வொட்காவை ஒரே மடக்காக் குடித்துத் தன்னைச் சகஜமாக்கினான்.

‘அவளைக் கட்டினதாலை வந்த ஒரேயொரு நன்மை, எனக்கு ஜேர்மன் பாஸ்போட் கிடைத்ததுதான். எல்லாம் விதி. நான் கனக்கப் பிழைகள் விட்டிட்டன் மச்சான். உன்னையும் பரமசிவத்தையும் போல கட்டுக்கோப்பாய் இருந்து இலங்கைப் பெட்டையைக் கட்டியிருக்கவேணும்’ என ஈற்றில் ஞானம் பெற்றதான சுருதியிலே முடித்தான்.

‘வெள்ளைத் தோலுக்கும் வெந்தையக் குழம்புக்கும் ஒருசேர ஆசைப்படக்கூடாது பண்டா’ என பகிடியாகச் சொன்னேன்.

அதைக்கேட்டு கவலைகளை மறந்து வாய்விட்டுச் சிரித்தவன், ‘நீ சொல்வதில் பாரிய உண்மை இருக்கு மச்சான்’ எனச் சொல்லியபடியே சிறுநீர் கழிக்கவென எழுந்து சென்றான்.

நாம் என்னதான் ஜேர்மன் மொழியில் உரையாடினாலும், பண்டாவின் மனைவி முகத்தில் பலவித உணர்ச்சிகள் தோன்றி மறைவதை நான் அவதானிக்கத் தவறவில்லை.

பண்டாவின் மனைவி என்முன்னே அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அவளுடன் எதுவும் பேசாமல் இருப்பது பண்பல்ல. மொழி தெரியாத எனது கையாலாகாத நிலைமையை எண்ணி இலங்கையின் அனைத்து அரசியல்வாதிகளையும் ஒருதடவை மனசுக்குள் சபித்துக் கொண்டேன்.

பண்டா இன்னமும் வரவில்லை. நிலைமையை சுமூகமாக்க அவளைப்பார்த்துப் புன்னகைத்தேன்.

பண்டாவின் மனைவி, ‘லொக்கு மாத்தையா (பெரிய கனவானே)’ என அழைத்து கண்கலங்கினாள். தனக்குத் தெரிந்த ஆங்கிலச் சொற்களையும், பண்டாவிடம் படித்த சில ஜேர்மன்

சொற்களையும் கலந்து சிங்களத்தில் பேசத்துவங்கினாள். அவள் சொன்னவை முழுவதும் எனக்குப் புரியாவிட்டாலும் அதன் சாராத்தை ஓரளவு கிரகித்துக் கொண்டேன்.

பண்டாவின் கிராமத்துக்கு அயலிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவள் அவள். அவளுடைய குடும்பம் பாரம்பரியமாக சிங்கள சுதேச வைத்தியம் செய்பவர்கள். ஆயுர்வேதக் கல்லூரியில் படித்தவள். இப்பொழுதும் அவள் 'வெதமாத்தையா'வாகப் பணியாற்றுகிறாள்.

சடுதியாகப் பண்டாவின் லீலைகள் பற்றி தொடர்ந்தாள். அப்போது அவளின் கண்களில் திரண்ட கண்ணீரை நான் கவனிக்கத் தவறவில்லை. முகத்தை சுத்தம் செய்வதுபோல, மேசையில் இருந்த ரிசுப் பேப்பரால் கண்ணீரைத் துடைத்தபின் மீண்டும் தொடர்ந்தாள்.

'நான் முதிர்கன்னி என்பதை தெரிந்து கொண்டே, பண்டா என்னை மணம் முடித்தார். பண்டாவுக்கு இந்த வயதிலும் உள்ள காமவேட்கையை என்னால் தணிக்க முடியாது என்பதை அவர் முன்னமே எண்ணிப் பாத்திருக்க வேண்டும். பண்டாவுக்கு என்னால் 'அந்த விஷயத்தில்' ஈடுகொடுக்க முடியாது என்பது உண்மைதான். என்றாலும் இங்குவரும் உல்லாசிகளுடன் என் முன்னாலேயே அவர் கூடிக்குலாவுவதை சிங்களப் பெண்ணான என்னால் தாங்கமுடியவில்லை அண்ணா. எனது உணர்வுகளை கொஞ்சமேனும் அவருக்கு புரியும்படி எடுத்துச் சொல்லுங்கள்' எனச் சொல்லி அழுதாள்.

'மாத்தையா' என்று பண்டாவின் அலுவலகத்தில் அழைத்தவள், 'அண்ணா' என்று உறவு கொண்டாடி அழைத்தது என் மனதை உலுக்கியது.

'கவலைப்படாதே அவனுக்கு நான் சகலதையும் எடுத்துச் சொல்கிறேன்' எனச் சொல்லி மானசீகமாக அவளைத் தேற்றினேன்.

'சொல்கிறேன' என்பது மட்டும் பாத்றூமிலிருந்து திரும்பிய பண்டாவுக்கு அரைகுறையாகக் கேட்டிருக்க வேண்டும்.

'என்ன சொல்லப் போகிறாய்'..? நாங்கள் கிழக்கு ஜேர்மனியில் படித்த கார்ல் மார்க்ஸின் தத்துவத்தையா?' எனச் சொல்லிச் சிரித்தான்.

உணவு பரிமாறப்பட்டது. (உண்மையைச் சொல்ல வேண்டும்.) அசல்சாப்பாடு. நான் விரும்பி உண்ணும் உணவு வகைகளை ஞாபகம் வைத்து, பண்டா தனது ஹோட்டல் சமையல்காரர்களுக்கு ஓடர் கொடுத்திருக்க வேண்டும்.

நானும் பண்டாவின் மனைவியும் மௌனமாக சாப்பாட்டில் கவனம் செலுத்தினோம். பண்டாவோ, உல்லாசிகளாக ஹோட்டலுக்கு வரும் பெண்கள் மத்தியில் தனக்கிருக்கும் 'மவுசு' பற்றி அட்டகாசமாகச் சொல்லிக்கொண்டே சாப்பிட்டான்.

அப்போது நான் அதிகம் பேசவில்லை. எனது உரையாடலை பண்டாவின் மனைவி அரைகுறையாக விளங்கக்கூடும். அது தவறான அர்த்தங்களைக் கற்பிக்கலாம்.

பண்டா தன் மனைவியுடைய அப்பாவித் தனத்தை பரிகசிப்பதுபோல் நடந்து கொள்வதை தவிர்ப்பதற்காக அவர்களிடமிருந்து விடைபெறுவதில் அவசரம் காட்டினேன்.

பண்டாவின் மனைவி இறுதிவரை மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டது அவள் மீதிருந்த மதிப்பைக் கூட்டியது. பண்பைத் துலைக்காது வாழும் அவள் மிகவும் அபூர்வமானவளாகவே எனக்குத் தோன்றினாள். ஹோட்டல் வாசல்வரை அவளும் பண்டாவுடன் நடந்து வந்தாள்.

வாசலில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைப் பெண்களுடன் கூடிநின்றார்கள். அவர்களுக்கு கிடைத்த வாடகைக் காதலிகளே அவர்கள். பண்டாவே அவர்களை ஒழுங்கு செய்திருக்கலாம்.

உல்லாசிகள் தங்கள் இலங்கைக் காதலிகளுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சோரங்களும் இணைந்ததுதான் இலங்கையின் உல்லாசப பயணம் என்பதை நேரில்பார்த்து சங்கடப்பட்டேன்.

பண்டாவின் மனைவியைப் பார்த்தேன். இவற்றை அவள் கண்டு கொள்ளாத லாவகத்திலே சிங்களப் பெண்மையைக் காப்பாற்றி நின்றாள். நான் அவர்களிடமிருந்து விடைபெற்று, வாகனத்தில் ஏறும் போது, 'போமஸ்துதி ஐயா (வணக்கம் அண்ணா) என குனிந்து வணங்கி விடைதந்தாள்.

# 4

கொழும்பிலே டிஸ்கோ பண்டாவைச் சந்தித்து பல ஆண்டுகளாகிவிட்டன.

என்னுடைய தொழில் சார்ந்த விஜயம் ஒன்றினை மேற்கொண்டு, பேர்ளின் நகருக்குச் சென்றிருந்தேன். பணிகள் இனிதே நிறைவேறின. அடுத்த நாள் சிட்னி திரும்புவதாக என் பயண ஏற்பாடு இருந்தது.

எரிக்கையும் அவன் மனைவி மேரியையும் ஒன்றாக இரவு உணவு உண்ண அழைத்திருந்தேன். அந்தச் சுரங்க வண்டி நிலையத்தில் அவர்களை நான் சந்திப்பதாக ஏற்பாடு. அங்கிருந்து நல்ல உணவு விடுதிக்கு செல்வது எமது திட்டம்.

அவர்களுக்காக நான் காத்திருந்த பொழுதுதான், டிஸ்கோ பண்டாவையும், சில்வாவையும் ஒன்றாக மேற்படி கோலத்திலே சுரங்கவண்டி நிலைய வாங்கொன்றில் அமர்ந்திருப்பதைப் பார்க்க நேர்ந்தது.

சில்வாவின் முகத்தில் வயதுக்கும் மீறிய முதுமை தெரிந்தது. பல நாள் சவரம் செய்யாத முகம். தலை

மயிர்களும் தாடியின் சில பகுதிகளும் ஆங்காங்கே நரைத்துக் காணப்பட்டன. ஆவனுடைய சேட்டில் ஊத்தை அப்பியிருந்தது. சேட்டின் கீழ்ப் பொத்தான்கள் அறுந்து தொலைந்த நிலையில், பியர் குடிக்கும் பழக்கத்தினால் பருத்திருந்த அவன் வயறு துருத்தித் தெரிந்தது.

அவர்களை நான் பார்த்துக் கொண்டு நின்ற நிலையில், சுரங்கவண்டியில் வந்திறங்கிய எரிக்கும் மேரியும் என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். சில்வாவின் இந்தக் கோலம் அவர்களுக்கு எத்தகைய ஆச்சரியத்தையும் ஏற்படுத்தவில்லை.

படிப்பும் இன்றி, தொழிலும் இன்றி அலையும் அவன், அல்கஹோலிக்காக மாறுவான் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். பெற்றோரும் இறந்து, உறவினரும் கைவிட்டுவிட்ட பரிதாப நிலை.

வெளிநாடுகளில் வாழ்ந்து, சிங்கள ஆட்சியை 'அப்பே ஆண்டுவா' கோஷம் எழுப்பி ஆதரிக்கும் தூதுவர்களுள் சில்வாவும் ஒருவனாக இருக்கலாம்.

ஆனால் பண்டா...?

பண்டாவை நான் கொழும்பில் சந்தித்த விபரத்தையும், அங்கு அவன் வசதியாக ஒரு முதிர்கன்னியை மணம்முடித்து வாழும் வர்த்தமானத்தையும் எரிக் தம்பதியினருக்கு முன்னரே சொல்லியிருந்தேன். அத்தகைய பண்டா எப்படி பேர்ளினிலே சில்வாவுடன் கூட்டுச் சேர்ந்தான்? என்னால் ஆச்சரியத்தை அடக்கமுடியவில்லை.

'பண்டா, இது என்ன கோலம்? நீ எப்பொழுது மீண்டும் ஜேர்மனிக்கு வந்தாய்?...',

உண்மையான பரிவுடன் கேட்டேன்.

பண்டா பதில்கூற முன், சில்வா முந்திக் கொண்டு சத்தம் போட்டான்.

'கோலத்தில் என்ன பிழை? நல்லாத்தான் இருக்கிறம். நாங்கள் சிங்கங்கள். சிங்களச் சிங்கங்கள். புலியை அடக்கிவிட்டோம் பார்த்தாயா' இந்த வெற்றிச் செய்தியை உலகெங்கும் பறைசாற்றும் தூதுவர்கள் நாங்கள்...'

சுரங்க வண்டி நிலையத்திலுள்ள அந்த வாங்கினை அரசியல் மேடையாக்கிக் கத்தினான்.

எரிக்கம் மேரியும் சங்கடத்தில் நெளிந்தார்கள். சில்வா பேசும் அரசியலை இப்பொழுது எரிக் நன்றாக அறிவான். எனவே அங்கிருந்து செல்வதற்கு அவசரப்பட்டான்.

பண்டா எதுவும் பேசவில்லை. பண்டாவைப் பார்த்து 'வருகிறேன்' என்று மெதுவாகச் சொன்னேன். கொழும்பில் அவன் தந்த ராஜ வரவேற்பும் விருந்துபசாரமும் இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக இருந்தன.

மூவரும் நகரத்துவங்கியதும், பண்டா சடுதியாக 'பசிக்கிறது' சாப்பாடு வாங்கித் தருவாயா?' என்று கேட்டான். அந்தக் கேள்வி என்னை நிலைகுலைய வைத்தது.

ஜேர்மன் பல்லைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், இலங்கையின் பிரத்தியேக சுவையைப் பேணி, நான் பரமசிவம் உட்பட எல்லோருக்கும் சமைத்துப் போட்ட பண்டா, என்னைக் கொழும்பிலே சந்தித்த பொழுது, பழைய நட்புறவு சற்றும் குறையாது, ராஜ விருந்தளித்து என்னை அசத்திய அதே பண்டா, இப்பொழுது பிச்சைக்காரனைப் போல 'பசிக்கிறது' என்று கேட்பது என்னை வேருடன் சாய்த்தது.

எரிக் என்னுடைய தர்ம சங்கடமான நிலையை ஊகித்திருக்க வேண்டும். என்னுடைய விருப்பத்துக்கு ஒத்திசைவாக நடக்க முன்வந்தமை எனக்கு ஆறுதலாக இருந்தது.

சுரங்க வண்டி நிலையத்தின் வெளியே, நடக்கக்கூடிய தூரத்தில் இத்தாலிய ரெஸ்ரோரெண்ட் ஒன்று இருந்தது. அது

சற்றே பிரபலமானதும். நிலமைகளை உத்தேசித்து அங்கு உணவு சாப்பிடலாம் என்று எரிக்கே முன்மொழிந்து என் வயிற்றில் பால் வார்த்தான்.

'வா'... அந்த இத்தாலிய றெஸ்ரோரெண்டுக்கு போகலாம்' என பண்டாவைப் பார்த்து அழைத்தேன். சில்வா எழுந்து நிற்கவே சிரமப்பட்டான். பண்டா அவனைத் தாங்கிக் கொண்டான். பண்டாவின் அணைப்பிலே சில்வா எங்களைப் பின் தொடர்ந்தான். இருவரிடமிருந்தும் பலநாள் குளிக்காததற்கு அடையாளமாக ஒருவகை 'துர்நாற்றம்' வீசியது.

அவர்களுடைய கோலமும், அவர்களைச் சாப்பாட்டுக்கு அழைத்ததும் மேரிக்கு பிடிக்கவில்லை என்பதை அவளுடைய முகபாவம் துல்லியமாகக் காட்டியது. இருந்தாலும் எங்களுடைய உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று பொறுத்துக் கொண்டாள்.

றெஸ்ரோரெண்ட் மனேஜர் சில்வாவையும் பண்டாவையும் உள்ளே அனுமதிக்க முதலில் மறுத்தான். ஆனால் எரிக் அவனிடம் விஷயங்களை விளக்கிய பிறகு, முணுமுணுத்துக் கொண்டே அனுமதித்தான்.

சில்வா, நுழைந்ததும் நுழையாததுமாக ரொயிலெற்றைத் தேடிச் சென்றான்.

நீண்ட நேரமாக என் மனசைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியை பண்டாவிடம் கேட்டேன். 'உன் சிங்கள மனைவி எங்கே..?' என்பதுதான் என் கேள்வி. இந்தக் கேள்வியை அவனுடைய நிலையில் அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான் போலும்.

சற்று நேர மௌனத்திற்குப் பின்னர், 'அவள் தற்கொலை செய்து கொண்டாள்' என்று கூறி என் முகத்தை ஏறிட்டுப் பார்க்க விரும்பாதவனைப் போல வேறு திசையிலே பார்த்தான். அவளுடைய மரணத்துக்கு தானே காரணம் என்ற

குற்ற உணர்வு அவனுடைய குரலிலே புரையோடிக் கிடந்தது. அந்தச் சம்பவத்தை மறப்பதற்கு கஷ்டப்படுபவன் போல உடைந்தான். அவன் அழுது கொண்டிருக்கிறான் என்பதை என்னால் உணரமுடிந்தது.

ரொயிலெற்றால் திரும்பிக் கொண்டிருந்த சில்வா, பண்டா அழுவதைப் பார்த்திருக்க வேண்டும். 'ஏண்டா மச்சான் அழுகிறாய்?' என்று சிங்களத்தில் ஆவேசமாகக் கேட்டான்.

'ஒன்றுமில்லை மச்சான்' என்று மழுப்பினான் பண்டா.

அதற்கிடையில் எங்கள் மேசைக்கு பரிசாரகன் வந்து சேர்ந்தான். சில்வா தனக்கு விருப்பமானதெல்லாம் தாராளமாக ஓடர் செய்யத் துவங்கினான். எங்களுக்கு என்ன விருப்பமாக இருக்கக்கூடும் என்பதைப்பற்றி அவன் அக்கறைப்படவில்லை. காசு கொடுக்கப் போவது நான் என்பது அவனுக்குத் தெரியும். அதனை அங்கீகரிக்கும் இங்கிதம் கூட அவனிடம் இருக்கவில்லை.

மேரிக்கு என்ன விருப்பம் என்று கேட்பதின் மூலம், குறைந்தபட்ச மேசை நாகரீகத்தையாவது பேண நான் முயன்றேன்.

சாப்பாடு வந்ததும், நாங்கள் மௌனமாகச் சாப்பிடத் துவங்கினோம். ஆனால் சில்வாவோ இறுதி யுத்தத்திலே புலிகள் தோற்றுப்போனது பற்றி அட்டகாசமாகப் பேசினான்.

'சாப்பிடும்போது ஏன் வீண் அரசியல்' என்று எரிக் நாகரீகமாகச் சொன்னான். 'வீணான தர்க்கத்திலே ஈடுபட வேண்டாம்' என்று என்னை எச்சரிக்கவும் செய்தான்.

நான் சில்வாவின் கேள்விகளைச் சட்டை செய்யாது, இரவுச் சாப்பாட்டினை சுமுகமாக முடிவுக்கு கொண்டுவருவதில் முனைப்புக் காட்டினேன்.

சாப்பாட்டிற்கான பில்வந்தது. நான் அதற்கான பணத்தைச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

சில்வாவின் பேச்சை நான் சட்டைசெய்யாதது அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியிருக்க வேண்டும்.

'இப்ப தமிழன் அரசியல் பேசமாட்டான்தான். ஏன் தெரியுமா...? நாங்கள் அவங்களுக்கு மண்டையிலை அடிபோட்டு, கோவணம் கட்டியெல்லோ அனுப்பி வைச்சனாங்கள்... என்று மீதமிருந்த மதுவை ஊற்றிக் குடித்துக் கொண்டே கேலி பேசினான்.

எனக்கு கோபம் எல்லை தாண்டியது. என்னை அறியாமலே எழுந்து சில்வாவின் சேட்டைப் பிடித்து உலுப்பினேன். அடுத்த கணமே, என் தவறை உணர்ந்தவனாக சமாதானமடைந்து, பில்லுக்கான பணத்தினைச் செலுத்தினேன்.

எல்லோரும் எழுந்தோம்.

அப்போ பண்டா சொன்ன வாசகம் என்னை உறைநிலை அடைய வைத்தது.

'இஞ்சை பார். சிங்களவன் ஆளப்பிறந்த இனம். தமிழன் எங்கிருந்தாலும் எங்களுக்கு அடிமையாக இருக்கப் பிறந்தவன். அவன் எங்களுக்கு கப்பம் செலுத்தி வாழவேண்டும்' என வெறியில் பிதற்றிக் கொண்டிருந்தான்.

நான் சாப்பாட்டு மேசையை விட்டு, றெஸ்ரோரென்றுக்கு வெளியே வந்தேன். எரிக்கும் மேரியும் என்னைப் பின் தொடர்ந்து வந்தனர். என்னை சாந்தப்படுத்தும் வகையில் எரிக் என் தோள்மீது ஆதரவாகக் கையை வைத்தான்.

'பன்றியுடன் சேர்ந்து மாடும் சாக்கடையில் புரளுகின்றது' என்றாள் மேரி.

எரிக் என் கைகளைப்பற்றிக் கொண்டு 'இப்பொழுதுதான் இலங்கைப் பிரச்சனையின் முழுப்பரிணாமமும் எனக்குப் புரிகிறது' என்றான்.

சாதாரண எரிக்கிற்கு சமாச்சாரம் புரிகிறது!

இது சர்வதேச சமூகத்துக்கு புரியுமா...?

சில்வா பண்டா போன்று புலம்பெயர்ந்த நாடுகளிலே 'தூது'வர்களாக வலம் வருவோரினால், சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயம் உருவாக்கப்படுகின்றதா?

சிதைவிலிருந்து எழுந்து நிற்கும் போ்ளின் நகர வீதியிலே, நான் இடிந்துபோய் நின்றேன்.

# உயரப் பறக்கும் காகங்கள்

**எ**னது வீட்டுக்கு சுகுமார் வந்திருந்தான்!

நான் சிட்னியில் வாழ்ந்த பத்து வருட காலத்தில் ஒரு முறையேனும், அவன் என்னைத்தேடி என் வீட்டுக்கு வந்ததில்லை. ஈழத்து சிற்றூண்டிகள் விற்கும் உணவகம் ஒன்றிலே வாங்கிய வடை கொழுக்கட்டைப் பாசலுடன் என்னைக் காண இன்று வந்திருக்கிறான். எல்லாவற்றிலும் மேலாக நான் முற்றிலும் எதிர்பாராத சங்கதி ஒன்று என்னைத் திக்குமுக்காட வைத்தது. அது வேறொன்றுமல்ல. அவனுடன் வந்திருந்த பெண்ணைத் தன் மனைவியென அவன் அறிமுகப்படுத்தியதே.

ஆச்சரியத்தை வெளியே காட்டிக் கொள்ளாது, இன்முகத்துடன் வரவேற்று அவர்களை என் மனைவிக்கு அறிமுகம் செய்தேன். என் மனைவி யாழ்ப்பாணத்து கிராமிய விருந்தோம்பல் குணத்தை தொலைத்து விடாது வாழ்பவள். சிட்னியில் ஒரு தசாப்தகாலம் வாழ்ந்தாலும் இன்றும் ஊரில் இருந்து வரும் மெய்கண்டான் கலண்டர்படி காலத்தை ஓட்டுபவள்.

உரையாடல் மூலம் எனக்கும் சுகுமாருக்குமுள்ள நீண்டகால உறவை உணர்ந்துகொண்டு "வந்த நீங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் போகவேணும். இரவுச் சாப்பாட்டுக்கு இடியப்பம் அவிக்கிறன்..." என விருந்துக்கு அழைத்தாள். சுகுமார் மறுப்பேதும் பேசாது அவளுடைய அழைப்பை

மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான். இது கூட சுகுமாரிலே ஏற்பட்டுள்ள மாற்றங்களை அடையாளப்படுத்துவதாகவே, நான் விளங்கிக்கொண்டேன்.

ஒன்றன்பின் ஒன்றாக அங்கு நடக்கும் அதிசயங்கள் அனைத்தையும் நான் வியப்புடன் உள்வாங்கிக்கொள்வதை சுகுமார் இலகுவில் புரிந்துகொண்டான். அவன் எப்போதும் ஒரு 'Sharp' ஆன பேர்வழி.

'சுந்தரம்..., இவற்றையெல்லாம் உன்னால் நம்ப முடியவில்லை, இல்லையா? இதுதான் இன்றைய யதார்த்தம்' எனத் தத்துவம் பேசினான்.

சுகுமாரை நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், அவனது அன்றைய பாஷையில், நீங்களெல்லாம் 'எளிய தமிழ்ச்சனங்கள்.' அதற்காக அவன் தமிழனல்ல என்று நினைக்கக்கூடாது. இரண்டு தலைமுறைகளாக கறுவாக் காட்டுப் பகுதியில் வாழ்ந்து, 'டமிளர்'களாய் உயர்ந்த கொழும்புத் தமிழ்க்குடும்பத்தைச் சேர்ந்தவன். அந்தக் காலத்தில் அவனுடைய தந்தைதான் கொழும்பிலுள்ள பல தமிழ் அமைப்புகளின் கௌரவ தலைவர், அவர் வகித்த அரச உயர்பதவி காரணமாக சகல தமிழ் சமூக அமைப்புகளும் அவரை தலைவராக்கி தம்மை கௌரவப்படுத்திக் கொண்டன. வீட்டில் தமிழ் பேசாவிட்டாலும் தலைமை தாங்கும் தமிழ்க் கூட்டங்களில் தடக்கி விழுந்து தமிழ் பேசி சமாளித்து விடுவார்.

சுகுமாரும் நானும் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில், ஒன்றாகவே படித்தோம். அங்கு தமிழர் – சிங்களர் – முஸ்லீம்கள் – பறங்கியர் என அனைத்து இனங்களின் பிள்ளைகளும் ஒரே வகுப்பறைகளிலே படித்தார்கள். ஆனாலும் அவர்கள் வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர்கள்.

என் தந்தையும் அந்தக் காலத்தில் கொழும்பிலுள்ள அரச திணைக்களமொன்றில் 'கிளறிக்கல்' எனப்படும் எழுது

வினைஞராக பணியாற்றியவர். துலாவும் பட்டையும் கொண்டு தோட்டத்துக்கு நீர் இறைத்த, சிறுநிலக் கமக்காரரான பாட்டனால் என் தந்தையை மேற்கொண்டு படிக்க வைக்க முடியவில்லையாம் "தன்னை மேலே படிக்கவிட்டிருந்தால் தான் இப்ப 'கனக்க' வெட்டி விழுத்தியிருப்பன்" என்று அப்பா அந்தக் காலத்தில் அடிக்கடி கூறிக்கொள்வார். யாழ்ப்பாணத்து கிராமத்தமிழ்ப் பாடசாலையொன்றில் பத்தாம் வகுப்பு வரை படித்த அம்மாவும் அப்பா சொல்வதை அப்படியே ஏற்று 'உச்சு' கொட்டி ஆதரிப்பதில் சலிப்படைந்ததேயில்லை. எனக்கென்றால் வீராதி வீரனாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் அப்பா கிளறிக்கல் Class twoவைத் தாண்டி ஏன் மேலே நகரவில்லை என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.

எது எப்படி இருந்தபோதிலும், அவர் தனது சக்திக்கு மேலாக என்னை மேட்டுக்குடியினர் படிக்கும் பாடசாலையிலே படிக்க வைத்தார் என்பது முற்றிலும் உண்மை. தான் படிக்காத படிப்பை நான் படித்து டாக்டராகவோ என்ஜினியராகவோ வரவேண்டுமென்பது தான் அப்பாவின் ஆசை.

"சுந்தரத்தின்ரை படிப்புக்கு எல்லாத்தையும் செலவழித்தால் பெட்டைக்கு பிறகு என்ன செய்யிறது...?" என்ற அம்மாவின் நியாயமான கேள்விக்கு "அவன் படிச்சு மேலுக்கு வந்தால் 'டொனேசன்' வாங்கி தங்கைக்கு குடுக்கட்டன்" என அப்பா எதிர்வாதம் செய்வார். மொத்தத்தில் அவருக்கு என் மீதும் எனக்கு எதிர்காலத்தில் வரப்போகும் பணக்கார மனைவி குடும்பத்தின் மீதும் அபார நம்பிக்கை.

பத்தாம் வகுப்பில் தமிழ் இலக்கியம் படித்த அம்மா மூலம் அப்பாவுக்கும் தமிழ்ப்பற்று வளர்ந்து முற்றத் துவங்கியது. அவரும் சுகுமாரின் தந்தை தலைவராக இருக்கும் தமிழ் அமைப்புகளில் குறைந்தபட்சம் ஒரு நிர்வாக சபை அங்கத்தவராகவாவது வர வேண்டுமென்று முயன்றார். அவரின் பிரயாசைகள் வீண் போனதில்லை. சில அமைப்புக்களில் அவர் செயலாளர் பதவி வகிக்கும் சந்தர்ப்பங்களும் வந்ததுண்டு. இதுகுறித்து அம்மாவுக்கு கொள்ளை பெருமை.

நானும் இதுபோல உயர்மட்டப்பிள்ளைகளுடன், குறிப்பாக சுகுமாருடன் சிநேகிதமாக இருக்க வேண்டுமென்றும், அது பிற்கால வாழ்வுக்கு நன்மை தருமென்றும் அப்பாவுடன் சேர்ந்து அம்மாவும் உபதேசிப்பார். இது எப்படிச் சாத்தியமாகுமென்று என்றுமே எனக்கு விளங்கியதில்லை.

"அந்தாளைப் பிடிச்சு Class One பிறமோசன் எடுங்கோவன்" என நிர்வாக சபைக்கூட்டத்துக்கு அப்பா புறப்படும் போதெல்லாம் அம்மா நச்சரித்தும், பென்சன் எடுக்கும்வரை 'Class two'வை விட்டு அப்பா நகர்ந்தது கிடையாது.

அப்பாவின் கரைச்சல் தாங்காமல் நானும் சுகுமாருடன் வலிந்து ஒட்டிக் கொள்வேன். அவன் என்னை ஒரு பொருட்டாகவே மதிக்கமாட்டான். அவனது கூட்டாளிகள் எல்லாம் நுனிநாக்கில் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடி பிள்ளைகள். அவர்களது வீடுகளிலும் ஆங்கிலமே கோலோச்சியது.

வீட்டிலும் வெளியிலும் யாழ்ப்பாணத் தமிழ் பேசி தமிழ்க் கட்டுரைப் போட்டிகளிலும் நாடகங்களிலும் பங்கு கொள்ளும் என்னை ஆங்கில பேச்சுப் போட்டிகளிலும், நாடகங்களிலும் பங்கு கொள்ளும் சுகுமாரும் அவனது கூட்டாளிகளும் தங்களில் ஒருவனாக சேர்த்துக் கொள்ளாததில் வியப்பொன்றுமில்லை.

இளமைக்காலத்தில் நான் படித்த தமிழ்ப் புத்தகங்கள் உட்பட, சகல புத்தகங்களையும் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தபோது கொண்டு வந்தேன். அவற்றை எனது சிட்னி வீட்டு, வரவேற்பறையுடன் கூடிய பகுதியில் ஒழுங்காக அடுக்கி வைத்திருந்தேன். இது நான் எனது தந்தையிடம் கற்றுக்கொண்டது. அவர் என்றுமே உண்மையுள்ள அரச ஊழியனாக வாழ்ந்தவர். எதிலும் ஒரு ஒழுங்குமுறை இருக்கும். அலுவலக கோப்புக்கள் முதற்கொண்டு உறுதிக்கட்டுகள் வரை பாதுகாப்பதிலே அவர் ஒருவகை ஒழுங்கையும் நேர்த்தியையும் கடைப்பிடித்தார்.

எனது புத்தக அலுமாரியிலுள்ள ஒரு கனமான பழைய புத்தகம் சுகுமாரின் கவனத்தை கவர்ந்திருக்க வேண்டும்.

எழுந்து அதை எடுத்து வந்தான். அது நான் பன்னிரண்டாம் வகுப்பில் படித்த இரசாயன ஆங்கில பதிப்பின் தமிழ்மொழி பெயர்ப்பு. அதை விரித்து சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்தவன் யன்னலுக்கு வெளியே பார்த்தவாறு மௌனமாக இருந்தான். அவனது மௌத்தின் அர்த்தம் எனக்கு விளங்கியது. அவனது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வண்ணம் மனைவி தேநீர் தயாரித்து விட்டாளா என்பதை அறியும் பாவனையில் சமையலறைப் பக்கம் சென்றேன்.

சுகுமாரும் நானும் எட்டாம்வகுப்பு சித்தியடைந்து ஒன்பதாம் வகுப்புக்கு வந்தபோது தான் இலங்கையில் தாய்மொழியில் கல்வி கற்க வேண்டுமென்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒன்பதாம் வகுப்பு சித்தியடைந்து பத்தாம் வகுப்புக்கு செல்லும் போது 'சுயபாஷா' எனப்படும் தாய்மொழியில் நாம் இறுதிப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தாய்மொழி மூலம் விஞ்ஞானப்பாடங்கள் கற்று பல்கலைக்கழகப் புதுமுகப் பரீட்சை எழுதிய முதல் Batch மாணவர்களுள் நானும் ஒருவன். இது குறித்து இப்பொழுதும் நான் பெருமைப்படுவதுண்டு.

தாய்மொழிக் கல்விக்கெதிராக ஆங்கில மோகம் கொண்ட மேட்டுக்குடி மக்கள், இனபாகுபாடின்றி திரண்டெழுந்த போதிலும், இலங்கை அரசு அசைந்து கொடுக்கவில்லை. தமிழர்கள் தமிழிலும் சிங்களவர் சிங்களத்திலும் பறங்கியர் ஆங்கிலத்திலும் முஸ்லீம்கள் தாம் விரும்பிய மொழியிலும் கல்வி கற்று பத்தாம் பன்னிரண்டாம் அரச பரீட்சைகளிலே தேறுதல் வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் தனது "சிங்களம் மட்டும்" சட்டத்தினை அமுலாக்குதல் சுலபமானதென அரசு கருதியது போலும்!

சுகுமாரின் தந்தை அரச சேவையின் சட்ட திட்டங்களையெல்லாம் கரைத்துக் குடித்து, அவற்றின் நெளிவு சுழிவுகளை அறிந்தவர். அவர் தன் மகன், தமிழில் சோதனை எடுத்து என்ன செய்வது? என்ற ஆதங்கத்தில்

ஒரு குறுக்கு வழியைக் கையாண்டார். சுகுமாரை ஒன்பதாம் வகுப்பு படிக்கவிடாது. அந்த வருடம் ஆங்கில மொழிமூலம் இறுதியாக பரீட்சை எழுதும் பத்தாம் வகுப்பில் படிக்க ஒழுங்குகளை மேற்கொண்டார். அத்துடன் ஒன்பதாம் வகுப்பு பாடங்களை தனிப்பட்ட ரியூசன் மூலம் படிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்தார். பாடசாலை நிர்வாகமும் அவரின் அரச உயர்பதவி காரணமாக இதற்கு ஒத்துக்கொண்டது. இந்த குறுக்கு வழியை வேறு பல மாணவர்களும் மேற்கொண்ட போதிலும், என் தந்தையின் செல்வாக்கும் பொருளாதாரமும் இந்த வசதியை எனக்கு செய்து தருவதற்கு தோதுப்படவில்லை.

'சுயபாஷா' திட்டம் எனக்கும் சுகுமாருக்குமிடையே இடைவெளியை மேலும் அகலித்தது. பாடசாலையில் காணும்போது 'ஹலோ' சொல்லுமளவில் நாம் நின்று கொண்டோம். விஞ்ஞான கலைச்சொற்களை நாம் தமிழில் உச்சரிப்பதை பரிகசிக்கத் துவங்கிய சுகுமாரும் கூட்டாளிகளும் எம்மைத் தங்களிலும் தாழ்ந்த சாதியாகப் பாராட்டத் துவங்கியதைப் புரிந்துகொண்டேன்.

அரசபாஷை சிங்களம். அதனால் வேலைவாய்ப்பில் எமக்கே முதலிடம் என்ற இறுமாப்பில் சிங்களமொழி மூலம் கற்ற மாணவர்கள் திரிய, கொழும்பு பாடசாலைகளில் தமிழ் போதானமொழி வகுப்புகள் இயல்பாகவே மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்பட்டன. இருப்பினும் அங்கு போதித்த அனுபவமும் தமிழ் உணர்வுமுள்ள ஆசிரியர்களின் அக்கறையால், தமிழ்மொழி மூலம் கற்ற என்னைப்போன்ற மாணவர்கள் பலர் உயர்கல்வி பெறுவதை ஒரு சாவாலாக ஏற்று அக்கறையுடன் கற்றோம்.

சுகுமாரின் தந்தை தலைமை வகிக்கும் தமிழ் விழாக்களில் அவன் தாயைக் கண்டிருக்கிறேன். பொன்நிறம், பரம்பரை செல்வச்செழிப்பு அவரது அழகுக்கு மெருகு சேர்த்தது. தாய்வழிப் பாட்டன்கள், இரண்டு பரம்பரையாகக் கறுவாக் காட்டுப் பகுதியில் வாழ்ந்த செல்வந்தர்கள், சுகுமாரின் தந்தையோ எண்ணைக் கறுப்பு. மிஷன் பாடசாலையொன்றில்

படித்து முன்னேறி, நிர்வாக உயர் பதவிக்கு இளவயதிலேயே உயர்ந்த அவரை தாய்வழிப் பாட்டன் இலகுவில் மருமகனாக்கிக் கொண்டதாக அப்பா சொல்லுவார்.

சுகுமார் அசப்பிலும் நிறத்திலும் தந்தையின் சாயலையே பெற்றிருந்தான். தாயின் நிறம் தனக்கு வாய்க்கவில்லையே என்கிற மனக்குறையோடு வளர்ந்திருப்பான் போலும்! வெள்ளைத்தோல் மீது அவனுக்கு அலாதி மோகம். இதனால் அவன் பாடசாலையிலுள்ள பறங்கி பெடியன்களுடனேயே பெரும்பாலும் கூடித்திரிவான்.

இலங்கை அரசு பின்பற்றிய இனத்துவேஷ அரசியலால் சிங்களமும் தமிழும் விரோதம் பாராட்டி வெவ்வேறு பாதையில் பயணிக்க ஆங்கில கலாசார மோகத்தால் கவரப்பட்ட சுகுமார், 'தாங்களும் வெள்ளைக்காரர்களே' என நினைத்து வாழ்ந்த பறங்கி இனத்தவர் உயர்வானவர்கள் என எண்ணி அவர்களுடைய நட்பினையே அதிகம் விரும்பினான். அவன் நட்புப் பாராட்டிய பறங்கியர் வெள்ளைத் தோலர்கள் என்பது தான் விசேஷம்.

சுகுமாருக்கு ஊர்சோலிகள் அதிகம் இருந்தன. ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்கான பாடங்கள் ஒரே வருடத்தில் ஊட்டப்பட்டது அவனுக்கு ஜீரணமாகவில்லை. படிப்பிலே வெறுப்புத் தோன்றியது. இதனால் பல்கலைக்கழக புகுமுக பரீட்சை மீது மூன்று தடவைகள் படையெடுத்தும் தேவையான புள்ளிகளைப் பெறவில்லை. இதனால் அவனுக்கு பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைக்கவில்லை.

குறுக்குவழி நாடாமல் தமிழ்மொழிமூலம் பரீட்சை எழுதிய கணிசமான மாணாக்கர்கள் கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், விவசாயம் என பட்டப்படிப்புக்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். இந்த அதிர்ஷடசாலிகளுள் நானும் ஒருத்தன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது பொறியியல் படிப்பும் முடிந்தது. அடுத்த மாதமே அரசு கூட்டுத்தாபனமொன்றில் நிரந்தர வேலையும் கிடைத்தது.

அப்பா தலைக்கனமும் பெருமிதமும் ஒருங்கேசேர எனக்கு திருமணம் பேசத்துவங்கினார்.

எப்போது நான் என்ஜீனியரானேனோ, அப்போது தொடக்கம் அவரது நடைஉடை பாவனைகளில் மாற்றங்கள் ஏற்படத் துவங்கின. எல்லோரையும் எடுத்தெறிந்து பேசத் துவங்கினார். இதுவரை நிர்வாக சபை உறுப்பினராக இருந்த தமிழ் அமைப்புக்களில் இனி தலைமைப்பதவி தரப்பட வேண்டுமென்ற தொனியில் நடக்கத் தலைப்பட்டார்.

சுகுமாரின் தந்தை அரச பதவியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் கட்டியாண்ட அதிகாரத்தை இழக்க, அவர் வகித்த தலைவர் பதவிகள் அப்பாவுக்கு இலகுவில் கிடைக்கலாயிற்று.

தலைமை வகித்த அமைப்புக்களில் சாதாரண அங்கத்தவராக இருக்க, சுகுமாரின் தந்தையின் சுயகௌரவம் இடம் தரவில்லை. இதனால் அவர் தமிழ் அமைப்புக் களுடனிருந்த தொடர்பை முற்றாக முறித்துக்கொண்டார்.

பல்கலைக்கழகத்தில் படிக்க இடம் கிடைக்காத சுகுமார், வழமைபோல கொழும்பில் Cost and Management accountancy படிக்கத் துவங்கி பல தடவைகள் தடுக்கி விழுந்து இறுதியில் எக்கவுண்டன் ஆகிவிட்டான் எனக் கேள்விப்பட்டேன். அவனை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

என் மனைவி எல்லோருக்கும் தேநீர் கொண்டுவந்தாள். அவுஸ்திரேலிய முறைப்படி தேநீருக்கு சீனி போடாமல் வேண்டியவர்கள் தங்கள் அளவுக்கேற்ப போட்டுக் குடிக்கட்டுமென ஒரு கிண்ணத்தில் தனியாக சீனி வைத்திருந்தாள். சுகுமார் கொண்டுவந்த வடை, கொழுக்கட்டையும், 'பிளமிங்டன்' சந்தையில் வாங்கிய இதரை வாழைப்பழங்களும் பரிமாறப்பட்டன. சுகுமார் வடையில் ஒரு கடியும் வாழைப்பழத்தில் ஒரு கடியுமாக ருசித்துச் சாப்பிடுவதைக் காண எனக்கு வியப்பாய் இருந்தது. எனக்கு வந்த சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

முன்னரெல்லாம் அவன் தோசைக் கடை வாசலை மிதித்ததில்லை. தோசைக்கடைக்கு போவதும், அங்கு வடை தோசை சாப்பிடுவதும் எளியவர்களுடைய சுவைப்பழக்கம் என ஏளனம் செய்துமிருக்கிறான். இன்று அந்தச் சுவையிலே வெட்கமின்றி ஒன்றினான்.

சுகுமார் கொழுக்கட்டை சாப்பிடவில்லை. தேநீருக்கும் சீனி போடவில்லை. தனக்கு 'Blood Sugar' இருப்பதாக காரணம் சொன்னான்.

அவனின் தந்தையும் இறுதிக்காலத்தில் நீரிழிவு நோயால் மிகவும் கஷ்டப்பட்டவர். அரச அதிகாரம் போன பின் தன்னை யாரும் மதிக்கவில்லையே" என்ற மன அழுத்தங்கள் அவரை பெரிதும் பாதித்தன.

சுகுமார் திசைமாறிச் சென்ற ஏமாற்றமும் நீரிழிவு நோயும் அவரை நிரந்தர நோயாளியாக்கி இறுதியில் சாவுக்கு இட்டுச் சென்றன. அப்போது அவருக்கு சாகும் வயதல்ல.

மரணவீட்டிற்கு தமிழ் அமைப்பொன்றின் சார்பில் மலர் வளையம் வைக்க சென்று திரும்பிய அப்பா, "அவை யின்ரை அந்தக் கால கெப்பர் என்ன, செத்தாப் போல நடக்கிற கிலிசகேடென்ன...? செத்த வீட்டிலை ஒரு நாலு சனம்தான் இருக்குது" என அம்மாவுக்கு செய்தி விவரணம் கூறினார். சுகுமாருக்காக நானும் ஒருமுறை சாவீட்டுக்கு போய் வரலாமென்ற எண்ணத்தில் "சுகுமாரோடை கதைச்சனீங்களே...? எனக் கேட்டேன்.

"சுகுமாரோ...? தகப்பன் செத்து அடுத்தநாள் பின்னேரம் தான் தாய்வீட்டை வந்தவனாம். அவன் ஒரு பறங்கிப் பெட்டையைக்கட்டி அங்கேயே அடுகிடைபடுகிடையாய் கிடக்கிறானாம். இது உனக்குத் தெரியாதே...?" என நாக்கு வழித்தார்.

"மற்றவையை நொட்டை சொல்லாதையுங்கோ, எக்கணம் எங்கடை பெடியனும் என்னவோ...?" என அம்மா எனக்கு கேட்காமல் அப்பாவின் காதைக் கடித்தார்.

"எங்கை அவன் என்ரை சொல்லுக் கேட்காமல் கொண்டு வரட்டும் பாப்பம். தலைகீழாய் கட்டித் தொங்கவிட்டு கீழை நெருப்புக் கொழுத்துவன்" என அப்பா கொதிக்க அம்மா வழமை போல சமையலறைக்கு சென்றுவிட்டார்.

இரண்டு வருடத்தின் பின்னர் நானும் என்னுடன் வேலை செய்த பெட்டையொன்றைத் காதலித்து, சீதனமும் டொனேசனும் வாங்காமல் அப்பாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தது வேறு கதை. ஆனால் எனது தங்கைக்கு என்னைப் போல காதல் உணர்வுள்ள மாப்பிள்ளையை என்னால் தேட முடியவில்லை. அப்பாவின் அன்றைய ஆதங்கம் அப்போது தான் எனக்குப் புரிந்தது.

என்ஜினியரான என்னால் அன்றயை மாக்கட் நிலவரப்படி தங்கைக்குக் கொடுக்க வேண்டிய சீதனத்தை இலங்கையில் சம்பாதித்து சேர்க்க முடியவில்லை. இதனால் 'திரைகடல் ஓடியும் திரவியம்' தேடப்புறப்பட்டேன். நண்பன் ஒருவனின் உதவியுடன் ஸம்பியா நாட்டிலுள்ள பிரித்தானிய பொறியியல் நிறுவனமொன்றில் வேலை ஒன்றைப் பெற்று ஆபிரிக்கா போய்ச் சேர்ந்தேன்.

ஸம்பியாவில் உழைத்த பணம் தங்கைக்கு இலகுவில் நல்ல வரனைத் தேடித் தந்தது.

பிரித்தானிய நிறுவணத்தில் வேலை செய்த அநுபவம், அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்து செல்லும் வசதியையும் ஏற்படுத்தித் தந்தது.

ஸம்பியாவுக்கு 'குட்பை' சொல்லிப் புறப்பட்டேன். லுசாக்கா விமானநிலையத்திலே காத்திருந்த பொழுது முற்றிலும் எதிர்பாரதவிதமாக சுகுமாரை சந்தித்தேன்.

அமெரிக்க நிறுவனமொன்றின் கணக்காளராக ஸம்பியாவிலே தான் பணிபுரிவதாகவும் அமெரிக்காவிலிருந்து வர இருக்கும் வெள்ளைக்கார மேலதிகாரியை வரவேற்க விமானநிலையம் வந்திருப்பதாகவும் கூறினான். "அமெரிக்க

நிறுவனம்" "வெள்ளைக்கார மேலதிகாரி" என்பவற்றை அவன் அழுத்திச் சொல்வதாக எனக்கு தோன்றியது.

சுகுமார் இன்னமும் மாறவில்லை என்ற எண்ணத்தை ஒதுக்கிக்கொண்டு "எவ்வளவு காலமாக இங்கிருக்கிறாய்?" எனக்கேட்டேன்.

வந்து ஆறுமாதமாகிறதென்றும், மூளையே இல்லாத காட்டுமிராண்டிகள் மத்தியில், சீவியம் கஷ்டமாக இருப்பதாகவும் ஒரு பாட்டம் புலம்பித் தீர்த்தான்.

ஆபிரிக்க விமான நிலையமொன்றில் நின்றுகொண்டு அவர்களையே தரக்குறைவாக பேசுவது எனக்கு அசௌகரியமாக இருந்தது. பேச்சின் திசையை மாற்றும் நோக்கில் "உன் மனைவியும் இங்கு வேலை செய்கிறாளா?" என பொதுவாகக் கேட்டேன்.

பறங்கி இனத்தவர்களுக்கு கிடைக்கும் "கோட்டாவில்" தன் மனைவி அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து விட்டதாகவும், சீக்கிரமே 'family reunion' திட்டத்தின் கீழ் அவளுடைய 'Sponsor'ஐ எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினான். "Australia is a nice country, lots of white people to live with..." என்று பெருமையாகவும் சொன்னான்.

"அங்கு புலம்பெயரத்தான் நானும் விமானநிலையம் வந்திருக்கிறேன்" என்று நான் சொல்வேன் என அவன் எதிர்பார்க்கவில்லை. 'அட, இவனும் அங்கு போகிறானா' என்கிற ஒருவகை அசூசை அவன் முகத்தில் மின்னலடித்து மறைந்ததை அவதானித்தேன்.

இந்த அசௌகர்யத்தை தவிர்க்கும் நோக்குடன் "உன் மனைவி அவுஸ்திரேலியாவுக்கு ஒருமுறை 'entry make' செய்தால் பின்பு மூன்று வருடங்கள் வெளியே வாழலாம்" என்றேன். அந்நாட்டின் குடிவரவு சட்டத்தை கரைத்துக் குடித்த பாவனையில்.

"இந்த ஊருக்கா..., அவள் அங்கேயே இருக்கட்டும். சீக்கிரம் நான் அவளுடன் இணைந்து கொள்வேன்...."

என்றவன், பின் என்ன நினைத்துக் கொண்டானோ, தனது டயறியை திறந்து தன் மனைவியின் விலாசத்தை குறித்துக் கொடுத்தான்.

"முடிந்தால் அவளுக்கு ரெலிபோன் செய்து என் நண்பன் என அறிமுகப்படுத்தி ஹலோ சொல்லு. பேர்த் (Perth) நகரத்தில் 'Motel' நடத்தும் அவளது உறவினர்களுடன் தான் இருக்கிறாள்" என்று அவளின் விலாசத்தையும் சொன்னான்.

நானும் சுகுமாரும் ஸம்பியா பற்றியும் இலங்கையில் தற்போது நடக்கும் இனப்போராட்டம் பற்றியும் எமது வரவேற்பறையில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். அவனுடைய மனைவிக்கு எங்களுடைய உரையாடல் சலிப்பை உண்டாக்கியிருக்க வேண்டும். அங்கும் இங்கும் பார்த்தவாறு கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தாள். மெதுவாக சமையலறைக்குள் நழுவி என் மனைவியிடம் விஷயத்தை சொன்னேன். என்னுடன் திரும்பிய மனைவி மிகப் பவ்வியமாக கதையைக் கொடுத்து, சுகுமாரின் மனைவியைச் சமையலறைக்கு கூட்டிச் சென்றாள்.

எமது உரையாடலும் ஸம்பியா இலங்கை என்று ஊர்க்கோலம் போய் இறுதியில் அவுஸ்திரேலியாவின் தற்போதைய வேலைவாய்ப்பு பற்றி ஆராய்வதில் நின்றது. சுகுமாருக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றில்லை. இதனால் அவன் சித்தியடைந்த 'cost and Management accountat' தராதரத்துடன் அவுஸ்திரேலிய கணக்காளர் நிறுவனத்தில் தகுதி வாய்ந்த கணக்காளராக பதியமுடியவில்லை. இதனால் அவன் Public Service சோதனை சித்தியடைந்து சென்றர்லிங் எனப்படும் வேலை அற்றவர்களுக்கு உதவி வழங்கும் அரச திணைக்களத்தில் பொறுப்பான பதிவியிலிருந்தான். அவனுடனான உரையாடலின்போது வேலையற்றோர் பிரச்சனை பற்றிய பல பயனுள்ள தகவல்களை அறிந்துகொள்ள முடிந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு நான் குடியேறிய புதிதில் நானும் வேலை தேடி அலைந்ததுண்டு. அந்தக்காலத்தில் சுகுமார்

வேலை செய்யும் இலாகாவை 'Social Security' இலாகா என அழைத்தார்கள். அங்குதான் வேலை கிடைக்கும்வரை 'டோல்' எனப்படும் உதவிப்பணம் எடுத்து வாழ்க்கையை ஓட்டினேன். பல வேலைகளுக்கு மனுச்செய்தும் வேலை கிடைக்கவில்லை. எவரும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கவில்லை. மனுப்பண்ணியவுடன் மனுகிடைத்ததாக கடிதம் வந்தது. சில காலங்களின் பின்னர் 'இம்முறை உங்களுக்கு வேலை தரமுடியாமைக்கு வருந்துகிறோம்' என பவ்வியமாக கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. விளம்பரப்படுத்தும் வேலைகளுக்கு ஏற்கனவே தற்காலிக அடிப்படையில் ஆட்களை வைத்திருப்பார்கள் என்பதும், அவர்களை நிரந்தரமாக்கச் சட்டப்படி போடப்படும் கண்துடைப்பு விளம்பரங்கள்தான் இவை என்பது பற்றிய ஞானம் இங்குள்ள இலாகாக்களில் வேலை செய்யத் துவங்கிய பின்பு தான் தெரியவந்தது.

பல முயற்சிகளின் பின்பு, பேர்த் (Perth) நகரத்திலுள்ள பொறியியல் நிறுவனம் ஒன்று என்னை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தது. சிட்னியிலிருந்து பேர்த் வரையான விமானப் பயண டிக்கட்டையும் அவர்கள் அனுப்பியிருந்தார்கள். அங்கு தங்கும் செலவை நான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள்.

ஓரிரு நாள்கள் எனது செலவில் பேர்த் நகரத்தில் தங்க வேண்டுமென்றதும் சுகுமார் மனைவி குடும்பத்தின், Motel ஞாபகம் வந்தது. பேர்த் நகரம் சிட்னியிலிருந்து கிட்டத்தட்ட இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள நகரம். விமானப் பயணமே மூன்று மணி நேரம்.

அங்குள்ள ஹோட்டல்களின் வாடகை நிலவரம் தெரியாது. எனவே ஒரு நாளைய அறை வாடகை என்ன என்பதை அறியும் நோக்கில், ஸம்பிய விமான நிலையத்தில் சுகுமார் தந்த தொலைபேசி எண்ணைத் தேடி எடுத்து தொடர்பு கொண்டேன். மறுமுனையில் பேசியவர் நட்பு ரீதியாகப் பேசினார். சுந்தரமூர்த்தி என்று எனது முழுப்பெயரைக் கேட்டவுடன், "ஸ்ரீலங்கனோ அல்லது இந்தியனோ...?"

எனக்கேட்டார். நான் விபரம் கூறியதும் தான் ஸ்ரீலங்காவில் வாழ்ந்த பறங்கி இனத்தவன் என்றும், அவுஸ்திரேலியாவில் வெள்ளையர் மட்டும்' என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட அறுபதாம் ஆண்டுப்பகுதியில் இங்கு வந்ததாகவும் விபரம் கூறினார். தனது Motel அறையில்தான் அங்கு தங்கவேண்டுமென்று உரிமை பாராட்டியதுடன், இருபது வீத கழிவும், காலை உணவும் வழங்கப்படுமென 'டீல்' வைத்தார்.

முன்பின் அறியாத இடம், அங்கு ஒருவர் உரிமையுடன் உறவு கொண்டாடும்போது அதை தட்டிக்கழிக்க விரும்ப வில்லை. பேர்த்துக்கு சென்ற நான் அவர்களது மொட்டலிலியே தங்கினேன். நான் எந்த சந்தர்ப்பத்திலும் சுகுமாருக்கும் எனக்குமுள்ள உறவை வெளிப்படுத்தவில்லை.

நேர்முகப் பரீட்சை முடிந்தது. முடிவு பின்னர் அறிவிக்கப் படுமென்றதால், மறுதினம் சிட்னி, திரும்புவதாத் திட்டம், வேலை கிடைப்பது ஐம்பதுக்கு ஐம்பதென நினைத்துக் கொண்டேன். இடையில் சுகுமாரின் மனைவியை ஒருமுறை சந்தித்தால் என்ன என்று தோன்றியது.

சுகுமார் மனைவி பெயரைச் சொல்லி கவுண்டரிலுள்ள காசாளர் பெண்ணிடம் கேட்டேன். தான் அவளது சிநேகிதி என்றும், அவள் இப்போது ஒரு, ருமேனிய 'boy friend' உடன் மொட்டேலுக்கு அருகிலுள்ள வீடொன்றில் வாழ்வதாகவும், கூறியவள், 'உனக்கு அவளை இலங்கையிலேயே தெரியுமா? எனக் கேட்டுக் குழைந்தாள்.

"நான் ஸம்பியாவிலுள்ள அவளது கணவனின் சிநேகிதன்" என வேண்டுமென்றே கூறிவைத்தேன். காசாளர் உடனடியாக பேச்சை முறித்துக்கொண்டு கொம்பியூட்டரில் கவனத்தை பதித்துக் கொண்டாள்.

சுகுமாரை நினைக்க பாவமாக இருந்தது. அவனுக்கு பறங்கிப் பெண்ணின் வெள்ளைத்தோலிலே மோகம், அவளுக்கு ஐரோப்பிய வெள்ளைத்தோலிலே மோகம்.

Skin deep உறவுகள் இப்படித்தான் அலைந்து திரயுமோ...? என எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

பேர்த் 'Perth' வேலைக்குக் காத்திருந்தபொழுது சிட்னியிலே என் படிப்பிற்கேற்ற வேலை வாய்ப்பதாயிற்று. அத்துடன் சுகுமார் பற்றிய சங்கதியும் மறந்துபோனது.

வீட்டிலுள்ள ரெலிபோன் மணியடித்தது. மனைவி 'Cord less Phone' றிசீவரை வரவேற்பறைக்கு எடுத்து வந்தாள். லண்டனில் வசிக்கும் என்னுடைய தங்கையின் அழைப்பு அது. அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர சமீபத்தில் தான் அனுமதி கிடைத்தது. இங்குள்ள வேலைவாய்ப்புகள் பற்றி விசாரித்தாள். உடனடியாக தகுதிக்கேற்றபடி நல்ல வேலை கிடைப்பது கடினமென்றும், படிப்படியாகத்தான் முன்னேற வேண்டுமென்றும் இங்குள் 'job market' நிலவரத்தை கூறி வைத்தேன்.

எனது மூத்த மகன் வளர்ந்துவிட்டான். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கிறான். புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பிள்ளைகளுக்கு ரியூசன் கொடுக்கும் பழக்கம் இங்கும் வந்துவிட்டது. ரியூசன் கொடுக்காவிட்டால் பிள்ளைகள் நல்ல 'மாக்ஸ்' எடுக்காதென்ற பயம் பெற்றோரை இயல்பாகவே தொற்றிக் கொண்டது.

சிட்னி பல்கலைக்கழக வீதியை ஓட்டிய குறுக்கு வீதியொன்றிலே ஆங்கில ரியூசன் வகுப்புக்கள் நடந்தன. ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் ஒருவர் வகுப்புக்கள் நடத்தினார்.

வயது போகப் போக எனக்கும் அப்பாவின் குணங்கள் தப்பாமல் தலைகாட்டின. அப்பாவோ டாக்டர் அல்லது என்ஜினியர் என்று எனக்கொரு 'Choice' தந்தார். நானோ என் மகன் டாக்டராகத்தான் வரவேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறிவிட்டேன். அவுஸ்திரேலிய தமிழர்கள் மத்தியிலே டாக்டர் படிப்புக்குத்தான் அதிக மவுசு. அதுபடிக்க அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும். வர்த்தக படிப்பு சீனர்களால் பெரிதும்

விரும்பப்பட்டது. என்ஜீனியர் படிப்புக்கு இலங்கையில் இருக்கும் மரியாதை அவுஸ்திரேலியாவில் இல்லை. குறைந்த புள்ளிகளுடனேயே ஏதாவது ஒரு பல்கலைக்கழகம் சென்றுவிடலாம். இவை எல்லாம் வேலைவாய்ப்புடன் கூடிய சமாச்சாரங்கள்.

மகன் பன்னிரண்டாம் வகுப்பு படித்த காலங்களில் மாறி மாறி காரில் ஏற்றி இறக்குவது என் முக்கிய பணியாயிற்று. ஆங்கில ரியூசனில் அவன் இருக்கும் ஒரு மணி நேரத்தை போக்க, சிட்னியின் பெருவீதி 'பேமன்ரில்' நடப்பேன்.

ஒருநாள் நான் வீதியை ஒட்டிய 'Super Market'ஐ மெதுவாகக் கடந்து கொண்டிருந்த பொழுது, ஒரு பெண்மணியுடன் சுகுமார் வெளியே வந்தான். பல வருடங்களின் பின்னர் நாம் இருவரும் நேருக்கு நேர் சந்தித்தோம். எனது தலையும் மீசையும் நரைத்திருந்தாலும் என்னை இனங்கண்டு கொண்டு 'Hi...., சுந்தரம் எப்படி இருக்கிறாய்?' என்று சுகம் விசாரித்தான்.

தலைமயிருக்கு மைபூசி அவன் இளமையாக இருந்தான். அருகில் நின்ற பெண்மணியை தன் மனைவி என அறிமுகம் செய்தான்.

சந்தேகமேயில்லை. அவள் original வெள்ளைக்காரி!

எனது முகத்தில் தோன்றிய பாவம் அவனுக்கு புரிந்திருக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் என்னுடன் பேசினால் கூட நின்ற மனைவிக்கு புரிந்துவிடும் என்பதால், சுகுமார் தமிழில் பேசினான். பறங்கி மனைவி மீதுள்ள கோபம் அவனது பேச்சில் தெளிவாக வெளிப்பட்டது. பறங்கிகள் வம்பிலே பிறந்தவர்கள் என்று பொரிந்து தள்ளினான். பறங்கியரால் இலங்கையில் பாவிக்கப்படும் அனைத்து கெட்டவார்த்தை களின் தமிழ்மொழிபெயர்ப்பு, தாராளமாக அவன் வாயிலிருந்து வெளிவந்தன.

பேர்த் நகரத்தில் முன்பொருமுறை, உறவினர்களின் மொட்டேலில் தங்கிய கதையை சொன்னேன்.

கோபத்தாலும் அவமானத்தாலும் அவனது முகம் மேலும் கறுத்து,

"அந்த வேசையாலை ஒரு ஹங்கேரிகாரனைத்தான் பிடிக்க முடிஞ்சுது. அவளைவிட என்னாலை முடியுமெண்டு காட்டத்தான் இங்கிலீஸ்காரியை பிடிச்சிருக்கிறன்" என்று கூறியவன் தன் முகத்தை கைக்குட்டையால் அழுத்தி துடைத்தான்.

புருஷன் ஏதோ இக்கட்டில் இருப்பதை உணர்ந்த அந்த வெள்ளைக்காரி "Darling..., let us move on...' என நாகரீகமாக சுகுமாரை அழைத்துச் சென்றாள்.

அன்று ஆங்கில மனைவியுடன் விடை பெற்ற சுகுமார், ஐந்து வருடங்கள் கழித்து, இன்று ஒரு இலங்கை மனைவியுடன் வீட்டுக்கு வந்திருக்கிறான்.

மனைவியின் பெயர் "வதனி", சொந்த ஊர் 'யாழ்ப்பாணத்திலுள்ள கரவெட்டி' ஆகிய விபரங்களை உரையாடல் மூலம் அறிந்துகொண்டேன்.

சமையலறையில் என் மனைவியும் சுகுமாரின் மனைவி வதனியும் அந்நியோன்யமாக பேசிக்கொண்டிருந்தார்கள். சுருக்கமான சமையல் முறைகள் பற்றியும், தேங்காய் பால் விடாமல் கறி சமைப்பதெப்படி என்ற விபரத்தையும் என் மனைவி, வதனிக்கு கூறிக்கொண்டிருந்தாள்.

தேநீர்க் கோப்பைகளை சமையலறை 'சிங்'கிற்குள் வைத்துவிட்டு மீண்டும் வரவேற்பறைக்கு வந்தேன்.

சுகுமார், இலங்கையில் இருந்து வாரம் தோறும் வரும், சர்வதேச வாசகர்களுக்கான தமிழ்த் தினசரியை வாசித்துக் கொண்டிருந்தான்.

"தமிழ் பேப்பரும் கையுமாக உன்னைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றேன் நான். இந்தக் கூற்றிலே கரவு எதுவும் இருக்கவில்லை.

என்னைப் பார்த்து புன்கைத்தவன் சிறிதுநேர மௌனத்தின்பின், “I missed the bus Suntharam..., உன்னைப் பார்க்க பெருமையாகவும் சந்தோசமாகவும் இருக்கிறது.” என்றான். அவனுடைய குரல் இலேசாக உடைந்திருக்கிறது.

என்னுடைய மகன் மிருதங்கம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்று வருகிறான். விரைவிலேயே ‘அரங்கேற்றம்’ வைக்க வெண்டுமென்றும் சொல்லத் துவங்கினான். மிருதங்க பயிற்சிக்கு எனது காரை எடுத்துச் சென்றவன், திரும்பும் வழியில் வயலின் வகுப்புக்கு சென்ற தங்கையையும் அழைத்து வந்தான்.

சுரிதார் உடையில் வயலினும் கையுமாக வந்த என் மகளையும் மிருதங்கத்துடன் வந்த மகனையும் கண்ட சுகுமார், “உன் பிள்ளைகளா...? மகன், நீ முன்னர் இருந்தது போலவே இருக்கிறான். இங்கு வந்தும் தமிழ்ப்பண்பாட்டுடன் நீ அவர்களை வளர்ப்பதைக் காண சந்தோஷமாக இருக்கிறது. கண்ணூறு படாமல் இருக்க வேண்டும்’ எனக்கூறி மேசையில் தன் முட்டியால் மூன்று தரம் தட்டினான், நான் மௌனம் காத்தேன்.

“இப்போது தான் என் வாழ்க்கை அமைதியாகவும் சந்தோஷமாகவும் போகிறது. இதை நான் முன்னரே செய்திருக்கலாம்” என தனக்குத்தானே அனுதாபப்படும் தொனியில் அனுங்கினான்.

இதனை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்ட நான், ‘பிறகு என்ன நடந்தது...?’ எனக் கேட்டேன். அன்று வெள்ளைக்கார மனைவியுடன் கண்டேன். இன்று வதனியின் மணாளனாய் வந்திருக்கிறாய். இடைப்பட்ட கதையை நான் அறிய விரும்புகிறேன் என்பதை அவன் விளங்கிக் கொண்டான் போலும்.

“சுந்தரம்..., வதனி எனக்கு மூன்றாவது மனைவி. அதற்காக மணம் முடிப்பதும், விவாகரத்துப் பெறுவதும் என்

பொழுதுபோக்கென எண்ணிவிடாதே. பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒரு போதும் ஒட்டாது. இது என்னைப் பொறுத்தவரை கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரமாக இருக்கலாம். இப்பொழுதெல்லாம் நான் இறைவனிடம் வேண்டுவது ஒரு குழந்தை. அது எனக்காக இல்லை. வதனிக்காகத்தான். அதற்கு என் மனதிலும் உடலிலும் தெம்பிருக்கிறது..." எனச் சொல்லும்போது அவனது உதடுகள் நடுங்கின. சுகுமார் இரக்கத்துக்குரியவனாக என்முன் அமர்ந்திருந்தான்.

நாம் பேசுவது சமையல் அறையில் உள்ள பெண்களுக்கு கேட்கக்கூடும். எழுந்து சென்று வரவேற்பறைக்கும் சமையலறைக்கும் இடையேயுள்ள கதவைச் சாத்தினேன். என் செயலுக்கு அவன் தன் கண்களால் நன்றி செலுத்தினான்.

"நான் இரண்டாம் முறை ஒரு வெள்ளைக்கார ஆங்கில பெண்ணை மணம் முடித்தது என்னை ஏமாற்றிய அந்த பறங்கிச்சிக்கு சவால் விடுவதற்காகத்தான். உன்னிலும் பார்க்க என்னால் அதிகம் மிதக்கவும் பறக்கவும் முடியும் என்று காட்டினேன். அவள் என்னை ஏமாற்றியதால் ஏற்பட்ட கோப உணர்ச்சிகள் என்னை வதைத்தன. தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் சுபாவம் என் குடும்பத்தில் யாருக்கும் இருந்ததில்லை.

"அந்தப் பறங்கிச்சியை நான் உண்மையாகக் காதலித்தேன். It is my first love. அது வாழ்க்கை பரியந்தம் நிலைத்திருக்குமென மனக்கோட்டைகள் கட்டினேன். ஸம்பியாவில் நான் அவள் நினைவாகவே வாழ, இங்கு மற்றொருவருடன் அவள் உல்லாசம் அனுபவித்ததை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனது யாழ்ப்பாணத்து 'மரபணு' நீயும் ஒரு ஆம்பிளையா? எனக் குத்திக் காட்டியது தோல்வி, வெறுப்பு, இயலாமை இவையெல்லாம் ஒருங்கு சேரமான அவமானங்களைப் பற்றி யோசிக்காது. அந்த ஆங்கிலேய வெள்ளைக்காரியைத் துரத்தித் துரத்திக் காதலித்தேன். என்ன நினைத்தாளோ, திடீரென என்னை திருமணம் செய்து

கொள்வதாகச் சொன்னாள். சுவர்க்கமே என் மடியில் விழுந்தது போன்ற களிப்பில் அவளை மணந்து கொண்டேன். தேனிலவுக்கு பாலித்தீவுக்குச் சென்றோம். சீக்கிரமே இருவருக்குமுள்ள இடைவெளிகளைப் புரிந்துகொண்டோம். என் பலவீனங்களை எனக்கெதிராகச் சமார்த்தியமாகப் பயன்படுத்தினாள். என்னை அவள் 'கறுப்பன்' என நினைத்து நடாத்துவதான தாழ்வுச்சிக்கல் என்னுள் மேலோச்சியது. வெள்ளைத்தோலுடைய சிநேகிதர்களுடன் அவள் பழகுவதை சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் துவங்கினேன். பாசமும் புரிந்துணர்வும், இருக்க வேண்டிய இடத்தில், சந்தேகமும் அவநம்பிக்கையும் புகுந்துகொண்டன. தினமும் சண்டை. வீட்டுக்கு மூக்குமுட்டக் குடித்துத் திரும்பினாள். சில சமயம் இளம்பெண்களை உறவுக்காக அழைத்துவந்தாள். புதுப்புதுச் சிநேகிதிகள். படுக்கை அறையையே நரகலோகமாக்கினாள்..." எனச் சொல்லி நிறுத்தியவன், தன் விரல்களால் கண்களை மூடி மௌனமானான்.

சுகுமாரின் மன உளைச்சலைத் தீர்க்கும் என்ற எண்ணத்தில் எழுந்து, எனது வீட்டிலுள்ள barக்கு சென்று விஸ்கிப் போத்தல், ஐஸ், கலப்பதற்கு சோடா, இரண்டு கிளாஸ்கள் சகிதம் மீண்டும் வரவேற்பறைக்குத் திரும்பினேன்.

"சுந்தரம், கொண்டுபோய் இதை வைச்சிட்டு வா. நான் இதைவிட்டு இரண்டு வருடங்களாகின்றன. இப்போது நான் மாமிசமும் சாப்பிடுவதில்லை. 'நான் யார்...,' என்ற அடையாளம் பற்றிய உணர்வு வயசு ஏறஏறத்தான் மனிதனுக்கு ஏற்படுகிறது போலும்," என்று கூறி வறட்சியுடன் சிரித்தான் சுகுமார்.

அவுஸ்திரேலியாவில் விவாகரத்து என்பது ஆண்களை பொருளாதார வீழ்ச்சிக்குள் வீழத்தும் சமாச்சாரம். எனவே, "இரண்டு விவாகரத்துக்களையும் அவுஸ்திரேலியாவில்தான் பெற்றுக்கொண்டாயா?" எனக் கேட்டேன்.

"முதலாவது விவாகரத்தில் எந்தவித பிரச்சனையும் இருக்கவில்லை. கேட்டவுடன் கையெழுத்து போட்டுவிட்டாள். இங்குள்ள ஸ்ரீலங்கன் Embassy (எம்பசி) மூலமாக விவாகரத்தை பெற்றுக்கொண்டேன். வெள்ளைக்காரியோ தன்னைக் கொடுமைப்படுத்தியதாகக் கூறி நஷ்டப்பணம், ஜீவனாம்சம் என்று ஸம்பியாவில் நான் உழைத்ததெல்லாவற்றையும் ஒட்டக் கறந்துவிட்டாள்..." என்றவன் பேச்சை நிறுத்தி குடிக்கத் தண்ணீர் கேட்டான்.

கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்து அவன் முன் வைத்தேன். ஒரே மூச்சில் குடித்து முடித்தவன் வதனியின் கதையை தொடர்ந்தான்.

"நான் ஸம்பியா போன காலந்தொடக்கம் அம்மாவுடன் எனக்கிருந்த தொடர்பு அறுந்துவிட்டது. எல்லாவற்றையும் இழந்து நான் நடுத்தெருவுக்கு வந்தபோது தான், அம்மாவினது நினைவு வந்தது. குடும்பத்துக்கு நான் ஒரே பிள்ளை, இறுதிக்காலத்தில் அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பா என்பதை எண்ணி இப்போது நான் வருந்தாத நாளில்லை. போதுமடா சாமி என்ற எண்ணத்தில் தான் ஒரு வழி ரிக்கற் எடுத்துக்கொண்டு இலங்கைக்கு போனேன்" என்று நிறுத்தியவன் முகத்தை வேறு திசையில் திருப்பினான். இருப்பினும் அவன் கண்கள் பனித்திருந்ததை நான் அவதானித்தேன்.

"உன் அம்மா நான் அவுஸ்திரேலியாவுக்கு வந்த காலத்தில் இறந்திருக்க வேண்டும். சிட்னியிலும் விற்பனை யாகும் ஞாயிறு வீரகேசரியில் அவருடைய மரண அறிவித்தலைப் பார்த்ததாக நினைவு" எனக்கூறிய நான் "நடந்தது நடந்தவையாகவே இருக்கட்டும். பழையதைக் கிளறிப் பார்த்தால் மனசுக்குத்தான் வலி..." என நான் ஆறுதல் கூறினேன்.

சுகுமார் மௌனமாக இருந்தான். பின்னர் ரொயிலெற் எங்கே இருக்கிறது எனக்கேட்டு சிறுநீர் கழிக்க எழுந்து சென்றான்.

மீண்டும் வந்தமர்ந்தவன், "உனது ரொயிலொற்றுக்குள் நீ பிரேம் போட்டு மாட்டியிருக்கும் படத்தின்கீழ் உள்ள வாசகம் படித்தேன். 'Nobody is Perfect'! உண்மைதான் சுந்தரம். உனக்கு என் சுபாவம் ஓரளவு தெரியும். எதையும் காலம் கடந்ததாக நான் நினைப்பதில்லை... கொழும்பிலே எமது வீட்டருகே இருந்த மாமா ஒருவர் தான் எனக்கொரு புதிய பாதையைக் காட்டினார். அவர் அங்கு அனாதரவற்றவர்களுக்காக ஆசிரமம் ஒன்று நடத்தி வருகிறார். வதனிபற்றி அவர்தான் முன்மொழிந்தார். போர்சூழலில் பெற்றோர் உற்றார் அனைவரையும் இழந்தவள். அவளுடன் நான் ஒரு வாரம் பழகினேன். இருவருக்கும் பிடித்துக் கொண்டது. வயது வித்தியாசம் பாராமல் மனமொத்து திருமணம் செய்துகொண்டோம்," என்ற சுகுமார்.

"ஒன்று சொல்லட்டுமா? எனக் கேட்டுச் சிரித்தான். இப்பொழுது அவனது முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது.

"சொல்லு..." என்று நானும் சிரித்தேன்.

"திருமணத்துக்கு பின்னர் ஏற்படும் காதலிலே அதிகம் தமிழ்மணம் வீசுமோ...?" என்று கூறிய சுகுமார், சூழ்நிலையை மறந்து, இயல்பாகக் குரல் எழுப்பிச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பொலி, வதனியின் செவிகளிலே கூட விழுந்திருக்கக்கூடும்.

# பாவனை பேசலன்றி...

## I

"சின்னத்துரை வாத்தியார் சிட்னியில் நேற்றுக் காலமானார்..." எனத் துவங்கி, சிட்னியிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் முழக்கம் தமிழ் வானொலியின் மரண அறிவித்தல் தொடர்ந்தது.

"இவர் டாக்டர் பேரம்பலத்தின் அருமைத் தந்தையும், ரெலிக்கொம் நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாளரும், கணக்காளருமான அனுஷாவின் அன்பு மாமனாரும், கொழும்பின் பிரபல கண் வைத்திய நிபுணர் அமரர் பொன்னம்பலம், மற்றும் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி காயத்திரி பொன்னம்பலம் ஆகியோரின் சம்பந்தியும், காலஞ்சென்ற விசாலாட்சியின் சகோதரரும், லண்டன் இந்து, அமெரிக்க மகேஷ், வசந்தி, தென்ஆபிரிக்கா பிரணவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்வியா, தினேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும்..."

உலகளாவி வேரோடிக் கிடந்த உறவுகளைப் பட்டியலிட்ட அறிவிப்பாளர், வாத்தியாரின் பூதவுடல் அவரது மகனின் இல்லத்தில் நாளையும், நகர மண்டபத்தில் மறுநாளும் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின்னர், றொக்வூட் (Rockwood) மயானத்தில் தகனம் செய்யப்படுமெனவும், இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறும் வாத்தியார் மகன் சார்பில், உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

சின்னத்துரை வாத்தியாரே எனக்கு எழுத்தறிவித்தவர், சிறுவயதில் தந்தையை இழந்த என்னை இந்நிலைக்கு உயர்த்திவிட்டவரும் அவரே, இந்தப் பந்தத்தை என் நெஞ்சம் சுமப்பதினால் அவர்மீது என்றும் நான் மரியாதை பாராட்டுவேன்.

ஊரில் என்றால் செய்தி கேட்டவுடன் 'சாவீட்டு'க்கு உடனே கிளம்பியிருப்பேன். இங்கே அவுஸ்திரேலியாவில்... வாத்தியாரின் பூதவுடலை நகரசபையின் அனுமதி பெற்று நாளைதான் வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். அதுவரை 'அந்திமசேவை' நிறுவனத்தின் குளிர்ப்பெட்டிக்குள் பிரேதங்களுடன் பிரேதமாகவே வாத்தியார் வைக்கப்பட்டிருப்பார். முகமனுக்காக வாத்தியார் மகன் வீடு சென்று துக்கம் விசாரிப்பதாகப் போக்குக் காட்டி, வம்பளக்க நான் விரும்பவில்லை. அவர் மறைவு என் மனசிலே ஆழமான சோகங்களை ஏற்படுத்தியது! என் மனசு யாரிடம் இதனைப் பங்கிடுவதென அங்கலாய்த்தது.

## II

மறுநாள்

காலையில் 'சா' வீட்டுக்குச் சென்றிருந்தேன்.

அந்த வீடு மகா விசாலமானது. கடல்போல என்பார்களே அப்படி! இருப்பினும் 'கொடிகட்டிப் பறக்கும்' பேரம்பலத்தின் செல்வாக்கிற்காகப் பெருந்தொகையானவர்கள் எதிர்பார்க்கப் பட்டார்கள். இதனால் வளவின் பின்புறத்தே, நீச்சல் குளத்துக்கும் 'ரெனிஸ்' கோட்டுக்கும் இடையில், தற்காலிக கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டு, நாற்காலிகளும் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. 'ஓடர்' கொடுத்தால் கன கச்சிதமாக இவற்றை முடித்துத் தரும் கம்பனிகள் பல அவுஸ்திரேலியாவில் உள. உறவுக்காரர் 'மாஞ்சு மாள' வேண்டிய அவசியமே இல்லை.

கூடாரத்தின் ஒரு மூலையில் என் போன்ற வாத்தியாரின் மாணவ உறவினர்களும், ஊரவர்களும் ஒதுங்கி இருந்தோம். சிலர் வாத்தியாரின் பெருமைகள் சிலவற்றைத் தமிழில் அறிக்கை செய்தார்கள். இடையிடையே ஊரில் நடைபெறும் 'மோதல்கள்' பற்றி, அடக்கி வாசிப்பதான குரலிற் பேசிக் கொண்டோம்.

நேரஞ்செல்லச் செல்ல சிட்னி வாழ் உயர்மட்டத்தினர் பலர், பெரிய பெரிய கார்களிலே வந்திறங்கத் தொடங்கினார்கள். கறுப்பு 'டை', கறுப்பு 'சூட்' என்று இவர்கள் இந்நாட்டின் Funeral ஆசாரங்களைப் பின்பற்றியும், முகங்களிலே செயற்கையானதொரு இறுக்கத்தினை ஒட்டவைத்தும் கொண்டார்கள்.

புதிதாக வருபவர்களை 'Hi,' 'Hallo' சொல்லி வரவேற்பதும், மறைவதுமாக வாத்தியாரின் சம்பந்தியம்மா, திருமதி பொன்னம்பலம் தான் படு 'பிஸி'யாக இருப்பதை உணர்த்திக் கொண்டிருந்தார்.

பத்து மணியளவில் வாத்தியாரின் பூதவுடல் வந்து சேர்ந்தது!

அதனை அந்திம சேவை நிறுவனத்தினர், பிரேத வண்டியில் கொண்டு வந்தார்கள். பிரேத வண்டியென்று அதை மொட்டையாகச் சொல்லிவிட முடியாது. கறுப்பு நிற 'பென்ஸ்' வண்டி அது!

அதிலிருந்து வாத்தியார் இறக்கப்பட்டு, வீட்டின் நடு மண்டபத்தில் வைக்கப்பட்டார். இறக்கி வைக்கும் சடங்கிலே கூடாரத்தில் முகாமிட்டிருந்தவர்களும் முண்டியடித்துக் கொண்டு கலந்து கொண்டார்கள்.

பெரிய 'பட்ஜெட்'டில் அந்திம சேவைக்கு ஓடர் கொடுத்திருக்க வேண்டும். பணத்தின் 'விசுக்கல்' அவர்களின் ஒவ்வொரு அசைவிலும் தூக்கலாகத் தெரிந்தது. அனைவரும் அதனை ஒருவித பிரமிப்புடன் உணர்ந்து கொண்டிருந்தனர்.

ஆனால், அந்த வீட்டிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வெளியேறிய வாத்தியார் இன்றுதான் முதியோர் விடுதியிலிருந்து 'பூதவுட'லாகத் திரும்புகிறார் என்ற உண்மை அங்குள்ள பலருக்குத் தெரியாது.

மருமகள் அனுஷா கெட்டிக்காரி! வாத்தியார் எழுதிய தமிழ்ப் புத்தகங்களையும், மொழி – இலக்கிய சேவைக்காக அவர் பெற்ற விருதுகளையும் தூசுதட்டி, அழகாக, அருகில் வைக்கப்பட்டிருந்த மேசை மேலே அடுக்கி வைத்திருந்தாள்.

வாத்தியார் வெள்ளி வேலைப்பாடுகளுடன் கூடிய விலையுயர்ந்த தேக்கு மரப் பிரேதப் பெட்டியிலே வளர்த்தப்பட்டு இருந்தார். வாத்தியாரின் 'அலங்காரம்' கண்கொள்ளாக் காட்சி. சில்க் ஜிப்பா, அகலமான ஜரிகையுடன் கூடிய பட்டு வேட்டி, அதற்கு சோடியான சால்வை விசிறி மடிப்புக் கசங்காது நேர்த்தியாகச் சாத்தப்பட்டிருந்தது. இத்தகையதொரு ஆடம்பரக் கோலத்தில், வாத்தியரை இன்றுதான் முதன்முதலாக நான் பார்க்கிறேன்.

*ஊரிலே நான் அறிந்திருக்க வாத்தியார் என்றுமே ஆடம்பரத்தை விரும்பாதவர். வெள்ளை வெளேறென்ற நூல் வேட்டியும், கதர் சட்டையும், வெள்ளை உத்தரியமும் அவருடைய அலங்காரம். அன்றைக்குத் தான் எடுத்து அணிந்தது போன்ற தூய்மை துலங்கும். அந்த நாட்களில் அவர் கண்களைப் பார்த்திருக்க வேண்டும். அன்பு–கருணை– சாந்தம் என்று சொல்லுகிறோமே அதை அவர் கண்களிலேதான் பார்த்திருக்கிறேன்.*

*ஊர்ப் பள்ளிக்கூடத்திலே ஆறாம் வகுப்பு வரை சகலதும் அவரே! ஐந்தாம் வகுப்பு இறுதியிலேயே, அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் புலமைப்பரிசில் பரீட்டைக்குப் பிள்ளைகளைத் தயார் செய்யத் துவங்கி விடுவார். அவர் நெறிப்படுத்திய புலமைப்பரிசில் சித்திகளே எங்கள் ஊரில் டாக்டர்களையும் என்ஜினியர்களையும் உருவாக்குவதற்குப் பலமான அடித்தளமிட்டது! இன்று நமது ஊரின் பெயரை உலக-*

*ளவில் நிறுவிய பெருமையிலே கணிசமான பங்கு சின்னத்துரை வாத்தியாருடையது.*

*வாத்தியார் கணக்கிலே புலி என்பதை அயற் கிராமத்திலுள்ளவர்களும் அறிவார்கள். எந்தப் பெரிய கணக்கையும் ஒரு நொடியில் மனதிற்குள் போட்டு விடுவார். அதன் பின் இலகுவான முறையில் உதாரணங்களுடன் விளக்குவார்.*

*நாங்கள் பல்கலைக்கழக புகுமுக வகுப்பிலே படித்த காலங்களிலும் கணக்குப் பாடத்திற்காக தினமும் ஒரு மணி நேரம் அவர் வீட்டிற்குச் சென்று விடுவோம். இது ஒரு வகையில் 'ரியூசன்' வகுப்பு போன்றது தான். ஆனால் அதற்காக அவர் எந்த மாணாக்கரிடமும் பணம் பெற்றது கிடையாது.*

*'சரஸ்வதியை விற்கக் கூடாது' என்ற கொள்கையைக் கடைசி வரையிலும் சின்னத்துரை வாத்தியார் கண்டிப்புடன் கடைப்பிடித்து வந்தார்.*

## III

பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மண்டபத்தின் பெரும்பகுதி வந்தவர்கள் வைத்த மலர் வளையங்களால் நிரம்பிக் கொண்டிருந்தது. 'கறுப்பு ஆடை' மேல்மட்டத்தினர் நாகரிகமான அளவுக்கு குரல்களைத் தாழ்த்தி, சமீபத்தில் அமுலுக்கு வந்த ஜிஎஸ்ரி (GST) வரியின் சாதக பாதகங்களை ஆங்கிலத்தில் அலசிக் கொண்டிருந்தார்கள்.

சம்பந்தியம்மா சிட்னியிலுள்ள சில 'பிரபல்யங்களுடன்' அமர்ந்து சமய கிரியைகளுக்கான 'பட்ஜெட்' போட்டுக் கொண்டிருந்தார்.

'சைவக் குருக்கள் செய்யிறதை வாறவை பாக்கப் போகினமே..., யாருக்கு இதெல்லாம் விளங்கப்போகுது? நீங்கள் சொல்லுற கிரியைச் சாமான்களிலே சிலது, என்னவெண்டே

எனக்குத் தெரியாது. இதுக்ளை இங்கை தேடி வாங்கிப் பாருங்கோவன்...' என்று சம்பந்தியம்மா சைவக் கிரியைச் சமான்களில் கைவைத்தார். செலவினை இறுக்கும் முயற்சி என்பதை வெளியிலே காட்டாத லாவகம்.

*வாத்தியார் என்றுமே பணத்தைப் பெரிதாக மதித்தது கிடையாது. மற்ற ஆசிரியர்களைப் போன்று ஓய்வு நேரத்தில் விவசாயம் செய்தோ ரியூசன் சொல்லிக் கொடுத்தோ பணத்தைச் சேர்த்ததும் இல்லை. சம்பளம் முழுவதும் அதே மாதச் செலவுடன் முடிந்து போகும். அதைப் பற்றி அவர் அலட்டிக் கொண்டதும் இல்லை.*

*வறுமையில் வாழும் பிள்ளைகளுக்கு வாத்தியார் பாடப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார். உயர்தர வகுப்பில் இருக்கும்போது எனக்கு பரீட்சைக்குப் பணமும் அவ்வப்போது அவரே கட்டியிருக்கிறார். ஊரில் காணிப் பிரச்சனையா, அண்ணன் தம்பி அடிபிடியா, கல்யாணப் பேச்சு வார்த்தையா... 'கூப்பிடு சின்னத்துரை வாத்தியாரை' என்னுமளவுக்கு அவருக்கு ஊரில் மதிப்பிருந்தது. வாத்தியார் சொல்லை ஊரில் யாரும் மீறியதுமில்லை.*

துக்கம் விசாரிக்க மரண வீட்டிற்கு வந்திருந்த இளமட்டங்களிடையே, வடபகுதியில் நடைபெறும் ஈழப்போர் பற்றிய பேச்சு இயல்பாகவே முக்கியத்துவம் பெற்றது. அவர்களுடன் மூத்த பிரஜைகளும் சேர்ந்து கொண்டார்கள். கோண்டாவில் பகுதியில் இப்பொழுது சண்டை நடை பெறுவதாகவும் இதன் காரணமாக அங்கு பயிரிடப்பட்ட புகையிலை அறுவடை செய்யப்படாது பழுத்துச் சாவதாகவும் புதினத்தை அவிழ்த்து விட்டார் கொழும்பு மணியம். இவர் தமிழர் கலாசார சங்கத்தின் சார்பில் மலர் வளையம் வைக்க வந்திருந்தவர்.

'வெத்திலை ஒண்டு யாழ்ப்பாணத்திலை பத்துருபா விக்குதெண்டு பேப்பரிலை போட்டிருக்கிறாங்கள். கோதாரி, இனி புகையிலை, சுருட்டும் நெருப்பு விலை விக்கப்போகுது...' என்று ஆதங்கப்பட்டார் மணியத்தின் கையாள நமசிவாயம்.

அந்த நாள்களில் வாத்தியாரிடம் எப்பொழுதும் திறம் புகையிலை இருக்கும். 'கோடா' போட்ட சுருட்டை அவர் என்றும் நாடியதில்லை.

சம்பளம் எடுத்தவுடன் வாத்தியார் நேரடியாக கல்வியங்காட்டு சந்தைக்கு சென்று விடுவார். அங்கு புகையிலை வியாபாரத்தில் புகழ்பெற்ற அப்புத்துரை யிடம் ஒரு கட்டுப் புகையிலை வாங்கி வருவார். இது அவருக்கும், அவ்வப்போது அவரிடம் வருபவர்களுக்கும் மாதம் முழுவதும் போதுமானது.

அதிகாலை வேளையில் நாவிதர் சின்னப்பொடி வாத்தியாருக்கு சவரம் செய்ய வருவதுண்டு. சவரம் செய்து முடித்தவுடன் வாத்தியார் ஒரு சுருட்டு சுற்றப்போதுமான புகையிலையைக் கவனமாகக் கிழித்துச் சின்னப்பொடிக்கு கொடுப்பார்.

ஒரு நாள் யாருக்கோ கொடுப்பதற்காக வாத்தியார் மகன் புகையிலையைக் குறுக்காக நுள்ளிவிட்டான். வாத்தியாருக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். புகையிலை மேல் அவருக்கிருந்த பாந்தத்தை அவர் மறைத்ததில்லை. விளையாடிக் கொண்டிருந்த என்னையும், மகனையும் கூப்பிட்டார். அடிபோடப் போகிறார் என்று பயந்து கொண்டே போனோம். புகையிலையை, பக்க நரம்பு வழியே கிழித்தல் வேண்டுமென்றும் குறுக்காக நுள்ளினால் சுற்றப்படும் சுருட்டின் தொகை குறையுமென்றும் விரிவாக விளக்கம் கொடுத்தார். எந்த அற்ப விஷயமானாலும், அதனை வள்ளிசாக விளக்குவது அவர் சுபாவம்.

# IV

ஈமைக் கிரியைகளுக்கான 'பட்ஜெட்' விவாதம் இன்னமும் முடியவில்லை. சம்பந்தி அம்மா வாதப் பிரதிவாதங்கள் நடத்திக்

கொண்டிருந்தார். இடையிலே ரொயிலற்றுக்குப் போகவென எழுந்து வந்தவர் என்னைக் கண்டதும், நாளைக்கு ஈமைக் கிரியைக்கு வரும் வழியில் வெற்றிலையும், தட்சணைக்குச் சில்லறைக் காசும் வாங்கி வருமாறு கேட்டுக்கொண்டார்.

சரக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெறுவதற்கு சம்பந்தி அம்மாவைப் போல ஆளை நான் எங்குமே கண்டதில்லை.

> *வாத்தியாரிடம் நான் பல தடவை தட்சணை வாங்கியிக்கிறேன். எனது தந்தையாரும் வாத்தியாரும் ஒன்றாக ஆசிரிய கலாசாலையில் படித்தவர்கள். புதுவருடத்தில் வாத்தியாரிடம் அவர் கை விஷேசம் வாங்குவார். தந்தையாருக்கு இரண்டு ரூபா ஒரு சதமும், எனக்கு ஒரு ரூபா ஒரு சதமும் – ஒற்றை விழ – வெற்றிலையில் வைத்து வாதியார் தருவார். ஒரு ரூபா அப்போது பெரிய காசு. தோசை ஒன்று ஐந்து சதம் விற்ற காலம். அதனால் எப்போது வருஷம் பிறக்குமென்று காத்திருப்பேன். எனது தந்தையார் இறந்த பின்பும் வாத்தியார் இதை எனக்குதத் தர மறந்ததில்லை.*

வெளிநாட்டிலிருந்து துக்கம் விசாரித்து, தொடர்ச்சியாக ரெலிபோன் கோல்கள் வந்த வண்ணமிருந்தன வாத்தியார் மகனால் தனித்து இவற்றைச் சமாளிக்க முடியவில்லை. இரண்டு ரெலிபோன் லைன்களும் மற்றும் பேரம்பலத்தின் 'மொபைல்' ரெலிபோனும் மாறி, மாறி கிணுங்கிய வண்ணமிருந்தன. இதனால் சாமான் பட்டியல் தயாரித்த வாத்தியாரின் மருமகளும் அடிக்கடி எழும்பிப் போக வேண்டியிருந்தது. எனவே, என்னைக் குறிப்பெடுக்குமாறு பேரம்பலம் கேட்டுக்கொண்டான்.

சம்பந்தியம்மா இலகுவில் எந்த விடயத்தையும் ஒத்துக்கொள்ளமாட்டார். அரை டொலர் மஞ்சள்தூள் பற்றி அரை நாள் விவாதம் செய்யும் கசவாரம். அத்துடன் அவரின் 'எடுப்புகளும்' எனக்கு அறவே பிடிக்காது. அந்த நேரத்தில்தான் ஆபத்பாந்தவராக அங்கு வந்து சேர்ந்தார் கிரியைகள் செய்யும் சைவக்குருக்கள். செம்பு, குடம், குத்துவிளக்கு

என்று தொடங்கிய குருக்கள் கிரியைக்கு சம்பந்தியம்மாவால் பட்டியலிடப்பட்ட 'பட்டோலைச் சாமான்'களைச் சரிபார்த்தார். குருக்களுக்கு முன்னால சம்பந்தியம்மா அடக்க ஒடுக்கமாக இருந்தது ஆச்சரியமே.

கிரியைக்குத் தேவையான சாமான்களைச் சேகரித்துத் தருமாறும், பட்டோலைச் சாமான்களை வாங்கித் தருமாறும் வாத்தியார் மகன் பேரம்பலம் என்னை உரிமையோடு கேட்டுக்கொண்டான். செம்பு குடங்களை எங்கே தேடிச் சேர்ப்பதென்பதுதான் முக்கிய பிரச்சனை. சிட்னியில் பலரும் வெவ்வேறு சைஸ்ஸில் குத்துவிளக்கும் குடங்களும் வைத்திருப்பது உண்மைதான். அவை எல்லாம் பொலிஷ் செய்யப்பட்டு வீட்டில் அழகுக்காக அடுக்கி வைக்கப்படுபவை. கைப்படாக் கலைப்பொருட்கள் அவை. அவற்றைக் கேட்டு மொக்கேனப்பட எனக்கு விருப்பமில்லை.

## V

'தமிழர் கலாசார சங்கத்தின்ர தலைவராய் இருக்கிறியள்.., ஆட்டம் பாட்டமெண்டு விழாக்களை ஒழுங்குபடுத்திறதை விட்டிட்டு, சங்கத்தின்ரை கணக்கிலை இந்த சாமான்களை வாங்கி ஒரு பொது இடத்திலை வைச்சால் என்ன...?" கொழும்பு மணியத்துக்குக் குத்தல் கதை சொன்னார் விஸ்வலிங்கம் மாஸ்ரர்.

அவருக்கு மணியத்தின் தலைவர் பதவியில் ஒரு கண், இதனால் மணியம் ஒழுங்காக வேலை செய்கிறார் இல்லை என்று பகிரங்கப்படுத்துவதில் வெகு குறியாக இருந்தார்.

'செத்த வீட்டிலை உங்கடை எலெக்ஷன் ரென்சனை அவிட்டு விடாதையுங்கோ...' என்றவாறே அங்கு வந்தார் சம்பந்தியம்மா.

அவரும் சங்கத்திலை முக்கிய புள்ளி. மணியத்தை அவருக்குக் கொழும்பிலேயே தெரியும். அடுத்த வருடம்

மணியத்தின் அநுசரணையுடன் சங்கத்தின் காரிய தரிசியாகாவாவது வந்துவிட வேண்டுமென்பது சம்பந்தியம்மாவின் ஆசை.

விஸ்வலிங்கம் மாஸ்ரர் சம்பந்தியம்மாவின் 'குலுக்கல்' கதைக்கு பதில் சொல்ல முன்பு, நிலைமையை உணர்ந்த நான் சாமான் பட்டியலை உரத்து வாசிக்கத் தொடங்கினேன்.

'மஞ்சள், நெய், அரிசிமா, அரிசி...' இவ்வாறு நீண்ட பட்டியல் இறுதியில் 'சோற்றுப் பருக்கை' என்று முடிவடைந்தது.

"சாவு வீட்டி'லை சோற்றுப் பருக்கை என்னத்துக்கு...? என்று இழுத்தார் விஸ்வலிங்கம் மாஸ்ரர்.

'வாயக்கரிசி போட்டு முடிந்தவுடன் அரிசிப் பொரியுடன் சோற்றுப் பருக்கையும் போட்டால்தான் ஆத்மா அமைதியடையும்,' என விளக்கம் கொடுத்தார் சைவக் குருக்கள்.

'அப்ப... நல்ல குத்தரிசி சோறாய் வாத்தியாருக்கு போடுங்கோ... அவரும் அது திண்டு ஐஞ்சாறு வருஷம் இருக்கும்' என்றார் நமசிவாயம். உள்ளுக்கு இன்னொரு குறிப்புப் பொருளைச் சொருகியவாறு.

*வாத்தியாருக்குக் குத்தரிசிச்சோறு வேண்டும். ஒரு வருடத்துக்கு தேவையான வயல்நெல்லை ஊரில் அறுவடை முடிந்ததும் கூடையொன்றில் குவித்து வைத்திருப்பார்.*

*வாத்தியார் மாமி சமைத்தால் அதில் ஒரு தனி ருசியுண்டு. அவரது கைவாகு அப்படி. நல்ல கறி சமைக்கும் போதெல்லாம் பாடம் முடிந்தவுடன் என்னையும் அங்கேயே சாப்பிடச் சொல்வார்.*

*சிட்னியில் வசிக்கும் வாத்தியார் மகன் பேரம்பலம் என்னிலும் இரு வருடங்கள் மூத்தவன். முதற்தடவையிலேயே மாவட்டத்தில் கூடுதல் புள்ளி*

பெற்று மருத்துவக் கல்லூரிக்குச் சென்றுவிட்டான். வாத்தியார் இதுபற்றி என்றுமே தம்பட்டமடித்தது கிடையாது. எல்லோரும் படித்து முன்னுக்கு வர வேண்டுமென்பது அவர் கொள்கை, பிறர் பிள்ளை தலை தடவினால் தன்பிள்ளை தானே வளரும் என்பது அவர் நம்பிக்கை.

வாத்தியாரின் மகளான சித்திரலேகா என்னைப் பார்க்கிலும் இரண்டு வயது இளையவள். அவளை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். வாத்தியார் மாமி மாதிரி தக்காளி நிறம். தேர் மாதிரி வளர்த்தி. அறிவும் அழகும் இணைந்தால் எதுவோ அதுதான் அவள். நான் உள் வீட்டுப்பிள்ளையானதால் அவளுடன் பழகுவதற்கு எந்தத் தடையுமிருக்கவில்லை.

எனக்கும் பொறியியல் படிப்புக்குப் பல்லைக்கழக அனுமதி கிடைத்தது. பேராதனையிலுள்ள பொறியியல் கல்லூரிக்குச் செல்வதற்கு முன்பு, வாத்தியார் மாமி என்னை விருந்து சாப்பிட அழைத்திருந்தார்.

சித்திரலேகாவே அன்று சமைத்திருந்தாள். கத்தரியும் உருளைக்கிழங்கும் சேர்ந்த பால்க்கறி, பருப்பு, பயத்தங்காய், ஆட்டுக்கறி பிரட்டல், பொரியல், எலும்புச்சொதி, அப்பளம் என எனக்குப் பிடித்தமான வகைகளால் அமர்க்களப் படுத்தியிருந்தாள்.

சாப்பாடு முடிந்தவுடன் அருகில் யாருமில்லாத நேரம் பார்த்து எனக்கொரு 'பைலட்' பேனா கொடுத்தாள். எழுதாத காதற் காவியம் அது என்பதை உணர்ந்து கொண்டேன்.

என்ஜினியரிங் படிக்கப் போகிறேன். என்ற துணிவில், அவள் முன்னிலையே வாத்தியாரிடம் கேட்டுவிட்டேன். சித்திரலேகாவிற்கு வெட்கம் அழகாகத்தான் இருந்தது. வாத்தியார் கண் நிறைய பூரிப்போடு எங்கள் இருவரையும் பார்த்தார். அம்மா

இதற்கு மறுப்புத் தெரிவிக்கமாட்டார் என்று எனக்குத் தெரியும்.

இறுதியாண்டு பரீட்சை முடிந்த பின்பு இடிபோன்று அம்மாவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

சித்திரலேகா கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது ஊருக்குத் தென்புறத்தேயுள்ள இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட 'செல்' அவளைத் தாக்கியதாம். அந்த இடத்திலேயே அவள் உயிர் பிரிந்துவிட்டது. இறுதிப்பரீட்சை நேரமாகையால் வாத்தியார் இதை எனக்குத் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டாராம்.

இதன் பின் ஊருக்குப் போக என் மனம் இடம் தரவில்லை. வேலை ஒன்றை எடுத்துக்கொண்டு அம்மாவையும் ஊரிலிருந்து வரவழைத்து, கொழும்பிலேயே தங்கிவிட்டேன்.

## VI

மாலை நான்கு மணியளவில் ஊரார் உறவினர் தெரிந்தவர் நண்பர்களெனக் கூட்டம் பெருகியது.

சம்பந்தியம்மா வந்தவர்களை பூதவுடல் அருகே கூட்டிச் செல்வதிலும், அவர்கள் கொண்டுவந்த மலர் வளையங்களை வாங்கி அடுக்குவதிலும் பிஸியாக இருந்தார்.

இடையிடையே CDயில் ஒலித்த தேவாரங்களை மாத்திப் போடுவதிலும், மலர் வளையத்தில் இணைக்கப்பட்ட பெயர் மட்டையை வெளியே தெரியும்படி இழுத்து விடுவதிலும் அவர் அலுக்காத அக்கறை காட்டினார்.

வைக்கப்பட்ட மலர் வளையங்களின் எண்ணிக்கையும், அவற்றை யார் யார் வைத்தார்கள் என்பதும் தனது மருமகனின் அந்தஸ்து 'சிம்பல்' என்று சம்பந்தியம்மா நினைத்திருக்கக்கூடும்.

நேரம் செல்லச் செல்ல வாத்தியார் மகனுடனும், மருமகளுடனும் வேலை செய்யும் வெள்ளைக்கார நண்பர்கள் வரத்துவங்க, வாத்தியார் மகன் கறுத்த 'கோட்சூட்டில்' வாத்தியாரின் தலைமாட்டில் நின்றிருந்தான். மருமகளும் கறுத்த உடையணிந்து கணவனருகே கதிரையில் அமர்ந்திருந்தாள்.

சும்மா சொல்லப்படாது. இத்தனை வருடங்களின் பின்பும் இருவரின் சோடிப் பொருத்தம் அம்ஸமாகவே அமைந்திருந்தது.

*இவர்கள் இருவருக்கும் கொழும்பிலேயே மிக ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது. பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் பொன்னம்பலம் தனது கிளினிக்கில் வேலை செய்த வாத்தியார் மகன் பேரம்பலத்தைத் தனது மருமகனாக்கிக் கொண்டார்.*

*சித்திரலோகாவின் அவலச் செய்தி அறிந்ததற்குப் பிறகு அன்றுதான் வாத்தியாரை முதன்முதலாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.*

*அவரைக் கண்டதும் கலியாண வீடென்றும் பார்க்காமல் நான் அழுதே விட்டேன். வாத்தியார் வழமைபோல் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, தட்டிக்கொடுத்தார். பழைய அதே வாத்தியார்தான். திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர்களினதும் சம்பந்தி வீட்டாரினதும் படாடோபங்களுக்கு மத்தியில், வாத்தியார் தனித்துவமானவராகவே தோன்றினார்.*

*திருமணம் முடிந்த மறுவருடமே மேற்படிப்பிற்காக சிட்னி வந்த பேரம்பலம், நிரந்தரப் பிரஜையாகித் தற்போது சகல செல்வாக்கும் சௌகரிங்களும் நிறைந்தவனாக உயர்ந்துவிட்டான்.*

*நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி, நானும் குடும்பத்துடன் சிட்னிக்குக் குடிபெயர்ந்தது எத்தனையோ ஆண்டுகள் கழித்து நிகழ்ந்தது.*

வந்த புதிதில் ஒரு நாள் வாத்தியார் மகன் வசிக்கும் செல்வந்தவர்கள் பகுதிக்கு, முதன்முதல் வாங்கிய எனது பழைய காரில் சென்றிருந்தேன். எனது கார் அவர்களது 'றைவேயில்' நிற்பதை வாத்தியார் மருமகள் விரும்பாதது அவள் முகத்தில் தெரிந்தது. பேரம்பலத்தைச் சுருக்கி '*Pal*' ஆக மாற்றிய வாத்தியார் மகனால், பழைய நட்புடன் பழக முடியவில்லை.

வீட்டில் மனைவியின் ஆதிக்கம் சர்வ வியாபக மாகத் தெரிந்தது. அதன்பின் அவன் வீட்டிற்குப் போவதை நான் நிறுத்திக் கொண்டேன். 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு' என்று வாத்தியார் அடிக்கடி சொல்லுவார்.

ஒரு நாள் பரதநாட்டிய அரங்கேற்றமொன்றில் பேரம்பலத்தைச் சந்தித்தேன். வாத்தியார் சிட்னிக்கு வருவதாகச் சொன்னான். சித்திரலேகாவின் சோகத்தில் வாத்தியார் மாமியும் இறந்துவிட, ஊரில் தனித்திருந்த வாத்தியார் யாழ்ப்பாண நிலவரங்களும் பிடிக்காமல் கொழும்புக்கு வந்துவிட்டதாக விபரம் சொன்னான்.

'கொழும்பில் எப்படி வாத்தியாரின் பொழுது போகிறது...? என்று என்னையும் அறியாமலே கேட்டுவிட்டேன்.

வாத்தியாரின் உதவியால் படித்து உயர்பதவியில் அமர்ந்திருக்கும் ஊரவர் ஒருவர், அறையொன்றை ஒழுங்கு செய்து கொடுத்ததாகவும், அங்கும் வழமை போல காலையும் மாலையும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதாகவும் பேரம்பலம் கூறினான்.

'வாத்தியார் பிள்ளைகளிடம் பணம் வாங்க மாட்டாரே! கொழும்பில் பென்சன் பணத்துடன் எப்படிச் சமாளிக்கிறார்...? மகன் இங்கிருந்து பணமேதும் அனுப்பிகிறாரா என்று அறியும் ஆவலில் விடுப்புப் புடுங்கினேன் நான்.

*அறை எடுத்துக் கொடுத்த அவரது மாணவனே தனது குழந்தைகளுக்கு வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுப்பதைக் காரணம் காட்டி வாடகையின் பெரும் பகுதியைச் செலுத்தி விடுவதாகப் பேரம்பலம் பட்டும் படாமலும் சொன்னான்.*

## VII

**வா**த்தியாரின் பேரக்குழந்தைகள் அங்குமிங்கும் ஓடியவாறு தாத்தாவின் பிரேதப் பெட்டிக்கு வெளியே தொங்கும் பட்டுக்குஞ்சங்களைத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

'ஹாய். அங்கிள்!' என்றவாறே என் அருகே வந்த வாத்தியாரின் 'பேத்தி' ஏன் எனது மகளைக் கூட்டிவரவில்லை என்று கேட்டாள். அவளுக்கு அங்கு விளையாடுவதற்கு சோடி கிடைக்காத ஆதங்கமாக இருக்கலாம்.

'நாளை உன்னுடனும் தம்பியுடனும் சேர்ந்து தாத்தாவுக்கு பந்தம் பிடிக்க வருவான்' என்றேன் ஆங்கிலத்தில், அவளுக்கு விளங்கும்படியாக.

'பந்தம் என்றால் என்ன...?' வியப்புடன் கேட்டாள் பேத்தி.

இறந்தவருக்கு இறுதி மரியாதை செலுத்த பேரப்பிள்ளைகள் தீப்பந்தம் பிடிப்பார்கள். இது எங்கள் ரடிஸன் (tradition). இங்கு அதைச் செய்ய மண்டபத்தில் அனுமதிக்கமாட்டார்கள் என்பதால் நீண்ட மெழுகுதிரியைக் கொளுத்தி நாளை நீங்கள் பிடிக்கலாம் என்று விளக்கினேன். ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தவளைத் தம்பியார் விளையாட வருமாறு அழைக்கவே அங்கிருந்து அகன்றாள்.

*குடும்பக் கட்டுப்பாட்டில் வாழ்க்கையை அனுபவித்த பின், வாத்தியார் மகன் தம்பதிகளுக்கு அடுத்தடுத்து பிறந்தவை இவ்விரண்டு குழந்தைகளும். பெண்*

குழந்தை அச்சொட்டாக வாத்தியார் மாமி மாதிரியே இருந்தாள். உயிரோடிருந்தால் மாமி எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்.

துணையில்லாமல் குழந்தைகளை வளர்ப்பது என்பது வெளிநாட்டில் லேசுப்பட்ட விஷயமில்லை. அதுவும் கணவனும் மனைவியும் வேலைக்குப் போவதாக இருந்தால் கேட்கவே தேவையில்லை. குழந்தை பிறந்த நேரங்களில் மாத்திரம் சம்பந்தி அம்மா சிட்னிக்கு வந்து போனராம். அமெரிக்காவில் உள்ள மகனுடன் வாழ்ந்த சம்பந்தி அம்மாவுக்கு வேலைகள் அதிகம். எல்லாம் கலை – கலாசாரம் – கல்வி சம்பந்தப்பட்டவைகளே. முன்னாள் கல்லூரி அதிபரான அவருக்கு ஆசிரியத் தொழிலில் அவர் ஆற்றிய சேவைக்காக இலங்கை அரசு 'வித்யஜோதி' பட்டமும் வழங்கி கௌரவித்துள்ளது. இதற்கெல்லாம் அரசியல் செல்வாக்கு வேண்டும். வாத்தியாரின் சேவையுடன் ஒப்பிடும்போது இதெல்லாம் தூசு என்பது பலரறிந்த உண்மை. ஆனால் யாழ்ப்பாணக் கிராமமொன்றில் வாத்தியார் செய்த சேவை கொழும்பிலுள்ள அரசாங்கத்துக்கு எங்கே தெரியப்போகிறது?

வாத்தியார் மகனுடைய பிள்ளைகளை பாலர் வகுப்புக்குக் கொண்டு போவதற்கும், திருப்பி அழைத்து வருவதற்கும் மாலை வேளைகளில் அவர்களை மேற்பார்வை செய்வதற்கும் 'ஆள்' ஒன்று அவசரமாகத் தேவைப்பட்டது. இதற்கென இங்கு நம்பிக்கையான ஆள்கிடைப்பது கடினம். கிடைத்தாலும் அநியாயச் செலவு.

நியூயோக், சிட்னி, கொழும்பு எனப் பறந்து திரியும் பிரபல சமூக சேவகியைப் பிள்ளைகளைப் பராமரிக்குமாறு கேட்க முடியுமா? தன் பிள்ளைகளைப் பார்க்கவே கொழும்பில் இரண்டு ஆயாக்களையும் ஒரு 'போயை'யும் அமர்த்தி இருந்ததாக மூச்சுக்கு

மூச்சு பெருமைப்படும் சம்பந்தியம்மாவிடம் இந்தப் பிரச்சினையைப் பிரேரிக்கத்தானும் யாருக்குத் துணிவு வரும்?

'மாமா 'சும்மா' கொழும்பிலை இருக்கிறார் அவரைக் கூப்பிட்டால் என்ன?' என்ற யோசனையை முன் வைத்தாள் மருமகள். பேரம்பலத்திற்கு இது நல்ல யோசனையாகப்பட்டது. சின்னவனின் பிறந்த நாளன்று எடுத்த புகைப்படங்களையும் இணைத்து பாசத்தைப் பிழிந்து பேரம்பலம் தந்தைக்குக் கடிதம் எழுதினான்.

அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து பேரப் பிள்ளைகள் தாத்தாவைப் பார்க்க அடம்பிடிப்பதாக அன்பொழுக வேறொரு கடிதமெழுதினாள் மருமகள்.

வெளிநாட்டு வாழ்க்கை தனக்கு ஒத்துவராது என்பது வாத்தியாருக்கு நன்கு தெரியும். கொழும்பிலேயே நரக வேதனை அனுபவிப்பவர்.

'பொடியன் பாசத்துடன் அழைக்கிறான். கடைசி நேரத்தில் பேரக்குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடக் குடுத்து வைக்க வேணும். கொழும்பு நிலைமைகளும் வரவரச் சரியாய் இல்லை' என்று பலரும் பல நியாயங்களை வாத்தியாருக்கு எடுத்துச் சொல்லி அவர் மனசை இளக வைத்தார்கள். அரைகுறை மனசுடன்தான் வாத்தியார் விசாவுக்கு மனுக்கொடுத்தார். ஆனால் பேரம்பலம் இணைத்திருந்த தஸ்தாவேஜுக்கள் கனதி சேர்க்கவே மிக விரைவில் அவருக்கு விசா கிடைத்துவிட்டது.

முக்கிய வேலை காரணமாகப் பேரம்பலத்தால் விமான நிலையத்துக்குப் போக முடியவில்லை. இதனால் மருமகளே விமானநிலையம் சென்றாள். சிட்னி விமான நிலையத்தில் வாத்தியாரால் மருமகளை இனம் காண முடியவில்லை.

*கொழும்பிலே மருமகளுக்கு நீண்டு வளர்ந்த அடர்த்தியான கூந்தல். அந்தக் காலத்தில் சேலை உடுத்து, கூந்தலில் பூவைத்து மருமகள் வரும் போதெல்லாம் பெருமை பொங்க வாத்தியார் அறிமுகம் செய்வார். இன்று மயிரைக் கத்தரித்து, தலையைப் பொப் செய்து, ஜீன்ஸ் ரிசேட்டுடன் மருமகள் அவரை வரவேற்றாள். வந்திறங்கியதும் வாத்தியாருக்கு ஏற்பட்ட முதல் அதிர்ச்சி இதுதான்.*

*விமான நிலையத்தில் மருமகள் சந்தித்த வெள்ளைக்காரி தெரிந்தவளாக இருக்க வேண்டும். இருவரும் வாத்தியாரை விட்டுச் சிறிது விலகி, வண்டியில் சூட்கேஸை வைத்துத் தள்ளிக்கொண்டு வந்தனர்.*

*வேட்டி சட்டையுடனும் அங்கவஸ்திரத்துடனும் காலில் செருப்புடன் வின்ரரில் வீட்டுக்கு வந்த அவரைப் பேரக்குழந்தைகள் நூதனமாகப் பார்த்தார்கள்.*

# VIII

பிரேதப் பெட்டியின் அருகில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த ஒற்றைக் குத்துவிளக்கு 'கூடு' பற்றி எரிந்தது. எண்ணெய் ஊற்றித் திரியை நேர்த்தி செய்த பின்னர், ஊதுவத்திகளைக் கொளுத்தி அதற்குரிய ஸ்ராண்டிலே பொருத்தி வைத்தார் சம்பந்தியம்மா.

எதையோ நினைத்துக் கொண்டவர்போல, எனக்குப் பக்கத்தில் காலியாக இருந்த கதிரையில் வந்தமர்ந்து கொண்டார்.

'நாளைக்குக் கனசனம் வரும். இவர்களைத் தெரியாத சனமே இங்கை இருக்கினம்? தமிழ்ச்சங்கம், இலக்கியப் பேரவை, இந்து மா மன்றம் என்று பல சங்கங்களும் இரங்கல் உரை நிகழ்த்த இடம் ஒதுக்கித்

தரும்படி 'ரெலிபோன்' அடிச்சுக் கேட்டவை. அவை தம்பி.., வாத்தியர் தமிழுக்கும் சமயத்துக்கும் செய்த சேவை என்று தெந்தட்டாய் சொல்லிப்போட்டு விட்டிடுவினம். வாத்தியாரின்ரை பெருமைகள் கொஞ்சமோ? நாங்கள் அவற்றை – 'சகல பெருமைகளையும் இங்கிலீஸிலும், தமிழிலும் அடிச்சு விட்டாலென்ன?... வாத்தியாரோட நல்லாப் பழகின தமிழறிவுள்ள ஆள் உம்மை விட்டால் ஆர் இருக்கினம்? எனக்கு நீர் கொஞ்சம் உதவி செய்தால், இரவோடை இரவாக கொம்பியூட்டரிலே போட்டு நாளைக்கு ஈமைக் கிரியைகளுக்கு முன்னம் சீனாக்காரன்ரை பிரஸிலை அடிச்செடுத்திடலாம். வாத்தியார் விஷயத்திலை நான் கேட்டே நீர் செய்ய வேணும்...? என்று வார்த்தைகளிலே தேன் தடவிப் பேசினார் சம்பந்தியம்மா.

'சகல பெருமைகளும்' என்று சம்பந்தியம்மா எதைக் குறிப்பிடுகிறார் என்பதை நான் நன்கு விளங்கிக் கொண்டேன். வாத்தியாரைச் சாட்டாக வைத்துத் தன்னுடைய மகள் மருமகன் எனத் துவங்கி, தன்னுடைய பெருமைகளையும், குடும்பத்தின் மேதா விலாசங்களையும் ஆவணப்படுத்துவது தான் அவருடைய நோக்கும் என்பது எனக்குத் தெரியும்.

அவர், தான் நினைத்ததைச் சாதிப்பதில் சூரி!

அவருடைய கோரிக்கைக்குத் தலையாட்டிய வண்ணம், வாத்தியாருடைய சிட்னி வாழ்க்கையில் நான் நனவிடை தோயலானேன்.

*சின்னத்துரை வாத்தியார் சிட்னிக்கு வந்த புதிதில், அவரது வரவைக் கொண்டாட, ஒன்றுகூடல் விருந்து ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்கள். வாத்தியார் தொலைபேசியில் என்னைத் தவறாது வரும்படி அழைத்திருந்தார். மனைவி மகளுடன் நான் குறித்த நேரத்துக்கு அங்கு சென்றிருந்தேன். அன்று தான் வாத்தியார் என் மனைவியையும், மகளையும் முதல் முதலாக பார்த்திருக்க வேண்டும்.கண்கலங்கியவாறே மகளைத் தூக்கி உச்சிமுகர்ந்தார்.*

'எப்படி வாத்தியார், சிட்னி பிடிச்சுக் கொண்டுதோ?' என்று வாத்ஸல்யத்துடன் கேட்டேன். அவர் தமது பதிலைச் சொல்வதற்கிடையில் கறிச்சட்டிகளுடன் வரத் துவங்கிய விருந்தினர்களைக் கண்டு மலைத்துப் போய் நின்றார் வாத்தியார்.

'ஏனப்பா இதுகளைக் காவிக் கொண்டு வாறியள்...?' எனக் கேட்டவாறே மருமகள் கறிச்சட்டிகளை வாங்கி மேசையில் அடுக்கத் தொடங்கினாள்.

'விருந்துக்கு இன்னும் சமைக்கேல்லை; என்னண்டு ஆக்கள் வந்தாப்போலை எல்லத்தையும் ஒப்பேத்தப் போகினம்' என்று பயந்த வாத்தியாருக்கு இப்போது தான் அவுஸ்திரேலிய விருந்தின் சூக்குமம் புரிந்தது. அவருக்கு இந்த B.Y.O. முறை முற்றிலும் புதிசு. திவசம், கலியாணம், நல்லநாள் பெருநாள் என்று அண்டா அண்டாவாக அவித்துக் கொடுத்தவர் சின்னத்துரை வாத்தியார்.

'தாங்களே கொண்டுவந்து தாங்களே சாப்பிடுவதற்குப் பெயர் விருந்தில்லை...' என்று முணுமுணுத்தவாறே ஊரில் ஸ்பெஷலாக சுற்றுவித்து எடுத்து வந்த சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டார் வாத்தியார்.

அங்கு வந்திருந்த மேல்மட்ட பெண்களுக்கு சுருட்டு மணம் ஒத்துப் போகவில்லை.

முகத்தைச் சுழித்தவாறே இருமத் தொடங்கினார்கள்.

குறிப்பறிந்த மருமகளும், 'மாமா... இனி உந்த சுருட்டுப் புகைக்கிறதை விட்டிடுங்கோ... இங்கை புகையிலை சுருட்டும் வாங்கேலாது. 'காப்பெற்' உந்த மணத்தை இழுத்துதோ... வீடு முழுக்க சுருட்டு மணம் தான் அடிக்கும்,' என்றவாறே வாத்தியார் கையில்

புகைந்து கொண்டிருந்த சுருட்டை நாசூக்காய் வாங்கி ரொயிலெற்றுக்குள் போட்டு, தண்ணீர் அடித்துவிட்டாள்.

வாத்தியார் என்னைப் பரிதாபமாகப் பார்க்கவே, நான் அதைக் காணதவன் போல நடித்தேன்.

வந்திருந்த விருந்தினர்கள் அடுத்த அறையில் 'சிகரெற்' புகைத்தாவாறே கையில் மதுக் கிளாசுடன் வம்பளத்து கொண்டிருந்தார்கள்.

சீமாட்டிகளும் 'அல்க்ககோல்' இல்லாத 'வைன்' என்று துவங்கி பசியெடுக்குமென 'ரெமி மாட்டின்' குடிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

பார்ட்டி களைகட்டத் தொடங்கிவிட்டது. வந்திருந்த கூட்டம் CDயில் ஒலித்த இசைக்குத் தாளமிட்டவாறே, 'மணம், குணம், காரம்' ஏற்றப்பட்ட bitesஸையும் ஒரு கைபார்த்துக் கொண்டிருந்தது.

இதிலே ஒருவகையான சடங்குமுறை பின்பற்றப்படுவதை வாத்தியார் அவதானிக்கத் தவறவில்லை.

வாத்தியாருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட விருந்தில் அவரைக் கவனிப்பார் யாருமில்லை. மெல்ல வந்து என்னருகில் அமர்ந்து கொண்டார்.

தவிப்புடன் விரல்களை இறுக மடிப்பதும் விரிப்பதுமாக அவஸ்தைப்படுவது நன்கு தெரிந்தது. கூர்ந்து கவனித்தேன். வாத்தியார் கையில் புதுச் சுருட்டு! மெல்ல எழுந்து வெளியே நின்ற எனது காருக்கு கூட்டிப் போய் காருக்குள் இருந்த 'லைற்றரை' எடுத்துத்துக் கொடுத்தேன். எதுவுமே பேசாது சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு நீண்டதொரு பெருமூச்சுவிட்டார் வாத்தியார்.

'நான் இங்கை வந்திருக்கக்கூடாது... பெரிய பிழை விட்டிட்டன்...' கண் கலங்கினார் வாத்தியார்.

*'வந்ததும் வராததுமாய் ஏன் இப்படிச் சொல்லுறியள்? போகப் போக இடம் பிடிபட்டிடும். நாங்களும் இங்கைதானே இருக்கிறம். ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ' என ஆறுதல் சொன்னேன் நான்.*

*நெடுநேரம் காருக்குள் இருந்து என்னுடன் ஊர் நினைவுகளை மீட்டார் சின்னத்துரை வாத்தியார்!*

# IX

இரவு முழுவதும் வீட்டிலே பூதவுடலை வைத்திருக்க நகரசபை அனுமதிக்காது. அதனால் இரவு ஒன்பது மணியளவில் அந்திம சேவை நிறுவனத்தினர் பூதவுடலைக் கொண்டு செல்ல வந்திருந்தார்கள்.

நாளைக் காலை பத்து மணியளவில் வாத்தியார் நேரடியாக சைவச் கிரியைகளுக்கென ஒழுங்கு செய்த மண்டபத்துக்குக் கொண்டு வரப்படுவார்.

பிரேதப் பெட்டியை மூடியவுடன் விக்கி விக்கி அழுதான் பேரம்பலம்.

அது இறுதி நேர உணர்ச்சிகளின் வெளிப்பாடு. தன் இயலாமைகளுக்காகவும் சேர்த்து அழுகிறானோ என்றுகூட எனக்குத் தோன்றியது.

'வாத்தியார் வாழ்ந்தனுபவிச்சுப் போட்டுத்தானே போயிருக்கிறார்! அதுவும் வெள்ளிக்கிழமை நல்ல 'சா' செத்திருக்கிறார். நீங்களும் அவருக்கு ஒரு குறையும் வைக்கேல்லை. மனவருத்தப்படாமல் பிள்ளையளுக்குச் சாப்பாட்டைக் குடுங்கோ. அதுகளும் நாள் முழுக்க ஒண்டும் சாப்பிடாமல் 'கோலா'வைக் குடிச்சுக் கொண்டு திரியுதுகள்...' என்றவாறே உறவினர்கள் சமைத்துக்கொண்டுவந்த சாப்பாடுகளை மேசைமேல் எடுத்து வைத்தார் சம்பந்தி அம்மா.

பிள்ளைகள் சோறு கறி வேண்டாம் என்று அடம்பிடித்தபடி பிரீஸரை (Freezer)த் திறந்து சொசேஸை வெளியில் எடுத்து மைக்கிறோ வேவில் சூடாக்கினர்.

மைக்கிறோவேவும் குளிர்ப்பெட்டியும் இல்லா விட்டால் சனங்கள் இங்கை பட்டினி கிடந்து செத்துப் போங்கள்... கோழிக்குஞ்சுகள் உயிரோடை உலாவின காலத்திலும் பார்க் 'பிறீஸ்ஸருக்குள்ள (Freezer) கிடக்கிற காலம்தான் அதிகம்' என்று வாத்தியார் ஒரு தடவை பகிடியாகக் குறிப்பிட்டது சடுதியாக என் நினைவில் உறைத்தது.

வந்த சில நாட்களிலே சிட்னியில் தான் பெற்ற அநுபவங்களை வாத்தியார் தொடுத்துக் கோர்த்துச் சொல்லியிருந்தார். அவரின் ஒருநாள் அநுபவமாக அவற்றைத் தொகுத்து மீள்பார்வை செய்வது சுவையானது!

காலையில் ஐந்து மணிக்கெல்லாம் துகில் எழுந்த அரவத்தைக் கேட்டு வாத்தியாரும் விழித்துக் கொண்டார். நேரமாற்றம் என்கிற சங்கதிகளை எண்ணிப் பார்க்காமல் 'புதிய இடம் நித்திரை வரேல்லை' என்று வாத்தியாரும் எழுந்து விட்டாராம்.

குளிர்ப்பெட்டிக்குள் இருந்து எடுக்கப்பட்ட பாணில் இரண்டு துண்டுகளை 'ரோஸ்ற்' பண்ணி 'பட்டர் பூசி' ஒரு கோப்பையில் வைக்கப்பட்டிருந்தது.

வைத்த குறிப்பிலே அதுதான் தமது காலை உணவு என்பதைப் புரிந்துகொண்டார்.

பாண் 'ரோஸ்ற்' செய்வது எப்படி, 'மைகிறோவேவ்' எப்படி உபயோகிப்பது என்கிற நுட்பங்களை எல்லாம் மகன் பேரம்பலம் வாத்தியாருக்கு அக்கறையுடன் விளங்கப்படுத்திக் கொண்டிருந்தான்.

பரிதாபகமாக பார்த்த வாத்தியாரைப் பார்த்து, 'புதிசில கொஞ்சம் கஷ்டம்தான். பிறகு பழகிப் போகும்.

இண்டைக்கு இதிலை வைச்சிருக்கிற சோறு கறியை மைக்கிறோவேவிலை சூடாக்கி மத்தியானம் சாப்பிடுங்கோ... எவ்வளவு நிமிஷங்களுக்கு சூடாக்கிறது என்பது பற்றி கவனமாக இருங்கோ... எதையும் கருக்கிப் போடாதையுங்கோ' என்று அக்கறையோடு சொன்னான் மகன்.

மருமகளோ 'ராபிக் ஜாம்' வாறதுக்கு முன்னாலே போக வேண்டுமென்று, தனது ஸ்போட்ஸ் மொடல் காரில் வேலைக்குப் போய்விட்டாள்.

மத்தியானச் சாப்பாட்டைச் சரிக்கட்டிப் பார்ப்போம் என்கிற எண்ணத்திலே குஷினி வேலையிலே வாத்தியார் கொஞ்சம் சிரத்தை எடுத்தார்.

குளிர்ப்பெட்டியின் மேல் அறையைத் திறந்து பார்த்தார் வாத்தியார். சில் என்ற குளிர் காற்று அவர் முகத்தில் வீசித் துன்புறுத்தியது. இருந்தாலும் அதிலே சேமிக்கப்பட்ட 'திரவியங்களை' நோட்டமிட்டார். பிளாஸ்டிக் பெட்டிகளில் கறிகள் திகதியிடப்பட்டு Freeze பண்ணப்பட்டிருந்தன. மனக் கணக்கிட்டுப் பார்த்தார் வாத்தியார். சில கறிகளின் வயது மூன்று மாதங்களை எட்டிப் பிடித்திருந்தன. பச்சைமிளகாய், கறிவேப்பிலை எல்லாம் பொலீத்தின் பைகளிலே இறுகக் கட்டப்பட்டு பாடம் செய்யப்பட்டிருந்தன.

கறிப்பெட்டி ஒன்றைத் திறந்து பார்த்தார் வாத்தியார். தக்காளிக் குழம்பாக இருக்க வேண்டும். கல்லு மாதிரி இறுகிக் கிடந்தது.

கோப்பையிலே எடுத்து வைக்கப்பட்ட சோறு கறியைப் பேரம்பலம் கற்றுத்தந்த தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகித்து சூடாக்கிச் சாப்பிட்டுப் பார்த்தார் வாத்தியார்.

'சப்'! எல்லாவற்றையும் 'பின்(bin)னுக்குள் கொட்டி விட்டார்.

மாலையில் மருமகள் வேலைவிட்டுத் திரும்பி வந்து புதிசாக ஏதாவது சமைப்பாள்தானே என்கிற எண்ணத்திலே இரண்டு மூன்று சுருட்டுக்களை வஞ்சகமின்றித் தாராளமாகவே பற்ற வைத்துக் கொண்டார்.

வேலை முடிந்து மாலை வீட்டுக்கு வந்த மருமகள் பத்திரகாளியானாள்.

'மாமா, உங்களுக்கு எத்தனை தரம் சொல்லுறது வீட்டுக்குள்ளை சுருட்டுப் பத்த வேண்டாம் எண்டு. வீடு முழுக்க சுருட்டு நாத்தம். ஆரேன் வந்தால் என்ன நினைப்பினம்...?

வாத்தியார் வாயடைத்துப் போனார். அவருடைய வாழ்க்கையில் யாரும் அவர் முகத்தைப் பார்த்து குரல் எழுப்பிப் பேசியது கூடக் கிடையாது.

படலம் அத்துடன் முடியவில்லை.

'டொயிலட்' போய் வந்ததும் மீண்டும் மருமகள் முணு முணுத்தாள். வார்த்தைகள் தெளிவாகக் கேட்கவில்லை.

சமையல் அறை 'சிங்'கிலே கோப்பைகள் கழுவாமல் கிடந்ததுக்கு ஒரு 'கமண்ட்'! ஒரு பாட்டம் மழை பெய்து ஓய்ந்தது போல!

மருமகள் இரவுச் சாப்பாட்டுக்கென பாண் துண்டுகளை எடுத்து 'பட்டரை'த் தடவிக் கொண்டு 'சான்விச்' தயாரித்தவாறே வாத்தியாருடன் பேச்சுக் கொடுத்தாள்.

'மாமா, நாளைக்குப் பிள்ளையளைப் பள்ளிக்கூடம் விட்டவுடன் கூட்டிக்கொண்டு வாருங்கோ. உங்களுக்கும் நடந்தது போல இருக்கும். அதுகளும் பின்னேரப் பிள்ளை பராமரிப்பு நிலையத்திலை கிடந்து களைச்சு விழுந்து வருகுதுகள்... அதுகளுக்கும் உங்களோட

ஒட்டிக் கொள்ளவும் ஆசைவரும் என்றவள், செய்த 'சான்விச்'சை தானும் பிள்ளைகளும் சாப்பிட்ட பின்னர் மேல் மாடிக்கு சென்று டிவிக்கு முன்னால் அமர்ந்து கொண்டாள்.

மாடிக்கு வாத்தியார் என்றுமே போனதில்லை! வாத்தியார் தனது இரவுச் சாப்பாட்டை எட்டிப் பார்த்தார். குளிர்பெட்டிக்குள் இறுகிக் கிடந்த பழைய தக்காளிக்குழம்பு சூடாக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் சில பாண்துண்டுகள், 'ரோஸ்'ரரில் போட்டு வாட்டி எடுத்தால் மொறு மொறுப்பாகத் தின்னலாம் என்ற எண்ணத்தில் போலும், ரோஸ்ரரும் மேசைமேல் வைக்கப்பட்டிருந்தது.

பேரம்பலம் நேரம் சென்றுதான் வீடு வந்தான். தந்தையைக் கண்டதும் 'சாப்பாடு முடிஞ்சுதோ' என்று கேட்டவாறே, பதிலுக்குக் காத்திராமல், மாடிக்குப் போய்விட்டான். பின்பு இறங்கவேயில்லை. அவன் இரவில் 'ஸ்போட்ஸ்' கிளப்பில், ரெனிஸ் முடிந்தவுடன் சாப்பிட்டு விட்டு வரும் சங்கதியைப் பல நாள் கழித்தே வாத்தியார் அறிந்து கொண்டார்.

**ஊ**ரிலே மாமி என்கிற மகராசி வாழ்ந்த காலத்தில்... வாத்தியாரின் சாப்பாட்டு விஷயங்களிலே எவ்வளவு கரிசனை? பழையது என்ற பேச்சுக்கே இடமில்லை... 'சூடாகச் சாப்பிட்டால்தான் இவருக்கு பத்தியம்...' என்று சொல்வதிலே வாத்தியார் மாமி அடையும் புளகாங்கிதத்தை நான் அறிவேன்.

# X

**கா**லையிலே வாத்தியாரின் ஈமக்கிரியை நடைபெறும் மண்டபத்திற்கு கிரியைச் சாமான்கள் சகிதம் போனேன். மனைவியையும் மகளையும் கூடவே அழைத்துச்

சென்றிருந்தேன். வாத்தியாருக்கான – என்னை ஆளாக்கிய கல்விமானுக்கான – இறுதி அஞ்சலி அது! அதிலே குடும்பமாகக் கலந்துகொள்வதை என் மனசு விரும்பியது. என் மனைவியும் மகளும் ஒரு கட்டத்திலே வாத்தியாருடன் நெருக்கமாகப் பழகத் தொடங்கிவிட்டார்கள். நேற்றிரவு முழுவதும் என் மனைவி சலிப்புச் சொல்லி அழுது கொண்டிருந்தாள். இந்தப் பரிவும் பாசமும் பாவனையல்ல என்பது எனக்குத் தெரியும்.

*காலம் செல்லச் செல்ல வாத்தியார் என் வீட்டுக்கு நடந்தே வரத் துவங்கினார். இங்குள்ள Formalityகளை மதிக்காமல், உரிமையுடன் வருவது எனக்கு மன நிறைவினைத் தந்தது.*

*'நடைக்கு நடையுமாச்சு... உங்களை வந்து கண்டதுமாச்சு,' என்று அவர் பூசி மெழுகிச் சொன்னாலும் அவரது மன வெப்பிசாரங்கள் முழுவதையும் நான் அறிவேன்.*

*என் மனைவி சிறு வயதிலேயே தந்தையை இழந்தவள். எனவே அவள் சீக்கிரமே வாத்தியாரைத் தனது தந்தையின் ஸ்தானத்தில் வைத்துப் பாராட்டத் துவங்கினாள்.*

*வழக்கமாக வெளியில் எங்குமே சாப்பிடாத வாத்தியார் என் மனைவி அழைத்ததும் மறுப்பேதும் கூறாது சாப்பிடுவார். அவருக்கென்றே குத்தரிசியும் சுருட்டும் இங்குள்ள தமிழ்க் கடையொன்றில் வாங்கி வீட்டிலே 'ஸ்டொக்' வைத்திருந்தேன். இதுபற்றி என் மனைவி கொண்டிருந்த அக்கறை எனக்கு திருப்தி தந்தது.*

*வீட்டில் என் மகளுடன் நானும் மனைவியும் தமிழிலே பேசுவதை ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்தோம். எமது வீட்டிலே கமழ்ந்த தமிழ் மணத்தை வாத்தியார் மிகவும் அநுபவித்தார்.*

*வாத்தியாரின் அக்கறையினால் தமிழ்ப்பள்ளிக் கூடப் பேச்சுப் போட்டிகளில் என் மகள் பரிசுகள் பல பெற்று தமிழிலே நல்ல 'கெட்டிக்காரி' என்கிற பெயரையும் சம்பாதித்தாள்.*

*'ஏன் வாத்தியார், உங்கடை பேரப்பிள்ளையளை தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாமே...?' என்று என் மனைவி ஒரு நாள் வஞ்சகமில்லாமல் கேட்டுவிட்டாள். அவள் சிட்னியில் வார இறுதி நாட்களில் மாத்திரம் நடைபெறும் தமிழ்ப் பாடசாலையொன்றின் தொண்டர் ஆசிரியை.*

*நீண்ட பெருமூச்சொன்றே வாத்தியாரிடமிருந்து பதிலாகக் கிடைத்தது. மனைவி அந்தக் கேள்வி மூலம் அவருடைய மனைச வருத்திவிட்டாளோ என்று நான் மனம் புழுங்கினேன்.*

மனைவி கண்ணீர் விட்டு அழுகிறாள். அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. றொக்வூட் மயானத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களில் சில எனது காருக்குள் இருந்தது நினைவுக்கு வந்தது. நான் வெளியே வந்தேன்.

என் மனம் ஏன் இப்படித் தவிக்க வேண்டும்? இறுதிப் பிரிவு மகா கொடுமையானது...!

மற்றவர்களின் வாகனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் மண்டபத்தின் அருகே ஒதுக்குப்புறமான இடத்தில் எனது காரை நிறுத்தியிருந்தேன்.

என் காருக்கு அண்மையில் ஒருவர் சிகரெட் புகைத்துக் கொண்டு நின்றார். அவரும் ஒரு தமிழர் தான். வாத்தியாரின் பூதவுடல் இன்னமும் மண்டபத்துக்கு கொண்டு வரப்படாததால் நேரத்தினைப் போக்காட்ட அவர் சிகரெட் புகையை வளையமாக விட்டுக் கொண்டிருந்தார்.

*வீட்டிலே என்றைக்கு வாத்தியார் சாப்பிட்டாலும் அன்று ஒரு விருந்து நடப்பதாக என் மனம் குதூகலிக்கும்,*

சாப்பிட்ட கையோடு எனது வீட்டின் பின்புறத்தேயுள்ள வெளி விறாந்தையில் இருந்துதான் அவர் சுருட்டுப் புகைப்பார்.

வாத்தியார் என்றைக்குமே தமது வீட்டுக் கதைகளை வெளியில் சொல்வது கிடையாது. தன்னால் தாங்க இயலாத நேரத்தில் மாத்திரம் என்னிடம் சொல்லித் தனது மனதைத் தேற்றிக்கொள்வார்.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில்தான் அவர் தமது சுருட்டுக் கட்டுக்கு நடந்த அவலத்தைச் சொன்னார்.

ஊரில் இருந்து அக்கறையுடன் எடுத்து வந்த சுருட்டுகளின் ஒரு பகுதியை காற்றுப் போகாதாவாறு செப்பமாகக் கட்டி அலுமாரியின் மேல், யார் கண்களிலும் சட்டென்று படாதாவாறு, பத்திரப்படுத்தி வைத்திருந்தாராம்.

கையிருப்பு முடிந்தவுடன் சுருட்டை எடுக்கப் போனவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே சுருட்டுக் கட்டைக் காணவில்லை. அதனைக் கண்ணாலேகூடப் பார்த்ததில்லை என்று வீட்டிலுள்ள எல்லோரும் சாதித்தார்கள்.

சில நாட்களின் பின்னர் பேரப் பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்து வந்த பொழுதுதான், பேரன் மர்மத்தின் முடிச்சை அவிழ்த்தான்.

'மம்மி அறையைச் சுத்தப்படுத்தியபோது சுருட்டுக் கட்டைக் கண்டெடுத்ததாகவும், யாருக்கும் தெரியாதவாறு 'கராஜில்' ஒளித்து வைத்து, நகர சபை குப்பை எடுக்கும் நாளாகப் பார்த்து அதைப் 'பின்'னுக்குள் போட்டதாகவும் சொன்னான். இந்த சமாசாரத்தினை கிழவனுக்குச் சொல்லக்கூடாது என்றும் கண்டித்தும் வைத்திருந்தாளாம்...

அதன் பின்னர் என் வீட்டிற்கு வந்தால் மட்டும் வாத்தியார் சுருட்டுப் புகைப்பார். அவர் சுருட்டின் அடிமை

*என்பதல்ல. சுருட்டுப் புகைத்தலைத் தமது சுதந்திரத்தின் குறியீடாகவும், பாத்தியமாகவும் அவர் அனுபவித்தார் என்பதை நான் விளங்கிக் கொண்டேன்.*

# XI

றொக்வூட் மயானத்தில் அங்கு தேவையான பொருள்களை இறக்கி வைத்தேன்.

இன்னும் நேரம் இருந்தது. நினைவுகளின் பாரம் நெஞ்சை அழுத்தவே நேரம் ஊர்ந்து செல்வதாகத் தோன்றியது.

மீண்டும் ஈமக்கிரியைகள் நடைபெறும் மண்டபத்திற்குச் செல்லும் நோக்கத்துடன் காரில் ஏறி அமர்ந்தேன். அப்பொழுது தான் சம்பந்தியம்மா தயாரித்த வாத்தியாரின் நினைவு மலரை சீனாக்காரனின் அச்சகத்தில் எடுக்க வேண்டுமென்ற சங்கதி நினைவிலே உறைத்தது.

அந்த அச்சகம் வெஸ்ற்மீட் (Westmead) ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருந்தது.

பத்து மணிக்கு முன்னதாக ஈமக்கிரியைகள் நடைபெறும் மண்டபத்திற்கு சென்றுவிட வேண்டும்.

போகும் வழியில் வெஸ்ற்மீட் ஆஸ்பத்திரிக்கு முன்னாற் செல்லும் வீதியில் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனால் அமுல் படுத்தப்பட்டிருக்கக்கூடிய புதிய வீதி ஒழுங்குமுறைகளிலே மாட்டித் தவிப்பதை தவிர்ப்பதற்காக 'பரமற்றா' (Parramatta) வீதி வழியாக காரை வேகமாகச் செலுத்தினேன்.

கார் ஆஸ்பத்திரியை விலத்திச் சென்றாலும், என் நினைவுகள் அதனைச் சுற்றிக் கிளைவிட்டன.

*'வெஸ்ற்மீட்' ஆஸ்பத்திரியிலே வாத்தியாருக்கு நிறைய அனுபவம் உண்டு.*

முதன் முறையாக அவர் அங்கு அனுமதிக்கப்பட்ட பொழுது பேரம்பலம் நான் வேலை செய்யும் கந்தோருக்குப் போன் செய்து விபரம் சொன்னான். அத்துடன் தன் தந்தை என்னை அவசரமாகப் பார்க்க விரும்புவதாகவும் தெரிவித்தான்.

அன்று மாலையே மனைவியுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தேன்.

'யூறலோஜி' பிரிவில் குழாய் மூலம் சிறுநீர் கழித்தபடி படுத்திருந்தார் வாத்தியார்.

எங்களைக் கண்டதும் கண்களில் திரண்ட கண்ணீரை சாமர்த்தியமாக மறைத்தபடி புன்னைகைத்தார்.

"என்ன நடந்தது...?" எனக் கேட்டேன்.

அந்த வர்த்தமானத்தை அவர் தொட்டம் தொட்டமாகத் தான் சொன்னார். அவற்றைக் கோர்வைப்படுத்தி நான் விளங்கிக் கொண்டேன்.

இரண்டு நாட்களின் முன்பு காலையில் பிள்ளைகளை பாலர் வகுப்பில் விடுவதற்கு கூட்டிச் சென்றவர் மீண்டும் வீட்டிற்கு வந்தபோதுதான் திறப்பை எடுக்காது, கதவை இழுத்துச் சாத்தியதை உணர்ந்து கொண்டார். மருமகள் வரும் வரை வெளியில் உள்ள வாங்கில் அமர்ந்துள்ளார். 'வின்ரர்' குளிர் சிறுநீர் பையைத் தாக்கியதால் 'புரஸ்ரேற்' சுரப்பி வீங்கி அவரால் சிறுநீர் கழிக்க முடியவில்லை.

'எனக்கு அல்லது பேரம்பலத்துக்கு ரெலிபோன் பண்ணியிருக்கலாமே...? எனக் கடிந்து கொண்டேன்.

'செய்திருக்கலாம்தான். பக்கத்துக் வீட்டு வெள்ளைக்காரனோடை பேசி விஷயத்தை சொல்லுற துக்கும் பாஷைப் பிரச்சினை. வெளியிலை 'பூத்'திலை இருந்து ரெலிபோன் பண்ணியிருக்கலாம்... அதுக்கு

என்னிட்டை காசேது...? வாத்தியார் மறுபுறமாகத் திரும்பி, வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

'பேரப்பிள்ளையளும் பின்னேரம் பள்ளிக் கூடத்தாலை வந்து குளிருக்கையே நிண்டதுகள்...?' இது என் மனைவியின் கேள்வி.

'பேத்தி அடுத்த வீட்டுக்குச் சென்று தாய்க்கு ரெலிபோன் பண்ணியதாகவும் 'சோட்' லீவைப போட்டுவிட்டு வீட்டை வந்த மருமகள், 'வேட்டியைக் கட்டிக்கொண்டு நாள் முழுக்க வெளியே Garden (கார்டன்) பெஞ்சிலை இருந்து மானத்தை வாங்காதையுங்கோ. போகேக்கை திறப்கை எடுத்துக்கொண்டு போக வேணுமெண்டதும் தெரியாத அளவுக்கு அறளை பேந்து போச்சுது...' என்று ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணியதாகவும் தெரிந்தது.

'ஒரு மனுஷனுக்கு மறதி வாறதில்லையே...? எனக்கெண்டாத் தம்பி, எல்லாம் வெறுத்துப் போச்சுது' என்று நாத் தளதளக்கக் கூறியவாறு கண்ணீரை மறைக்க மீண்டும் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார் வாத்தியார்.

மனப்பாரத்தைத் தாங்க முடியாத போதெல்லாம் வாத்தியார் தான் பெற்றுவரும் மனக்காயங்களை இப்படித்தான் வெளிப்படுத்துவதுண்டு.

அந்த நேரங்களில் நானும் அவருக்கு ஒரு சுமைத்தாங்கியாக மாறுவேன்.

'புரஸ்ரேற்' சுரப்பியை ஒப்பரேசன் செய்து அகற்ற வேண்டும் என்கிற வைத்திய ஆலோசனையின் பேரில் தான் டாக்டர்கள் அவரை ஆஸ்பத்திரியில் இருந்து 'டிஸ்சாஜ்' செய்தார்கள்.

இந்த ஆஸ்பத்திரி விஜயத்துக்குப் பின்னர் வாத்தியார் சிறுநீர் கழிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார்.

# XII

பரமற்றா றோட்டை நான் எடுத்தது மொக்குத்தனமான வேலை என்பதைப் பின்னர்தான் உணர்ந்தேன்.

தேவையில்லாத அலைச்சலுக்கு உள்ளாகி, ஈமக்கிரியை மண்டபத்துக்கு வரச் சுணங்கிவிட்டது.

நான் மண்டபத்தை அடையவும் அந்திம சேவை நிறுவனத்தினர் வாத்தியாரின் பிரேதப் பெட்டியைக் கொண்டு வந்து மேடையில் வைக்கவும் சரியாக இருந்தது.

ஒரு மூலையிலே அமர்ந்து விஸ்வலிங்கம் மாஸ்டர் உருக்கமாகத் தேவார திருவாசகம் பாராயணம் செய்து கொண்டிருந்தார்.

அவரையே சுண்ணப்பாடலையும் பாடுமாறு நான் முன்னரே கேட்டிருந்தேன்.

எனது 'மோபைல்' ரெலிபோன் கிணுகிணுத்தது.

சைவக் குருக்கள், தான் 'On the way' என்றும், பத்துப் பதினைந்து நிமிடங்களில் மண்டபத்துக்கு வந்து விடுவதாகவும் சொன்னார்.

வாத்தியாருக்குச் செய்யப்பட்ட அலங்காரத் திருத்தங்கள் என் பார்வையில் விழுந்தன. இப்பொழுது மஞ்சள் நிற புதிய குர்தா ஒன்று அணிவித்திருந்தார்கள். இது மிக நாகரீகமான சில்க் குர்தா. எத்தனையோ தலைமுறைகளுக்கு இப்பாலாகச் சினிமா யுகத்தின் உடையலங்காரத்திற்குள் வாத்தியார் கொண்டு வரப்பட்டிருந்தார். நெஞ்சுப் பகுதியிலே பெரிய பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வாத்தியாரின் இயல்பான தோற்றம் மாற்றி அமைக்கப்பட்டு விட்டதான மனக்குறை எனக்கு.

வெள்ளைக்கார நண்பர்களும் வாற இடத்திலே, 'எங்கள் 'பழைமையும்' ஸ்டையிலானதுதான் எண்டு தெரிய வேணும்...'

என்கிற சம்பந்தியம்மாவின் வாதங்களுக்கு எதிராக யாரால் அப்பீல் செய்ய முடியும்?

*சிட்னியிலும் தமது வழமையான தோற்றத்தைப் பேணுவதிலே வாத்தியார் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்க நேர்ந்தது. வகுப்பில் உள்ள ஏனைய பிள்ளைகள் காரில் வந்து இறங்குவதாகவும், தாத்தா வேட்டியைக் கட்டிக்கொண்டு வருவது 'Funnyயாக' இருப்பதாகவும் தினமும் பேரப்பிள்ளைகள் முறைப்பாடு செய்தன.*

*'பாம்பு தின்னுகிற ஊருக்குப் போனால் நடுமுறி எனக்கு எண்டு சொல்லுறது போலத்தான் இதுவும். ஊரிலை வேட்டியிலை திரிஞ்ச எத்தினை பேர் இங்கை காற்சட்டை போட்டுக்கொண்டு திரியினம். இந்த நாட்டின்ரை வின்ரருக்கும் குளிருக்கும் வேட்டி சரிப்பட்டு வருமே?" என்று மகன், மருமகள் - ஏன் சம்மந்தி அம்மா கூட-பலவிதத்திலும் பல தொனியிலும் சொன்ன போதிலும் வாத்தியார் மசியவில்லை.*

*'காலாதி காலமாய் நான் வேட்டியோடைதான் திரியிறன். உங்களுக்காக இந்த வயதிலை காற்சட்டை போடச் சொல்லுறியளோ...? என்று வாத்தியார் இந்த விஷயத்தில் பிடிவாதமாகவே இருந்தார்.*

*முதல் 'வின்ரர்' கழிந்தபிறகு வாத்தியாருக்கு ஓரளவு பயம் தீர்ந்துவிட்டது!*

*இந்தக் கட்டத்திலேதான், இனிப்பான ஒரு செய்தியை மாலதி வாத்தியார் காதிலே போட்டு வைத்தாள். அவள் ஊரிலே வாத்தியாரிடம் படித்தவள். அவள் 'சென்ர லிங்கில்' வேலை செய்பவள். வேலையற்றவர்கள், வயோதிபர், ஒற்றைத் தாய் ஆகியோருக்கு உதவிப்பணம் வழங்கும் அரச திணைக்களம் அது.*

*'நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வந்து ஒரு வருஷமும் ஒன்பது மாதமுமாகுது! 'ஸ்பொன்ஸரில்'*

*வந்தால் இப்போதைய சட்டப்படி இரண்டு வருஷத்துக்குப் பிறகுதான் உதவிப்பணம் கிடைக்கும். இனனும் மூன்று மாதத்திலை நானே எல்லா ஒழுங்கும் செய்து விடுகிறன். உங்களுக்கு இரண்டு கிழமைக்கு ஒருக்கால் 'சோசல்' காசு வரும் என்று சொன்னாள்.*

*இதற்குப் பிறகு வாத்தியார் ஒரு நாள் என் மனைவியிடம் பேசிய போது 'சோஷல்' பணம் கிடைத்த வுடன் தான் செய்யவிருக்கும் விஷயங்களை மனந்திறந்து சொன்னார்.*

*'ஒரு டொலர் ரிக்கற்றிலை நாளெல்லாம் ரெயினிலும் பஸ்ஸிலும் பயணம் செய்யலாம்... தமிழ்க் கடைகளுக்குப் போய் தமிழ்ப் பத்தகங்களும் பேப்பர்களும் வாங்கி வாசிக்கலாம்...' எனத் தன்னுடைய தன்மானத்தினை ஓரளவேனும் காப்பாற்றலாம் என்கிற கனவுகளிலே மிதந்தார்.*

*ஆனால் அந்தக் கனவுகள்...!*

## XIII

சைவக் குருக்கள் இறுதிக் கிருத்தியங்களைச் செய்யத் துவங்கிவிட்டார். ஊதுவத்திகளும், சாம்பிராணி வில்லைகளும் இலேசாகச் சுகந்த மணத்தினை அறையெல்லாம் பரப்பிக் கொண்டிருந்தது.

இந்தப் புகையும் மணமும் அவுஸ்திரேலிய மண்ணுக்கு அந்நியமானவை. இருப்பினும் இவற்றின் மூலம் வாத்தியாரின் இறுதிச் சடங்கிலே தமிழ் மணம் ஊட்டப்படுவதாக அங்கு குழுமியிருந்தவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

*மீண்டும் குளிர் சிறுநீர் பையைத் தாக்கிய தால் அவராலே சிறுநீரை கட்டுப்படுத்த முடியவில்லை. மன உழைவுகளும் சேர்ந்து வாத்தியாரை உருக்*

குலைத்துவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கிடையில், சடுதியாக பத்து வயசுகளின் மூப்பு உடலிலே புகுந்து கொண்டதாக அவர் அவதிப்பட்டார்.

'வீடு முழுக்க மூத்திர வாடையடிக்குது. வீட்டுக்கு ஆக்களைக் கூட்டிக்கொண்டு வாறதுக்கும் வெக்கமாய் இருக்குது...' என்று புறுபுறுக்கத் தொடங்கினாள் மருமகள்.

'மூத்திரவாடை' என்ற பிரச்சினையை முதலில் கிளப்பியவர் சம்பந்தியம்மாவே. எதையும் திட்டம் போட்டு தந்திரமாக நிறைவேற்றுவதில் அவர் மகா கெட்டிக்காரி!

அவுஸ்திரேலியாவில் மூத்த பிரஜைகளுக்குள்ள வசதி அமெரிக்காவில் இல்லை என்பது சம்பந்தி அம்மாவுக்கு நன்கு தெரியும். இதனால் மகளின் ஸ்பொன்ஸரில் நிரந்தரப் பிரஜையாக விசா கிடைத்து சிட்னியில் 'என்றிமேக்' பண்ணியவர் கடந்த இரண்டு வருடங்களாக நியூயோக்-சிட்னி-கொழும்பு என்று பறந்து திரிந்துவிட்டு 'சோசல்' பணம் எடுக்கும் காலம் வந்தவுடன் நிரந்தரமாகத் தங்க சிட்னி வந்துள்ளார்.

மகளின் வீட்டருகே கொழும்பு மணியத்தின் உதவியுடன் இரண்டு அறை 'அப்பாட்மென்ற்' ஒன்றையும் வாடகைக்கு அமர்த்தி, சின்னக் கார் ஒன்றும் வாங்கிவிட்டார்.

பேரப்பிள்ளைகளும் இப்போது அம்மம்மாவின் காரிலேயே பள்ளிக்கூடம் போய்வரத் தொடங்கி விட்டன.

சிட்னியிலும் சம்பந்தி அம்மா மெல்ல மெல்லத் தனது சமூக சேவைகளை ஆரம்பித்தார்.

இடையிடையே மகள் வீட்டிற்கு மிஞ்சிய கறிகளை பிளாஸ்ரிக் பெட்டியில் போட்டுக்கொண்டு

வந்து போகவும் துவங்கிவிட்டார். வந்த அலுவலைப் பார்த்துக்கொண்டு போகும் சுபாவம் அவருக்கு எப்பொழுதும் இல்லை. எதிலும் மூக்கை நுழைக்காமல் எப்படிச் சமூக சேவை செய்வது...?

"ரொயிலெற்றைக் கழுவி சுத்தமாய் வைச்சிருங்கோ வாத்தியார். பிள்ளையளுக்கும் வியாதிவரப் போகுது...' என சாதுவாகச் சொல்லித்தான் விவகாரத்திற்கு அத்திவாரம் போட்டார்.

வாத்தியார் ஒரு ஊர்ச் சட்டம்பி என்றும், தான் கொழும்பில் கல்லூரி அதிபராக இருந்தவர் என்கிற 'கெறு' சம்பந்தியம்மாவுக்கு எப்பொழுது உண்டு.

வாத்தியாருக்கு 'சோஷல்' உதவிப்பணம் கிடைக்க இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன.

'வாத்தியாரை வீட்டிலை வைச்சுக் கஷ்டப் படுகிறதிலும் பார்க்க 'நேசிங்ஹோமிலை' (Nursing home) விட்டால் ஒழுங்காய் கழிவித்துடைச்சு பாத்துக் கொள்ளுவினம். மணி அண்ணற்றை சம்பந்தியையும் அங்கைதான் கொண்டுபோய் விட்டிருக்கினம். நேரத்துக்கு நேரம் நல்ல சாப்பாடாம்!' என்று வாத்தியார் கேக்கக் கூடியதாக மகளுக்கு ஆலோசனை கூறினார் சம்பந்தியம்மா. அப்பொழுது பேரம்பலமும் அங்கிருந்தான். சமய சந்தர்ப்பங்களைத் தேர்ந் தெடுப்பதில் சம்பந்தியம்மா மகா கெட்டிக்காரி.

இதனை வாத்தியாரால் தாங்க முடியவில்லை.

'என்னை ஒரு இடமும் கொண்டு போய் விடவேண்டாம். யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி விடுங்கோ. என்ரை பென்சன் காசிலை நான் வாழுவன். ஒரு நேரக் கஞ்சி வைச்சுத் தாறதுக்கு எனக்கு ஆக்கள் இல்லையே?' என்று வாத்தியார் குரல் எழுப்பிச் சொன்னார்.

'உந்தச் சண்டையுக்கை 'பாஸ்' எடுத்து ஆர் இப்ப உங்களைக் கூட்டிக்கொண்டு போறது? அங்கை இருந்து கொண்டு மகன் கவனிக்கிறான் இல்லை' எண்ட அவப்பெயரை அதுகளுக்கு தேடித்தராமல் பேசாமல் இங்கை இருக்கோ.' தன் மருமகன் சார்பாக சம்பந்தியம்மா பேசினார்.

சாதாரணமாகவே வீட்டில் பேரம்பலத்தின் பேச்சு எடுபடாது. மாமியாரின் சந்நிதானத்திலே அவன் எப்பொழுதும் வாயில்லாப்பூச்சி.

அந்த ஆலோசனைக்கு தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், திடீரென பற்றீரியா இன்பெக்ஸன் வந்து வாத்தியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சுகமானதும் நேரடியாக, வாத்தியார் நேர்ஸிங் ஹோமிலே விடப்பட்டார். எல்லா ஒழுங்குகளையும் சம்பந்தியம்மாவே முன்னின்று செய்திருக்க வேண்டும். அவரை அங்கு கொண்டுபோய்விடும்வரை மகளும் தாயும் யாருக்கும் விஷயத்தை அவிட்டுவிடவில்லை.

செய்தி கேட்டவுடன் நான் அடுத்த சனிக்கிழமை வாத்தியாரைப் பார்க்க நேர்ஸிங் ஹோம் போயிருந்தேன்.

என்னைக்கண்டதும் வாத்தியார் உடைந்துபோனார். மத்தியானம் கொண்டு வந்து வைத்த அவித்த உருளைக் கிழங்கும் இறைச்சித்துண்டும் ஆறிக் குளிர்ந்திருந்தது. வாழைப்பழத்தை மட்டும் சாப்பிட்டுவிட்டு தோலை கோப்பையில் வைத்து இருந்தார்.

சாப்பாட்டுக் கோப்பையை எடுக்க வந்த வெள்ளைக்கார பெண்மணி 'சாப்பாடு ருசிக்கவில்லையா...? என ஆங்கிலத்தில் கேட்டாள்.

வாத்தியாரிடமிருந்து பதிலேதும் வரவில்லை.

அவருக்கு ஆங்கிலம் விளங்காதா? என ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

அப்பொழுது நான் அவரின் பெருமைகளைச் சொல்லி, அவராலே பலர் முன்னுக்கு வந்ததையும் எடுத்துக்கூறி அவரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி அவளைக் கேட்டுக்கொண்டேன்.

வாத்தியாரின் நிலையைப் பரிவோடு புரிந்துகொண்ட அவளும் அவரின் கன்னத்தை அன்புடன் தடவிக் கொடுத்தாள்.

பாஷை புரியாத பிறமொழிச் சூழலில் வாத்தியாரின் நிலையை என்னால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. மகளின் பரதநாட்டிய வகுப்பு நேர்ஸிங் ஹோமுக்கு பக்கத்திலேயே நடப்பதால் சனிக்கிழமைதோறும் சாப்பாட்டுப் பார்சலுடனும், தமிழ்ப் பத்திரிகையுடனும் தவறாது அவரிடம் போகத் தலைப்பட்டேன்.

இந்தக் கடமையிலே நான் ஆத்ம திருப்தி அடைந்தேன்.

அன்று Father's day!

மனைவி ரிபன் கரியர் ஒன்றில் போட்டுத் தந்த குத்தரிசி சோறு கறியுடன் வாத்தியாரிடம் போயிருந்தேன்.

மகன் பேரம்பலம் தனது இல்லாள் சகிதம் ரோஜாப் பூங்கொத்தொன்றுடன் வந்திருந்தான். நான் கொண்டு சென்ற ரிபன் கரியர் அவர்கள் கண்களை உறுத்தியிருக்க வேண்டும்.

'என்ன மாமா.... இங்கைதானே நாங்கள் நல்ல 'பலன்ஸ் டயற்' குடுக்கச் சொல்லி 'எக்ஸ்ரா' காசு கட்டிறம். எங்கடை ஊர்க் கறிசோறு தின்ன இங்கை இருக்கிற மற்றவையெல்லே, கறி மணக்குதெண்டு 'கொம்பிளேன்' பண்ணப்போகினம்..' என்றாள் வாத்தியார் மருமகள்.

அப்பா... வந்த இடத்திலை அதுக்கேற்ற மாதிரி வாழப் பழகுங்கோ. நீங்கள் என்ன சின்னப்பிள்ளையே...?' மனைவி முன் வாயைத் திறந்தான் பேரம்பலம்.

வாத்தியாரின் உதடுகள் துடித்தன.

நிலைமையப் புரிந்து கொண்ட நான், 'அதுக்கென்ன பேரம்பலம், இண்டைக்கு ஒரு நாளைக்குத்தானே? அவர் சாப்பிட்டவுடனை யன்னலை வடிவாய் திறந்துவிட்டு, ' எயர் பிறெஸ்னர்' அடிச்சு விடுறன்' என்று சமாதானம் கூறினேன்!

சிறிது நேரம் எவரும் பேசவில்லை.

மௌனத்தை கலைத்தபடி 'நாளைக்கு, உன்ரை அம்மாவின்ர திவசம். அண்டைக்குத்தான் பேத்தி திவ்வியாவின்ரை பிறந்த நாளும் வருகுது...' என்று வாத்தியார் மகனுக்கு மெதுவாக சொன்னார்.

'இங்கை ஆர் மாமா திவசம் குடுக்கினம்? நான் அம்மாட்டை சொல்லி முருகன் கோவிலிலை மாமி பெயருக்கு ஒரு அருச்சினை செய்விச்சு விடுறன்....' என்று மருமகள் குறுக்கிட்டாள்.

'அண்டைக்கு இவை திவ்வியாவின்ரை பிறந்த நாளுக்கு ஆக்களையும் பார்ட்டிக்கு கூப்பிட்டிருக் கினமாம்...' என் இழுத்தான் பேரம்பலம்.

'பேத் டே வீட்டிலையே கொண்டாடுறியள்? பிள்ளையளையும் பார்க்க ஆசையாய்த்தான் இருக்கு' வாத்தியார் தனது ஆசையை வாய் திறந்து சொன்னார்.

பேரம்பலத்திடமிருந்து என்ன பதில் வரப் போகிறது என்ற ஆவலுடன் காத்திருந்தேன் நான்.

'*Happy Fathers Day....!* எப்பிடி வாத்தியார் இருக்கிறயள்?' என்று கேட்டவாறே அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார் சம்பந்தியம்மா.

*‘என்ன இங்கை நிண்டு மினக்கெடுகிறயள்...? சாமான் வாங்கிறேல்லையே...? நாளைக்கிடையிலை ஊரிப்பட்ட வேலையள் செய்து முடிக்கவேணும். திவ்வியா தன்ரை கிளாஸ் மேற்ஸையும் வரச்சொல்லி கூப்பிட்டிருக்கிறாளாம். அவளின்ர ‘பேர்த்டே’ கேக்குக்கு ஐஸிங் செய்யவே எவ்வளவு நேரம் எடுக்கப்போகுது’ என அவசரப்படுத்தினர் சம்பந்தியம்மா.*

*மானிடம் இவ்வளவு தாழ்ந்ததை நான் என்றுமே அனுபவித்ததில்லை!*

## XIV

**சு**ண்ணப்பாடலை உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தார் விஸ்வலிங்கம் மாஸ்ரர்.

பேரம்பலம் தந்தைக்குக் கடமை செய்யும் அருந்தவப் புதல்வன் போன்ற தோற்றம் எல்லோர் மனதிலும் படியுமாறு சுண்ணமிடிக்கத் துவங்கினான்.

ஆனால் என் மனம் அன்று நேர்ஸிங் ஹோமில் நடந்த நிகழ்ச்சியிலேயே சுழன்று கொண்டிருந்தது. என் மண்டைக்குள் உலக்கை கொண்டு இடிப்பது யார்? எது?

*வாத்தியாருடைய அந்தச் சின்னக் கோரிக்கைகூட நிராகரிக்கப்பட்டது மனசை அரித்துக் கொண்டிருந்தது.*

*மகளின் பரதநாட்டிய வகுப்பு முடிந்து அவள் வரும் வரையில் காரிலே காத்திருந்தேன். ஆனால் நினைவுகள்...?*

*வாத்தியார் நேர்ஸிங் ஹோமில் வாழ்ந்த காலத்தில் ஒரு தடவையேனும் வீட்டுக்கொண்டு செல்லப் படவில்லை.*

நாளைக்கு வாத்தியாரைக் கோவிலுக்கு கூட்டிச்சென்று அவர் கையால் வாத்தியார் மாமிக்கு திவசம் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தேன். என்னை இந்த நிலைக்கு உயர்த்தி வைத்த குருவுக்குச் செய்ய வேண்டிய கடமை அதுவென நான் தெளிவு பெற்றேன்.

மகள் காரிலே ஏறினாள். அவளுக்கு அருகில் உள்ள மக்டொனால்ஸில் 'யூனியர் பேகர்' வாங்கிக் கொடுத்ததும், அவளுக்கு சந்தோஷம். நான் மீண்டும் நேர்ஸிங் ஹோமுக்குச் செல்லக் காரை திருப்பினேன்.

அங்கு இப்பொழுது சீனன் ஒருவனே மனேஜராக நியமிக்கப்பட்டு இருந்தான். அவன் சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தவன்.

இந்துக்களின் பழக்கவழக்கங்கள் நன்கு தெரியும். அவனிடம் சகல விபரங்களையும் எடுத்துச் சொல்லி, நாளைக்கு வாத்தியாரை முருகன் கோவிலுக்கு அழைத்துச் செல்ல அனுமதி கேட்டேன்.

'முருகன் கோவிலுக்கா?' என்று மகிழ்ந்த சீனன், சிங்கப்பூர் சிறங்கூன் றோட்டில் தைப்பூசத்துக்கு நடைபெறும் காவடி பற்றிக் கூறியவாறே வாத்தியாரின் கையெழுத்தைப் பெற்றுவருமாறு 'போம்' ஒன்றைத் தந்தான்.

வாத்தியாரிடம் விஷயத்தை விளக்கி கையொப்பம் கேட்டேன். அதில் கையொப்பமிட்டபோது அழுதே விட்டார். வாத்தியார் குழந்தைப்பிள்ளைபோல தேம்புவார் என்று நான் நினைத்ததில்லை. இறுதியில் சமாளித்துக்கொண்டு, என் மகளை இறுக்கி அணைத்து முத்தம் கொடுத்தார்.

அடுத்த நாள் காலை குருக்களுக்கு கொடுக்க வேண்டிய திவஷ சாமான்கள் சகிதம் வாத்தியாருடன்

சிட்னி முருகன் கோவிலுக்கு சென்றேன். கோவிலில் வாத்தியார் சின்னப்பிள்ளைபோல் அங்குமிங்கும் சுற்றித் திரிந்த பின் ஒரு தூணில் சாய்ந்து வெகு நேரம் மௌமானார்.

திவசம் முடிந்து நேர்ஸிங் ஹோமுக்கு வரும்போது வாத்தியார் நன்கு களைத்து விட்டார். இருப்பினும் அவரது முகத்தில் ஒருவித அமைதி குடிகொண்டிருந்தது. வரும் வழியில் சித்திரலேகா பற்றியும், மாமி பற்றியும் வாயோயாது கதைத்தவாறே வந்தார்.

'சித்திரலேகா இருந்திருந்தால் எனக்கு இந்த நிலை வந்திருக்காது... நான் இப்ப உன்னோடை இருந்திருப்பன்.எல்லாத்துக்கும் 'குடுப்பனை' வேணும்... எனக் கண்கலங்கினார் வாத்தியார்.

அன்று அவரைப் பிரியும் போது என் கையினை வாஞ்சனையுடன் பற்றிக்கொண்டு, 'நான் இன்னும் எத்தனை நாள் இருப்பனோ தெரியாது. உவன் பேரம் பலத்தை நம்பேலாது. அவன் பெண்டுகளின்ரை சொல்லுக்கை நிண்டு ஆடுறான். நான் செத்தால் நீதான் எல்லாத்தையும் பொறுப்பெடுத்துச் செய்ய வேணும்...' செய்வாய்தானே....?' என்று கேட்டார் வாத்தியார்.

சம்மதத்திற்கு அறிகுறியாக தலையை ஆட்டிக் கொண்டே என் கண்களில் பனித்த கண்ணீரை அவர் பார்த்து விடக்கூடாதென்பதற்காக வாசல் பக்கம் திரும்பினேன்.

**வே**லை விடயமாக அடுத்த இருவாரங்கள் நான் வெளிநாடு சென்றிருந்தேன். திரும்பி வந்ததும் கந்தோரில் பல வேலைகள் எனக்காகக் காத்திருந்தன. இருப்பினும் நான் இல்லாத காலங்களில் என் மனைவி நேர்ஸிங் ஹோம் செல்லும் பணியைச் செய்து வந்தாள்.

*'இந்த ஞாயிற்றுக்கிழமை எப்படியும் வாத்தியாரைச் சென்று பார்க்க வேண்டும்' என்கிற அக்கறையுடன் தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றையும் எடுத்து வைத்து இருந்தேன்.*

*தற்செயலாகத்தான் செய்திக்கு பின் தமிழ் முழக்கத்தின் சமூக அறிவித்தலுக்குச் செவிமடுத்தேன்.*

*'சின்னத்துரை வாத்தியார் சிட்னியில் நேற்றுக் காலமானார்...''*

## XV

மண்டபம் கொள்ளாத கூட்டம் திரண்டிருந்ததில் சம்பந்தியம்மாவுக்குப் பரம திருப்தி. எல்லாவற்றையும் மேற்பார்வை செய்யும் ஒரு தோறணை.

பேரம்பலத்தின் பிள்ளைகள் இருவரும் தாத்தாவுக்கு பந்தம் பிடிப்பதற்கு வந்தார்கள். நீண்ட மெழுகுவர்த்திகளையே பந்தமாகப் பாவிக்கும்படி சைவக் குருக்கள் கேட்டுக்கொண்டார். வாத்தியாரைத் தாத்தா என்று வாஞ்சையுடன் அழைக்கும் என் மகளுக்கும் வாத்தியார் மீதுள்ள என் ஆத்மார்த்த உறவை நிலைநாட்ட ஒரு பந்தம் கொடுத்தேன்.

பிரேதப் பெட்டியருகே குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்த வாத்தியாரின் மருமகளைச் சுற்றிப் பலர் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்கள். எங்கிருந்துதான் இந்த கண்ணீர் மடை திறந்ததோ?

'மாமாவுக்கு நாங்கள் என்ன குறை வச்சம்? இன்னும் கொஞ்சநாள் அவர் உயிரோடை இருந்து பேரப் பிள்ளையளின்ரை வளர்ச்சியைப் பார்த்திருக்கலாம்' என்றவாறே விக்கி விக்கி அழுதாள் மருமகள்.

'பிள்ளை, பிறந்தவை ஒரு நாள் சாகத்தானே வேணும்? நீ பார்த்தது போலை இங்கை ஆர் மாமன்மாரைப்

பார்த்திருக்கினம்? அவர் உயிரோடை இருக்கேக்கை நீ செய்ய வேண்டியதெல்லாத்தையும் நிறைவாய் செய்திட்டாய்...' என்று, வாத்தியார் மருமகளின் கண்ணீரைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்தார் மரகதம் மாமி.

றொக்வூட் (Rockwood) மயானம் நோக்கி ஊர்வலம் புறப்பட்டது.

சின்னத்துரை வாத்தியாரின் பூதவுடல் செல்லும் ஊர்வலம் அது.

கொழும்பிலே பிரபல கண் டாக்டராக விளங்கிய பொன்னம்பலம் தம்பதிகளுடைய மருமகன் – டாக்டர் பேரம்பலம் – சிட்னியிலே சம்பாதித்துள்ள செல்வாக்கினைப் பறைசாற்றும் ஊர்கோலமாக அது மயானத்தை நோக்கிச் செல்கிறது.

றொக்வூட் மயானத்திலே இரங்கலுரைகள் துவங்கின.

பிரேதப் பெட்டியிலே மட்டும் வாத்தியாரின் முக தரிசனம் பெற்ற கொழும்பு மணியமும் பேசினார்.

'இந்தப் படைபோதுமா அல்லது இன்னும் படை வேணுமா?' என்று கேட்பது போல ஊர்வலத்தின் சிறப்பையும் மரண வீட்டின் பிரமாண்டத்தையும் குறிப்பிட்டார். சிட்னித் தமிழர் கலாசார சங்கத்தின் அடுத்த தேர்தலிலே சம்பந்தியம்மாவின் வெற்றிக்கு இது முதல் படியாய் அமைகிறது என்று அவர் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், அவரது உரையூடே அது மறைபொருளாய்த் தொனித்தது.

நினைவு மலரின் பிரதிகளை சம்பந்தியம்மா ஒவ்வொருக்கும் அக்கறையுடன் விநியோகித்துக் கொண்டிருந்தாள்.

சின்னத்துரை வாத்தியாரின் பெருமைகளைப் பேசுவதற்கு இவர்கள் யார்? இரங்கலுரை நிகழ்த்தும் சம்பிரதாயங்களுக்குள் சிக்குண்டு நான் என் ஆன்மாவை இழக்கத் தயாராக இல்லை.

பிரேதப்பெட்டியின் அருகே ஊதுவத்திகள் எரிந்து சாம்பல் உதிர்த்துக் கொண்டிருந்தன. சில தணல் கங்குள் அங்குள்ள 'கார்பெற்'றில் (Carpet) விழப்பார்த்தன.

பிரேதப்பெட்டியுள்ளே, வாத்தியார் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த ஒற்றை வாழைப்பழத்திலே, எரியும் அந்த ஊதுவத்திக் குச்சிகளை சொருகி, கிழே இறங்கினேன்.

வாத்தியார் மூலம்தான் நான் பாரதி பாடல்களைக் கற்றவன் என்பது அப்பொழுது ஏனோ என் நினைவுக்கு வந்தது...!

சிட்னியில் காலமான சின்னத்துரை வாத்தியாரின் நினைவுகள் மெல்லக் கனவாய் பழங்கதையாய் போவதை நான் விரும்பவில்லை. அவர் கற்றுத்தந்த தமிழையும், இலக்கிய ஆர்வத்தையும் துணைப்பற்றி, அவர் சமர்ப்பணமாகவே இக்கதையை எழுதினேன்.

# அடிவானம்

## 1

அன்று அரசு விடுமுறை.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இரண்டு துருவங்களாக வாழ்ந்த கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் மீண்டும் ஒன்றிணைந்த நாள்.

அதை நினைவு கூர அன்று பொதுவிடுமுறை.

விடுமுறை என்றால் சோம்பலை அடைகாத்துப் பொழுதைப் போக்குவது தான் வீரசிங்கத்தின் விருப்பம்.

அவருடைய விருப்பத்தைக் கடைக்குட்டி மகன் உடைத்தெறிந்தான். சமையலறையில் அவன் 'பிரளி' செய்து கொண்டிருந்தான்.

"என்னப்பா... இவனை உந்த Parkக்கு கூட்டிக்கொண்டு போய் வாருங்கோவன். அவனுக்குக் கொஞ்சம் பிராக்காக இருக்கும்.'

சமையலறை அலுமாரிக்குள் இருந்த சாமான்களை இழுத்துப்போட்டு விளையாடிக் கொண்டிருந்த மகனின் காதைத் திருகியவாறே மனைவி சத்தம் போட்டாள்.

மனைவியின் சத்தத்தை மகனின் அழுகுரல் அமுக்கியது. பிரளயத்தின் ஓசை கட்டவிழ்க்கப்பட்டதைப்போல...

இனி சோம்பலாவது? அதனை அடைகாத்தலாவது?

மகனைத் 'தாஜா' செய்தவாறு வீதியில் இறங்கினார்.

பேர்லின் (Berlin) நகரில், Turm வீதிக்கும் Altmoabit சாலைக்கும் இடையே குழந்தைகள் விளையாடுவதற்காகப் பூங்கா ஒன்றுண்டு. பூங்காவையொட்டி என்றுமே இலை உதிர்க்காத 'பைன்' மரங்களும், குளிர் காலத்தில் இலையை உதிர்த்து நிர்வாணமாய் நிற்கும் 'லார்ஷ' 'பப்ப' போன்ற மரங்களும் நேர்த்தியாக நடப்பட்டிருந்தன. இயந்திரகதியில் இயங்கும் ஜேர்மன் பெருநகரங்களில் மாசுபடும் சூழலைச் சமப்படுத்த இப்படியான 'Man Made' ஊடுகாடுகள் அமைக்கப்படுவதுண்டு.

பூங்காவிலே மக்கள் நடமாட்டத்துக்குக் குறைச்சல் இல்லை. பகல் நேரங்களில் பெரும்பாலும் கிழவிகள் கூட்டத்தின் அரட்டை அரங்கமாக இது பயன்படும். ஊடுகாட்டின் விளக்குக் கம்பங்களின் கீழே அமைக்கப்பட்டு இருக்கும் இருக்கைகள் இதற்குத் தோதானவை. யுத்தத்திலே அதிக ஆண்கள் இறந்துவிட, இந்தக் கிழவிகள் தனிமையில் எதிர்நீச்சலடித்து வாழ்வில் வெற்றி சாதித்தவர்கள்.

மாலையானதும் 'Penners' என அழைக்கப்படும் நித்திய குடிகாரர்கள், போதை மயக்கத்திலே இவ்விருக்கைகளை ஆக்கிரமித்துக் கொள்வார்கள்.

ஜேர்மனியில் பேப்பர்கடை, காய்கறிக்கடை, சாப்பாட்டுக் கடை என எல்லாக் கடைகளிலும் மதுப்போத்தல்கள் 'மினிக் குவாட்டர்' சைஸ் வரை வெவ்வேறு வடிவங்களில் விற்பனைக்குண்டு. நித்திய குடிகாரர் பைகளிலே, எப்போதும் இத்தகைய மினிக்குவாட்டர் போத்தல்கள் கைவசம் இருக்கும். போதை தெளியும் போதெல்லாம் இவற்றைக் குடித்துவிட்டு மின்கம்பங்களின் கீழேயுள்ள இருக்கைகளிலே சுருண்டு படுத்துக்கொள்வார்கள். இவர்கள் தமது உறவைத் தொலைத்தவர்கள், மதுபோதையிலே வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக்கொண்டிருப்பவர்கள்.

பூங்காவிலுள்ள மணல் கிடங்கொன்றிலே, மகன் விளையாடிக் கொண்டிருந்தான். காலாறச் சிறிது தூரம் ஊடுகாட்டினூடே நடந்தார் வீரசிங்கம், நீண்டு வளர்ந்த பைன் மரங்களுக்கு மத்தியில் மின் கம்பத்தையொட்டிப் போடப்பட்ட இருக்கையொன்றில் ஒரு உருவம் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தது. பார்த்த மாத்திரத்தில் அவன் 'நித்திய குடிகாரன்' வகையைச் சேர்ந்தவன் அல்ல, என்பதை ஊகித்துக் கொண்டார். சட்டை கசங்கி ஊத்தையாக இருந்தது. இருக்கையைச் சுற்றி காலியான 'வொட்கா' மினிக்குவார்ட்டர் போத்தல்கள் சிதறிக்கிடந்தன.

வீரசிங்கம் உற்றுப்பார்த்தார்.

றொனால்ட்...!

வீரசிங்கத்தால் நம்பமுடியவில்லை.

'இவன் எப்படி...? இங்கே...? இந்தக் கோலத்தில்...?' என்று பல வினாக்கள் ஏக காலத்தில் எழுந்தன.

அருகில் சென்றார். சந்தேகமே இல்லை.

றொனால்ட் சுல்ஸ் தான்!

ஒரு காலத்தில் அவன், வீரசிங்கத்தின் ஆத்ம நண்பன்.

பத்து ஆண்டுகள் அவன் ஒரு திசையிலும், இவர் வேறு திசையிலும் பயணித்துவிட்டார்கள். இன்று திடீரென இந்தக் கோலத்தில் சந்திப்பு நிகழ்கின்றது. இவன் எப்படி இந்தக் கோலத்துக்கு வந்தான்?

திரும்பிப் பார்த்தார்.

மகன் சுவாரஸ்யமாக மணற்கிடங்கிலே தன் விளையாட்டில் ஈடுபட்டிருந்தது தெரிந்தது.

அவனுடைய தோள்களை இரண்டு தடவைகள் உலுக்கி, 'றொனால்ட் என்னைத் தெரிகிறதா...?' என்று கேட்டார்.

தலையை நிமிர்த்தினான். கண்களைச் சுருக்கி உற்றுப்பார்த்தான்.

'அங்கிள் வீரா' என்றான்.

குடிவெறியிலும் வீரசிங்கத்தைப் பார்த்த மகிழ்ச்சி அவன் முகத்திலே பரவியது. அவனது குழந்தைகள் அவரை 'அங்கிள் வீரா' என்றே அழைப்பார்கள். மரியாதையின் நிமிர்த்தம் அவனும் அவனது மனைவியும் அவ்வாறே அழைத்துப் பழகிவிட்டார்கள்.

'என்ன றோனால்ட்?... இது என்ன கோலம்...!' என்று வார்த்தைகளை விக்கினார் வீரசிங்கம்.

'உன்னால் இதை நம்பமுடியவில்லை, இல்லையா? இதுதான் ஒன்றிணைந்த ஜேர்மனி பெற்றுத்தந்த பரிசு...' எனக் கூறிச் சுரத்தின்றிச் சிரித்தான்.

'நீ இப்போது எங்கே வசிக்கிறாய்? உனது மனைவி சுகமாக இருக்கிறாளா? உனது மகன்கள் இருவரும் வளர்ந்து பெரியவர்களாய் இருப்பார்களே, அவர்களெல்லாம் எங்கே...?' என்று நிலைமைகளை மறந்து உணர்ச்சிகளின் உந்துதலினால் கேள்விகளை அடுக்கினார்.

'கேள்விகள் கேட்காதே நண்பனே... உன் கேள்விகளுக்கு பதில் சொல்லக்கூடிய நிலையிலும் நானில்லை. உன்னிடம் இருபது 'டொயிஸ் மார்க்' பணமிருந்தால் தந்துவிட்டுப்போ... நான் குடிக்க வேண்டும்... போதை முறிவதற்கிடையில் குடிக்க வேண்டும்...!' உதவி கேட்டபொழுதுகூட அவனுடைய கம்பீரம் குறையவில்லை.

அவனைக் கையுடன் வீட்டுக்கு அழைத்துச் செல்லவே விரும்பினார். இந்த நிலையிலே அவனை அழைப்பது சரியா? வீரசிங்கத்தின் மனம் குழம்பியது.

'என் வீடு அருகில்தான் இருக்கிறது...' என்று இழுத்தார்.

'அது இருக்கட்டும். பணம் உண்டா இல்லையா...?'

வீரசிங்கம் நிதானமடைந்தார். ஐம்பது டொயிஸ் மார்க் (DM) பணத்தை அவன் கைகளிலே திணித்தார்.

'அதிகம் குடிக்காதே... உன்னை நான் மீண்டும் சந்திக்க விரும்புகிறேன் றொனாஸ்ட்' என அன்புடன் சொன்னார்.

'மேற்கு பேர்லின் பல்கலைக்கழகத்திலே நீ வேலை செய்வதாகக் கூறியது ஞாபகம் இருக்கிறது. நாளை அங்கு வந்து உன்னைச் சந்திப்பேன். நிச்சயம் வருவேன். இப்பொழுது என்னைத் தொந்தரவு செய்யாதே...' என்றவாறு பணத்தைத் தனது பொக்கற்றிலே திணித்தபடி எழுந்தான்.

'மறந்துவிடாதே, நாளை முழுவதும் எனது அலுவலக அறையிலேயே இருப்பேன். வந்துசேர்...'

வீரசிங்கம் பேசியதை றொனால்ட் செவி மடுத்திருப்பானோ என்னவோ, அங்கிருந்து நகர்ந்து அருகில் உள்ள கடையொன்றுக்கு விரைந்து கொண்டிருந்தான். அவனுக்கு இப்பொழுது உடனடித் தேவை, மது மட்டுமே!

## 2

சோசலிஷ ஆட்சி வியாபித்திருந்த காலத்தில் கிழக்கு ஜேர்மனியில் பிறந்து வளர்ந்தவன் றொனால்ட் சுல்ஸ். கார்ல்மார்க்ஸ், லெனின் வழிவந்த சோசலிஷ தத்துவங்களை ஏற்ற சமுதாயத்தின் உண்மையான பிரதிநிதியாகவே அவன் வளர்ந்தான். பல்கலைக்கழக புகுமுக வகுப்பிலே, மாநிலத்திலேயே முதலாவது மாணவனாகத் தேறி Dresden பல்கலைக்கழகத்திற்கு றோனால்ட் வந்திருந்த போதுதான் வீரசிங்கம் முதன்முதலாக அவனைச் சந்தித்தார்.

ஒரு காலத்தில் ஸ்ரீமாவோ ஆட்சியின்கீழ் இலங்கை தன்னை சோசலிஷ நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. இது சோசலிஷ நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பினை இலங்கை மாணவர்களுக்கு

பெற்றுத்தந்தது. வீரசிங்கமும் புலமைப்பரிசில் ஒன்றினைப் பெற்று Dresden பல்கலைக்கழகம் சென்றார்.

முதலாளித்துவ நாடுகளுக்கும் கொம்மியூனிஸ்ட் நாடுகளுக்கும் இடையில் 'பனிப்போர்' நிகழ்ந்து கொண்டிருந்த காலம் அது. இரு முகாம்களும் கண்களுக்குத் தெரியாத இரும்புத்திரையால் பிரிக்கப்பட்டிருந்தன. இதனால் மேற்குலக நாட்டின் புதினங்களை அறிவதற்கும் அந்நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழகுவதற்கான வாய்ப்புக்கள் பெரும்பாலும் சோசலிஷ நாடுகளில் மறுக்கப்பட்டன.

ஆனாலும். றொனால்ட் முற்றிலும் மாறுபட்டவனாக காணப்பட்டான். புதியனவற்றை அறிவதில் மிகுந்த ஆர்வம் அவனுக்கிருந்தது. ஜேர்மன் அவனது தாய்மொழி. சோசலிஷ நாடொன்றில் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய 'ருஷ்ய' மொழியுடன், ஆங்கிலத்தையும் விரும்பிக் கற்று புலமை பெற்றிருந்தான்.

வீரசிங்கமும் றொனால்டும் 'வனவியல்' துறையிலே சேர்ந்திருந்தார்கள். அது சற்றே கடினமான கற்கை நெறி, வனவியல் பிரிவு, செய்முறை வகுப்புகளுக்குத் தோதாகக் காட்டை மருவிய கிராமம் ஒன்றிலேயே அமைக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்கள் பல்கலைக்கழக விடுதியிலேயே தங்க நேர்ந்தது. இரு மாணவர்களுக்கு ஒரு அறை.

வீரசிங்கத்திடம் மேற்குலகில் பிரசுரமான பல அரிய நூல்கள் இருந்தன. அவற்றை வாசிக்க றொனால்ட் அதீத ஆர்வம் காட்டினான். இதனால் றொனால்ட், வீரசிங்கத்துடன் விடுதி அறையொன்றைப் பகிர்ந்து கொண்டான். நூல்களிலே உள்ள பரஸ்பர ஈடுபாட்டினால் இருவரும் விரைவில் நெருங்கிய நண்பர்களானார்கள்.

படிப்பில் மட்டுமல்லாது றொனால்ட் வாழ்விலும் சிறிது வேகத்தைக் காட்டிவிட்டான். பதினோராம் வகுப்பு படிக்கும் போது இவன் மோனிக்காவைச் சந்தித்துக் காதலித்தானாம்.

இங்கெல்லாம் காதல் என்பது குடும்ப வாழ்க்கைக்கான வெள்ளோட்டந்தான். பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் றொனால்ட் படிக்கும்போதே மோனிக்கா வயிற்றில் குழந்தை உருவாகிவிட்டது. மாணவிகள் கருத்தரித்தலும் அதனைச் சிதைத்தலும் மேற்கு நாடுகளிலே பெரிதாகப் பாராட்டப் படும் பாவகாரியமல்ல. இருந்தாலும், றொனால்ட் தனது ஆண்மைக் கடமையை ஏற்கவே விரும்பினான். விடலைப் பருவத்துக் கனவுக் காதலின் அவசர விளைவல்ல அது என்பதிலே உறுதியாக இருந்தான்.

மோனிக்காவை அழகி என்பதிலும், பார்க்கப் பேரழகி என்பதே பொருத்தமானது. இரண்டு குழந்தைகளின் பின்பும் அவள் குமரிபோலவே காணப்பட்டாள்.

மோனிக்கா பத்தாம் வகுப்பை முடித்திருந்ததினால், முதல் குழந்தை பிறந்ததும் இரண்டாண்டு தாதிப் பயிற்சியை முடித்து தாதியானாள். தாதியானதும் மீண்டும் மோனிக்கா கருத்தரித்தாள். இரண்டு ஆண் குழந்தைகளுடன் மோனிக்கா அவனுடன் வாழவந்த பொழுது றொனால்ட் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான்.

பல்கலைக்கழக விடுதிக்கு அருகே வீடொன்றை வாடகைக்கு எடுத்து றொனால்ட் குடும்பத்துடன் வாழத் தலைப்பட்டான். மூத்த பையன் ‘வீரா அங்கிள்’ என்று அழைக்கத் துவங்கியதனால் றொனால்ட் குடும்பத்திலே, வீரசிங்கத்தின் பெயர் ‘வீரா அங்கிளா’க மாறி அக்குடும்பத்தின் உற்ற நண்பனாய் உள்வீட்டுப் பிள்ளையானார்.

ஆறு ஆண்டுகள் எப்படி ஓடியதென்று நிதானிக்க முடியவில்லை. ஆறாண்டு கால பட்டப்படிப்பினை முடித்த பின்னர் வீரசிங்கம் எல்லையைக் கடந்து மேற்கு பேர்லின் வந்துவிட்டார்.

றொனால்ட் கிழக்கு ஜேர்மனியில் உதவி வனப் பாதுகாவலர் பதவியைப் பெற்றுத் தன் குடும்பத்துடன் வாழ்ந்தான்.

மேற்கும் கிழக்கும் தம்மை விரோதிகளாகப் பாவித்து ஆளப்பட்டதினால், அவர்களால் நட்பையும் தொடர்பையும் பாராட்டி வளர்ப்பது இலகுவாக இருக்கவில்லை.

வீரசிங்கமும், குடும்பம் குழந்தை என வாழத் துவங்க, மேலதிக பொறுப்புக்களும் வந்து சேர்ந்ததினால் நண்பர்களிடையே இருந்த கொஞ்ச நஞ்ச தொடர்பும் விட்டுப் போயிற்று.

இப்பொழுது இந்தக் கோலத்தில் றொனால்ட்டைப் பூங்காவில் பார்த்ததும் இனந்தெரியாத துக்கம் அவரை வளைத்துக் கொண்டது.

## 3

**எ**ண்பத்து மூன்றாமாண்டு இனக்கலவரத்தின்பின் தமிழர்கள் ஜேர்மனிக்கு அதிகளவில் அகதிகளாக வரத் தொடங்கினார்கள். மேற்கு ஜேர்மனிக்குள் விசா இன்றி நுழைவதற்கு இவர்கள் கிழக்கு – மேற்கு பேர்லின் எல்லையையே நுழைவிடமாக பாவித்துக் கொண்டார்கள். பிரிந்த இரு நாடுகளின் பூகோள அமைப்பும், பேர்லின் நகரின் அரச வீதிகளும் கிழக்கு பேர்லின் விமான நிலையத்தில் இருந்து நேரடியாகவே றெயின்மூலம் மேற்கு பேர்லினுக்குள் நுழைவதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது.

மேற்கு பேர்லின் நகரம் கிழக்கு ஜேர்மனிக்குள் இருந்தாலும், அது மேற்கு ஜேர்மனியின் ஆளுகைக்குட்பட்டது. எனவே இங்கு வந்து சேர்ந்துவிட்டால் மேற்கு ஜேர்மனிக்கான அகதி அந்தஸ்து கோரும் நடவடிக்கைகளைத் துவங்கலாம்.

தமிழ் அகதிகள் தமது அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களைப் பெரும்பாலும் தமிழிலேயே எழுதிக் கொடுத்தனர். இந்நிலையில் ஜேர்மன் மொழியும் தமிழ் மொழியும் நன்கறிந்த ஒருவரின் உதவி அகதிகள் பற்றிய

விசாரணை நடத்துவோருக்கு உடனடியாகத் தேவைப்பட்டது. பல்கலைக்கழகத்திலே பணிபுரிந்த வீரசிங்கத்தின் சேவையை மேற்கு ஜேர்மன் அரசு பகுதி நேர அடிப்படையில் பெற்றுக்கொண்டது. இப்பணியை வீரசிங்கம் தமது தமிழ் உணர்வின் வடிகாலாய் சிரத்தையுடன் மேற்கொண்டார். தமிழ் அகதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்ட போதெல்லாம் உரிமைக்குரல் எழுப்பிய வீரசிங்கத்தை தமிழ் அகதிகள் அங்கு பெரிதும் மதித்தார்கள்.

அன்றைய தினம் எல்லையைக் கடக்கும் போது தமிழ் அகதிகள் சிலர் மேற்கு ஜேர்மன் அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டார்கள். அவர்களை இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்திலே ஆஜர் செய்ய வேண்டுமென்பது விதி. அவர்கள் சார்பான விசாரணைகளை மொழிபெயர்த்து முடித்துக் கொடுக்க இரவு பத்து மணியாகிவிட்டது.

ஓய்வின்றி வேலை செய்ததினால் அசதி, சுரங்க வண்டியில் பயணித்தபொழுது வீரசிங்கம் அசந்து தூங்கிவிட்டார்.

'அண்ணை... உங்களோடை ஒருக்கா கதைக்கலாமே...?' – அருகில் கேட்ட தமிழ்க்குரல் அவரை உசுப்பியது.

கண் விழித்தபொழுது எதிரில் தவமணி. சின்னராசாவின் மனைவி. வேலைக் களைப்புடன் அவள் வந்து கொண்டிருக்கிறாள் என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே வீரசிங்கம் மட்டிட்டுக் கொண்டார்.

சின்னராசா பேர்லினுக்கு வந்த புதிதில், மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் அகதி அந்தஸ்துக்கான விசாரணைக்கு வந்திருந்தான். அந்த விசாரணையில் வீரசிங்கமே மொழிபெயர்ப்பாளர். அப்பொழுது அவர் சின்னராசாவின் குடும்பப் பின்னணி முழுவதையும் அறிந்து கொண்டார்.

சின்னராசா கொழும்பிலுள்ள மொத்த வியாபார நிலையமொன்றில் வேலைபார்த்தவன். சுற்றி வளைத்துப் பார்த்தால் முதலாளி தூரத்து உறவு. அவன் விடுமுறைக்கு ஊருக்கு வரும்பொழுதெல்லாம் ஒரு குட்டி முதலாளி போன்ற எடுப்புகளுடனே வலம் வருவான்.

ஆயுர்வேத வைத்தியத்தினைப் பரம்பரையாகக் கற்றிருந்தாள் தவமணி. கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒன்றுக்குள் ஒன்றும்! இனிதே திருமணம் முடிந்து இரண்டு பையன்களும் பிறந்து விட்டார்கள்.

இந்தக் கட்டத்திலேதான் எண்பத்திமூன்றாமாண்டு இனக் கலவரம் கொழும்பை உலுக்கியது. சின்னராசா வேலை செய்த வர்த்தக நிறுவனம் தரைமட்டமாக்கப்பட்டது. ஊருக்குச் சென்ற சின்னராசா கடும் முயற்சிகளின் பின்னர் எப்படியோ குடும்பத்துடன் பேர்லின் வந்து சேர்ந்துவிட்டான்.

விசாரணையின் போது ஏற்பட்ட அறிமுகம் பின்னர் வளர்ந்தது. மருத்துவ உதவி பெற, சமூக சேவைப் பணம் பெற என உதவிகேட்டு வீரசிங்கம் வீட்டிற்கு சின்னராசா குடும்பம் வந்து போகத் துவங்கியது.

தவமணி இப்போது வீரசிங்கத்தின் முன் நின்றுகொண்டு இருக்கிறாள். காலியாக இருந்த எதிர் ஆசனத்தை அவர் கை காட்டவே தவமணி அதில் அமர்ந்தாள். மௌனம் நிலவியது.

"சொல்லுங்கோ... என்ன விஷயம், வேலையாலை வாறியள் போலை...' என்று வீரசிங்கம் சகஜ நிலையை ஏற்படுத்த முயன்றார்.

'ஓமண்ணை, இத்தாலி றெஸ்றோரன்ற் ஒண்டிலை வேலை செய்யிறன். குசினி வேலைதான். நாள் முழுக்கப் பாத்திரங்கள் எண்டும் கோப்பைகள் எண்டும் கழுவிக் கழுவி தோள் மூட்டெல்லாம் இத்துப் போச்சுது... சொல்லும்போதே தவமணியின் கண்கள் பனிப்பதை அவர் அவதானித்தார்.

'அடுத்த ஸ்ரேசனிலை நான் இறங்கவேணும்...'

'தெரியும் அண்ணனை...!'

ஸ்ரேசன் வரவே வீரசிங்கம் இறங்கினார். சற்றும் எதிர்பாராதவிதமாக தவமணியும் இறங்கினாள். ஏதோ சொல்ல அவள் விக்கிக் கொண்டிருக்கிறாள் என்பது அவருக்கு விளங்கிவிட்டது.

'பயப்படாமல் சொல்லுங்கோ... ஏதாவது உதவியென்றால் நான் செய்யக்கூடியதை செய்யிறன்' என்று அவளை மீண்டும் சகஜ நிலைக்கு கொண்டுவர முயன்றார்.

'அண்ணை... என்ரை பிள்ளையள் இப்ப பசியோடை கிடக்குங்கள். இனித்தான் போய் ஏதாவது சமைச்சு அதுகளுக்குக் கொடுக்க வேணும்... என்னாலை இதுக்கு மேலை தாங்கேலாது. உங்ககிட்டை சொல்லி இதுக்கு ஒரு முடிவு கட்ட வேணுமெண்டு கனகாலம் யோசிச்சனான்...' என்று தவமணி அழத் தொடங்கினாள். அவள் கொட்டிய கண்ணீர் அவரைக் கரைத்தது.

'என்ன நடந்தது தங்கச்சி...? சின்னராசா எங்கை...? அழாதேயுங்கோ...' என்றார் வீரசிங்கம்.

விம்மி அழுதபடி குளிருக்குப் போட்டிருக்கும் 'ஓவர் கோட்டை,' தவமணி மெல்லக் கழற்றினாள்.' அடித்தழும்புகளும் சூடுவைத்த காயங்களும் கழுத்திலும் கைகளிலும் கோரமாகத் தெரிந்தன.

வீரசிங்கத்தின் புருவங்கள் உயர்ந்தன.

'அண்ணை... இதெல்லாம் வெளியிலை தெரியிற காயங்கள், வேலைக்கும் போகாமல் 'சோசல்லை' வாற 'டோல்' பணம் எல்லாத்தையும் குடிச்சு முடிச்சுப் போட்டு எனக்கும் பிள்ளையளுக்கும் அடியும் உதையும்தான். பிள்ளையள் பட்டினி கிடக்கிறதைப் பார்க்கேலாமல்தான் இத்தாலிக்காறன்ரை சாப்பாட்டுக் கடையிலை இந்த

நேரத்திலை வேலை செய்யிறன். இனி வீட்டை போய் பார்த்தால் வயித்தைப் பத்தி எரியும். பிள்ளையன் பசியிலை சுருண்டு கிடக்கும். எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கும். இவர் நிறைவெறியிலை இருந்து சண்டித்தனம் பேசுவார்... இனிச் சமைச்சு முடிஞ்சு சாப்பாடு குடுத்தாலும் நிம்மதியாய்ப் படுக்கவும் விடமாட்டுது மனுஷன். இந்தக் கிலிசகேடுகளை வாயலை சொல்லவும் ஏலாது...'

'நான் ஒருக்கா சின்னராசாவோடை கதைச்சுப் பார்க்கட்டுமே...' என்று வீரசிங்கம் சொல்லத் தொடங்க, அவள் பதைபதைப்புடன் இடைமறித்தாள்.

'கேட்டுப் போடாதேயுங்கோ அண்ணை. ஏனடி சொன்னீ எண்டு அந்தாள் என்னை அடிச்சுக் கொண்டு போடும். ராத்திரி எனக்கு அடிச்ச அகோரத்தைப் பார்க்கமாட்டாமல் என்ரை சின்னப் பொடியன் தகப்பனை வெட்டக்கத்தியை தூக்கியிருக்கிறான். அந்தப் பாலனுக்கே இந்தளவு வெறுப்பெண்டால் என்னண்டண்ணை இந்தாளோடை இந்தப் பிள்ளையளை வைச்சுக்கொண்டு காலம் தள்ளுறது...?

'சின்னராசாவோடை கதைக்கவும் வேண்டாம் எண்ணிறியள்... அப்ப நான் என்ன செய்ய வேணும்? சொல்லுங்கோ...'

'எனக்கும் பிள்ளையளுக்கும் சமூக சேவை இலாகா விலை சொல்லி இலங்கைக்குத் திரும்பிப் போக 'ரிக்கற்' எடுத்துத் தாங்கோ... வெளிநாடு எண்டு ஓடி வந்து சீரழிஞ்சது போதும். உங்களைத்தான் நம்பியிருக்கிறன். இந்த நரக வேதனையிலை இருக்கிறதிலும் பார்க்க ஊரிலை போய் என்ரை ஆயுர்வேத வைத்தியம் பார்த்தெண்டாலும் என்ரை குஞ்சுகளுக்கு நான் கஞ்சி ஊத்துவன்...'

தவமணியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இருப்பினும் இது குடும்பப் பிரச்சனை. 'எடுத்தோம் கவிழ்த்தோம்' எனச் செயற்பட முடியாது என்பதையும் நிதானித்தார்.

'எதுக்கும் எனக்கு இரண்டு மூன்று நாள் அவகாசம் தாருங்கோ... முடிஞ்சதை செய்யிறன்...' என்று நடக்கத் துவங்கினார்.

'என்னைக் கை விட்டிடாதேயுங்கோ அண்ணை...' என்று அவள் கெஞ்சியது அவரது நெஞ்சக் குகையிலே நீண்டநேரமாக எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

## 4

றொனால்ட் வாக்குத் தவறவில்லை. சொன்ன பிரகாரம் வீரசிங்கத்தைக் காணப் பல்கலைக்கழகம் வந்திருந்தான். முகச்சவரம் செய்து, அன்று ஒழுங்காக உடையணிந்திருந்தான்.

'வீரா... எப்படியிருக்கிறாய்...? நெடு நாளைக்குப் பிறகு சந்திக்கிறோம்' என்றவாறே கட்டித் தழுவினான்.

'நான் நல்லாய்தான் இருக்கிறேன். உனக்கென்ன நடந்தது...? எப்பொழுது தொடக்கம் இந்த மினிப் போத்தல் மது அருந்தும் பழக்கம்...? மோனிக்கா மது விடயத்தில் கண்டிப்பானவளல்லவா...?' எனக் கேள்விகளை அடுக்கினார் வீரசிங்கம்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த றொனால்ட், நீண்ட தொரு பெருமூச்சை வெளியே விட்டவாறே, 'மோனிக்காவும் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள். இந்நாட்டின் வரைவிலக்கணத்தின்படி இப்போது நான் 'வீடு வாசலற்ற தெருப்பொறுக்கி' என்றான் விரக்தியுடன்.

வீரசிங்கத்துக்கு தலை விறுவிறுத்தது. இருபது வருட மகிழ்ச்சிகரமான தாம்பத்தியம். ஜேர்மன் மக்களிடம் வழமையாக இல்லாத கணவன் மனைவி ஒற்றுமை அவர்களது. எப்படிப் பிரிந்தது அவர்களுடைய குடும்பம்...?

றொனால்டின் மனைவி ஆடம்பரத்தை விரும்புவள் கிழக்கு – மேற்கு ஜேர்மனிகள் இணைந்ததும் மேற்கின் நாகரிகமும் ஆடம்பரப் பொருட்களும் கிழக்கு ஜேர்மனிக்குள் விரைவாகவும் தாராளமாகவும் நுழைந்தன. சோசலிஷ அமைப்பின்கீழ் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் வாழ்ந்த றொனால்ட் குடும்பமும் புதிய அலையினால் எற்றுண்டு விரைவாகவே பணம் சேர்க்கும் முதலாளித்துவ போக்குக்கு அடிபணிந்தது.

வன இலாகாவில் செய்த வேலையை விட்டு விட்டு, கட்டிடங்களுக்கான மரவியாபாரத்தில் இறங்கினான் றொனால்ட். சோசலிஷ அமைப்பின்கீழ் வளர்ந்த அவனால் முதலாளித்துவத்தின் லாப நஷ்டக் கணக்குகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

‘அடுத்த வருடம் லாபம் வந்துவிடும்’ என்கிற நம்பிக்கையுடன் ஐந்து ஆண்டுகளாகத் தனது புதிய வியாபாரத்தினை முன்னுக்குக் கொண்டுவரப் பெரிதும் முயன்றான். முடியவில்லை. வியாபாரம் தொடங்கிய ஐந்து ஆண்டுகளுக்குள் நஷ்டப்பட்டுக் குடியிருந்த வீடு, கார் மற்றும் உடைமை எல்லாவற்றையும் வங்கிக் கடனுக்காக இழந்து குடும்பம் நடுத்தெருவுக்கு வந்தது.

மோனிக்காவினால் இந்தப் பாதாள வீழ்ச்சினைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பதினைந்து வருடங்களுக்கு மேலாக சோசலிஷ அமைப்பின்கீழ், விண்ணனாகவும் வீரனாகவும் விளங்கிய அதே றோனால்ட் முதலாளித்துவ அமைப்பின் கீழ் கையாலாகதவனாகவும் ஏமாளியாகவும் மோனிக்காவுக்குத் தோற்றம் அளிக்கலானான். வளர்ந்த மகன்கள் இருவரும் காதலிகள் என்றும், ‘சுதந்திர வாழ்க்கை’ என்றும் தனித்து வாழத் துவங்க மோனிக்காவும் வீடொன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு றொனால்ட்டைப் பிரிந்து சென்றுவிட்டாள்.

இந்தப் பிரிவும், சோகமும், ஏமாற்றங்களும்தான் றொனால்ட்டை நித்திய குடிகாரனாய் மாற்றியிருக்க வேண்டும்.

வீரசிங்கம் அவனைப் பல்கலைக்கழக கன்ரீனுக்கு அழைத்துச் சென்றார். சாப்பாட்டு மேசையிலே அவர்கள் உரையாடல் தொடர்ந்தது.

'மோனிக்கா இப்பொழுது புதிய காதலன் யாருடனாவது வாழ்கிறாளா, என வீரசிங்கம் கேட்டார்.

தனது பொக்கற்றிலிருந்து றொனால்ட் சிறிய டயறியொன்றை எடுத்தான். அதிலே இருந்த தொலைபேசி எண் ஒன்றினை சிறிய காகிதத்தில் குறித்து வீரசிங்கத்துக்கு கொடுத்தவாறே, எனக்குத் தெரிந்தவரை அவள் இன்னமும் தனியாகத்தான் இருக்கிறாள். செஞ்சிலுவைச் சங்க விடுதியொன்றின் அதிகாரியாக இப்பொழுது வேலை செய்வதாக என் மகன் ஒருமுறை சொன்னான். அவன் தான் இந்தத் தொலைபேசி எண்ணையும் எனக்குத் தந்தான்... நண்பனே, முடிந்தால் மோனிக்காவுடன் ஒருதடவை பேசிப்பார். என் இதயம் அவளுக்காக எப்பொழுதும் திறந்து தான் இருக்கிறது' என்றான் பரிதாபமாக.

'நிச்சயமாக நான் மோனிக்காவுடன் பேசுவேன். நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வதை என் மனம் மிகவும் விரும்புகிறது' என்றார் வீரசிங்கம்.

## 5

அதிகாலையில் அழைப்பு மணி அலறியது...

'யாராக இருக்கும்? இந்த நேரத்தில்... என்கிற யோசனையுடன் வீரசிங்கம் கதவைத் திறந்தார்.

இரண்டு மகன்களும் புடைசூழ, சோகத்திலே புதைத்தெடுத்த முகங்கள் தரிசனமாக தவமணி சூட்கேசுடன் நின்றிருந்தாள். இரவு முழுவதும் அழுது முகம் வீங்கிக்

கிடந்தது. முகம் வேறு விதமாகவும் வீங்கியிருக்க வேண்டும். அவளுடைய உதடுகள் வெடித்து இரத்தம் கன்றியிருந்த நிலையில் அவளாலே சரியாகப் பேச முடியவில்லை.

'உள்ளுக்கு வாருங்கோ...' என்று கதவை அகலத் திறந்தார்.

தவமணி சூட்கேஸைக் குனிந்து தூக்கிய பொழுது தலையிலே திட்டுத்திட்டாக வீக்கங்கள் தெரிந்தன. வலது காதையொட்டிய பிடரியின் கீழ்ப்பக்கத்திலே புதிதான தீக்காயம் ஒன்று பளிச்சிட்டது.

அன்று இரவு வீட்டிலே என்ன நடந்திருக்கும் என்று வீரசிங்கத்தால் ஊகிக்க முடிந்தது. வந்த ஆத்திரத்தில் 'இவனுமொரு மனிஷனே...?' எனப் பல்லை நெருமியவாறே தொலைபேசி அருகில் சென்று எண்களை அழுத்தத் துவங்கினர். நாலு எண்களை அழுத்தியதும் வீரசிங்கத்தின் மனைவி அங்கு வந்தாள். மனைவியைக் கண்டதும் நிதானம் அடைந்தவராக, தொடர்ந்து எண்களை அழுத்துவதை நிறுத்தி நிமிர்ந்து பார்த்தார்.

'வந்ததுகளை இருக்கச் சொல்லி ஆறுதல் சொல்லாமல் இப்ப என்னை செய்யிறியள்?' எனக் கேட்ட மனைவி, 'முதலிலை தவமணியும் பிள்ளையளும் முகம் கழுவிக் கோப்பியைக் குடிக்கட்டும். பிறகு கதைப்பம்' என்று கூறிச் சகஜ நிலையை ஏற்படுத்தினாள்.

அவர்களைக் குளியலறைப் பக்கம் அழைத்துச் சென்று முகம் கழுவுவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தபின் வரவேற்பறைக்கு வந்தாள் வீரசிங்கத்தின் மனைவி.

'என்ன பொலீஸுக்கோ போன் செய்ய யோசிச்சனீங்கள்' என்று கேட்டுக் குறும்புடன் சிரித்தாள்.

வீரசிங்கம் பொம்மையாகத் தலையை ஆட்டினார்.

'இஞ்சேருங்கோ... தோசை மா பிறிஜ்ஜிலை இருக்கு. உடனை ஒரு சாம்பாரும் வைக்கிறான். இராத்திரி இதுகள் ஒண்டும் சாப்பிட்டிருக்காதுகள்!'

'இதுகளை இப்ப என்ன செய்யிறது...? என வீரசிங்கம், இழுத்தார்.

'சாப்பிட்ட பிறகு அதுகளுக்கு நல்ல ஆறுதல் சொல்லி செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கூட்டிக் கொண்டு போவம். அங்க வேலை செய்யிற ஒருத்தியை எனக்கு நல்லாய்த் தெரியும். உந்த மாதிரி புருஷன்மாராலே அவதிப்படுகிற பெண்களுக்கு என்று, புறம்பா ஒரு விடுதி நடத்துறாங்கள். அங்கை சின்னராசா போன்ற ஆட்கள் போய் சேட்டையும் விடேலாது. அதுகளுக்கு இதுதான் பாதுகாப்பு. இதை விட்டிட்டு இப்ப நீங்கள் போலீசுக்கு அறிவிச்சால் என்ன நடக்கும்? அவங்கள் வந்து சின்னராசாவைக் கொண்டு போய் வைச்சிருப்பாங்கள். இங்கை இருக்கிற குடிகாரக் கூட்டத்தை தெரியாதே...? சின்னராசாவின்ரை பெண்சாதியை நீங்கள் வைச்சிருக்கிறியள் எண்டு கதைகட்டி விடுவாங்கள்... உங்களுக்கு இது தேவையா...?'

மனைவி சொல்வதில் பாரிய உண்மை இருப்பதை வீரசிங்கம் உணர்ந்துகொண்டார்.

காலை உணவு முடிய ஒன்பது மணியாகிவிட்டது. அப்போது தொலைபேசி மணி கிணுகிணுத்தது.

வீரசிங்கம் அதனை எடுத்தார். மறுமுனையில் சின்னராசா. 'அண்ணை இவவும் பிள்ளையளும் உங்கை வந்தவையே...?' நிதானமாகவே கதைத்தான் சின்னராசா, வெறி முறிந்திருக்க வேண்டும்!

வீரசிங்கம் தவமணியைப் பார்த்தார்.

மறுமுனையில் சின்னராசாவாக இருக்கலாம் என்பதை ஊகித்துக்கொண்ட தவமணி, சொல்லவேண்டாமென்று சைகை காட்டி, கையெடுத்துக் கும்பிட்டாள்.

'ஏன் என்ன நடந்தது...? ஏதேன் Forms நிரப்ப வேணுமே...? வந்தால் நிரப்பிக் குடுத்துவிடுகிறன்.'

'அவளை இஞ்சை காணேல்லை அண்ணை. விடியக்காலமையே கள்ளப் புருஷனோடை ஓடிட்டாள் போலை கிடக்கு... நரகல் வேசை திரும்பி வரட்டும். ஒரே அடியாய்க் காலை முறிச்சு மூலைக்குள்ளை கிடத்தி வைக்கிறன். கால் இருக்கிறதாலைதானே ஓட்டம் காட்டிறா...

இணைப்புத் துண்டித்தது. மறுமுனையில் சின்னராசா ஆத்திரத்துடன் தொலைபேசியை வைத்திருக்க வேண்டும்.

## 6

தவமணியையும் பிள்ளைகளையும் செஞ்சிலுவைச் சங்க விடுதியிலே சேர்ப்பதில் சிரமம் இருக்கவில்லை. விடுதியின் அதிபர் மிகவும் அன்புடனும் கண்ணியத்துடனும், அதே சமயம் கண்டிப்புடனும் கடமையைச் செய்பவர் என்பதை வீரசிங்கம் உணர்ந்து கொண்டார்.

அங்கும், தனக்கும் பிள்ளைகளுக்கும் அரசாங்கம் ரிக்கற் வழங்குமானால் அகதி அந்தஸ்துகோரும் விண்ணப்பத்தை ரத்துச் செய்துவிட்டு ஊருக்குத் திரும்பத் தயாராக இருப்பதாக தவமணி வாக்குமூலம் அளித்தாள்.

'நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. புருஷனால் இந்த விடுதியிலே எந்தவிதமான தொந்தரவும் ஏற்படாது... இப்போதைக்கு உங்கள் பெயரையே பாதுகாவலனாக பதிவு செய்துள்ளேன். ரிக்கற் விஷயத்தை சமூக இலாகாவுடன் பேசி ஒழுங்கு செய்யுங்கள்...!' எனக் கூறிய அதிபர் தனது விசிட்டிங்காட் ஒன்றினையும் வீரசிங்கத்திடம் கொடுத்தார்.

அப்பொழுது அவருக்கு றொனால்டின் மனைவி மோனிக்காவும் செஞ்சிலுவைச் சங்க இலாகா ஒன்றில் வேலை

செய்வது நினைவுக்கு வந்தது. இவரிடம் பேசினால் அவளது முகவரியைச் சரியாக அறிந்துகொள்ளலாம் என நினைத்தார். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை. மோனிக்காவை அந்த அதிபர் நன்கு அறிந்திருந்தார். அவள் வேலை செய்யும் செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் விலாசத்தைத் தந்ததுடன், வேண்டுமானால் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறும் சொன்னார். வீரசிங்கம் ஒன்றும் பேசாதிருக்கவே அவரே தொலைபேசி எண்களை அழுத்தி மோனிக்காவுடன் தொடர்பு கொண்டார்.

எப்படியான வரவேற்புக் கிடைக்கும் என்கிற தயக்கத்துடன் தான் வீரசிங்கம் அந்த அலுவலக அறைக்குள் நுழைந்தார்.

அவரைக் கண்டதும் மோனிக்கா தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்து சிநேக பாவத்துடன் கைகுலுக்கி 'அங்கிள் வீரா' என்று அகம் மலர வரவேற்றாள்.

'தொலைபேசியில் தொடர்பு கொண்டதும் ஒரு நிமிஷம் நான் திகைத்துப் போனேன். எவ்வளவு ஆண்டுகள்! எப்படி என் தொலைபேசி எண் கிடைத்தது? என்று கூறிக்கொண்டே அலுவலக ரீரூமுக்கு அழைத்துச் சென்றாள்.

வீரசிங்கம் எப்படிப் பேச்சைத் துவங்குவது என்கிற தடுமாற்றத்துடன் மௌனம் சாதித்தார்.

'சொல்லுங்கள் வீரா... நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? குடும்பம் எப்படி...?'

'நன்றாக இருக்கிறேன; குடும்பமும் நலமாகவே இருக்கிறது. இவ்வளவு ஆண்டுகள் கழித்து உன்னைப் பார்ப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.'

'எனக்கும்தான்! நீ அழைத்தால், நான் உன் வீட்டுக்கு விருந்து சாப்பிட வருவேன். உனது 'உறைப்புக் கறி' சாப்பிட ஆசையாக இருக்கிறது' என்று பழைய கலகலப்புடன் மோனிக்கா பேசினாள்.

'மோனிக்கா... நீ கட்டாயம் வர வேண்டும். எனது மனைவியுடன் பேசி வசதியான திகதியை அறிவிக்கிறேன்...'

'உனக்குத் தெரியுமா...? நான் றொனால்டுடன் வர முடியாது...!' முகத்தில் எதுவித மாற்றமும் இல்லாமல் அதே குதூகலத் தொனியில் பேசினாள்.

இதற்கு மேலும் றொனால்டை பார்த்த சமாசாரத்தினை ஒளிக்க, வீரசிங்கம் விரும்பவில்லை.

'அண்மையில் நான் றொனால்டைச் சந்தித்தேன். என் பல்கலைக்கழக அலுவலகம் வந்திருந்தான். நடந்த விஷயங்களைச் சொன்னான்...'

'மோனிக்காவை பிரிந்திருக்கிறேன் என்று மட்டும் சொல்லியிருப்பான். அவன் செய்த மொக்குத் தனங்களை எல்லாம் சொல்லியிருக்க மாட்டானே...' என்று சொல்லிக்கொண்டே இருவருக்கும் கோப்பி தயாரித்தாள்.

'இல்லை மோனிக்கா, எல்லாவற்றையும் சொன்னான். என்ன இருந்தாலும் அவனுடைய லாப நஷ்டங்களிலே உனக்குப் பங்கில்லையா?'

அவள் பதிலேதும் பேசாமல் கோப்பியைக் கலந்து கொண்டு வந்தாள். வீரசிங்கத்துக்கு ஒரு கோப்பையை அளித்தவாறே எதிரில் அமர்ந்தாள். 'பழைய கதைகளை வீணாகக் கிளற வேண்டியிருக்கிறது வீரா. உனக்கு நல்லாகத் தெரியும். எத்தனை வருடங்கள் றொனால்ட் படித்துக் கொண்டிருந்தான். அவன் நன்கு படிக்க வேண்டுமென்று நான் உழைத்து அவனையும் குழந்தைகளையும் காப்பாற்றினேன்... ஏன்...?'

வீரசிங்கம் பதில் பேசவில்லை. அவளே தொடர்ந்தாள்.

'இந்தக் கஷ்டங்கள் எல்லாம் கொஞ்சக் காலத்துக்குத் தான்... பின்பு அவன் என்றோ ஒரு நாள் நான் அநுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் நல்ல வாழ்க்கையை அமைத்து தருவான் என்று நம்பியிருந்தேன். இப்பொழுது...?

'பிஸினஸ் என்றால் லாப நஷ்டம் வரத்தான் செய்யும் மோனிக்கா...'

'பிஸினஸ் சரிவரவில்லையென்றால் அதை விட்டுவிட்டு ஒழுங்கான ஒரு தொழில் பார்க்க வேண்டியதுதானே...?' என்று கூறிய மோனிக்கா, தனது அலுவலக அறைக்குச் சென்று ஒரு பத்திரத்தை எடுத்து வந்து அவரிடம் நீட்டினாள்.

'இதை வாசித்துப்பார் வீரா. பாங்கிலிருந்து வந்த கடிதம், அவனது விலாசம் தெரியாதபடியால் இங்கு அனுப்பியிருக்கிறார்கள்... இன்னமும் றொனால்ட் பெயரிலே எவ்வளவு கடன் இருக்கிறது என்று பார்த்தாயா...? என்னுடன் சேர்ந்திருந்தால் அவன் என்னுடைய உழைப்பில்தான் சாப்பிடுவான். அவனுடைய முழு உழைப்பையும் வங்கி பிடுங்கிக் கொள்ளும். நீயே சொல் வீரா... எனக்கென்று ஒரு வாழ்க்கை வேண்டாமா...? நான் எதற்காக அந்த மடையனுடன் தொடர்ந்து வாழ்வதாக நடித்துக்கொண்டு கஷ்டப்பட வேண்டும்? பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் சுகங்களை நாடிப் போய்விட்டார்கள்... நான் எதற்காக எனது மிகுதி வாழ்க்கையை றொனால்டுடன் பாழாக்க வேண்டும்?'

கோப்பிக் கோப்பைகளை எடுத்துக்கொண்டு போய் 'சிங்'குக்குள் வைத்த மோனிக்கா திரும்பி வந்து வீரசிங்கத்தின் முன் அமர்ந்து கொண்டாள். நீண்டதொரு பெருமூச்சு வெளிவந்தது.

'உண்மைதான்! சின்னவயதில் அப்படி ஒரு காதல் வேகம் றொனால்ட் மீது இருந்தது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவனைத் திருமணம் செய்து கொண்டேன். என் பெறுமதி என்னவென்று புரிந்து கொள்ளாத வயதிலே அது நடந்தது. எனக்கு இன்னமும் இளமையும் அழகும் இருக்கிறது. இன்னமும் என் பின்னால் பல ஆண்கள் சுற்றித் திரிகிறார்கள். அதற்காக நான் 'சோரம்' போய்விடுவேன் என்று எண்ணாதே. நல்ல பணக்காரன் ஒருவன் என்

பெருமானம் அறிந்து என்னை அன்புடனும் மரியாதையுடனும் நடத்தக்கூடியவனாய் இருந்தால் நான் அவனுடன் சேர்ந்து வாழத் தயங்கமாட்டேன்....! என்று கூறி முடித்தாள் மோனிக்கா.

மோனிக்காவின் நிலைப்பாடு, வீரசிங்கம் பிறந்து வளர்ந்த சமூகத்தின் விழுமியங்களுக்கு முரண்பட்டதாக இருந்தது. இருப்பினும் அதுதான் மேற்குலக வாழ்க்கை என்று எண்ணிக்கொண்டார்.

'என்ன இருந்தாலும் இருபது வருட தாம்பத்திய வாழ்க்கை... அது பற்றியும் கொஞ்சம் யோசித்துப் பார் மோனிக்கா' என் வீரசிங்கம் மிடறு முறித்து இழுத்தார்.

'இந்தியத் திருமண முறைகள் பற்றி நான் நிறையவே அறிந்திருக்கிறேன். அந்த சென்ரிமென்ற் சரி வராது. பெண்ணுக்கும் சுதந்திரமான வாழ்க்கை ஒன்று உண்டு' என்று கூறி, மோனிக்கா எழுந்தாள்.

'வீரா, உன்னை அவமதிப்பாக நினைக்க வேண்டாம். உன்னை இன்னும் என் நண்பனாய் மதிக்கிறேன். எனக்கு வேலை இருக்கிறது. றொனால்டுடனான என் வாழ்க்கை அத்தியாயம் முடிந்துவிட்டது. அதனை மீண்டும் எழுத முடியாது... 'டைவோர்ஸ்' பேப்பர் எல்லாம் ஆயத்தமாக வைத்திருக்கிறேன். அவனது நிரந்தர விலாசம் எனக்குத் தெரியாததால், அனுப்ப முடியாமல் இருக்கிறது. அவனுடைய விலாசம் தெரிந்தால் தந்து விட்டுப் போ. என் 'லோய'ருக்கு அது தேவைப்படுகிறது...'

வீரசிங்கம் எழுந்தார்.

'தன் இதயத்தில் இன்னமும் உனக்கு இடமிருப்பதாக றொனால்ட் கருதுகிறான்.'

'அது முடிந்த கதை என்று நான் சொன்னேனே! அவனைப் பற்றி இன்னுமொருமுறை, தயவு செய்து என்னுடன் பேசவேண்டாம் வீரா...!'

மோனிக்கா கதவை நோக்கி நடந்தாள். வீரசிங்கம் பின்தொடர்ந்தார்.

# 7

பெண்சாதி பிள்ளையளைக் காணாத சின்னராசா 'வெட்டுறன் விழுத்திறன்' என்று ஊரெல்லாம் அலைந்து திரிகிறான் என்கிற செய்தி வீரசிங்கத்துக்குக் காற்றுவாக்கில் எட்டியது.

செஞ்சிலுவைச் சங்கத்தில் அடைக்கலம் தேடியிருந்த தவமணியோ வீரசிங்கத்துக்கு ரெலிபோன் பண்ணும் போதெல்லாம் 'எனக்கும் பிள்ளையளுக்கும் இலங்கைக்குத் திரும்பிப் போக ரிக்கற் ஒழுங்கு பண்ணிப் போட்டியளோ அண்ணை...' என்று கேட்கத் தவறுவதில்லை.

வீரசிங்கத்துக்கு சமூக சேவை இலாகாவில் வேலை செய்த ஜேர்மன்காரன் ஒருவன் நண்பனாக இருந்தது வசதியாகிவிட்டது. அவனுடன் தொடர்பு கொண்டு விமான ரிக்கற்றுகளை ஒழுங்கு செய்து விட்டார். தாய்க்கும் பிள்ளைகளுக்கும் மாதாமாதம் உதவிப் பணம் வழங்குவதிலும் பார்க்க இலங்கைக்கான விமானச் சீட்டு மலிவானது என்கிற பொருளாதார நோக்கில் அவர்களுக்கு 'டிக்கற்' வழங்கு வதற்கான அங்கீகாரம் கிடைத்தது.

பிரயாணத் திகதியை தவமணிக்கு அறிவிப்பதற்காகச் செஞ்சிலுவைச் சங்க விடுதிக்கு சென்றார் வீரசிங்கம்.

பிரயாண தினத்தன்று ஆயத்தமாக இருக்குமாறும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளே பாதுகாப்பாக விமான நிலையம் கொண்டு செல்வார்கள் என்றும் பிரயாண விபரங்களைக் கூறிய வீரசிங்கத்தை ஒருவித தவிப்புடன் பார்த்தாள் தவமணி.

தனது பிரயாசைகளுக்காக அவள் மகிழ்ச்சியடைவாள் என்றே வீரசிங்கம் எதிர்பார்த்தார். மாறாக அவள் அதிர்ச்சியடைந்தவள் போல் காணப்பட்டாள். எதையோ சொல்ல விரும்புவதும், அதைச் சொல்ல முடியாமல் அவள் தவிப்பதும் அவருக்கு விளங்கிற்று.

'என்ன விஷயம் தவமணி...? பிரச்சினை தீர்ந்தது தானே... பிறகேன் யோசிக்கிறியள்...?'

'இல்லையண்ணை... அவரை ஒருக்காப் பார்க்க வேணும் போல கிடக்கு... பிள்ளையளும் அப்பா அப்பா எண்டு அழுதபடி இருக்குதுகள் – குடிகாரன் எண்டாலும் புருஷன்.... புருஷன்...,' தொடரமுடியாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள் தவமணி.

அவள் என்ன சொல்ல முயலுகிறாள் என்பதை விளங்கிக்கொண்ட வீரசிங்கம் சிறிது நேரம் மௌனமானார்.

'உங்கடை விருப்பம் தவமணி, நீங்கள் குடும்பத்தோடை சந்தோஷமாய் இருந்தால் எனக்கும் சந்தோஷம் தான்...'

செஞ்சிலுவைச் சங்க அதிகாரியிடம் தவமணியின் முடிவைத் தெரிவித்துவிட்டு வீடு திரும்பினார் வீரசிங்கம்.

பதிவு செய்த ரிக்கற்றுகளை பிரயாண திகதிக்கு முன்பாக ரத்து செய்ய வேண்டும். தவமணியின் முடிவை – நாளை சமூக சேவை அதிகாரிகளுக்குத் தெரிவித்தால், 'நீ என்ன விளையாடுகிறாயா?' என்றுதான் கேட்பார்கள். எப்படி இதை கையாள்வதென மூளையைக் கசக்கி யோசித்தார் வீரசிங்கம்.

'என்ன யோசிக்கிறியள்...?' என்றவாறே கணவனருகே கோப்பியுடன் வந்தமர்ந்தாள் வீரசிங்கத்தின் மனைவி.

'செஞ்சிலுவைச் சங்கத்திலை இருந்து நீங்கள் வெளிக்கிட்டாப் போலை தவமணி எனக்கு ரெலிபோன் பண்ணினவள், அவளை நினைக்கப் பரிதாபமாய்த்தான் இருக்கு...!'

'இதென்ன குழந்தைப் பிள்ளை விளையாட்டே, நேரத்துக்கு நேரம் முடிவை மாத்திறதுக்கு? நான் நாளைக்கு அவங்களிட்டைப் போய் என்னத்தை சொல்லிச் சமாளிக்கிறது?

புருஷனின் கோதியடங்கும் வரை மனைவி மௌனமானாள். வீரசிங்கம் கோப்பியைக் குடிக்கத் துவங்கினார்.

'இஞ்சேருங்கோ... தவமணி இப்ப ஊருக்குப் போனால் அங்கை என்ன சொல்லுவினம் தெரியுமே...? எங்கை தப்பியோடலாம் என்று சனம் தவிக்கேக்க இவளுக்குக் கொழுப்பு. புருஷனை விட்டிட்டு இங்கை வந்திட்டாள் எண்டு நாக்கு வளைப்பினம். நீங்கள் ஊரை விட்டு வந்து கனகாலம். உங்களுக்கு அங்கத்தய நிலைமை புரியாது. இந்தச் சண்டையுக்கை என்னெடங்கை அவள் காலம் தள்ளுவாள்...?

'அப்பிடியெண்டால் இங்கை ஒரு வீட்டை எடுத்துக் கொண்டு தனிச்சிருக்கிறது. தினம் சின்னராசாவின்ரை அடி உதையை வாங்கிக் கொண்டு அரியண்டத்துக்கை இருக்கிறாள் எண்ட பரிதாபத்திலைதானே நான் உதவப் போனனான்...!' என்று படபடத்தார் வீரசிங்கம்.

'இண்டைய நிலைமையிலை தவமணி இங்கை தனிச்சிருக்க சின்னராசாதான் விட்டாலும் எங்கடை ஆக்களின்ரை வாய் சும்மா இருக்குமே...? கொஞ்சம் அவசரப்படாமல் நிதானமாய் யோசியுங்கோ. புருஷன் வேண்டாம் என்று சொல்லுற மோனிக்காவை றொனால்டோடை சேர்க்க நிக்கிறியள்... அடிச்சாலும் உதைச்சாலும் சின்னராசாவோடை இருப்பம் என்கிற தவமணியைப் புறம்பாய் வீடு எடுத்து இருந்தால் என்ன என்று கேக்கிறியள்...'

'மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதையும்...'

'நானும் அதைத்தான் சொல்ல வாறன். சின்னராசா பெண் சாதியை கொடுமைப்படுத்திறதை நான் நியாயப்படுத்த வரேல்லை. ஜேர்மன் கலாசாரத்துக்கு மத்தியிலை எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் எங்களுடைய சமூக விழுமியங்கள் வேறையெண்டதை மறக்காதேயுங்கோ... புருஷ உறவை உதறித் தள்ளிற துணிவு எங்களுக்குக் கிடையாது... மேல் நாட்டிலை வாழ்ந்தாப்போலை ஊரிலை பழகின பழக்க வழக்கங்களைத் தூக்கி எறிஞ்சிடலாம் என்று நினைக்கிறியளே?... தவமணி பாவம்...!"

மனைவி கோப்பிக் கோப்பையை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள். மனைவியின் பேச்சிலே, திடீரென்று வீரசிங்கத்தின் மனம் ஊருக்குத் தாவியது.

அந்த ஊரின் கடற்கரையிலே எத்தனை மாலை வேளைகளை வீரசிங்கம் இனிமையாகக் கழித்திருக்கிறார்.

கடற்கரையில் தோன்றும் அந்த அடிவானம் எவ்வளவு அர்த்தம் பொதிந்தது என்ற சிந்தனையுடன் வீரசிங்கம் கோப்பியைத் தொடர்ந்து குடிக்கலானார்.

# கீதையடி நீயெனக்கு...

## 1

மீண்டும் விலாசத்தை சரிபார்த்துக் கொண்டான் சந்திரன்.

சரிகைக் குஞ்சமெல்லாம் வைத்து அந்த அழைப்பிதழ் வெகு ஆடம்பரமாகவே அமைக்கப்பட்டிருந்தது. அவுஸ்திரேலிய தபால்காரருக்கு அது விசித்திரமாகத் தெரியக்கூடும் அந்த அழைப்பிதழ் சரியான விலாசத்துக்கு போய்ச் சேரவேண்டும் என்பதற்காகவே, தெருவோரமுள்ள தபால்பெட்டி ஒன்றிலே போடாது, வடபழனி தபால் நிலயத்துக்கு அவன் வந்திருக்கிறான்.

அவுஸ்திரேலிய தொடர் மாடிக் குடியிருப்புகளின் முன்னால் வீதி ஓரமாக, தபால் பெட்டிகள் புறாக் கூண்டுகள் போன்று அமைந்திருக்கும். வீதியில் வலம் வரும் விடலைகள் அதன் மினுமினுப்பில் கவர்ந்து அழைப்பிதழை உருவி எடுக்கலாம். இதனால் பாதுகாப்பாக அதனை வேறொரு தடித்த தபாலுறையில் வைத்திருந்தான். தபாலுறையை ஒட்ட முன்பு அழைப்பிதழை விரித்து மீண்டும் படித்துப் பார்த்தான். மணமகளின் பெயருக்கு முன்னால் அச்சடித்திருந்த 'டாக்டர்' என்ற பட்டத்துக்கு வந்தவுடன், நின்று நிதானித்து, அந்த எழுத்துக்களை ஒருமுறை தடவிப் பார்ததான். இப்பொழுதெல்லாம் திருமண அழைப்பிதழில் மணமக்களின் பெயருக்கு முன்னால் பட்டங்களோ அல்லது பெயரின் கீழ் அவர்களின்

தொழில் விபரங்களோ அச்சிடுவதில்லை. ஆனால் சந்திரனுக்கு மணமகளின் 'டாக்டர்' பட்டம் அழைப்பிதழில் அச்சிடுவது மிக மிக அவசியமாய் இருந்தது. மணமகள் எம்.ஜி. ஆர். மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்தவளாம். தந்தை இல்லை. ஆரம்பத்தில், தாயுடன் 'குயில்குப்பத்தில்' வாழ்ந்தவள். வீட்டில் வறுமை. மாநிலத்தில் சிறந்த புள்ளிகள் பெற்றமையால் புலமைப் பரிசில்பெற்று அவள் மருத்துவம் படித்தாக, திருமண ஏஜென்சிக் குறிப்பில் இருந்தது. டொலர்களில் சம்பாதிக்கும் அவனுக்கு, அவளின் குடும்ப வறுமை ஒரு பொருட்டல்ல. அவனுக்கு தேவையாய் இருந்த தெல்லாம் அவளின் டாக்டர் பட்டமே!

சந்திரனுக்கு அவுஸ்திரேலியாவில் நிறைய நண்பர்கள். அவர்களுக்கெல்லாம் இப்பொழுதே இந்த அழைப்பிதழை அனுப்ப வேண்டிய அவசரம் இல்லை. சிட்னிக்கு வந்தவுடன் எல்லோரையும் அழைத்து தடல்புடலாக ஒரு விருந்துபசாரம் வைத்துவிட்டால் போதும். ஆனால் அந்த 'வேசை'க்கு இந்த அழைப்பிதழ் நேரத்துடன் போய்ச் சேர வேண்டும். அவளுக்காகவே அழைப்பிதழை இந்தளவு ஆடம்பரமாக அச்சடித்திருந்தான்.

தபாலுறையை ஒட்டி தன் கைப்படவே தபாலில் சேர்த்தபோது அவனை அறியாமலே அவன் மனசு நிறைந்தது.

'அந்த வேசை வாசிச்சுப் பாக்கட்டும்...' என மனதில் கறுவியவாறு, ஆட்டோவில் ஏறிக்கொண்டான்.

வடபழனி முருகன் கோவிலில் அடுத்த வாரம் அவனுக்கு கலியாணம். கலியாணத்தை எளிமையாகச் செய்யவே ஒழுங்கு செய்திருந்தான். அவனுடைய வருமானத்துக்குத் திருமணத்தை மிக ஆடம்பரமாக நடத்தியிருக்கலாம். இந்திய மண்ணிலே அத்தகைய ஆடம்பரம் அவனுக்குத் தேவையற்றது. அவனுடைய ஆவேசமெல்லாம் சிட்னியில் வசிக்கும் அந்த 'வேசை'க்குப் பாடம் படிப்பிப்பதுதான்.

கோடம்பாக்கம் பாலத்தை தாண்டி ஆட்டோ தி.நகர் நோக்கிச் சென்றது. அங்கேதான் மணமக்களுக்கு ஒப்பனை செய்வதில் புகழ்பெற்ற நிறுவனமும், திருமணப் படப் பிடிப்பாளர்களும் இருக்கிறார்கள். இத்தனைக்கும் சந்திரனுக்கு மாப்பிளைக்குரிய படபடப்போ குறுகுறுப்போ இல்லை. பெண்பார்த்த பின்பு மணமகளைச் சந்திக்க வேண்டிய தேவையும் அவனுக்கு இருக்கவில்லை. கிணத்துத் தண்ணியை வெள்ளமா அள்ளிக்கொண்டு போய்விடப் போகிறது என்பது அவனுடைய சமாதானம்.

சந்திரனின் அம்மா பாக்கியம், யாழ்ப்பாணத்திலிருந்து வந்துவிட்டார். பாக்கியம் யாழ்ப்பாணத்தில் பணச் செருக்குடன் வாழ்ந்தவர். அயல் அட்டைகளில் 'கெறுக்குப்புடிச்ச மனுஷி என்கிற பட்டத்தைப் பெற்று பெருவாழ்வு சுகித்தவர். ஆனால் கணவனின் மறைவுக்குப் பின்னர் நடந்த சம்பவங்கள் பல, அவரை இப்பொழுது நன்றாகவே பக்குவப்படுத்தி இருந்தது.

நீண்ட காலத்தின்பின் மகன் கலகலப்பாக இருப்பதைப் பார்த்துபாக்கியத்துக்கு சந்தோஷம். மகளுக்கு சீதனம் குடுத்தது போக, மகனுக்காக வைத்திருந்த கொழும்பு வீட்டையும், கடையையும், யாழ்ப்பாணத்திலுள்ள காணிகளையும் விற்று சந்திரனுக்கு டொலரில் அனுப்பிவிடவேண்டும் என மனதுக்குள் தீர்மானம் எடுத்துக்கொண்டார். இவை எல்லாம் சந்திரனின் அப்பா பொன்னையர் கொழும்பில் சுருட்டுக் கடையும் வாழைப்பழக் கடையும் வைத்துத் தேடிய தேட்டங்கள்.

கலியாணத்துக்கென சந்திரனின் தங்கச்சி, குடும்ப சமேதராகக் கனடாவிலிருந்து வந்து சென்னையிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலே தங்கியிருக்கிறாள். சென்னை வெக்கைக்கு பிள்ளையளுக்கு 'வெகிர்க்குரு' பிடிச்சிடுமாம். அம்மாவின் உறைப்புச்சாப்பாடும் பிள்ளைகளுக்கு ஒத்துவராதாம். இப்படி அவள் சில நியாயங்களை அடுக்கினாள்.

சந்திரனின் அப்பா பொன்னையா தீவுப்பகுதியைச் சேர்ந்தவர். வறுமை காரணமாக சின்ன வயதிலேயே சுருட்டுக்

கடையில் வேலை செய்யவென கொழும்புக்குப் போனவர். சிறுகச் சிறுக சேர்த்த சேமிப்பில் சீதனம் கொடுத்து தன்னுடைய தங்கச்சி பூரணத்தை, ஊரிலேயே பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவருக்குக் கட்டிக்கொடுத்தபோது ஊரில் அது பெருமையாகப் பேசப்பட்டது. அதற்காகப் பட்ட கடனை அடைக்க அவருக்கு பல வருடங்கள் எடுத்ததென்னவோ உண்மைதான். இருந்தும் அவர் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறியது பாக்கியத்தைக் கட்டிய பிறகுதான். 'அவள் வீட்டுக்கு வந்த மகாலஷ்மி' எனச் சொல்வதில் அவர் வாய் அலுத்ததேயில்லை. அவர் சாகும் போது கொழும்பில் மூன்று வீடுகளும் இரண்டு கடைகளும் ஊரில் காணிபூமிகளுமென பல சொத்துக்கள் சேர்ந்தன. அது அவரின் கடும் உழைப்பினால் மட்டுமல்ல, மனைவி பாக்கியத்தின் சிக்கனத்தினாலுமே சாத்தியமாயிற்று என்பது சத்தியமான உண்மை.

பென்னையரின் தங்கச்சி கணவர் இளவயதிலேயே மாரடைப்பால் இறந்தபோது, பொன்னையர் நிலை குலைந்து போனார். ஆனால் மனைவி பாக்கியமோ அசைந்து கொடுக்கவில்லை.

'உங்கடை தங்கச்சிக்கு குடுத்தது காணும். பூரணத்துக்கும் மகளுக்கும், வாத்தியாற்ரை பென்ஷன் வரும். எனக்கும் பிள்ளையளுக்கும் அந்தப் பென்ஷனும் வராது. எங்களுக்கும் இரண்டு பிள்ளையள் இருக்குதெண்டதை மறந்து போகாதையுங்கோ...' என பாக்கியம் தங்கச்சி குடும்பத்தைக் கவனிக்க விடவில்லை. பொன்னையர் குடும்பம் யாழ்ப்பாணத்திலும், பூரணம் தன் மகள் வதனாவுடன் புங்குடு தீவிலும் வாழ்ந்தமை இதற்குத் தோதாகிப் போனது. காலஓட்டத்தில் பிள்ளைகள் வளரவே இரண்டு குடும்பத்துக்கும் இடையே இருந்த கொஞ்ச நஞ்ச உறவும் அடியோடு விட்டுப்போனது. பொன்னையர் கொழும்பிலே கடையே கதியென்று இருந்ததால், பாக்கியம், அண்ணன் தங்கச்சிக்கிடையில் இடை வெளியை அகலிக்கச் செய்வதில் வெற்றியும் பெற்றார்.

கலியாண ஏற்பாடுகள் பற்றிப் பேசவென, கனடாவிலிருந்து வந்திருந்த தங்கச்சி குடும்பம் சந்திரனின் அப்பாட்மென்றுக்கு வந்திருந்தார்கள். இந்த அப்பாட்மென்ரை "றெடிகாஷ்" கொடுத்து கலியாணத்துக்காகவே சந்திரன் வாங்கியிருந்தான். கலியாணம் முடிந்தபின் மணப்பெண் வாணியின் தாயும் தம்பி கலைச்செல்வனும் அதில் குடியிருக்க வேண்டுமென்பது திருமணப் பேச்சின்போது வாணி போட்ட முதல் கொண்டிஷன். இதனால் அவர்களின் பெயரிலேயே அதைப் பதிவு செய்திருந்தான்.

'என்ன சந்திரன், அப்பாட்மென்றுக்கு எயர்கொண்டிஷன் போடேல்லையே? என்ன வெக்கையப்பா இங்கை... இதுக்கை எப்பிடி இருக்கிறியளோ தெரியாது' என வந்த நேரம் தொடக்கம் 'ஃபிலிம்' காட்டிக் கொண்டிருந்தான் தங்கச்சி புருசன் கனகராசா. இவ்வளவுக்கும் அவன் கனடாவிலே, பகலில் தொழிற்சாலை ஒன்றிலும், இரவில் 'பிற்ஸா ஹட்' ஒன்றிலும் வேலை செய்து, ரொரன்ரோவில் இன்னமும் வாடகை வீட்டிலே குடியிருப்பது சந்திரனுக்குத் தெரியும். மச்சானின் எழுப்பக் கதைகளைக் கேட்டு சந்திரனுக்கு புளிப்பத்தினாலும், கலியாணம் எந்தவித பிரச்சனையுமில்லாமல் நடைபெற வேண்டுமென்பதால் எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டான். உண்மையில், அந்த 'வேசைக்கு' பாடம் படிப்பிக்க வேண்டும் என்கிற ஆவேசம் மட்டுமே சந்திரனை முழுமையாக ஆட்கொண்டிருந்தது.

## 2

தபால்களுள் ஒன்று உடைக்கப்பட்டு மேசை மேல் இருந்தது. வதனாவுக்கு வரும் கடிதங்களை தாய் பிரிப்பதில்லை. நன்கு பழக்கமான எழுத்துக்கள் அந்தத் தபால் உறையில் கானப்பட்டதால் பூரணம் அதைப் பிரித்துப் பார்த்திருக்க வேண்டும். ஒரு மூலையில் தாயார் மௌனமாக

உட்கார்ந்திருந்தபோதே ஏதோ ஒரு 'விசேஷ' செய்தி அதில் வந்திருக்க வேண்டுமென்பதை வதனா புரிந்து கொண்டாள். வதனாவுக்கு தாய்தான் எல்லாம். தன்னை வளர்க்க தாய் பட்ட கஷ்டங்கள் அவளுக்குத் தெரியும்.

கடிதத்தைப் பிரித்து அழைப்பிதழை மேலோட்டமாகப் படித்தாள். அது அவளில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அதை மடித்து மேசைமேல் வைத்தபின் மற்றக் கடிதத்தைப் பிரித்தாள். அது கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியிடமிருந்து வந்திருந்தது. அவளின் சேமலாப நிதியைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை அவர் அனுப்பியிருந்தார்.

வதனா அவுஸ்திரேலியா வருவதற்கு முன்பு வவுனியா கிளிநொச்சி வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்தவள். போர்க்காலத்தில் எல்லோரும் நாட்டைவிட்டோட, இளம் வயதிலேயே தனியாளாக கிளிநொச்சி வைத்தியசாலையை நடத்தியவள். அவளின் தன்னலமற்ற வைத்திய சேவையால் போராடட்டக் குழுக்கள் மத்தியில் மட்டுமல்லாது, அரச அதிகாரிகளிடமும் நல்ல பெயர் பெற்றிருந்தாள். மற்றவர்களின் துன்பத்தைப் பகிர்ந்து பழக்கப்பட்டவள். மருத்துவசேவையே மகத்தான மானிடசேவை என நினைத்து வாழ்பவள்.

தகப்பன் செத்தபோது வதனாவுக்கு பத்து வயது. புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். மாமன் பொன்னையர் உட்பட உறவுகளெல்லாம் அந்திரட்டி முடிந்தவுடன் விலகி ஓட, படிப்பே தனது எதிர்கால மூலதனம் என்றெண்ணிப் படித்து, பத்தாம் வகுப்பில் வட மாகாணத்திலேயே முதலாளாக சித்தி பெற்றாள். இது யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலையில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை அவள் காலடியில் வைத்தது.

தாய் தயாரித்துக் கொடுத்த தேநீரைப் பருகியவாறே மின்அஞ்சல்களை வாசித்தாள். அதிலொன்று யாழ்ப்பாணத்தில் அவள் படித்த பாடசாலை அதிபர் எழுதியிருந்தார். போர் முடிந்த பின்னரும் போக்குவரத்துச் சீராகவில்லை என்றும், குறிப்பாக தீவுப்பகுதி மாணாக்கர்களின் போக்குவரத்து அடிக்கடி துண்டிக்கப்படுவதாகவும், இதனால் நெடுந்தொலைவிலிருந்து வரும் மாணாக்கர்களுக்கு உதவும் திட்டமொன்று தங்களால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கு உதவுமாறும் அதிபர் கேட்டிருந்தார். இந்தப் பிரச்சினை அவளுக்குப் புதிதில்லை. படிக்கும் காலங்களில் வதனா முற்றுமுழுதாக பிறர் தயவைத்தை அனுபவித்தவள். எனவே தான் படித்த பாடசாலைக்கு தானம் அளிப்பதில் தாராளம் காட்டினாள்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பெண்கள் கல்லூரியில் பதினோராம் வகுப்பு படிக்க இடம் கிடைத்ததும், குமார்ப்பிள்ளையை தீவுப்பகுதியிலிருந்து யாழ்பாணத்துக்கு பஸ்ஸில் தனியே அனுப்ப பூரணம் பலவாறு யோசித்தாள். மற்றவர்கள்போல் கல்லூரி விடுதியில் தங்கிப் படிப்பதற்கும் பொருளாதார வசதியுமில்லை. பலநாள் யோசனையின் பின் அண்ணன் பொன்னையர் யாழ்ப்பாணத்தில் விசாலமாகக் கட்டி வாழும் வீட்டுவாசலில் மகளுடன் வந்துநின்றாள்.

பொன்னையரின் வீடு வதனாவின் கல்லூரியிலிருந்து நடக்கும் தூரத்தில்தான் இருந்தது. பள்ளிக்கூடத்தில் மணிஅடித்தால் அந்த வீட்டில் கேட்கும். பரீட்சை வைத்தே அந்தப் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்ப்பார்கள். ‘அருகில் வீடு’ என்ற காரணத்தைச் சொல்லி பொன்னையரின் மகளை அந்தக் கல்லூரியில் சேர்க்கவென பாக்கியம் பலமுறை முயன்றும் அவளுக்கு இடம் கிடைக்கவில்லை.

வதனாவின் தகப்பன் நல்ல வெள்ளை. அவரை ‘மாம்பழ வாத்தியார்’ என்றால்தான் ஊரில் தெரியும். அவரின் நிறத்திலே, மூக்கும்முழியுமாக வதனா அழகாக பிறந்திருந்தாள். தன்னுடைய மகளுக்கு இந்த நிறம் வாய்க்கவில்லையே

என்ற வெப்பிசாரம் பொன்னையரின் மனைவிக்கு எப்பொழுது முண்டு. இந்த பொச்சரிப்பும் தன்னுடைய மகளுக்கு பள்ளிக்கூடத்தில் இடம் கிடைக்காத எரிச்சலும் ஒன்றுசேரவே, வதனாவையும் தாயையும் வாசலில் நிறகவைத்தே பதில் சொல்லி அனுப்பினார் பொன்னையரின் மனைவி.

'மகளின்ரை வெள்ளைத் தோலைக் காட்டி நடுவீட்டுக்கே வந்து என்ரை மகனை மடக்கப் பாக்கிறாளவை வேசையள்...'

பாக்கியம் சுழட்டிய சாட்டை, கேற்றைத் தாண்டி றோட்டுவரை கேட்டுக்கொண்டிருந்தது.

அன்று தாய் வடித்த கண்ணீர்தான் வதனாவைக் கல்லாக்கியது. அதிகாலை நாலுமணிக்கு எழும்பி, ஐந்து மணி பஸ்பிடித்து புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள அந்தக் கல்லூரிக்கு போய்வரத் துவங்கினாள். பிரத்தியேக ரீயூசன் எதுவுமில்லாமல் இரவு பகலாகப் படித்தாள். பன்னிரண்டாம் வகுப்பில் நாடளாவிய ரீதியில் இரண்டாவது ஆளாக வதனா சித்தியடையவே, அவள் படித்த பாடசாலை தங்கள் சாதனையாக இதைப் பத்திரிகைகளில் பிரபலப்படுத்தியது. அவளது பெறுபேறுகளுக்கு இலங்கையிலுள்ள எந்த மருத்துவக் கல்லூரியிலும் இடம் கிடைத்திருக்கும். ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவக் கல்லூரி முந்திக்கொண்டு 'ஸ்கொலஷிப்' கொடுத்து வதனாவை மாணவியாக்கிக் கொண்டது. ஸ்கொலஷிப் காசுடன் தாயின் விதவைப் பென்சனையும் சேர்த்து, திருநெல்வேலியில் மருத்துவக் கல்லூரி அருகே வாடகைவீட்டில் தாயுடன் தங்கிப் படிப்பைத் தொடர்ந்தாள்.

வதனாவின் நிறம், அழகு, அறிவு, ஒழுக்கம் எல்லாம் பல்கலைக் கழகமட்டத்தில் அவளுக்கு ஒரு மதிப்பைச் சம்பாதித்துக் கொடுத்தது. மாணவர் சங்கங்களில் அவள்

முதன்மைப்படுத்தப்பட்டு தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டாள். இது தன்னம்பிக்கையுடன் கூடிய தலமைத்துவப் பண்பை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பை அளித்தது. அயலட்டைகளிலுள்ள வறிய பிள்ளைகளுக்கு இலவசமாக பல்கலைக்கழக புகுமுக வகுப்பு பரீட்சைக்கு பயிற்றுவித்தாள். இதனால், பல்கலைக் கழகத்துக்கு அப்பாலும் அவளை உயர்வாகப் பேசினார்கள்.

'மாப்பிளை பிடிக்க எடுப்பெடுக்கிறாள்' என்று பாக்கியமும் மகளும் உறவுகள் மத்தியிலே வதனாவைக் கரித்துக் கொட்ட, 'வதனா தன் அத்தை மகள்' என நண்பர்கள் மத்தியில் பீற்றித் திரிந்தான் சந்திரன்.

யாழ்ப்பாணத்தில் இயக்கங்கள் கொடிகட்டித் திரிந்த காலத்தில், படிப்பில்லாமல் ஊரில் திரிந்த கண்டநிண்ட காவாலிகளும் ஏதோ ஒரு இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட காலமது. இதுவே சமூகத்தில் தமக்கு ஒரு அந்தஸ்தை ஏற்படுத்தியதாக எண்ணி ஊரில் ஹீரோக் களாகவும் அவர்கள் வலம் வந்தார்கள். இயக்கப் பெடியனைக் காதலிப்பது பெருமையாக விடலைப் பருவத்து பாடசாலைப் பெண்கள் மத்தியில் கருதப்பட்ட காலத்தில், இயக்கமொன்றின் மாநிலத் தலைவனான சந்திரன், வதனாவை தான் இலகுவாக அடைந்துவிடலாம் என்ற கற்பனையில் மிதந்தான்.

இந்தச் சம்பவம் வதனா வைத்தியசாலையில் இறுதியாண்டு மருத்துவப் பயிற்சி எடுக்கும்போது நடந்தது. இரண்டு மருத்துவ மணாக்கர்கள் இணைந்த குழுவாக ஒவ்வொரு துறையிலும் பயிற்சி எடுக்க வேண்டும். இந்த ஏற்பாட்டில், வதனாவுடன் இணைந்து பயிற்சி எடுப்பதற்காக பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டவன் ரமணன். அவன் யாழ் மாவட்டத்தில் அதியுயர் புள்ளிகள் பெற்று மருத்துவப் படிப்புக்குத் தெரிவானவன். மிகவும் புத்திசாலி. குடும்பத்தில் ஒரே பிள்ளை. ரமணனின் தந்தை இயக்கத்தினரின்

மிதிவெடியில் சிக்கி இறந்துவிட, அவனின் தாய் தோசை சுட்டு விற்றே அவனைப் படிப்பித்தார். அவனுக்கும் பல்கலைக் கழகத்தின் ஸ்கொலஷிப் பணம் கிடைத்தது. ரமணனையும் வதனாவையும் வருங்கால மருத்துவத்துறை முன்னேற்றம் கருதியே மருத்துவக் கல்லூரி அவர்களை ஒரே குழுவில் இணைத்திருந்தார்கள். பயிற்சி முடிந்ததும் இருவரையும் மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் களாகப் பல்கலைக்கழகம் நியமிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் ஒரு பேச்சு உலாவந்தது.

பன்னிரண்டாம் வகுப்பில் மூன்று முறையும் குண்டடித்த சந்திரன் தகப்பனின் காசில் கொண்டா மோட்டர் சைக்கிளொன்றை வாங்கி ஊதாரியாக ஊரளந்து திரிந்தான். அத்துடன் ஏதோ ஒரு பெயரைச் சூட்டிக் கொண்ட ஓர் உதிரியான குழுவுடன் தன்னை இணைத்து, ஊரில் நாட்டாமை காட்டித் திரிந்தான். இடுப்பில் அவன் பிஸ்டல் துவக்கை செருகித் திரிவதாகவும் குசுகுசுத்தார்கள். காதல் விவகாரங்களுக்கு பஞ்சாயத்துப் பண்ணுவது, இயக்கப் பெடியளைக் காதலிக்க மறுக்கும் பெரிய இடத்துப் பெட்டையளை அடாவடியாய்த் தூக்கி வந்து தாலிகட்ட வைப்பதென நட்டாமுட்டித் தனங்களைத் தத்தெடுத்து வலம் வந்தான்.

பயிற்சிக்காக ரமணன் வதனாவுடன் வைத்திய சாலைக்குப் போவதும் வருவதும், சந்திரனுக்கு கடுப்பேற்றியது. ஒரு நாள் ஆஸ்பத்திரிவீதியில் தனியே வந்த வதனாவை வழி மறித்தான்.

‘உன்னோடை கொஞ்சம் பேசவேணும்...’

வதனா எதுவும் பேசவில்லை. அமைதியாக நின்றாள்.

‘ரமணனுடன் நீ சேர்ந்து போறதை இனி நான் காணக்கூடாது.’

எடுத்த எடுப்பிலேயே மொட்டையாகச் சொன்னான் சந்திரன். அவன் வந்து நின்ற முறையும் கட்டளையிடும்

தொனியிலே சொன்ன பாணியும் வதனாவுக்கு வெறுப்பேற்றியது.

'இதைச் சொல்வதற்கு நீ யார்...?'

'நீ என்ரை முறை மச்சாள். ஒழுங்கா இருக்கப் பார்...' என்று சொன்னவன், அவளின் பதிலுக்கு காத்திராமலேயே மோட்டர் சைக்கிளை ஊன்றி மிதித்து, ஸ்ராட் ஆக்கிச் சென்று விட்டான். வதனாவின் பதில் சந்திரனின் கோபத்தைக் கிளறியிருப்பதை அவன் சென்ற வேகம் காட்டியது.

சில வாரங்களுக்குப் பின் ரமணன் நெற்றியில் சுடப்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு முன்னாலுள்ள மின்விளக்குக் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தான். ரமணன் எந்த இயக்கத்திலும் சேராதவன். ஈழ அரசியலென்றால் 'கிலோ என்ன விலை?' என்று கேட்பவன். அவன் 'துரோகி'சாயம் பூசப்பட்டு இப்போது கொல்லப்பட்டிருக்கிறான். அவனது கொலை மருத்துவக் கல்லூரியையே உலுக்கியது.

நெற்றிப் பொட்டில் இரத்தம் காய்ந்து, கழுத்து மடிந்து, ரமணன் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த காட்சி தந்த அதிர்வில் வதனா உறைந்து போனாள். ரமணனின் கொலைக்கு வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது. சந்திரன் தான் காரணம் என்பதை வதனா பரிபூரணமாக நம்பினாள். தமிழின் பெயரால் துரோகி என முத்திரை குத்தப்பட்டு, அப்பாவிகளும் இயக்கத்தின் பெயரால் வகை தொகையின்றிக் கொல்லப்பட்ட காலமது. தடியெடுத்தவனெல்லாம் தண்டக்காரன் என்ற நிலையில் குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு முறைமைகளெல்லாம் முற்றாக சீர்குலைந்திருந்தது. ரமணனின் அந்திரட்டி முடிந்த அடுத்த நாள், பல்கலைக் கழகத்தில் அவனுக்கான அஞ்சலிக் கூட்டம் நடந்த அன்று, ரமணனையே நம்பி வாழ்ந்த தாய், அவன் கோவிலுக்கு கட்டும் வேட்டியில் தூக்குப் போட்டு செத்துப் போனது அடுத்த அதிர்ச்சி.

# 3

பொன்னையர் இப்போது யாழ்ப்பாணத்துக்கு வருவதில்லை. வந்தால் போராட்டக்குழுக்கள் பெருந்தொகை பணம் கேட்பார்கள் என்ற பயம்.

புங்குடுதீவு முருகன் கோவிலின் ஆறாம் திருவிழா பொன்னையரின் உபயத்தில் தடல்புடலாக நடக்கும். இந்தியாவிலிருந்து மேளக் கோஷ்டிகள் இறக்குமதியாகும். அவர்களுடன் இலங்கையிலுள்ள பிரபல மேளகாரக் குழுக் களும் இணைந்து இரவுத் திருவிழாவை அமர்க்களப் படுத்துவார்கள். மல்லாகத்துச் சிகரம், சப்பரம், தெருவெல்லாம் வண்ண விளக்குகள், வாணவேடிக்கை என அன்று புங்குடுதீவே சொர்க்க பூமியாகும். புலிப்பல்லுப் பென்ரன் கோத்த இரட்டைப்பட்டுச் சங்கிலி தொப்புள்வரை தொங்க, பட்டுவேட்டி சகிதம் படு ஆடம்பரமாகவே பொன்னையர் திருவிழாவில் வலம் வருவார். பூரணத்துக்கும் தமையன் பொன்னையரின் ஆடம்பரமான தோற்றத்தைக் கண்டு ஆனந்தந்தான். இருப்பினும் பூரணம் தன்னையோ மகளையோ திருவிழாவில் முன்னிலைப் படுத்துவது கிடையாது. கோவிலின் அருகேயுள்ள பனை வடலிக்குள் மேளகாரருக்காக தயாராகும் கோழிக்கறி சமையலிலே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுவார். அவளையொத்த இளவட்டங்கள் திருவிழா பார்க்க, வதனா பனை வடலிக்குள் ஓடியாடி தாயாரின் சமையலுக்கு உதவி செய்வதைப் பார்க்க பரிதாபமாக இருக்கும். ஆனால் பாக்கியமோ அதற்கு நேர்மாறு. தன் பிள்ளைகளை ஊபயகாரரின் வாரிசுகள் என ஆடம்பரமாக அறிமுகப்படுத்தும் வகையிலேயே கோவிலில் வலம் வரச் செய்வாள்.

சந்திரன் சாராத போராட்டக் குழுவொன்று வைத்த கெடுவினால் பொன்னையரால் இந்த வருடத் திருவிழாவுக்கு வரமுடியவில்லை. தகப்பனின் இரட்டைப்பட்டுச் சங்கிலியைப் போட்டுக்கொண்டு சந்திரனே திருவிழாவில் முன்னிலை

வகித்தான். அவனருகில் ‘பொடிகாட்டாக’ இரண்டு பெடியள் நின்றார்கள். திருவிழா பார்க்க வந்த ஆக்களை அதட்டி உருட்டி ‘பவுசு’ காட்டிக் கொண்டு அங்குமிங்குமாகத் திமிர் வழிந்தோடத் திரிந்தான்.

வதனாவும் தாயும் அந்தத் திருவிழாவுக்கு யாழ்ப் பாணத்திலிருந்து வந்திருந்தார்கள். பருத்திப் புடவை கட்டி எந்தவித ஆடம்பரமுமில்லாமல் வெகு எளிமையாகவே வந்திருந்த வதனா தேவதைபோல தாயருகே நின்றதும், ஸ்கொலஷிப்பில் மருத்துவம் படிப்பதும், அன்றைய திருவிழாவில் பேசுபொருளாயிற்று. அண்ணன் பெண்சாதியின் குணம் வதனாவும் தாயும் அறியாததல்ல. தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் உருப்படாமல் போன வயித்தெரிச்சலில் எந்தக் கணத்திலும் அவர்கள்மீது பாயக்கூடும். தமையனும் இல்லாத இடத்தில் வதனாவும் தாயும் பட்டும்படாமலுமே திருவிழாவில் பங்கெடுத்துக் கொண்டனர்.

இந்த முறை இந்தியாவிலிருந்து மேளம் வரவில்லை. இரவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் பகலில்தான் திருவிழா. இணுவில், அளவெட்டி, சாவகச்சேரி ஆகிய இடங்களிலிருந்து வந்த தவில் நாதஸ்வரக் கோஷ்டிகள் திருவிழாவை அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தன. சந்திரன் தகப்பனின் இரட்டைவடம் சங்கிலியை சற்றுப் பின்னலால் இழுத்து புலிப்பல்லுப் பென்ரன் துலக்கமாகத் தெரியும்படி மார்பில் விட்டவாறே சனத்தை ஒழுங்கு செய்யும் பாணியில், வதனாவும் தாய் பூரணமும் நிற்குமிடத்துக்கு வந்தான்.

‘என்ன மாமி பஸ்ஸிலையே வந்தனீங்கள்? வாறதெண்டு தெரிஞ்சிருந்தால் எங்கடை காரை அனுப்பியிருப்பனே...!’ வதனாவின் முன்னால் கிலோக் கணக்கில் வழிந்தான் சந்திரன்.

‘அதனாலை என்ன தம்பி’ என்ற சம்பிரதாய வார்த்தைகளுடன் சுருக்கமாக பூரணம் முடித்துக் கொண்டார். வதனா அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சுவாமி

தரிசனம் செய்யும் பாவனையில் ஆதிமூலத்தைப் பார்த்தவாறு நின்றாள்.

அப்பொழுதுதான் அந்த சம்பவம் நடந்தது. அந்தக் கோவில் வழக்கப்படி, கன்னிப்பெண் ஒருத்தி காமாட்சி விளக்குடன் கோவில் பிரகாரத்தைச் சுற்றி வந்தபின், வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகும். இற்றைவரை இந்த கௌரவம் உபயகாரர் என்ற முறையில் பொன்னையரின் மகளுக்கே கொடுக்கப்பட்டது. சந்திரன் மாமியுடன் நின்றதைக்கண்ட கோவில் குருக்கள், சந்திரனை குளிர்விக்க எண்ணி மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிருக்க வேண்டும். காமாட்சி அம்மனின் உருவமாகவே தாய் பூரணமருகே நின்ற வதனாவை திடீரென அழைத்து காமாட்சி விளக்கைக் கையில் கொடுத்தார் குருக்கள். முறைப்படி வதனாவும் தாயும் அந்த திருவிழாவின் உபயகாரர்கள்தான். வாத்தியார் இருக்கும்வரை அவரும் திருவிழாவுக்குக் காசுகொடுத்து வந்தார். அவர் இறந்தபின் பூரணம் சரீர உதவியுடன் தன் பங்களிப்பை நிறுத்திக் கொண்டார். இருப்பினும் காமாட்சி விளக்கு வதனாவின் கைக்கு இற்றைவரை வந்ததில்லை.

மேளதாளத்துடன் வதனா பிரகாரத்தைச் சுற்றி மேற்குவீதி மூலைக்கு வரவே, அங்கு இதற்காகவே காத்திருந்த பாக்கியம் வெகு லாவகமாக காமாட்சி விளக்கைப் பறித்து தன்னுடைய மகளின் கையில் கொடுத்தார். கூடவந்த குருக்களுக்கு இது அதிர்ச்சி. அவர் எதுவும் பேசவில்லை. மௌனமானார்.

‘மகள் டாக்குத்தருக்குப் படிக்கிறாளெண்டுதானே இந்தளவுக்கு தாயும் மோளும் ஆட்டம் போடுறாளவை. என்ரை மகளுக்கு நான் ஒரு ‘ஸ்பெஷலிட்’ டாக்குத்தர் மாப்பிளை எடுக்கேல்லையெண்டால் நான் பொன்னையர் பெண்சாதியில்லை’ என்று சபதம் எடுத்துக்கொண்டே திருவிழா முடிந்து வீட்டுக்குப் போனார் பாக்கியம்.

இப்பொழுதெல்லாம் யாழ்ப்பாணக் கலியாணச்சந்தை முந்தின மாதிரியில்லை. மணவறையில் வைத்தே

பெம்பிளையைப் பார்த்த காலம் போய், பெம்பிளை பார்த்து ஒரு சில நாள்கள் கதைத்து கலியாணம் செய்யும் நடைமுறைவந்தது. பின்னர் விடுதலைப் போராட்டம் கொண்டுவந்த சமுகப் புரட்சியில் பெண்களே மாப்பிளைகளைப் பொறுக்கியெடுக்கும் காலம் வந்து விட்டது. சீதனத்தை விசுக்கினால் டாக்குத்தர் மாப்பிளை தானாய் வருமென்றிருந்த பொன்னையர் பெண்சாதிக்கு, களத்தில் இறங்கிய பின்புதான் கஷ்டம் தெரிந்தது. இந்தக்காலத்தில் டாக்குத்தர் என்ஜினியர் மாப்பிளையள், சீதனத்துக்காகக் குறைந்த படிப்புள்ள பெட்டையளைக் கட்டத் தயாராக இல்லை. எல்லா இடமும் ஓடிஆடிக் களைத்து கடைசியில் கனடா மாப்பிளை என்று புங்குடுதீவுப் பெடியன் ஒன்றைக் கட்டி வைத்தார்கள். மகளுக்கு வாய்க்காத நல்வாழ்க்கை வதனாவுக்கு கிடைக்கக்கூடாது என்ற வெப்பிசாரத்தில் ஊரெல்லாம் வதானாவை எதாவது ஒரு பெடியனுடன் சேர்த்து கதைகட்டித் தூற்றுவதிலேயே பாக்கியத்தின் பெரும்பகுதிக் காலம் கழிந்தது.

போன வருடத் திருவிழாவிலை நடந்தது, இந்த வருடமும் நடந்தால் மானம் போய்விடுமென்று பொன்னையரை வலுக்கட்டாயமாக திருவிழாவுக்கு வரவழைத்தார் பாக்கியம். போராட்டத்துக்கு காசுதராமல் இவ்வளவு நாளும் டிமிக்கி குடுத்த பொன்னையரின் கதையை திருவிழாவன்று வடக்கு வீதியில் வைத்து முடித்தது போராட்டக் குழுவொன்று. பாக்கியம் மட்டுமல்ல பூரணமுந்தான் நொருங்கிப் போனார். தமையனின் மறைவை மறக்க தாய்க்கொரு மாற்றம் நல்லதென எண்ணி, வதனா மருத்துவப் படிப்பு முடித்ததும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு பணிபுரியச் சென்றாள். சிறிது காலத்தில் ஆனையிறவுடன் யாழ்ப்பாணம் துண்டிக்கப்பட, யாழ்ப்பாணத் தொடர்புகளும் முற்றாக அறுந்து போயிற்று.

படிப்புமில்லாமல் தத்தாரியாக இயக்கமொன்றுடன் ஊர் சுற்றித்திரிந்த சந்திரனை, வெளிநாடுகளுக்கு ஆக்களைக் கடத்தும் தொழிலை சைற் பிஸ்னஸ்ஸாகச் செய்த

மருமகனின் உதவியுடன் பாக்கியம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைத்தார்.

அப்பொழுதெல்லாம் பிளேனில் ஏறுவதற்கு முன்பு, விமானத்தின் வாசலில் பாஸ்போட் சோதிப்பதில்லை.

கனடாவில் அகதி அந்தஸ்து கோரி ஜெனிவா ஒப்பந்தப்படி வழங்கப்பட்ட கனேடிய பாஸ்போட் வைத்திருந்திருந்தான் பொன்னையரின் மருமகன் கனகராசா. அவனால் அவுஸ்திரேலியாவுக்கு விசா இல்லாமல் போய்வரமுடியும். இந்த வசதியைப் பாவித்து சிங்கப்பூரிலிருந்து சிட்னிக்கு நேரடி பறப்புக்கான ரிக்கற் எடுத்திருந்தான். இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு வந்த சந்திரனிடம், சிட்னிக்கான தன்னுடைய 'போர்டிங்பாசைக் கொடுத்து சிட்னிக்குப்போகும் விமானத்தில் ஏற்றிவிட்டான். ஆவுஸ்திரேலியாவுக்கு செல்லும் விமானம் பறந்தபின், சந்திரனின் கொழும்புக்கான போர்டிங்பாசுடன், கனகராசா ஸ்ரீலங்கன் விமானத்தில் ஏறும்போது பிடிபட்டுப் போனான். இந்தக் குற்றத்துக்காக அவனுக்கு ஆறு சவுக்கடியும் எட்டுமாத சிறைத் தண்டனையும் சிங்கப்பூரில் கிடைத்தது. சிங்கப்பூர் தமிழ் முரசில் வந்த மருமகனின் ஆள்மாறாட்டம் பற்றிய செய்தி, யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் படத்துடன் வெளிவரவே பொன்னையர் பெண்சாதி வீட்டுடன் சுருண்டு கொண்டார். தண்டனை முடிந்து வெளியே வந்தவுடன் தன்னுடைய பாடுகளுக்குக் கொழும்பு வீடொன்றைத் தன் பெயருக்கு மாமி பாக்கியத்திடம் எழுதி வாங்கிக்கொண்டே அவரை நிம்மதியாகத் தூங்க விட்டான்.

என்னதான் தில்லுமுல்லுகள் செய்தாலும் ஆக்களை அனுப்பும் விஷயத்தில் கனகராசா கரைகண்டவன். போகும் போது பொன்னையரை இயக்கம் சுட்டபின் அவர் பிணமாய் கிடக்கும் படம், பத்திரிகையில் வந்த செய்தி, சந்திரனையும் மாற்று இயக்கத்தவர்கள் சுடத்திரிகிறார்கள் என்று ஊர் விதானையின் லெற்றர்கெட்டில் கள்ளமாக ரைப்பண்ணிய கடிதம் என பல தஸ்தாவேஸுகளையும் சந்திரனிடம்

பத்திரமாகக் கொடுத்து அனுப்பியிருந்தான். அவற்றுடனேயே சந்திரன் சிட்னி விமான நிலையத்தில் இறங்கினான்.

விசாரணையின்போது பதட்டத்திலும், கேஸ் கொஞ்சம் இறுகட்டும் என்ற எண்ணத்திலும், தன்னுடைய வாக்குமூலத்தில் தாயைச் சாக்காட்டிவிட்டான். 'தகப்பனைக் கொலை செய்ததுக்கு நியாயம் கேட்கவென இயக்க 'காம்பு'க்கு போன இடத்தில் தாயும் கொல்லப்பட்டார்' என்பதை கை கால் மூக்குவைத்து நம்பும் படியாகவே கண்ணீருடன் ஒப்புவித்தான் இதனால் அவுஸ்திரேலிய சட்டப்படி பொன்னையர் பெண்சாதி செத்துப் போனார். இதனால்தான் சிநேகிதர்கள் எல்லோரும் தங்கள் பெற்றோரை அவுஸ்திரேலியாவுக்கு வரவழைத்தபோதும் சந்திரனால் தன் தாயை அழைத்துக் கொள்ள முடியவில்லை.

சிங்கப்பூர் குடிவரவு அதிகாரிகள், கனகராசாவின் விபரத்தைச் சிட்னிக்கும் அனுப்பியதால் ஸ்ரீலங்கா, சிங்கப்பூர் தொடக்கம் அவுஸ்திரேலியாவரை அவன் இப்பொழுது தலை காட்டுவதில்லை. இத்தகைய தில்லுமுல்லுகளின் பின்பே, எல்லா விமான நிலையங்களிலும் விமானத்தின் நுழைவாயிலில் வைத்து கடவுச்சீட்டையும் 'போடிங்பாசை'யும் சரிபார்க்கும் நடைமுறை அமுலுக்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

கனகராசா கனடாவில் சொந்தமாக 'பிட்ஸா ஹட்' நடத்துவதாக வெளியே பீத்தித் திரிந்தாலும், உண்மையில் அவன் அங்கு சம்பளத்துக்கு வேலை செய்கிறான் என்பது சந்திரனுக்கு நன்றாகத் தெரியும். ஒருவகையில் சந்திரனும் இதே புருடாதான். இருப்பினும் தகப்பனின் கொழும்பு வீட்டை எழுதி வாங்கிய வெப்பிசாரம் உள்ளுக்குத் தணியாது கனன்று கொண்டிருந்தது.

சந்திரன் அகதி அந்தஸ்துப் பெற்ற இரண்டு வருடங்களில் சிறிது சிறிதாக அவுஸ்திரேலியாவில் காலூன்றிவிட்டான். குடியுரிமை பெற்று அவுஸ்திரேலிய பாஸ்போட்டும் கிடைத்துவிட்டது. சிறிதாக ஒரு வீடியோ கடை

துவங்கியவன் அதைச் சிறிது சிறிதாகப் பெருப்பித்து இந்தியப் பொருள்கள் அனைத்தும் விற்கும் கடையாக மாற்றினான். இப்பொழுது அவன் ஒரு நகைக்கடை உட்பட நாலு கடைகளுக்குச் சொந்தக்காரன். பொன்னையரின் வியாபாரச் சூக்குமங்கள் அவனுடைய இரத்ததில் நன்றாகவே பாய்ந்தது. இப்பொழுதெல்லாம் இலங்கையிலும் இந்தியாவிலிருந்தும் நேரடியாகவே கொன்ரேயினர்களில் சாமான்கள் இறக்கி வியாபாரம் செய்கிறான். உருவத்தில் அவன் சாட்சாத் பொன்னையர். ஆனால் அவரைவிட பெரிய முதலாளியாக அவுஸ்திரேலியாவில் பரிணமித்தான்.

'ஊரில் ரோட்டளந்த நான், இப்ப இருக்கும் நிலையைப் பார்!' என்று ஊருக்குச் சொல்ல இந்தியாவிலிருந்து சினிமாக்காரரை அழைத்து நிகழ்ச்சிகள் நடத்துவது மட்டுமல்லாமல், அதை இலங்கைப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தினான். புங்குடுதீவு முருகன் கோவில் திருவிழாவுக்கு தாராளமாகவே காசனுப்பி 'பொன்னையற்றை மகன்' செல்வாக்கைப்பற்றி ஊர்ச் சனங்களைப் பேச வைப்பதிலும் வெற்றி கண்டான்.

இனியென்ன, அடுத்துக் கலியாணந்தான். தன்னுடைய காசைக் காட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ்ப் பெட்டையளை மடக்கப்பார்த்த அவனுடைய இலங்கை 'போர்முலா' வேலை செய்யவில்லை. அவனின் காசை தாராளமாகச் செலவு செய்து அவனுடைய 'ஸ்போர்ட்ஸ்' காரில் சில பெட்டையள் பவனி வந்ததுவரை, அவனுடனான தொடர்பை மட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

## 4

இவ்வளவு அமளிக்குள்ளும் வதனா கிளிநொச்சியில் தாயுடன் தங்கியிருந்து அங்குள்ள வைத்தியசாலையில் சேவையைத் தொடர்ந்தாள். இயக்கங்களின் கட்டளைகள்

ஒருபுறம், இரணுவத்தின் கெடுபிடிகள் மறுபுறம் என எல்லாவற்றையும் தனியனாகச் சமாளித்து வைத்தியத்தை ஒரு தவமாகச் செய்து கொண்டிருந்த வதனாவைப்பற்றி, பத்திரிகைகள் சிலாகித்தன.

புலிகள் இலங்கை அரசுடன் சமாதான ஒப்பந்தம் செய்திருந்த பொழுது, ஆனையிறவுப் பாதை திறந்து யாழ்ப்பாணத்துக்குப் போக்கு வரத்து சீராகவே, புலம் பெயர்ந்த தமிழர்கள் சரமாரியாக இலங்கைக்கு வந்து போனார்கள். அவுஸ்திரேலிய பாஸ்போட்டுடன் கொழும்பில் வந்திறங்கிய சந்திரன் காரொன்றைப் பிடித்துக் கொண்டு தாயிடம் யாழ்ப்பாணத்துக்குப் போகாமல் கிளிநொச்சிக்கு வந்தான். மின்சாரமில்லாமல் கிளிநொச்சி இருண்டிருந்தது. ஆனாலும், டாக்டர் வதனாவின் வீட்டைக் கண்டு பிடிப்பதில் அவனுக்கு சிரமமிருக்கவில்லை. கதவைத் தட்டினான். முன்னெச்சரிக்கையாக யன்னலைத் திறந்து பார்த்த பூரணத்துக்கு, மைம்மல் இருட்டில் பொன்னையர் வந்து நிற்பது போலத் தெரிந்தது.

'என்ரை அண்ணை...' என்று கத்தியபடி கதவைத் திறந்த பூரணம் வாசலிலேயே மயங்கிவிழுந்தாள்.

சத்தம் கேட்டு அரிக்கன் லாம்புடன் வாசலுக்கு வந்த வதனாவுக்கு விஷயம் விளங்கிற்று. சந்திரனின் உதவியுடன் தாயைத் தூக்கி முதலுதவி செய்தாள். கண் விழித்த பூரணம் சந்திரனை அழைத்து தன்னருகே இருத்தி, அவனின் கையை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தார். பூரணத்தின் உடம்பெல்லாம் வியர்த்தது. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. தாயின் நிலமை வதனாவுக்குப் புரிந்தது.

வதனா வீட்டுக்கு பகல் நேரம் போனால் தேத்தண்ணியுடன் அனுப்பிவிடுவார்கள் என்று சந்திரனின் வியாபார மூளை சரியாகவே கணக்குப் போட்டது. இதனால் திட்டமிட்டே மாமியார் வீட்டுக்கு இரவு நேரமாகப் பார்த்து வந்திருந்தான். அப்பொழுதுதான் அங்கு தங்கி சமயம் பார்த்து மாமியுடன்

கதைக்கலாம் என்பது திட்டம். மாமி மயங்கி விழுந்ததிலிருந்து தகப்பனே மாமியை வெல்வதற்கான துரும்புச் சீட்டென்பதை உணர்ந்து கொண்டான். இயக்கம் அவரை சுட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தபோது 'பூரணம்...,பூரணம்...' எனக் கூப்பிட்டதாக ரீல் விட்டான். இடையிடையே தன்னுடைய வியாபார நிலையங்கள் பற்றியும் அவுஸ்திரேலியாவில் தனக்குள்ள செல்வாக்கு பற்றியும் கதைகளை அவிழ்த்து விட்டான். இவன் எதற்கு அடிகோலுகிறான் என்பது வதனாவுக்கு நன்கு தெரியும். இதனால் வெளியே வராது வேளைக்கே தூங்கச் சென்றாள். காலையில் ஏழு மணிக்கு வதனாவுக்கு வேலை. ஆனால் மறுநாள் ஆறுமணிக்கே எழும்பி ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டாள். சந்திரனுக்கு இது ஏமாற்றந்தான். ஆனாலும் இதை அவன் எதிர்பார்த்தே வந்திருந்தான். காலைச் சாப்பாட்டின்போது சமயம் பார்த்து பக்குவமாகத் தான் வதனாவை மணம் முடிக்க விரும்புவதாகவும், இருவருக்கும் சேர்த்து ஸ்பொன்சர் பண்ணுவதாகவும், தாயின் சம்மதத்துடன்தான் இதைக் கேட்பதாகவும் சொன்னான்.

பூரணம் எதுவும் பேசவில்லை. கண்கள் கலங்கிவிட்டன. தேத்தண்ணியை ஆற்றி அவன் முன் வைத்துவிட்டு அமைதியாக இருந்தார்.

'மாமி, நீர் அடித்து நீர் விலகாது. அம்மா முந்தி உங்களுக்கு செய்ததெல்லாம் அப்பாவுக்கு தெரியாமல்தான் நடந்தது. நானும் சின்னப்பிள்ளை. கடைசிநேரத்திலை இதெல்லாம் அப்பாவுக்கு தெரிஞ்சதாலைதான், உயிர் போகேக்கை ஒருதரையும் கூப்பிடாமல் உங்களைக் கூப்பிட்டவர்.....' எனச் சொல்லி 'சென்ரிமென்ரல்' பொயின்ரில் கை வைத்தான் சந்திரன்.

அதற்கு மேலும் பூரணத்தால் அழுகையை அடக்க முடியவில்லை. சந்திரனைக் கட்டிப்பிடித்து விக்கி விக்கி அழுதார்.

'அப்பு நீ யாழ்ப்பாணத்துக்கு கவனமாய் போட்டுவா. எல்லாம் நல்லபடியாய் நடக்கும். வதனா இண்டைக்கு ஒப்பிரேசன் செய்யிற நாள். தியேட்டருக்குள் நிப்பாள். அவளுக்கு நான் விபரமாய்ச் சொல்லுறன். மச்சாளையும் விசாரிச்சதாய்ச் சொல்லு' என வழியனுப்பிவைத்தார் பூரணம்.

சந்திரன் அவுஸ்திரேலியா சென்ற பின் முதல் வேலையாக நல்ல லோயரைப் பிடித்து திருமணம் முடிக்கப்போகும் பெண்ணுக்கும், அவரில் தங்கியிருக்கும் தாயுக்குமான ஸ்பொன்சர் விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பி, மாமியாரின் பெயர் விலாசத்துக்கு அனுப்பியிருந்தான். சந்திரன் அனுப்பிய கடிதத்தை பூரணம் வாசிப்பதும் பின்பு, அதை ஸ்பொன்சருடன் சேர்த்து தபாலுறைக்குள் வைப்பதுமாக அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார். இதைப்பற்றி வதனாவுடன் பேச பூரணத்துக்கு தைரியம் வரவில்லை.

உண்மையில் சந்திரனின் பணத்திமிர் இன்னமும் அடங்கவில்லை. பணத்தைக் காட்டினால் இலங்கையில் எல்லாரையும் மடக்கலாம் என்ற அற்ப குணம் அவனுக்கு. இந்தப் புத்தி அவனுக்கு மட்டுமல்ல. எந்தவித படிப்புமில்லாமல் ஊரில் காவாலிகளாகத் திரிந்து விட்டு வெளிநாடுகளுக்கு சென்று கொஞ்சம் காசு உழைத்தபின், இலங்கையில் நன்றாகப் படித்து பட்டதாரிகளாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் பணிபுரியும் மச்சாள்மார்களையும், பணவசதியில்லாத வறிய குடும்பத்துப் பெண்களையும் துணிந்து பெண்கேட்கும் பலரை வதனாவுக்குத் தெரியும். கலியாணம் என்பது பிள்ளை பெறுவதற்காக இரண்டு மனித உடல்கள் ஒன்றுசேரும் சங்கதியல்ல. இப்படி மச்சான்மாரை மணம்முடித்து வெளிநாடு சென்ற பலர், கணவர்களின் தாழ்வுச் சிக்கலால் நரக வாழ்கை வாழ்வதை வதனா அறிந்திருக்கிறாள். இருப்பினும் தாயார் படும் வேதனையை எண்ணி சம்மதமோ மறுப்போ தெரிவிக்காமல் அமைதியாக இருந்தாள்.

ஆம்பிளைத் துணை இல்லாமல் பூரணம் தனியாளாக வதனாவுக்கு கலியாணம் பேசிய போதுதான் போர் சூழலிலும் கலியாணச் சந்தையிலுள்ள வில்லங்கங்கள் புரிந்தன. வதனாவுக்கு அழகும் படிப்பும் பதவியுமிருந்தும், வங்கியில் பணிபுரியும் மாப்பிளையே சீதனமாக கொழும்பில் வீடு கேட்டார். சீதனம் கேட்கும் எந்த மாப்பிளையையும் தான் கலியாணம் செய்யத் தயாரில்லை என வதனா கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். இதனால் வதனாவுக்கு இப்போது முப்பது வயது நிறைவடைந்தது விட்டது. வன்னிப்பகுதியில் உள்ள ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணர் அவள் என்பதால் இரவு பகல் பாராது வைத்திய சேவையிலேயே வதனா தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள். தனது சேவை வன்னி மக்களுக்கு அவசியந் தேவை என்பதை அவள் உணர்ந்திருந்ததால், வன்னியை விட்டு வேறு இடங்களுக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ போகவும் விரும்பவில்லை.

அப்பொழுதுதான் ஈழப் போராட்டத்தில் மூன்றங் கட்டப் போர் துவங்கியது. திருகோணமலையில் தண்ணீர்விட மறுத்ததில் துவங்கிய சண்டை, படிப்படியாக மன்னார் கிளிநொச்சியென வன்னிப் பிரதேசமெங்கும் வியாபித்தது. கிளிநொச்சிக்கு வந்த சிங்கள இராணுவத்தின் கண்களுக்கு முதலில் பட்டது, வைத்தியசாலையில் டாக்டராக பணி புரியும் வதனாவின் அழகே. காயம் பட்ட இராணுவத்தினருக்கு வைத்தியம் செய்ய முகாமுக்கு வரவேண்டுமென தொல்லை கொடுக்கத் துவங்கினார்கள். ஒருநாள் பின் இரவு நேரத்தில் நிறை வெறியில் வந்த இராணுவ மேஜர் ஒருவன் இராணுவமுகாமுக்கு உடன் வரவேண்டுமென சண்டித்தனம் செய்தான். சத்தம் கேட்டு அங்குவந்த நோயாளர்கள் அழுது குளறவே 'திரும்பியும் வருவன்' என சிங்களத்தில் சத்தமிட்டபடி சென்றுவிட்டான்.

வல்லூறுகளுக்கு நடுவில் வதனா இனி கிளிநொச்சயில் பணிபுரிய முடியாது. தாய் பூரணத்துக்கும் ஏக்கத்தில் காச்சல்

வந்து புலம்பத் தொடங்கி விட்டார். போட்டது போட்டபடியிருக்க அடுத்த நாள் கொழும்புக்குச் சென்ற செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் தாயுடன் கொழும்புக்கு வந்து விட்டாள்.

போரில் கிளிநொச்சி முழுவதும் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் இராணுவம் முல்லைத்தீவை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் அடுத்தநாள் அரச வானொலி செய்தி வெளியிட்டது. சிலநாகள் கழித்து புலிகளின் செய்தித்தளமொன்றில் கிளிநொச்சி வைத்தியசாலை குண்டுவீச்சினால் தரைமட்டமானதாகவும், அங்கிருந்த நோயாளர்கள் பற்றிய விபரம் தெரியவில்லை என்ற செய்தியை வாசித்தபின் ஆடிப்போனாள். அங்கு சிகிச்சைக்காக இருந்த ஒவ்வொரு நோயாளியின் முகங்களும் வரிசையாக வந்து பாடுபடுத்தியது. வாழ்கையில் அவளுக்கிருந்த எல்லா நம்பிக்கைகளும் அழிந்தன. பூரணத்தின் நிலமை மோசமாகி அவர் 'டிப்பிறெசன்' நிலைக்குத் தள்ளப்படவே அவுஸ்திரேலியாவுக்குப் போவது தான் இதற்கு இப்போதைய தீர்வு என நினைத்தாள். ஆனால் சந்திரனின் தயவில் அங்குபோவது அவளுக்கு உசிதமாகப்படவில்லை. சந்திரனின் குணம் அவளுக்கு நன்றாகவே தெரியும். அவனுடைய விருப்பு வெறுப்புகளும் செயல்பாடுகளும் வதனாவினுடையதுக்கு நேர் எதிர்மாறானது. அவுஸ்திரேலியாவில் டாக்டராக வேலை செய்வதாயின் அங்கு அதற்குரிய பரீட்சையில் சித்தியடைய வேண்டும். கையில் காசுமில்லாமல் உடனே வேலையும் எடுக்க முடியாத நிலையில் சந்திரனின் ஸ்பொன்சரில் போனால் அவன் தங்களை எப்படி நடத்துவான் என்பது அவளுக்குத் தெரியும்.

தன்னுடைய சொந்த முயற்சியினாலும் உழைப்பினாலும் தன்னுடைய வாழ்க்கையை சீராக அமைத்த அவளுக்கு அது இந்தளவுக்கு சறுக்குமென அவள் கனவிலும் நினைக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என்ற மன நிலையில் அடுத்த நாள் செஞ்சிலவைச் சங்கத்திலிருந்து

அறிமுகக் கடிதமொன்றை பெற்றுக்கொண்டு கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அகதிகளுக்கான வரிசையில் நின்றாள்.

கிளிநொச்சியில் வதனா செய்த மகத்தான சேவை வீண்போகவில்லை. ஒரு வெள்ளைக்கார அதிகாரி வதனாவை நோக்கிவந்தார்.

'நீங்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர்தானே? வணக்கம்! என் பெயர் தோமஸ். முதலாவது செயலாளர். உங்களை நான் கிளிநொச்சிக்கு வந்தபோது வைத்தியசாலையில் சந்தித்திருக்கிறேன்... என ஆங்கிலத்தில் சொன்னார்.

போராட்ட காலங்களிலும், போர் உச்சமடைந்த காலங் களிலும் பிறநாட்டு உயர் ஸ்தானிகராலயங்களிலிருந்தும், தூதுவராலயங்களிலிருந்தும் பல உயர் அதிகாரிகள் குறை நிறைகளைக் கேட்கவென வைத்தியசாலைக்கு வந்து போவதுண்டு. எல்லோரையும் அவளுக்கு இப்போது ஞாபகத்திலில்லை. உண்மையைச் சொல்லப்போனால் வெள்ளைக்காரர்கள் எல்லோரும் அவளுக்கு ஒரே மாதிரித்தான் தெரிந்தார்கள். அவர்களை இனங்காண்பதில் அவளுக்கு பாரிய சிக்கல் இருந்தது. இருப்பினும் மரியாதையின் நிமிர்த்தம் அவரை நினைவிருப்பதாக பாவனை செய்து புன்னகைத்தாள்.

வரிசையில் நின்றவர்கள் எல்லோரும் இவர்களை விடுப்புப்பார்க்கத் துவங்கவே, வரிசை சற்றே குழம்பியது.

'வாருங்கள், உங்களுடன் பல விடையங்கள் பேசவேண்டும். எனது அலுவலகத்தில் அமர்ந்து பேசுவோம்' என அவளைத் தனது அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று நிலமையைச் சுமுகமாக்கினார் அதிகாரி.

தேநீர் இரண்டு கப் வரவழைத்து, ஒன்றை வதனாமுன் வைத்தவாறு ஆங்கிலத்தில் தொடர்ந்தார்.

'கிளிநொச்சி ஆஸ்பத்திரி தரைமட்டமாக்கப்பட்ட செய்தி படித்தோம். அத்துடன் அங்கு பணிபுரிந்த பெண் டாக்டர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப் படுவதாகவும் எங்கள் செய்திப் பிரிவுக்கு தகவல் வந்தது. அப்பொழுது உங்களைப்பற்றி நினைத்தேன். நல்ல காலம் நீங்கள் தப்பிவந்தது....'

வதனா எதுவும் பேசவில்லை. பிரமை பிடித்தவள்போல் அதிகாரியின் முன் அமர்ந்திருந்தாள். குளிரூட்டப்பட்ட அறையிலும் அவளுக்கு வியர்த்தது.

'டாக்டர், உங்களுடைய சேவைஅர்ப்பணிப்பை, நான் நேரிலேயே கண்டிருக்கிறேன். உங்களைப் போன்றவர் களுக்காகத்தான் ஐ.நா.சபை, அகதி அந்தஸ்துக்கான சட்டத்தை உருவாக்கியிருக்கிறது' என்றவர், கணினியில் அவளது விண்ணப்பத்தை தயாரிக்கத் தொடங்கினார்.

வதனாவின் கண்முன்னே நம்பிக்கையின் ஒளிக்கீற்று மின்னலடித்தது.

'சேர், என்னைச் சார்ந்தே என்னுடைய அம்மா இருக்கிறார். நான் தனித்துப் போக முடியாது. அவரும் என்னுடன் வரவேண்டும். இங்கு நிலமை சீரானால் திரும்பி வந்துவிடுவேன். அதுவரை உங்கள் அரசாங்கத்தின் உதவியில் தங்கியிராது ஏதாவது வேலை செய்து வாழ வழியிருக்குமா...?"

அவளின் கோரிக்கை, அதிகாரிக்கு அவள்மேலிருந்த மதிப்பை மேலும் உயர்த்தியது. இணையத்தில் மேலும் சில தகவல்களைத் திரட்டியபின் அதிகாரி சொன்னார்.

'அவுஸ்திரேலியாவின் புறநகர் வைத்தியசாலைகளில், வைத்தியர்களின் பற்றாக்குறை உண்டு. அங்கே வெளிநாட்டு வைத்தியர்கள் அவுஸ்திரேலிய மருத்தவ சபையின் பரீட்சையில் சித்தியடையாமலே பணியாற்ற எங்கள் சட்டம் அனுமதிக்கிறது. மருத்துவ சபையின் பரீட்சையில் சித்தியடைந்தபின் நீங்கள் விரும்பிய இடத்தில் பணிபுரிய

முடியும். இது சம்மந்தமாகவும் முயற்சி செய்கிறேன்' என நம்பிக்கையூட்டி விடைகொடுத்தார்.

அங்கு நடந்த விபரங்களை வதனா தாய்க்குச் சொல்லவில்லை. விசா வந்தபின்பு மேற்கொண்டு யோசிப்போம் என அமைதியாகவே இருந்தாள். சில வாரங்கள் கழிந்தபின் அகதி அந்தஸ்துக்கான விசாவும், சிட்னியின் புறநகர் பகுதியிலுள்ள வூலன்கொங் வைத்தியசாலையில் டாக்டராக பணியாற்ற அனுமதியும் வந்துசேர்ந்தன.

பூரணத்துக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அடிக்கடி தமையன் பொன்னையரும் கனவில் வந்து போனார். இந்த அவதியில், வதனா வெளியே சென்ற நேரம் பார்த்து சந்திரனுக்கு போன்பண்ணி 'உன்ரை ஸ்பொன்சருக்கு உடனை விசா குடுத்திட்டாங்கள் தம்பி...' எனச் சொல்லி ஆனந்தத்தில் மிதந்தார் பூரணம்.

'நான் இவங்களுக்கு கட்டிற வருமான வரிக்கு உடனை விசா குடுத்திராட்டி, பிறகு தெரியும் எம்பசிக்காரனுக்கு ஆர் சந்திரனெண்டு... என சந்திரன் மாமியாருக்கு பீலா விட்டான்.

'நாங்கள் வாறநேரம் உங்கை தங்கிறதுக்கு குறைந்த வாடகையிலை ஒரு இடம்பாத்து வையப்பு' என சந்தர்ப்பத்தை தவறவிடாது ஆழம் பார்த்தார் பூரணம்.

'என்ன மாமி சொல்லிறியள்...? நீச்சல் குளத்தோடை ஆறு அறையிலை விசாலமான புது வீடு கட்டியிருக்கிறன். நீங்கள் வாடகை வீட்டுக் கதை பேசிறியள். இதெல்லாம் ஆருக்கு...?' புவனாவுக்கு தாலிகட்டி வீட்டுக்கு அழைத்துவரும் தோரணையில் பேசினான் சந்திரன்.

இவையெல்லாம் நடக்குமென்று தெரிந்தே, சந்திரன் ரிக்கற் அனுப்புவதற்கு முன்பு புவனா முந்திக்கொண்டாள். தன்னிடமுள்ள சேமிப்பில் ரிக்கற் வாங்கிக்கொண்டு தாயுடன் சிட்னியில் வந்திறங்கினாள்.

# 5

சந்திரன் புத்தம் பதிய பென்ஸ் காரில் வெகு ஆடம்பரமாகவே விமானநிலையம் வந்திருந்தான். அவன் உடம்பில் பூசியிருந்த நறுமண வாசனை நூறடிகள் பின்னால் வந்த புவனாவுக்கு மணத்தது. கார் தரிப்பிடத்திலிருந்த காரை அணுகுமுன்பு சாவியுடன் இணைந்திருந்த குமிழை அழுத்தி சந்திரன் 'ஷோ'க்காட்டவே, ஏ.ஆர்.ர்.மானின் மியூசிக்குடன் விளக்குகள் எரிய, கார்க் கதவுகளும் 'டிக்கியும்' தானாகவே திறந்து கொண்டன. 'ஜெனுவின் லெதரில்' இருக்கைகள் செய்யப்பட்டு பொலிஷ் போடப்பட்டிருந்தது. உள்ளேயிருந்து புதிய லெதரின் மணம் சந்திரனின் 'பெர்பூ'மை மீறிக்கொண்டு மூக்கைத் துளைத்தது. மகளுக்கு சுவர்க்க வாசல் திறந்துவிட்டதாக எண்ணி பூரணத்துக்கு மகா சந்தோஷம். ஆனால் புவனா, சந்திரனின் குறளிவித்தைகளைப் பார்த்து உள்ளுக்குள் சிரித்தவாறு தாயின் பின்னே அமைதியாக நின்றாள்.

'மாமி பின்னாலை ஏறுங்கோ. புவனா, முன் சீற்றுக்கு வா...,வசதியாக இருக்கலாம்' என்று முன் கதவைத் திறந்தபடி நின்றான் சந்திரன்.

'விமானப் பறப்பு முழுவதும் அம்மாவுக்கு சத்தியும் தலையிடியும். நான் பின்னுக்கு அம்மாவுடன் இருக்கிறேன்' எனச் சாட்டுச் சொல்லியபடி பின் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டாள் புவனா.

சந்திரனுக்கு இது விளங்காமலில்லை. இருப்பினும் 'என்ரை ஸ்பொன்சரிலை தானே மச்சாள் வந்திருக்கிறாள். போகப் போக நான் ஆரெண்டு காட்டிறன்...' என்று மனதுக்குள் கறுவியவாறே காரை ஸ்ராட் செய்தான்.

கார் பாதுகாப்புக் கடவையில், ஒரு ஆங்கிலேய பெண்மணி கடமையிலிருந்தாள். சந்திரன் தன்னுடைய வலது கையின் ஆள்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும்

இடையே நூறு டொலர் காசை இறுக்கிப் பிடித்தபடி அவளின் முகத்துக்கு நேரே தாளை நீட்டினான். மிகுதிப் பணத்தை தருவதற்கு தன்னிடம் சில்லறை இல்லை என்றதும், வேண்டு மென்றே அவளுடன் வாக்கு வாதத்திலீடுபட்டான். அவள் கோபப்படவில்லை. அமைதியாக புன்னகைத்தாள். சந்திரனின் ஆங்கில உச்சரிப்பு அவளுக்கு புரியவில்லையெனத் தெரிந்தது. சந்திரனின் ஒழுங்கற்ற ஆங்கில வசன அமைப்பும், அதைப் பேசிய தோரணையும் வழக்கமான அவனது திமிர்க் குணம் இன்னமும் மாறவில்லை எனத் தெரிந்தது. அவன் சிட்னியில் வாழும் தமிழர்கள் மத்தியிலே, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதை புவனா புரிந்துகொண்டாள்.

சந்திரனின் வீட்டைக் கண்ட பூரணம், திறந்த வாயை மூடவில்லை. சும்மா சொல்லப்படாது. சிட்னியின் செல்வந்தர்கள் வாழும் புறநகர்ப் பகுதியில், அரை ஏக்கர் காணியில் நீச்சல் குளத்துடன் ஆடம்பரமாகவும் விசாலமாகவும் வீட்டைக் கட்டியிருந்தான். வீதியிலிருந்து வீட்டு வாசல்வரையுள்ள வண்டிப்பாதைக்கு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிரனைற் கற்கள் பதித்திருந்தான். மிகுதி இடங்களில் உயர்ந்தரக புல்வகை வளர்க்கப்பட்டு, கம்பளம் விரித்ததுபோல வெட்டப்பட்டிருந்தது. பூமரங்களுக்கும் பழ மரங்களுக்குமிடையே, மின் விளக்குகள் ஒளிபரப்பின. வீட்டு வாசலில் பல வண்ணங்களில் கோலம் போடப்பட்டிருந்தது. அதனருகே அகலக் கரைபோட்ட காஞ்சிபுரம் சேலையில் இரண்டு பெண்கள் ஆலாத்தித் தட்டுடன் தயாராக நின்றார்கள். வாசலை நிறைத்து இன்னும் சில பெண்கள் அவர்களை வரவேற்க குடும்ப சமேதரராக நின்றார்கள். அவர்களுள் புங்குடுதீவு உறவினர்கள் சிலர் நிற்பது தெரிந்தது. பூரணத்தின் கால்கள் தரையில் படவில்லை. ஆகாயத்தில் மிதந்தார். அண்ணர் பொன்னையருக்கு மனதுக்குள் நன்றி சொல்லிக் கொண்டார்.

ஆனால் புவனாவுக்கு...? சிட்னிக்கு வந்தது முதல் நடப்பவை எல்லாமே கோமாளிக் கூத்துக்களாக தெரிந்தன. அவள் எதுவும் பேசவில்லை. அமைதி காத்தாள்.

அடுத்தநாள் இரவுச் சாப்பாட்டின்போது சந்திரன் தானாகவே கதையைத் துவங்கினான்.

'திருமணம் செய்யவெனக் கொடுக்கப்படும் விசா உபபிரிவு 300இல் வருபவர்கள், வந்து தொண்ணூறு நாள் களுக்குள் திருமணம் செய்ய வெண்டுமென்பது அவுஸ்திரேலிய அரச விதி. நாளைக்கு நல்லநாளெண்டு கோவில் குருக்கள் சொன்னவர் மாமி. கலியாணத்துக்கு 'நோட்டீஸ்' போடவேணும்.'

'அதுக்கென்ன தம்பி, உங்கடை வசதிப்படி ஒழுங்குகளைச் செய்யுங்கோவன்...'என்ற தாயை இடைமறித்த புவனா, 'நாங்கள் அந்த விசாவில் வரவில்லை' என்றாள்.

சந்திரனுக்கு ஆத்திரம் சிரசிலடித்தது.

'பின்னை எந்தவிசாவிலையடி வந்தனி 'வேசை'...' என்று வாயில் வந்த வசனத்தில் 'வேசை' என்பதை சந்திரன் கஷ்டப்பட்டு விழுங்கினாலும், அதன் முழு அர்த்தத்தையும் புவனா விளங்கிக்கொண்டாள்.

'எனக்கும் அம்மாவுக்கும் கொழும்பிலேயே 'அகதி அந்தஸ்து' அங்கீகரிக்கப்பட்டு நிரந்தரப் பிரஜைகளுக்கான விசா தந்திருக்கிறார்கள்.' பதட்டப்படாமல் அமைதியாகவே சொன்னாள் புவனா.

'அகதியாகவா...?' ஏளனமாகச் சிரித்தான் சந்திரன், முன்பு தான் அகதி அந்தஸ்து கேட்டு கள்ளமாக அவுஸ்திரேலியா வந்திறங்கியதை மறந்து.

'அதிலென்ன தப்பு? நான் உண்மையான அகதி. அகதி அந்தஸ்து பெற எங்களுக்கு பூரண தகுதியுண்டு' என குத்தலாகச் சொன்னவள், அடுத்த வாரம் நான் வேலைக்கு போக வேண்டும்' என்றாள்.

வூலன்கொங் வைத்தியசாலையில் தனக்கு வேலை கிடைத்த விபரத்தை சொல்ல சந்தர்ப்பம் கொடுக்காத சந்திரன் தன் தொனியை உயர்த்திச் சொன்னான்.

‘இஞ்சை இருக்கிறவங்களுக்கே வேலையில்லை, இவவுக்கு தட்டிலை வேலை வைச்சுக்கொண்டு வரச்சொல்லி அழைக்கிறாங்கள். நாளைக்கு கடைக்கு வரச்சொல்லுங்கோ, எங்களுக்கும் சாமான் அடுக்க ஆள் வேணும். இங்கை நடக்கிறதெல்லாம் நல்லதுக்கில்லை மாமி. இது ஸ்ரீலங்கா இல்லை எண்டதை சொல்லி வையுங்கோ. இங்கை சுழியோடுறதுக்கு ஒரு கெட்டித்தனம் வேணும்.’

புவனாவுக்கு இரண்டு ‘போடு’ போடுவமோ எனவும் சந்திரனுக்கு கைகள் துருதுருத்தன. தன்னைக் கட்டுப்படுத்துவதென்றால் அங்கிருந்து போவது நல்லதெனத் தோன்றியது. பேர்சை எடுத்து பின் பொக்கற்றுக்குள் செருகியபடி வெளியே சென்று விட்டான்.

பூரணம் பேயறைந்தது போல வியர்த்து விறுவிறுக்க ஒரு மூலையில் நின்றார். புவனா எதற்கும் அலட்டிக் கொள்ளவில்லை. தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்று படுத்துக்கொண்டாள். தாய் பூரணம் தூங்கவில்லை. சந்திரன் வரும்வரை காத்திருந்தார். அதிகாலை மூன்று மணிக்கு நிறை வெறியில் வந்த சந்திரன், ஹோலிலுள்ள ஷோபாவில் விழுந்து இரவு முழுவதும் புசத்திக் கொண்டிருந்தான். அவனது புசத்தலில் தமிழிலும் ஆங்கிலத்திலுமுள்ள கெட்ட வாத்தைகளெல்லாம் தாராளமாகவே வந்தன.

சந்திரனின் வீட்டிலிருப்பது நல்லதல்ல, ஆபத்தானதும் கூட. சந்திரன் துணிந்து எதையும் செய்யக்கூடியவன். இது புவனாவுக்கு நன்கு தெரியும். மாறுநாள் காலையில், இலங்கையிலிருந்து கொண்டுவந்த சர்வதேச அழைப்பு களுக்கான ‘ரோமிங்’சிம் காட்டைப் பொருத்தி, தான்

சிட்னியில் தங்கியிருக்கும் விலாசத்தை வூலன்கொங் வைத்தியசாலை நிர்வாகிக்குத் தெரிவித்து, உடனே தான் அங்கு வரவிரும்புவதாகச் சொன்னாள்.

அடுத்த ஒரு மணித்தியாலத்துள் ஆஸ்பத்திரியிலிருந்து குறுஞ்செய்தி வந்திருந்தது. வைத்தியர்களுக்கான வைத்தியசாலைக் குடியிருப்பில் அவளுக்காக தளபாடங் களுடன் கூடிய ஒரு அப்பாட்மென்ற் ஒதுக்கியிருப்பதாகவும், புவனா சொன்ன விலாசத்துக்கு மாலை நான்கு மணிக்கு வாகனம் அனுப்பவதாகவும் குறுஞ்செய்தி தெரிவித்தது.

என்னதான் இருந்தாலும் சந்திரனுக்கு சொல்லாமல் போவது முறையல்ல. அவன் தன்னுடைய கடைகளின் கணக்குகளை முடித்துவர இரவு எட்டு மணியாகிவிடும். தன்னுடைய அலை பேசியிலேயே அவனைத் தொடர்பு கொண்டாள். புவனாவின் குரலைக் கேட்டவுடன், 'மச்சாள் பதத்துக்கு வந்திருக்கிறா' என்ற நினைப்பில், 'என்ன, கடைக்கு வேலைக்கு வாறியோ?' என்றான் மறுமுனையில் பரிகாசமாக.

தனக்கு வேலை கிடைத்த விபரத்தையும், மாலை நான்கு மணிக்கு வாகனம் வரவிருக்கும் தகவலையும் சொன்னாள். மறுமுனையில் இரண்டு தூஷண வார்த்தைகள். சிறிய மௌனம். பின்பு இணைப்புத் துண்டிக்கப்பட்டது.

அறிவித்தபடி நான்கு மணிக்கு வைத்தியசாலை வாகனம் வந்தது. உறவினர் வரவேண்டுமென்ற காரணத்தை சாரதிக்கு சொல்லி ஐந்து மணிவரை சந்திரனுக்காகக் காத்திருந்தார்கள். அலைபேசியில் பலமுறை அழைத்த போதும் தொடர்பு துண்டிக்கப்பட்டது. சந்திரனுக்கு நன்றிசொல்லி ஒரு கடிதமெழுதி மேசையில் வைத்தபின் முன்கதவை இழுத்துச் சாத்தினாள்.

'மகளா, அண்ணன் மகனா?' மனப்போராட்டத்திலே பிரமை பிடித்து வெளிவாசலில் நின்றார் பூரணம். நிலமையை உணர்ந்த புவனா தாயைக் கைத்தாங்கலாக அழைத்து வந்து வாகனத்தில் அமரச்செய்தாள்.

புதிய சூழ்நிலை. புதிய வேலை. நவீன தொழில் நுட்பம், எல்லாம் புவனாவுக்கு நன்கு பிடித்துக் கொண்டன. வேலையில் அவளுக்கிருந்த அர்ப்பணிப்பும் சுறுசுறப்பும் வைத்தியசாலை வட்டாரத்தில் நல்ல பெயரை வாங்கிக் கொடுத்தது. பூரணத்துக்குப் பொழுது போகவில்லை. மனப்புழுக்கம் நரக வேதனையைத் தந்தது. அழுதாலும் பிள்ளையை அவளே பெறவேண்டுமென்பது புவனாவுக்கு தெரியாததல்ல. இந்த பிரச்சினையிலிருந்து தாய் தானாகவே மீண்டு வரவேண்டு மென்று அவள் அமைதியாக இருந்தாள்.

சந்திரன் வீட்டில் புவனா வாழாததும், வூலன்கொங் வைத்தியசாலையில் அவள் பணிபுரிவதும், கொழும்பில் அகதி அந்தஸ்து பெற்று வந்ததும், கிசுகிசுவென சிட்னிவாழ் தமிழர்களிடையே பரவியது. சந்திரனின் திமிர்க் குணத்தைப் பிடிக்காத புங்குடுதீவு ஊரவர்கள் மேலதிகமாக காது-கண்-மூக்கு வைத்து கிசுகிசுத்தார்கள். இந்தச் செய்தி உறவினர்கள் மத்தியில் யாழ்ப்பாணத்திலும் பரவியது. தான் இவ்வளவு நாளும் கட்டிக்காத்து வந்த செல்வாக்கும் அந்தஸ்தும் புவனாவால் முற்றாக அழிந்துபோனதாக சந்திரன் எண்ணினான். ஏமாற்றம், கோபம், திமிர்க்குணம், கேலிப்பேச்சுகளுக்கு நடுவே, நண்பர்கள் உசுப்பேத்த புவனாவை 'தூக்கிவர' முடிவு செய்தான்.

நேரகாலம் தெரியாது ஒரு நாள் 'தண்ணி'யைப் போட்டுவிட்டு, அடியாட்களுடன் வதனா பணிபுரிந்த வைத்தியசாலை வாட்டுக்குள் நேராகவே சென்றான். அங்கு கலாட்டாவில் ஈடுபட்டு புவனாவை கடத்த முயல, பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உதவியுடன் வைத்தியசாலை நிர்வாகம் அவர்களை பொலீசில் பிடித்துக் கொடுத்தது.

திறமான வழக்கறிஞர்கள் வைத்து வழக்கை நடத்தியும் வைத்தியசாலை நிர்வாகம் ஆதாரங்களுடன் வாதாடியதால், ஆறுமாத சிறைத்தண்டனையும், தொடர்ந்து 'நான்கு வருடங்களுக்கு, புவனா வசிக்கும் மூன்று மைல்

சுற்றுவட்டாரத்துக்கு சந்திரன் போகக்கூடாது' என்றும் தீர்ப்பாயிற்று.

சிறை வாழ்க்கை முடிந்து பல்லிழந்த புலியாகவே சந்திரன் வெளியே வந்தான். புவனாவால் சந்திரன் சிறைசென்றது தங்கள் எல்லோருக்கும் நேர்ந்த அவமான மாகவே கனகராசா உணர்ந்தான். இந்தியாவில் ஒரு டாக்டரைப் பார்த்து கணக்குத் தீர்க்கும் யோசனையை அவன் கனடாவிலிருந்து முன்மொழிந்தது மட்டுமல்லாமல் கலியாண ஏஜன்சிமுலம் இந்தியாவில் டாக்குத்தர் பெம்பிளை ஒன்றையும் தேடிப்பிடித்தான். இதன்மூலம் கொழும்பிலுள்ள பொன்னையரின் வாழைப்பழக் கடையை எழுதிவாங்க அவன் பிளான் போட்டது சந்திரனுக்கும் அவனுடைய தாய்க்கும் தெரிய வாய்ப்பில்லை.

## 6

வடபழனி முருகன் கோவிலில் கலியாணம் இனிதே நடந்தது. எட்டு மாதங்களின் முன்பே சந்திரன் றிஜிஸ்ரார் கந்தோரில் திருமணத்தைச் சட்டபூர்வமாக பதிந்திருந்தான். இந்தக் கால எல்லைக்குள் விசா நடைமுறைகள் பூர்த்தியாக்கப்பட்டு மனைவி வாணிக்கு அவுஸ்த்திரேலியா செல்ல விசா கிடைத்துவிட்டதால், மறுநாளே வாணியுடன் சிட்னி வந்து இறங்கினான். சரிந்த செல்வாக்கை நிமிர்த்தி எடுக்க, சிட்னி 'ஒப்ரா ஹவுஸ்' அருகே, 'ஹாபர்' பாலத்தின் கீழே உள்ள பூங்காவில் வண்ண விளக்குகள் ஒளிர, திருமண வரவேற்பு உபசாரத்தையும் வெகு ஆடம்பரமாக நடத்தி முடித்தான். புங்குடுதீவு உறவினர்கள் மூலம் மாமி பூரணத்தை அழைக்க முனைந்தபோதும் அது கைகூடவில்லை. சகல புதினங்களும் உறவினர்கள் மூலமாக, வதனாவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.

கடையில் சாமான் அடுக்க, புவனாவை அழைத்தவன் சந்திரன்! இன்றைய நிலையில் தன்னுடைய மனைவி வாணி, சிட்னி வைத்தியசாலை ஒன்றில் புவனாவுக்குச் சமமாக டாக்டராக பணிபுரிய வேண்டுமென்று அவதிப்பட்டான். இதற்காக மலைகள் பலவற்றை புரட்டியெடுத்த பொழுதிலும் சுண்டெலியே அகப்பட்டது போல, சகல மட்டங்களில் அவன் முயற்சி செய்தும், நெடுந்தொலைவிலுள்ள கிராமப்புற வைத்தியசாலைகளிலேயே வாணிக்கு இடம் கிடைக்கலாம் என்கிற நிலையே மிஞ்சியது. முன்பின் தெரியாத வாணியைக் கலியாணம் செய்து 'ஷோ'க்காட்டிய சில நாள்களுக்குள், பிரிந்திருக்க சந்திரன் விரும்பவில்லை. இப்படித் தூரத்தே மனைவியை வேலைக்கு அனுப்பிய சிலருடைய வாழ்க்கை 'கிலிசகேடாகி' போனதை சந்திரன் அறிவான். அவனுக்கு இப்பொழுதுதான் வாழ்க்கையின் உண்மையான 'தாத்பரியம்' புரிந்தது. பிறந்த நாள் தொடக்கம் பணத்திமிருடனேயே வாழ்ந்து பழக்கப்பட்ட அவனுக்கு இப்பொழுது மங்குசனி போலும். எல்லாமே சாணேற முழம் சறுக்கின.

கஷ்டங்களின் மத்தியிலே வாழ்ந்து பழக்கப்பட்டவள் வாணி. சிட்னிவாழ்கை அவளுக்குப் புதிசு. கடல்போன்ற சந்திரனின் வீடும் அங்கு தாராளமாகப் புழங்கும் 'டொலர்களும்' அவளுக்கு பிரமிப்பை ஏற்படுத்தின. வருமான வரி ஏய்ப்புக்கு வசதியாக, கடைவருமானத்தின் பெரும்பகுதியை வங்கியில் வைப்புச் செய்யாமல், வீட்டிலுள்ள இரும்பு அலுமாரியில் கட்டுக்கட்டாக அடுக்கியிருந்தான். கட்டுகளுக்கு நடுவே நகைக்கடை நகைகளும் பெட்டிபெட்டியாக அடுக்கப் பட்டிருந்தன.

சகல வசதிகளும் வீட்டிலிருக்க தான் ஏன் வேலை செய்ய வேண்டும்? என்ற எண்ணத்தில் வேலைக்காக வாணி எந்த முயற்சியும் எடுக்கவில்லை. சந்திரனிடமுள்ள பண வசதிகளை அவள் தாராளமாகவே அனுபவித்தாள்.

இந்தியாவிலுள்ள தம்பிக்கும் தாய்க்கும் மாதந்தோறும் பணமனுப்பினாள்.

வாணியைத் திருமணம் செய்த நோக்கம் சரியாக நிறைவேறாத 'அந்தரம்' சந்திரனுக்கு. அவளுடன் தான் இல்லற சுகம் அனுபவிப்பதிலும் பார்க்க, புவனாவுக்கு பாடம் படிப்பிப்பதே அவனுக்கு முக்கியம். இதனால் வீட்டில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் துவங்கின. மதுவெறியிலே இரவுகளில் வாணியை அடிக்கவும் துவங்கினான். மொத்தத்தில் புங்குடு தீவுக்கலாசாரமும், சென்னை 'குயில்குப்பத்து வாழ்கை முறையும் அடியோடு ஒத்துப்போகவில்லை.

சந்திரனுக்கு மனச்சஞ்சலங்களும் கஷ்டங்களும் வரும்போதெல்லாம் ஹவாய் இந்துத் துறவிகள் மடத்துக்கு சென்றுவிடுவான். இந்த மடம் சற்குரு சிவாய சுப்ரமணியசுவாமி என்ற இந்துப்பெயரைச் சூட்டிய வெள்ளைக்கார துறவியால் ஆரம்பிக்கப்பட்டது. அவரது மறைவின் பின் தற்பொழுது சற்குரு போதிநாதவேலன் சுவாமிகளால் நிர்வகிக்கப்படுகிறது. அவரும் ஓர் அமெரிக்க வெள்ளையர். இவர்கள் இந்துமத தத்துவங்களின் ஈடுபாட்டினால் துறவிகளானவர்கள். சுப்ரமணியசுவாமி காலத்திலிருந்தே அவன் ஹவாய் துறவிகள் மடத்துக்குச் செல்வதுண்டு. தனது வியாபார முன்னேற்றத்துக்கு சுப்ரமணியசுவாமியின் ஆசியே காரணமென பரிபூரணமாக நம்பினான். இதனால் மடத்துக்கு நிறையவே நன்கொடைகளும் வழங்கியிருக்கிறான். சந்திரன் வாழ்க்கையில் செய்யும் நல்ல காரியம் இது ஒன்றுதான் என நண்பர்கள் அவனுடைய முதுகுக்குப் பின்னால் குசுகுசுப்பதுண்டு.

சந்திரன் தன்னை 'ஏன் கட்டினான்?' என்ற விபரத்தை வாணி விரைவில் அறிந்துகொண்டாள். இந்த வார்த்தமானத்தை வாணிக்கு சொல்வதற்காகவே ஊரவர்கள் அடிக்கடி சந்திரனின் வீட்டுக்கு வந்துபோனார்கள். சந்திரனின் கதைக்கு' கண்-காது-மூக்கு வைத்துச் சொல்லி வாணிக்காக முதலைக் கண்ணீர் வடித்தார்கள்.

சந்திரனின் ஆய்க்கினை தாங்காமல் மூன்றுமுறை அவுஸ்திரேலிய மருத்துவ சபையின் அங்கீகாரம் பெற, பரீட்சை எழுதியும் வாணியால் சித்திபெற முடியவில்லை. மூன்று முறைக்குமேல் இந்த சோதனை எடுக்கமுடியாது என்பதைக் கனகராசா கனடாவில் இருந்தவாறே இணையத்தில் சுழியோடி அறிந்து கொண்டான். தில்லுமுல்லுகளின் மொத்த உருவம் கனகராசா. சந்திரன்–வாணி திருமண விஷயத்திலும் தன் கைவரிசையைக் காட்டியிருந்தான். சந்திரனை அலை பேசியில் தொடர்பு கொண்டவன், வாணி பற்றிய சில உண்மைகளைக் கக்கினான்.

'வாணி எம்.ஜி.ஆர் மருத்துவக் கல்லூரியில் படிக்கவில்லையாம். ஆதிதிராவிடர்களுக்கான கோட்டாவில் உதவிப் பணம் பெற்று, குறைந்த புள்ளிகளுடனேயே தனியார் மருத்துவக் கல்லூரியில் படித்தவளாம். ஐந்துவருடப் படிப்பை எட்டுவருடங்களில் முடித்து, தட்டுத்தடுமாறி டாக்டரானவளாம். அதனால்தான் அவுஸ்திரேலிய மருத்துவ சோதனையில் சித்திபெற முடியவில்லை' எனச் சொல்லிச் சிரித்ததன் மூலம், கொழும்பிலுள்ள வாழைப்பழக்கடையை எழுதித் தராததுக்கு வஞ்சம் தீர்த்துக் கொண்டான்.

வாணியின் தம்பி கலைச்செல்வன் சென்னை திரைப்படக் கல்லூரியில் டிப்ளோமா படித்தவன். சில படங்களுக்கு உதவி இயக்குனராய் பணிபுரிந்தவன். சினிமாப் படம் ஒன்றினைத் தானே இயக்க வேண்டுமென்பது அவனுடைய ஆசைகளும் கனவுகளும். அவன் உதவி இயக்குனராய் பணிபுரியும் மெகா பட்ஜெட் படமொன்றின், பாடலுக்கான ஸூட்டிங் சிட்னியில் நடந்தது. அதற்கு கலைச்செல்வனும் சிட்னி வந்திருந்தான். வழமைபோல சந்திரன் இதுபற்றி சிட்னி எல்லாம் பீற்றித் திரிந்தான். சந்திரனின் சிபார்சில் பலர் ஸூட்டிங் பார்த்தார்கள். தமிழ் வானொலிகளுக்கு, படத்தில் நடிக்கும் நடிகர் நடிகைகளுடன் பேட்டியும் ஒழுங்கு செய்தான். மொத்தத்தில் கலைச்செல்வனின் வரவால் சந்திரன் புத்துணர்ச்சி பெற்று வலம் வந்தான் என்பது உண்மை. ஸூட்டிங் முடிந்ததும்

ஒரு கிழமையாவது தங்களுடன் இருந்து போகுமாறு கலைச்செல்வனை வற்புறுத்தித் தங்கவைத்தான். இதன் மூலம் தனக்கும் தனது கடைகளுக்கும் சினிமா விளம்பரம் கிடைக்குமென்பது சந்திரனின் கணக்கு.

'சந்திரன் ஒரு படம் தயாரிக்கலாமே?' என சகோதரியிடம் ஆழம்பார்த்தான் கலைச்செல்வன். இதன் மூலம் தான் இயக்குனராய் வந்துவிடலாமென்பது அவனது கனவு. குறுகிய காலத்துக்குள்ளேயே சந்திரனை முற்றாக படித்து வைத்திருந்தாள் வாணி. 'மழைக்கால் இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பது வாணிக்குத் தெரியும். சந்திரன் வியாபாரத்தில் எதில் காசுபோடவேண்டும், எதில் போடக்கூடாது என்பதிலே மிகவுந் தெளிவாக இருந்தான். பொன்னையரின் இரத்தமென்றால் சும்மாவா?

சந்திரனின் கதைகளை ஆதியோடு அந்தமாக தம்பியாருக்குச் சொன்னாள் வாணி. அவனுக்கு மது வெறியேறும் போதெல்லாம் மருத்துவப் பரீட்சை சித்தியடையாததைச் சொல்லி தன்னை அடித்துத் துன்புறுத்துவதாகவும் சொல்லி அழுதாள்.

கலைச்செல்வனின் கோடம்பாக்க மூளை, தனது வாழ்க்கைக்கான புதிய 'கதை-வசனம்' தயாரிப்பதிலே தீவிரமாக ஈடுபடலாயிற்று!

## 7

என்றும் இல்லாத அளவுக்குக் கலைச்செல்வன், வாணியின் துன்பங்களையும் சோகங்களையும் கேட்டு மனம் வருந்துவதாக நடித்தான். தங்கக்கூட்டிலே அவள் அடைக்கப்பட்டிருப்பதை உணரச் செய்தான். அவுஸ்திரேலியாவில், சந்திரனின் கெடுபிடிகளையும் அவனுடைய உறவினர் வட்டத்தையும் மீறி அவளாலே எதுவும் செய்ய முடியாதென்பதை எடுத்துச்

சொன்னான். எதிர்காலத்தில் எல்லோரும் ஆச்சரியப்படும் வகையிலே, வடபழனியிலுள்ள விஜயா மருத்துவமனையிலும் பார்க்கச் சிறந்த மருத்துவமனையிலே, அதன் உரிமையாள ராக வலம் வரும் கலர்கலரான கனவுகளிலே வாணியைச் சஞ்சரிக்கச் செய்தான். இதன் மூலம், சந்திரனின் சொத்துக்களைச் சூறையாடிச் செல்வதற்கான அனைத்துத் திட்டங்களையும், அவன் கெட்டித்தனமாகவும் கோடம்பாக்க நண்பர்களின் அமோகமான ஆலோசனைகளுடனும் கச்சிதமாக வகுத்தான்.

இவற்றைச் செய்யும் பொழுதெல்லாம், தமிழில் முதலாவது கலர்படமான 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்கிற படம் மனத்திரையில் ஓடியது. 'பொலிவூட்' வெற்றிப் படங்களையும் விஞ்சும் வகையிலே ஒரு 'மெகா' படம் எடுப்பது பற்றிய கனவுகளிலே கலைச்செல்வன் ஈடுபடலானான்.

திரவியம் உள்ள குகையை அவன் அடைந்தாகிவிட்டது. அதிலுள்ள திரவியத்தைச் சுருட்டிக்கொண்டு சென்னைக்கு 'எஸ்கேப்' ஆவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பிசிறின்றி, மிகவும் கமுக்கமாகச் செய்து முடித்தான்.

தன் முதுகின் பின்னால் இத்தகைய கலர் கனவுகளைச் சுமந்து கொண்டு இவர்கள் அலைவதை அறியாத சந்திரன், தன் வியாபாரங்களிலே சந்தித்த நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைக் கண்டறியும் முயற்சியிலே அல்லாடிக் கொண்டிருந்தான். சென்னையில் கலியாணம், சிட்னியில் ஆடம்பர வரவேற்பு, குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி, கலைச்செல்வனின் வரவு, சினிமாக்காரர்களுடன் கூத்தடித்தல் எனப் பல பிற ஜோலிகள் குறுக்கிட்டதினால், கடைகள் அவனுடைய நேரடி முகாமையின்றி தடம்மாறி ஓடிக்கொண்டிருப்பதை, அவன் காலம் தாழ்த்தியே உணரக்கூடியதாக இருந்தது. கடையிலே வேலை செய்தவர்கள் பெருந்தொகை பணத்தினைக் கையாடல் செய்தது தெரிய வந்தது. நகைக்கடைக் கணக்கில் ஏராளமான குளறுபடிகள்.

சந்திரன் தீயை மிதித்தவன் போலானான்!

வியாபார நஷ்டங்களை தோராயமாகக் கணக்கிட்டு முடிய நள்ளிரவு தாண்டிவிட்டது. சோர்வினையும் வலியையும் போக்கக் குடித்தான். வழக்கத்திலும் அதிகமாகவே அன்று குடித்தாலும் வெறியேறவில்லை. அதிகாலை நான்கு மணியளவில் வீட்டுக்குத் திரும்பினான். வீடு அமைதியில் உறங்கியது. வாணியைக் காணவில்லை. கலைச்செல்வனின் அறையை எட்டிப் பார்த்தான். அவன் அங்கு தங்கி இருந்ததற்கான எந்தவித அடையாளமும் தென்படவில்லை.

ஏதோ அவனுடைய பிடரியில் ஓங்கி உதைத்தது போல இருந்தது. பணம் நகைகளைத் தேடினான். அவை பத்திரப்படுத்தியிருந்த இரும்பு அலுமாரி வழித்துத் துடைக்கப் பட்டிருந்தது.

புதிய வாழ்வு தேடி ஆவுஸ்திரேலியாவுக்கு வந்த வாணி, தன் தம்பி கலைச்செல்வன் ஊட்டிய புதிய கனவுகளைச் சுமந்து கொண்டு இந்தியாவுக்கு சென்றுவிட்டாள். பொலீசுக்கும் செல்ல முடியாது. இவையெல்லாம் வரி ஏய்ப்புக்காக வீட்டில் பத்திரப்படுத்திய பணமும் நகைகளும். வாணிமீதும் தம்பிமீதும் எப்படிப் பழிதீர்ப்பது என்று சந்திரன் மூளையைக் கசக்கிக் கொண்டு பைத்தியம் பிடித்தவன் போலத் திரிந்தான்.

இந்த நிலையிலேதான் யாழ்ப்பாணத்திலுள்ள உறவு களிடமிருந்து அந்தத் தொலைபேசிச் செய்தி வந்தது.

'பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், அவுஸ்திரேலியா சிட்னியிலே வர்த்தகப் பிரமுகராக வாழும் சந்திரனின் தாயாருமாகிய பாக்கியம் யாழ்ப்பாணத்தில் காலமானார்...!'

தாயாரின் உடலைப் பாதுகாக்கும்படியும், தான் ஊர்வந்ததும் மரணச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்ளலாமெனவும் உரிமை உடையவர்களுக்கு

அறிவுறுத்தல் செய்தான். ஊர் செல்வதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதிலே சந்திரன் தனி மரமாகிவிட்ட போதிலும், மனம் தளராது துரித நடவடிக்கைகளிலே இறங்கினான்.

'எல்லாம் அந்த 'வேசை' புவனாவால் வந்தது' என்று திட்டவும் சுரத்து இல்லாமல் போனது. வயிற்று வலியை விலைபேசி வாங்கிவந்த 'மோட்டு'த்தனம் பூதமாக எழுந்து நின்றது. இந்த மனக் கவலைகளிலும் பார்க்க, மண்பற்றும், புங்குடுதீவிலே பொன்னையர் ஆட்சி செய்த செல்வாக்கும் அவனுள் சடைத்தது. அவருடைய பெயரை நிலைநாட்ட, அவருக்கு சகல செல்வங்களும் பொங்க இல்லாளாய் வாழ்ந்த பாக்கியத்தின் ஈமைச் சடங்குகள், பிறந்த மண்ணிலே ராஜ மரியாதைகளடன் நடத்தப்பட வேண்டும் என்கிற ரோஷமும் ராங்கியும் அவன் மனசுள் ஒவ்வொரு நிமிஷமும் வியாபிக்கலாயிற்று. அதற்கு அப்பால் எவ்வித ஆசையும் இல்லை என்கிற வெறுமையையும் உணர்ந்தான்.

'வந்து பார்த்துக் கொள்ளலாம்' என்கிற தீர்மானத்துடன் பெரிய கடன் தொகையை வசப் படுத்திக் கொண்டு ஊருக்குச் சென்றான்.

பாக்கியத்தின் ஈமச் சடங்கும், ஏனையனவும் அந்திரட்டி உட்பட ஊர் மெச்சும் வகையில், எந்தவித குறையும் வைக்காமல் டாம்பீகமாகச் செய்து முடித்தான். தன் பணச்செருக்கும், அது தந்த அதிகார வெறிகளும் தாயின் சிதையிலே பொசுங்கிச் சாம்பலானதை சந்திரன் திடீரென உணர்ந்தான். சுடலை ஞானம் பெற்ற பக்குவம் அவனுக்கு. சின்ன வயதிலே கட்டி எழுப்பிய கனவுகளின் சிதையிலே, அவநம்பிக்கைகளை அடித்தளமாகக் கொண்டு தான் எழுப்பிய கனவு மாளிகைகள் மணலிலே கட்டப்பட்டது போன்று சிதைந்துபோனதை சிட்னி திரும்பியதும் தெரிந்து கொண்டான்.

'போதுமடா சாமி' என்கிற விரக்தியில் மனம் பக்குவமடைந்திருந்தது.

சந்திரனின் இரண்டு கடைகளும் நகை மாளிகையும் திவாலாகும் நிலையிலிருந்தன. வந்த விலைக்கு வட இந்திய வியாபாரி ஒருவனுக்கு விற்றான். அந்தப் பணவரவு அவனுக்கு இருந்த கடன்களை அடைக்கப் போதுமானதாக இருக்கவில்லை. தன் வீட்டையும் விற்று எல்லாக் கடன்களையும் 'பொன்னையர் மானம்' என்கிற ராங்கியுடன் அடைத்தான்.

கையிலே ஒரு கணிசமான தொகை தேறியது. அதை 'மூலதன'மாக வைத்துக் கொண்டு. மீண்டும் சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் சாதுர்யம் சந்திரனிடமிருந்தது. ஆனால் தாயின் சிதையிலே ஏற்பட்ட ஞானம் கற்பித்த வழியையே அவன் தேர்ந்தெடுத்தான்.

கையிலிருந்த பணத்துடன் அவன் நேரே ஹவாய் இந்து துறவிகள் மடத்தில் வந்திறங்கினான். கடைகள் விற்ற காசை துறவிகள் மடத்தின் கணக்கில் வரவு வைத்த பின்பே அவனால் நிம்மதியாகத் தூங்க முடிந்தது.

புங்குடுதீவில் 'ன்' ஆகத் துவங்கிய சந்திரன், இப்பொழுது 'ர்' ஆக அழைக்கப்படலானார்!

'சந்திரர்' இப்பொழுது ஹவாய் இந்து துறவிகள் மடத்தில், சந்திரானந்த சுவாமிகள் என அன்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படுகிறார்.

## 8

பாக்கியம் மாமி இறந்த செய்தி காலம் தாழ்த்தியே புவனாவுக்கு தெரிய வந்தது. வேண்டாத தொடர்புகளைத் தவிர்க்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் அறிவுறுத்தி இருந்தனால், சிட்னியிலுள்ள ஊரவருடனான தொடர்புகளை புவனா கூடுமானவரையில் தவிர்த்தே வந்திருந்தாள். ஆனாலும், தாயின் மனப்புழுக்கம், மன அழுத்தமாக மாறிவிடக்கூடாது என்பதிலே மிகக் கவனமாகச் செயற்பட்டாள். அவுஸ்திரேலிய மெடிக்கல் கவுன்ஸில் நடத்திய பரீட்சைகள் எல்லாவற்றிலும்

தேறி, சிட்னியில் தனியாகவே மருத்துவமனை ஒன்றினை நடத்துவதற்கான அனைத்து தகைமைகளையும் புவனா பெற்றிருந்தாள். அவளுடைய வைத்திய சேவையின் பெருமை வூலன்கொங்கிற்கு அப்பாலாகவும் பரவியது. அவளைத் தங்களுடன் வந்து சேவையாற்றும்படி பிரபல வைத்தியசாலைகளே தங்கள் கதவுகளைத் திறந்து வைத்திருந்தன. ஆனால், அவள் வைத்திய சேவையை, 'பணம் காய்க்கும் மரமாக' மாற்ற விரும்பவில்லை.

புவனா எதிர்பாத்திராத நிலையில், அன்று இலங்கையிலிருந்து ஒரு மின்அஞ்சல் வந்திருந்தது. வடமாநில சுகாதாரத்துறை அமைச்சு புவனாவுக்கு விலாசமிட்டு அதை அனுப்பியிருந்தது. போருக்குப்பின் துரிதகதியில் அபிவிருத்தி வேலைகள வடமாகாணத்தில் நடைபெறுவதாகவும், கிளிநொச்சி மக்கள் புவனாவின் சேவையை பெரிதும் விரும்புவ்தாகவும் அவர்கள் சார்பாகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுவதாகவும் அந்த மின் அஞ்சல் தெரிவித்தது.

தாய் தற்பொழுதுள்ள நிலையில் இலங்கைக்குச் செல்வது நல்லதென புவனாவுக்குத் தோன்றியது. 'அம்மாவின் ஆரோக்கியம்' என்பதுதான் புவனாவின் விருப்பு வெறுப்பு களிலே முதலிடம் பெற்றது. 'வூலன்கொங் வைத்தியசாலை நிர்வாகம் அவளுடைய சேவையை இழக்க விரும்பவில்லை' என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், புவனா தன் பக்கத்து நியாயங்களை பக்குவமாக விளக்கினாள். நிர்வாகம் அவளுடைய நியாயங்களை அநுதாபத்துடன் அணுகவும், அவள் இலங்கைக்கான பயண ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தாள்.

வூலன்கொங் வைத்தியசாலைக்கு புவனா வந்தபோது வைத்தியராகச் சேர்ந்தவன் றொபேட், ஆங்கிலேய அவுஸ்திரேலிய இளைஞன். ஒரு கனவானுக்குரிய அத்தனை குணங்களும் அவனிடமிருந்தன. சிலவருடங்கள் ஆப்கானிஸ் தானில் இராணுவ வைத்தியனாகப் பணிபுரிந்தவன். ஆசிய ஆபிரிக்க நாடுகளெங்கும் பரவலாக பயணம் செய்தவன்.

கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவராலயம், கிளிநொச்சியில் புவனாவின் வைத்திய சேவைகள் பற்றி எழுதிய குறிப்புக்களை அவன் தற்செயலாக பார்க்க நேர்ந்தது. அதன்பின் வளர்முக நாடுகளில் உள்ள அரசியல் பிரச்சினைகள், அதனால் சீர்குலைந்த வைத்திய சேவைகள் பற்றி அடிக்கடி அவளுடன் உரையாடுவான். புவனாவின் விவேகமும் வைத்திய அறிவும் அவனை மேலும் பிரமிப்பில் ஆழ்த்தின.

தேநீர் இடைவேளையின்போது ஓய்வறையில் தனித்திருந்தாள் புவனா. அங்கு வந்த றொபேட் வைத்திய சம்பந்தமான விடயங்களைப் பேசியபின் தன் விருப்பத்தைச் சொன்னான்.

'புவனா..., என் மருத்துவப் பணியின் பெரும்பகுதியை அல்லற்படும் மக்களுக்காகவே செலவு செய்திருக்கிறேன். இங்குள்ள மருத்துவ வசதியின்கீழ் பணிபுரிய பல மருத்துவர்கள் முன் வருவார்கள். ஆனால் கிளிநொச்சி போன்ற இடங்களில் பணிபுரிய, இங்குள்ள வசதி வாய்ப்புக்களை உதறிச் செல்லக்கூடிய, உன்னைப் போன்ற ஒரு சிலரே இருப்பார்கள். உனக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நானும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உன்னுடன் வருகிறேன். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யமுடியுமா...?'

'உன்னால் அங்கு தாக்குப்பிடிக்கமுடியுமா, றொபேட்?'

'ஆப்கானிஸ்தான் கிராமங்களிலும் பார்க்க கிளிநொச்சி வாழ்க்கை கடுமையானதா?' என்று றொபேட் கேட்டுச் சிரிக்க, புவனாவும் அச்சிரிப்பிலே ஒன்றினாள்.

## 9

ஹவாய் துறவிகள் மடத்திலே சந்திரானந்த சுவாமிகள் தாமரை இலைத் தண்ணீர் போல வாழக்கிறார். அங்கு அவர் ஆன்மீக சேவைகளிலும் தியானதிலும் தம்மை முழுமையாக

ஈடுபடுத்திக் கொள்வதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். மடத்து முகவரிக்கு உற்றாரும் ஊர்க்காரர்களும் எழுதும் கடிதங்களை அவர் பிரித்துப் பார்ப்பதில்லையாம்.

கொழும்பிலுள்ள வாழைப்பழக் கடையை தன்பெயருக்கு எழுதி எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிற கனவுகளுடன் கனடாவிலிருந்து கனகராசா எழுதும் கடிதங்கள், மடத்திலே துயில் பயிலுகின்றன.


பென்னம் பெரிய கனவுகளை வளர்த்துக் கொண்டே, கலர் கலரான கனவுகளுடன் கோடிகள் கொட்டி எடுத்த அலிபாபாவும் 'நவீன' திருடர்களும் என்கிற படம் 'ஊத்தி'க் கொண்டது. இதனால் கோடம்பாக்கத்து சினிமா 'பைனான்ஸர்' களுடைய தொந்தரவு தாங்காமல், கலைச்செல்வன் ஒளிந்து திரிவதாக கோடம்பாக்கத்துக் கிசுகிசுக்கள் பட்டையைக் கிளப்புகின்றன.

'அவுஸ்திரெலியா ரிற்றேன்ட்' (Australia returned) என்கிற விளம்பரத்துடன் வடபழனியில் சிறிய டிஸ்பென்சரி நடத்தும் வாணி, முந்திய திருமணத்தை மூடிமறைத்து, புதிய வாழ்க்கை அமைக்கும் கனவுகளைத் துறக்காது வாழ்ந்து கொண்டிருக்கிறாள்!

சுவாமி சந்திரானந்தரின் தியானத்தினை, புவனா பற்றிய மங்கலான நினைவுகள் மட்டும் இடையிடையே குழப்ப முனைகின்றன.

ஆனாலும், 'பக்குவம்' பெறுவதற்கான அவரின் பயணம் தொடர்கிறது...!

■



'படகில் அகதிகளாக வந்து தடுப்பு முகாமில் எத்தனை தமிழர்கள் பல ஆண்டுகளாக வாழ்கிறார்கள் என்பது தெரியுமா? உங்களில் எத்தனை பேர் அவர்களை அகதி முகாமில் சந்தித்திருக்கிறீர்கள்? அவர்கள் எல்லோரும் வேலைவாய்ப்பைத் தேடி வந்தவர்களாக இருக்க முடியாதல்லவா? எனது பெற்றோர்களும் வேலை வாய்ப்புக்காக அயர்லாந்திலிருந்து இங்கு வந்தவர்கள்தான். ஏன் இங்கு வளமாக வாழும் உங்களிலே பலரும் அகதி அந்தஸ்துப் பெற்றவர்களாக இருக்கலாம். மனிதன் சுலபமாக மறக்கக் கற்றுக்கொண்டு சுயநலமாக வாழ முற்படுவதுதான் பிரச்சினைகளின் ஆணிவேர்...'

சுயநலங்களைப் பேணுவோருக்கு பாவனைகளும் வேண்டியிருக்கின்றன. எளிமையான வாழ்க்கையில் லாபநோக்கம் இல்லை. அதனால் அதை வாழ அதிக சாமர்த்தியம் தேவையில்லை. ஆனால் சுயநலமான வாழ்க்கை பாவனைகளில் காலூன்றி நிற்கிறது.

கந்தராஜாவின் பன்முகத்தன்மைகளை நானறிவேன். உயிரியில் விஞ்ஞானி. பல்கலைக்கழகப் பேராசிரியர். நாடகக் கலைஞர். ஒலிபரப்பாளர். எழுதித்தான் பொருளோ புகழோ சம்பாதிக்க வேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை. ஆனால் என் பார்வையில் அவர் விஸ்வரூபம் எடுத்து வியத்தகு மனிதராக விளங்குவது அவரது எழுத்துக்களின் மூலம் தான். காரணம் அந்த எழுத்துக்களில் ஒளிர்ந்து நிற்கும் உண்மை. உண்மையைக் காணவும் உரைக்கவும் ஓர் உரம் வேண்டும். தெரியாமலா சொன்னான். பாரதி: "உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்.'

**மாலன்**

978-93-81322-29-1

9789381322291

மித்ர
வெளியீடு